www.padippakam.com

# காலம்

இதழ் 24 யூன் 2005






இயல் விருது பெறும்
பத்மநாப ஐயர்

படிப்பகம்

www.padippakam.com


# GNANAMS
## S T U D I O S



PROFESSIONAL PHOTOGRAPHERS & VIDEOGRAPHERS

KATHIR SUBRAMANIAM B.Sc ( Eng )
president

TEL: ( 416 ) 750 8118
FAX: ( 416 ) 750 8118
2381 Eglintan Ave East
Scarborough, ON
Canada
M1K 2M5


படிப்பகம்

www.padippakam.com


■

**சிறப்புப் பகுதி**

**பத்மநாப ஐயருக்கு இயல் விருது**

எஸ்.வி. ராஜதுரை ♦ 4

நா. கண்ணன் ♦ 7

சி. மௌனகுரு ♦ 9

எம்.ஏ. நுஃமான் ♦ 11

என். கே. மகாலிங்கம் ♦ 13

ஏ.ஜே. கனகரட்ணா ♦ 15

எம். வேதசகாயகுமார் ♦ 16

அ. யேசுராசா ♦ 18

சேரன் ♦ 22

கனவுகளும் நனவுகளும் - பத்மநாப ஐயர் ♦ 24

■

**கவிதைகள்**

மைதிலி ♦ 33

சோலைக்கிளி ♦ 46

தான்யா ♦ 53

துர்க்கா ♦ 67

நட்சத்திரன் செவ்விந்தியன் ♦ 72

கற்பகம்-யசோதரா ♦ 80

■

**சிறுகதை**

திருப்பப்பட்ட தேவாலயமும் காணாமல் போன சில ஆண்டுகளும் ♦ சண்முகம் சிவலிங்கம் ♦ 34

ஒரு சாண் மனிதன் ♦ செழியன் ♦ 47

ஒவ்வொரு நாளினதும் இறுதி வரி-எதிரொலி ♦ பிரதீபா தில்லைநாதன் ♦ 59

எரிந்த சிறகுகள் ♦ சாந்தினி வரதராஜன் ♦ 68

புதிய உத்தியோகத்தருக்கு ஒரு வார்த்தை ♦ தமிழாக்கம்: மணி வேலுப்பிள்ளை ♦ 74

■

**கட்டுரை**

தொடரும் உரையாடல் ♦ வெங்கட் சாமிநாதன் ♦ 40

பொய் ♦ வெங்கட் ரமணன் ♦ 54

வில்லை உடைப்பேன் ♦ அ. முத்துலிங்கம் ♦ 64

■

**மதிப்புரை**

பாரிஸ் கதைகள் ♦ தேவகாந்தன் ♦ 79


பாரிஸ் அறிவாலயம்
PARIS ARIVAALAYAM
7, RUE PERDONNET, 75010 PARIS, FRANCE
TEL : 01 44 72 03 34 FAX : 01 44 72 03 35





படிப்பகம்

www.padippakam.com

T. Jegatheesan

*Barrister, Solicitor & Notary Public (ont)*



**2620 Eglinton Ave.E**
**Suite 201**
**Scarborough**
**ON M1K 2S3**

**Tel: (416) 266-6154**
**Fax: (416) 266-4677**



படிப்பகம்

www.padippakam.com

## பத்மநாப ஐயர் இலக்கிய உலகில் ஓர் புறநடை

1979 இல் சென்னையில் நான் நின்றபோது யாரோ சொல்லிக் கேள்விப்பட்டு என்னைத் தேடி வந்தார், பத்மபநாப ஐயர். அன்று தொடக்கம் இன்றுவரை என்னுடன் நட்புடனும் அன்புடனும் பழகும் நல்லிதயம் கொண்டவர் அவர். ஐயர் என்ற மரியாதைப் பண்புப் பெயரால் அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் அவர், என்றென்றும் அன்புள்ளம் கொண்ட இலக்கிய மனிதன். இலக்கியமும் அதைச் சார்ந்தவர்களும் அவர் நட்புக்கு பாத்திரமானவர்கள். அவர்கள் அவருக்கு இனிப்பானவர்கள். அந்த வகையில் நானும் அவரின் நெருங்கிய நண்பன். அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுடன் தொடர்பு வைத்திருப்பார். என்னுடன் நெருக்கமாகவும் என் இலக்கிய, பதிப்பு, நூல் வெளியீடு, சஞ்சிகை ஆக்கங்கள் ஆகிய அனைத்துச் செயல்களிலும் தன்னலம் கருதாது உதவியும் புரிந்தும் வருகிற அவர் என்னிடம் இருந்து எதை எதிர்பார்த்தார். ஒன்றுமே இல்லை. 'பொன்னை, பொருளை. புகழை விரும்பிடும்' இவ்வுலகில் இம்மனிதர் ஒரு புறநடை.

இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில், இலக்கியப் பாலமாக இயங்கி அவர் செய்த, செய்துவரும் முயற்சிகளுக்கு முன்னோடி இல்லை என்பதுடன் எனக்கு முன்னோடியும் அவரே. இரண்டொரு கவிதை நூல்களை எழுதி வெளியிட்டு விட்டு சும்மா இருந்து விடாமல் எனக்கொரு உந்துதலையும், உற்சாகத்தையும், ஆதர்சத்தையும் நான் அவரிடமிருந்து பெற்றேன். நூல் வெளியீடுகள், ஆண்டு தோறும் புத்தகக் கண்காட்சிகள் நடத்துவது போன்றவற்றில் ஈடுபட்டு வருகிறேன் என்பதைச் சொல்வதில் பெருமைப்படுகிறேன். அதேபோல இன்று பலரும் செய்து வருவதற்கும் அவர் வழிகாட்டியாக இருந்திருக்கின்றார் என்று சொல்வதில் தவறும் இல்லை.

அவருடைய எல்லா இலக்கியத் தெரிவுகளிலும், அரசியல் கருத்துகளிலும் அவருடன் நாம் உடன்படாவிட்டாலும் தொடர்ந்து நட்பைப் பேணக்கூடிய பண்பு உள்ளவர். ஏனெனில், 'அது உங்கள் கருத்து, இது என் கருத்து' என்று சொல்லி ஜனநாயகப் பண்பாட்டில் அசையாத நம்பிக்கை வைத்து, கண்ணியமாகவும் அன்புடனும் நட்புடனும் தொடர்ந்து பழகி வருபவர். தன் கருத்துக்களை மற்றவர்கள் மேல் திணிக்காதவர்.

ஏ.ஜே.கனகரத்னா, கே.கணேஸ் ஆகியோருக்குக் காலம் சிறப்பிதழ்களை வெளியிட்டபோது தானாகவே முன்வந்து சகல உதவிகளையும் செய்த அருமையான மனிதர்.

அவருடைய வாழ்நாள் இலக்கிய, பதிப்பு, (கணினியிலும் அச்சிலும்) நூல் தொகுப்பு, வெளியீடு, போன்ற யாரும் செய்ய முன்வராத, ஆனால் தேவையான சேவைகளுக்காக, கனடிய இலக்கியத் தோட்டமும் ரொறொன்ரோ பல்கலைக் கழகமும் இணைந்து வழங்கும் இயல் விருது அவருக்கு வழங்குவது மிகவும் பொருத்தமானது என்றே காலம் கருதுகிறது. இலக்கிய நூல்களுக்காக, அவற்றை எழுதியவர்களுக்காக வழங்கும் பரிசுகள் உண்டு. விருதுகள் உண்டு. ஆனால் இலக்கியங்களை எங்களுக்குக் கிடைக்கச் செய்த ஓர் மனிதருக்குக் கிடைக்கும் அவ்விருதை அளிப்பவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு அந்த எண்ணம் வந்ததே அற்புதம், அவ்விருதைப் பெறும் பத்மநாப ஐயரை காலம் வாழ்த்துகிறது. அவரின் சிறப்பிதழாக இவ்விதழை வெளியிடுவதில் அது பெருமை அடைகிறது.

**செல்வம்**


காலம்

இதழ் 24
யூன் 2005

ஆசிரியர்
செல்வம்

ஆலோசனை
என். கே. மகாலிங்கம்
செழியன்

விலை ரூ.25

KALAM
16, HAMPSTEAD COURT
MARKAM, ONT L3R 3S7
CANADA
kalam@tamilbook.com

Front cover Oviyam : Geevan-Nanda Kandasamy
Cover Design : Creaa Design

இதழ் தயாரிப்பு: செல்வி

Uyirmmai Image & Impression
uyirmmai@yahoo.co.in
Printed at Bhawana Printers, Chennai - 79




படிப்பகம்

## பத்மநாப ஐயருக்கு இயல் விருது



# ஐயர் என்னும் புத்தகப் பிரதி

எஸ்.வி. ராஜதுரை

தமிழ்நாட்டில் பார்ப்பன எதிர்ப்பு மரபைச் சேர்ந்த பிறரைப் போலவே எனக்கும் 'ஐயர்' என்பதைப் பெரும்பாலும் ஒரு இழிவுக் குறிப்புச் சொல்லாகவே (pejorative term) பயன்படுத்தும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. எனினும் இந்த மரபின் தூண்களாக விளங்கியவர்களிற் சிலரும்கூட இச்சொல்லைக் குறிப்பிட்ட, தனிச்சிறப்பான மனிதர்களை மட்டுமே குறிக்கின்ற, அவர்களை விளிக்கப் பயன்படுத்துகிற மரியாதைச் சொல்லாகப் பயன்படுத்துவதையும் காணலாம். எடுத்துக் காட்டாக பாரதிதாசன், பாரதியாரை 'ஐயர்' என்று குறிப்பிடுவார். தமிழ் மொழி மீதும் அதனுடைய செவ்வியல் இலக்கியச் செல்வங்கள் மீதும் அக்கறையும் ஆர்வமும் கொண்டோரின் மனங்களில் 'ஐயர்' என்னும் சொல் சட்டென்று ஏற்படுத்தும் பிம்பம் உ.வே.சா.வினுடையது.

இலங்கையிலும் தமிழகத்திலும் நவீன தமிழ் இலக்கியத்திலும் கலைப் படைப்புகளிலும் ஆழ்ந்த அக்கறையும் இரசனையும் கொண்டுள்ளோரிடையே இன்று 'ஐயர்' என்று சொன்னால் 'இலக்கியத் தொண்டர்' என்கிற சொற்றொடருக்கு உரிய இ. பத்மநாப ஐயரை மட்டுமே குறிக்கும்.

எனக்கும் ஐயருக்கும் ஏறத்தாழ முப்பதாண்டுப் பழக்கம். 1970களில் 'க்ரியா' ராமகிருஷ்ணன் மூலம் ஐயருடன் தொடர்பு ஏற்பட்டது. எனது துணைவியார் தொழிற்சங்க மாநாடொன்றில் கலந்துகொள்ள 1978இல் இலங்கை சென்றிருந்தார். அச்சமயம் மாத்தளையில் பணிபுரிந்துகொண்டிருந்த ஐயர், 'க்ரியா' ராமகிருஷ்ணன் கொடுத்த தகவலின் பேரில் கொழும்பிற்கு உடனடியாகச் சென்று, எழுத்தாளர் சாந்தனையும் அழைத்துக்கொண்டு, என் துணைவியாரைச் சந்தித்துப் பேசியதுடன், அவருக்குத் தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்ய முன்வந்திருக்கிறார். அதுதான் அவருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் ஏற்பட்ட முதல் நேரடித் தொடர்பு. அதற்கு முன்பும் பின்பும் இலங்கையிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த தமிழ்ச் சிற்றேடுகள், கவிதைத் தொகுப்புகள் எனப் பலவற்றை அவர் எனக்கு அஞ்சலில் அனுப்பிக் கொண்டிருந்தார். அவருடனான எனது முதல் நேரடிச் சந்திப்பு நான் சென்னைக்குக் குடிபுகுந்த பின்னர் – 1981இல் தான். ஒரு முறை ஈழக் கவிஞர் யேசுராசாவையும் அழைத்து வந்திருந்தார். அக்காலத்தில் எனக்கு நக்ஸலைட் இயக்கத்துடனிருந்த நெருக்கமான தொடர்பின் காரணமாக காவல்துறையினரின் தொல்லைகள் ஏராளம். ச.சீ. கண்ணன், நான், பி.என்.ஆர். என்னும் முன்னாள் நண்பர் ஆகிய மூவரும் சேர்ந்து உருவாக்கிய 'கார்ல் மார்க்ஸ் நூலக'மும் எனது வீட்டிலேயே இயங்கிவந்ததால், 'சோதனை' என்னும் பெயரால் காவல்துறையினர் அடிக்கடி வருவதும் 'விசாரணை' என்னும் பெயரால் நான் மாநகரக் காவல் துறை ஆணையர் அலுவலகத்திற்கோ அல்லது பிற காவல்நிலையங்களுக்கோ அழைத்துச் செல்லப்படுவதும் கிட்டத்தட்ட அன்றாட நிகழ்ச்சிகளாகவே இருந்தன. இன்று புரட்சித் தீயைக் கக்கிக்கொண்டிருக்கும் சில அறிவு ஜீவிகள்கூட அங்கு வந்து தொல்லையை வரவழைத்துக்கொள்வதை வெகு சாமர்த்தியமாகத் தவிர்த்து வந்தனர். அவர்களிலொருவர் காவல்துறையினரின் விசாரணைக்கு ஆளான போது, அவருக்கு 'மூளைச் சலவை' செய்து தீவிர இடதுசாரி அரசியலுக்கு நான்தான் இழுத்து வந்ததாகக் கூறித் தப்பி வந்துவிட்டார். அரசியலுடன் உடன்பாடு இல்லாத நண்பர்கள், என்னால் தேவையற்ற தொல்லைகளுக்கு ஆளாவதை நான் கூடுமானவரை தடுத்து வந்தேன். ஆனால் ஒவ்வொரு முறையும் சென்னைக்கு வரும்போதெல்லாம் எங்கள் வீட்டிற்கு வருகை தருவதை ஒருபோதும் தவிர்க்காதவர் ஐயர்.

கலை, இலக்கியம், தத்துவம், அரசியல் ஆகியவற்றைப் பொருத்தவரை நம் எல்லாரையும் போலவே ஐயருக்கும் சில விருப்பத் தெரிவுகள், தற்சாய்வுகள், விருப்பு வெறுப்புகள் எல்லாம் உண்டு. மார்க்ஸிய எதிர்ப்பாளர் என்னும் மனப்பதிவை ஏற்படுத்தும் வகையில் அவரது அபிப்பிராயங்களிற் சில அமைந்தது

www.padippakam.com

முண்டு. ஆனால், 'மார்க்ஸியவாதிகள்', 'பொதுவுடைமைவாதிகள்' எனத் தம்மை அழைத்துக்கொள்கிறவர்கள் பலரைப் போல்; தனக்கு உடன்பாடில்லாத இலக்கியவாதிகளையோ, சிந்தனையாளர்களையோ அல்லது அவர்களது ஆக்கங்களையோ இருட்டடிப்புச் செய்கிற, புறமொதுக்குகிற அல்லது ஓரங்கட்டுகிற மனப்பான்மையிலிருந்து முற்றிலும் விடுபட்டவர்களில் ஐயரும் ஒருவர். இலங்கையிலுள்ள தமிழ் மார்க்ஸிய இலக்கியவாதிகளைக் கடுமையாக விமர்சித்த மு.தளையசிங்கத்தின் எழுத்துக்களோடு சாதி அமைப்புக்கும் பொருளாதாரச் சுரண்டலுக்கும் எதிராக அவர் நடாத்திய போராட்டங்களையும் தமிழக வாசகர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் அறிமுகப்படுத்திய அதேபோழ்தில், மார்க்ஸியத்தையோ அல்லது கட்சித் தொடர்புகளையோ தனது சொந்த வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளாத, சுய சிந்தனையுள்ள, இலங்கைக்கு வெளியே பரவலாக அறிமுகமாகாதிருந்த ஏ. ஜே. கனகரட்னாவின் எழுத்துக்களை மட்டுமின்றி அண்மையில் காலஞ்சென்ற ரெஜி சிறிவர்த்தன, நியூட்டன் குணசிங்க, கணநத் ஒபயசேகர போன்ற சிங்கள இடதுசாரி அறிவாளிகளின் சிந்தனை வளங்களையும் என் போன்றோருக்கு அறிமுகம் செய்தவர் ஐயர்தான். இலங்கையிலும் தமிழகத்திலும் நன்கு அறிமுகமான க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றோரிடமிருந்து ஐயர் மிகவும் விலகியிருந்ததற்குக் காரணம் மு. தளையசிங்கத்தின் சிந்தனையின் ஆழமான தாக்கம் மட்டுமல்ல, அவர்களும் அவர்களைப் போன்ற பல பேராசிரியர்களும் சிங்களப் பேரினவாதத்துடன் கணக்குத் தீர்த்துக்கொள்ள விரும்பாத இலங்கைப் பொதுவுடைமை இயக்கங்களில் வகித்துவந்த செல்வாக்குமிக்க இடங்களும்தான். எனினும், தமிழகத்தில் அதுகாறும் வெளிவந்திராத அவர்களது கட்டுரைகளைக் கொண்டுவந்து அறிமுகப்படுத்துவதில் ஐயரின் விருப்பு வெறுப்புகள் ஒரு போதும் குறுக்கிட்டதில்லை. சமுத்திரன், எம். ஏ. நுஃமான், மு. நித்தியானந்தன், நிர்மலா போன்றோரின் கலை, இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளையும் முதன் முதலில் எங்களுக்குக் கிடைக்கச் செய்தவரும் ஐயர்தான். எஸ்.பொ., அ.முத்துலிங்கம், ரஞ்ச குமார் போன்றோரின் எழுத்துக்களும் எனக்கு ஐயர் மூலமாகவே அறிமுகமாயின.



மஹாகவியிலிருந்து அவரது மகன் சேரன் வரை, இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்த கவிஞர்களை தமிழக வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியவர் ஐயர்.

மஹாகவியிலிருந்து அவரது மகன் சேரன் வரை, இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்த கவிஞர்களைத் தமிழக வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியவர் ஐயர். யேசுராசா, சண்முகம் சிவலிங்கம், சு. வில்வரத்தினம், மு. பொன்னம்பலம், வ. ஐ. ச. ஜெயபாலன், கி. பி. அரவிந்தன், நிலாந்தன், சி. சிவசேகரம், சிவரமணி, ஔவை எனப் படைப்புகள் மூலம் அவர் எனக்கு அறிமுகம் செய்துவைத்த கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஏராளம். பெண்ணியச் சிந்தனை பற்றித் தமிழகத்தில் பேசப்படுகிறதா, ஓவியம் பற்றிய விவாதங்கள் இங்கு நடைபெறுகிறதா – அடுத்த முறை ஐயர் தமிழகத்திற்கு வரும்போது இத்துறைகளில் இலங்கையில் எழுதப்பட்டுள்ளவற்றையும் எடுத்து வருவார். இலங்கையில் இனப் பிரச்சினை கூர்மையடைந்து 1983இல் இனப் படுகொலைகள் நடப்பதற்கு முன்பே, அங்குள்ள தேசியப் பிரச்சினையின்பால் எங்களது கவனத்தை ஈர்த்தவர் ஐயர். இதன் பொருட்டு அவர் Saturday Review, Lanka Guardian ஆகிய இரண்டு ஆங்கிலச் சஞ்சிகைகளை இதழ் தவறாமல் கிடைக்கச் செய்தார். அந்தச் சின்னஞ் சிறு தீவு நாட்டில் பொங்கி வழிந்த சிந்தனை வளத்தை அடையாளம் காட்டியவை அந்தச் சஞ்சிகைகள். ஐயர் மூலம் எனக்குக் கிடைத்த மகத்தான அறிவுச் செல்வங்களிலொன்று ரெஜி சிறிவர்த்தன. ஒரே ஒரு முறைதான் அவரை நேரில் சந்தித்துப் பல மாதங்கள் பிடிக்கும் பாடங்களைக் கற்கும் பேறினைப் பெற்ற எனக்கும் அவருக்குமிடையே நீண்ட காலம் கடிதப் போக்குவரத்து இருந்தது.

யாழ் நூலகம் வெந்தபோது தமிழ் மக்கள் அனைவருக்கும் சேர்ந்து ஐயரின் மனம் வேதனைத் தீயில் எரிந்தது. நூலகத்தைப் புதுப்பிக்க முயற்சிகள் தொடங்கியதும் ஐயர் தமிழகத்திற்கு வந்தார். நன்கொடையாகப் பெற்ற நூல்கள் தவிர நண்பர்களிடமும் புரவலர்களிடமும் திரட்டிய தொகையிலிருந்து உடனடியாகத் தேவைப்படும் நூல்களை விலைக்கு வாங்கிச் செல்ல அலைந்து திரிந்தார். மார்க்ஸிய நூல்களைத் திரட்டுவதற்கு என்னையும் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றார். ஈழப் படைப்பாளிகளின் ஆக்கங்களை வெளியிடுவதற்கும் அவற்றைத் தமிழகத்



படிப்பகம்

www.padippakam.com

தில் பரவலாக அறிமுகப்படுத்துவதற்கும் எவ்விதக் கைமாறும் கருதாமல் 'க்ரியா' ராமகிருஷ்ணன், காலஞ்சென்ற 'சமுதாயம்' கோவிந்தன் ஆகியோரோடு சேர்ந்து நானும் எனது சிறு பங்களிப்பைச் செய்திருக்கிறேன். எங்கள் சுவடுகள் பதிக்கப்பட்டனவோ இல்லையோ, உலகெங்கும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழ் அறிவுஜீவிகள் இங்குள்ள இலக்கிய வணிகர்களுக்கான நல்ல வாடிக்கையாளர்களாகி விட்ட ஒரு காலம் பிறந்துவிட்டது. 'வரலாற்று முரண்' என ஹெகெலும் மார்க்சும் கூறியதை ஒத்ததுதான் இது. ஐயருக்கு இதெல்லாம் பிரச்சினையே அல்ல. புத்தகங்கள் வெளிவர வேண்டும். அவர் 'பிரதிகளை' – பெரும்பாலும் இலவசமாக – மற்றவர்களுக்கு வழங்க வேண்டும்! அவருடைய ஆசை இது மட்டுமே.

அதேபோல இலங்கையின் பல்வேறு தேசிய இனங்கள், இனக் குழுக்கள் தொடர்பான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளை அறிந்துகொள்ள வைத்த காத்திரமான ஏடான 'சரிநிகர்' எங்களுக்குக் கிடைக்கச் செய்வதில் முன் முயற்சி எடுத்துக் கொண்டவர் ஐயர்.

சரியாகச் சொல்வதென்றால் ஐயர் இரு நாடுகளுக்கிடையிலான ஒரு பண்பாட்டுத் தூதராக விளங்கினார். அங்கும் சரி, இங்கும் சரி பல்வேறு கருத்து நிலைகளைக் கொண்டவர்களிடம் அவர் நட்புப் பாராட்டி வந்தார். இலங்கையிலிருந்து ஒவ்வொரு முறை வரும்போதும் அவரவர் இரசனைக்கும் தேவைக்கும் ஏற்ற நூல்களையோ ஏடுகளையோ பரிசாகக் கொடுப்பதுடன், அங்கு பண்பாட்டுத் துறையில் நடக்கும் செயற்பாடுகளை அவ்வப்போது தெரிவித்து வருவார். இங்கிருந்து புறப்படும் போதும் அங்குள்ள பலதரப்பட்டவரின் தேவைகளுக்குகந்த படைப்புகளை வாங்கிச் செல்வார். எந்த நூலானாலும் அதில் பத்துப் பிரதிகளுக்குக் குறைவில்லாமல் கொண்டு வருவார், செல்வார். கவனத்துக்குரிய ஒரு படைப்போ அல்லது நூலோ வெளிவந்திருப்பதை அறிந்ததும், 'இதில் கொஞ்சம் பிரதிகள் எடுக்கலாமா?' என்று கேட்பார். இங்கிலாந்துக்குப் புலம் பெயர்ந்து சென்ற பிறகு, அவர் திரட்டிப் பகிர்ந்தளிக்கும் பிரதிகளின் எண்ணிக்கை பல மடங்கு கூடிவிட்டது என்பது எனக்கும் தெரியும். இலக்கிய ஆர்வலர்களுக்காக வலிய வந்து கடனாளியாவதுதான் அவரைப் பொருத்த வரை பிறவிப் பயன்!

தமிழீழ தேசியத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் பற்றும் கொண்டுள்ள ஐயர், அப் பிரச்சினை குறித்துப் பல்வேறு கோணங்களிலிருந்து எழுதப் பட்ட கட்டுரைகளைத் தொடர்ந்து அனுப்பி வைப்பார். இனப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியத் தலையீட்டை விரும்பியவர்களுக்கு எச்சரிக்கையாக நான் 1984இல் எழுதிய குறுநூலொன்றில் உள்ள சில வாசகங்களை 'அமைதிப் படை' நுழைவால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் பின்னணியில் நினைவு கூர்ந்து அவர் எழுதிய கடிதம் என்னை வெகுவாக உலுக்கியது. அவரது துணைவியாரின் மரணத்திற்கு 'அமைதிப்படை' நேரடியான காரணியல்ல என்னும் போதிலும் அந்தச் சூழ்நிலை இல்லாதிருந்திருக்குமானால் அந்த அம்மையாரைக் கொழும்பிற்கோ அல்லது நல்ல மருத்துவ வசதி உள்ள பிற இடங்களுக்கோ கொண்டு சென்றிருக்க முடியும். தாயை இழந்த அவரது மூன்று மகள்கள் – குறிப்பாக முதலிரண்டு மகள்கள் – ஏதிலிகளாய் தேசம் தேசமாக அலைந்து திரிந்த அவலம் இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களின் சோகக் கதைகளோடு பின்னிப் பிணைந்ததுதான். அவர் எதிர்கொண்ட சோதனைக் காலங்களில் அவருக்கு நானும் என் துணைவியாரும் ஓரளவிற்குத் துணை நின்றோம். இலண்டனில் தான் புலம் பெயர்ந்ததோடு நிற்காமல் ஏராளமான ஈழத் தமிழர்கள் அங்கே தஞ்சம் புக உதவினார். ஆனால்தான் அங்கு நிரந்தரமாகக் குடியேறுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் சரிவரச் செய்யாததால் அண்மைக் காலம் வரை 'இழுபறி நிலை'யிலேயே இருந்தார்.

அவரது குடும்பத்தின் வைதீக, சமய மரபிலிருந்து அவரால் முழுமையாக விடுபட முடியவில்லை என்ற போதிலும் அவரது தன்னலமற்ற நட்புக்கு அது ஒருபோதும் இடையூறாக இருந்ததில்லை. கருநாடக இசையிலும் இந்துஸ்தானி இசையிலும் நல்ல இரசனை அவருக்கு உண்டு. அவரது இரசனைக்கேற்ற ஒலி நாடாக்களைத் தெரிந்தெடுத்து அனுப்பி வைத்தால், எனக்கு விருப்பமான மேற்கத்திய செவ்வியல் இசை ஒலி நாடாக்களையும் குறுந்தகடுகளையும் கண்ணுங் கருத்துமாகச் சேகரித்து வைத்து யாரிடமாவது கொடுத்து அனுப்புவார். அவரது உதவியில்லாதிருந்திருக்குமானால், அந்த அரிய இசைச் செல்வங்களை என் வாழ்நாளில் ஒரு போதும் துய்த்திருக்க முடியாது. மிக அரிதாகவே எழுதக் கூடியவர் எனினும் கலை, இலக்கியம் தொடர்பான கூர்மையான கருத்துகளை நண்பர்களுடன் உரையாடுகையில் வெளிப்படுத்துவார். ஆங்கிலத்தில் மிக அருமையாக எழுதக்கூடியவர். பல்வேறு எழுத்தாளர்களும் அறிவாளிகளும் மேலே வருவதற்கான ஏணிமரமாக இருந்தவர். எங்கும், எந்த இடத்திலும் தன்னை முதன்மைப்படுத்திக்கொள்ளாதவர்.

**சரியாகச் சொல்வதென்றால் ஐயர் இரு நாடுகளுக்கிடையிலான ஒரு பண்பாட்டுத் தூதராக விளங்கினார். அங்கும் சரி, இங்கும் சரி பல்வேறு கருத்துநிலைகளைக் கொண்டவர்களிடம் அவர் நட்புப் பாராட்டி வந்தார்.**

அண்மையில் எனது தோழரும் ஆசிரியருமான வ. கீதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருக்கிறார் ஐயர். தான் பணிபுரியும் நூல் வெளியீட்டகம், இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த கோண்ட் பழங்குடிக் கலைஞரொருவர் இலண்டன் நகரை 'கோண்ட்' ஓவியப்பாணியில் சித்தரிக்கும் நூலொன்றை வெளியிட்டுள்ளதாக வ.கீதா கூறியிருக்கிறார். அடுத்த முனையிலிருந்து ஐயர் கேட்டிருக்கிறார்: 'இதில் பத்துப் பிரதிகளாவது நாங்கள் எடுக்கலாம்.' இதுதான் ஐயர்! ❑



படிப்பகம்

www.padippakam.com



# ஐயர் ஒரு சகாப்தம்

நா. கண்ணன் - தென்கொரியா



பத்மநாப ஐயரை நான் அறிந்துகொண்டது ஒரு வித்தியாசமான அனுபவம்! உண்மையில் நான் அறிந்துகொண்டேன் என்று சொல்வதை விட அவர் என்னை அறிந்துகொண்டு தொடர்பு கொண்டார் என்பதே சரி. இப்படிச் சொல்வதால் ஐயரைவிட நான் உசத்தி என்று பொருளல்ல. மாறாக, ஐயர் அவர் பெயருக்கு ஏற்றபடி கீழிறங்கி வரக்கூடியவர் என்பதுதான் பொருள் (அவதாரம் என்றால் இழிதல், கீழிறங்குதல் என்று பொருள்). அப்போது நான் ஐரோப்பிய இலக்கிய வட்டத்தில் ரொம்பப் புதியவன். இலங்கை எழுத்தும் பரிட்சயமில்லை. இலங்கை இலக்கியவாதி களையும் தெரியாது. இந்தச் சூழலில் ஐயர் என்னை எப்படிக் கண்டுபிடித்தார் என்பது தான் அவரது குணாம்சத்தைக் காட்டிக் கொடுக்கும் ஒரு தூண்டில். தமிழகத்தை விட்டு 1985ல் கிளம்பிய நான் ஜப்பானில் வாழ்ந்துவிட்டு ஜெர்மனியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். எனது இலக்கிய தாகத்தைத் தீர்த்துக் கொள்ள அவ்வப்போது சுபமங்களாவில் எழுதுவேன். அப்போது சுபமங்களாவின் பெரும்பாலான ஆதரவாளர்கள் ஈழத் தமிழர்கள் என்று எனக்குத் தெரியாது. ஐயரை அறிந்துகொண்டபின், கோமல் சுவாமிநாதனை அறிந்துகொண்ட பின்தான் அது எனக்குப் புரிந்தது. இலக்கியத் தேட்டையுள்ள ஐயர் சுபமங்களாவின் மூலம் எனது எழுத்துக்களுக்குப் பரிட்சயமாகியிருந்தார். ஆனால் நான் ஜெர்மனியில் வாழ்வது அவருக்குத் தெரியாது. ஆனால் அவர்தான் பிற ஈழத்து, இந்திய இலக்கியவாதிகளுடன் எப்போதும் தொடர்புடையவராச்சே! (எப்படி என்பது இன்னொரு கதை!).



பொ. கருணாகரமூர்த்தி எப்படியோ என் இருப்பிடம் கண்டு அப்போது தொடர்பு கொண்டிருந்தார். அவர் மூலம் ஐயர் அறிந்து கொண்டு என்னுடன் தொடர்பு கொண்டார்.

அது சமயம் நியூஹாம் தமிழ் நலன்புரி சங்கத்திற்கான முதல் தொகுப்பைத் தயாரித்துக் கொண்டிருந்தார் ஐயர். எனது கட்டுரைகள் அதில் இடம்பெற்றால் நலம் என அவர் கருதினார். உடனே தயங்காது என்னுடன் தொடர்பு கொண்டார். இதுதான் அவரைப் பிற இந்திய இலக்கியவாதிகளிடமிருந்து பிரித்து இனம் காட்டுகிறது. பெரும்பாலும் பிரபலங்கள் இந்தியாவில் கீழிறங்கி வருவதில்லை. அவர்களிடம் நாம் போனால் அன்பாக இருப்பார்கள். ஆனால், முகமறியா ஒருவரிடம், அவர் எழுத்துத் திறன் சிறப்பாகவே இருந்தாலும் வலிந்து தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். ஐயருடன் இதுவரை பழகியதில் அவருக்கு தான் ஒரு இலக்கிய நட்சத்திரம் என்ற உணர்வே எழுந்ததில்லை. மாறாக கிரியா ஊக்கிகள் கண்ணுக்குத் தெரியாமல் வேதிமச் செயல்களை செய்வது போல் இவர் பின்னிருந்து தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் இலக்கியப் பணி செய்வார். புகழுக்கு அலையும் இந்த உலகில் ஐயரைப் போன்றவர்கள் அரிது.

ஐயருக்கும் எனக்குமுள்ள இன்னொரு பொது குணாம்சம் புதியது செய்வதில் ஒரு குழந்தைக்குள்ள குதூகலம். விஞ்ஞானிகளைப் பற்றிச் சொல்லும்போது அவர்கள் குழந்தை போன்ற பெரியவர்கள் என்பார்கள். குழந்தைக்கு உரிய துருதுருப்பு, ஆச்சர்யம் விஞ்ஞானிக்கு இருக்க வேண்டும். இல்லையெனில்



படிப்பகம்

www.padippakam.com

புதிய தொடக்கம் இல்லை. ஒரு வகையில் இது இலக்கியவாதிக்கும் பொருந்தும். ஐயரிடம் இன்று வரை என்னை ஈர்த்து வைத்திருப்பது அவரின் கள்ளம், கபடமற்ற குழந்தை உள்ளம்தான். ஐயருக்கு உள்வட்டம், வெளிவட்டம் என்ற பேதம் கிடையாது. அவருக்கு எல்லோருமே உள்வட்டம்தான். எல்லோரும் அவரது நண்பர்கள். அவரைக் காரமாக விமர்சனம் செய்பவர்கள் கூட ஏதாவதொரு சமயத்தில் அவரால் பலனடைந்தவராகவே இருப்பார்கள். ஐயர் வீடு என்பது இலக்கிய தர்ம சத்திரம். லண்டன் வருகிற எல்லா இலக்கியவாதிக்கும் உணவு, உறையுள் கொடுக்கும் தர்ம சத்திரம் ஐயர். ஒரு தாரம் இல்லாதது அவருக்கு இழப்பு என்றாலும் அவரது நண்பர்களுக்கு அதுவே லாபம். எந்தக் குற்றவுணர்வுமின்றி அவர் வீட்டில் ஒரு நாள், இரு நாள், ஒரு வாரம், ஒரு மாதமென தங்கி இருந்துவிட்டுப் போவார்கள். ஒரு பொழுதாவது இதற்கெல்லாம் ஐயர் முகம் சுழித்ததாக வரலாறு கிடையாது. எப்படித்தான் அவரால் எப்போதும் ஒரு இனிய சுபாவத்துடன் இருக்க முடிகிறதோ! இறைவன் அவருக்குத் தந்த இந்த குணம் நமக்கெல்லாம் லாபம் என்றுதான் சொல்ல வேண்டும்.

லிருக்க அவர் தமிழராகப் பிறந்துவிட்டது நம் துரதிர்ஷ்டம். தமிழர்களில் ஒரு ராக்பெல்லர் கிடையாது. பாரி, ஓரி எனும் வள்ளல்களெல்லாம் சங்கத்தோடு சங்கமித்துவிட்டனர். எனவே ஐயர் வேர்வை சொட்ட உழைத்தே தனது கனவுகளை மெய்ப்பிக்கிறார். அவர் ஒரு நாளைக்கு ஒரே ஒரு வேளைதான் உணவு கொள்கிறார் என்பது பலருக்குத் தெரியாது. கஞ்சத்தனத்தால் அல்ல. உணவுண்ண அவருக்கு பொழுதில்லை! காலை, மாலையென்று சதா வேலை பார்த்துக்கொண்டே இருப்பார். கையில் கொஞ்சம் காசு சேர்ந்தவுடன் அடுத்த புத்தக வெளியீட்டில் இறங்கிவிடுவார். பல மில்லியன் செலவாகும் ஒரு இந்திய அருங்காப்பகமொன்று உருவாக்க வேண்டுமென்பது அவரது கனவு. குருக்கள் ஐயாவுடன் சேர்ந்து அதற்கான முன்வரைவும் வைத்திருக்கிறார். கம்பனுக்கு ஒரு சடையப்பன் கிடைத்தது போல் இந்தப் பத்மநாபனுக்கு ஒரு படையப்பன் கிடைக்கக்கூடாதோ?

ஐயர் தொழில் நேர்ந்தி கொண்டவர். செய்யும் தொழிலில் மிக உயர்ந்த தரம் எதிர்பார்ப்பார். சமரசம் என்பது இதில் இருக்காது. அதனால்தான் இன்று ஐயரின் தொகுப்புகள் தமிழ்கூறும் நல்லுலகில்

**ஐயருக்கு உள்வட்டம், வெளிவட்டம் என்ற பேதம் கிடையாது. அவருக்கு எல்லோருமே உள்வட்டம்தான். எல்லோரும் அவரது நண்பர்கள்.**

இப்போதெல்லாம் எழுத்து ஒரு தொழிலாகிவிட்டது. லாபம் சம்பாதிக்கும் தொழிலாகிவிட்டது. சர்ச்சைக்குரிய எழுத்தென்றால் இன்னும் லாபம். இப்போது எழுத்தால் சம்பாதித்து வெளிநாடு கூட பயணப்பட ஆரம்பித்துவிட்டனர் தமிழர்கள். ஆனால், ஐயரோ இலக்கியத்தால் நஷ்டப்பட்டவரே. அதை ஒரு வகையில் சொல்லிவிட முடியாது. பொதுவாக ஐயருக்கு கடிதம் எழுதும் பழக்கமே கிடையாது. இன்று இயல் விருது அவருக்கு 'Man of Letters' என்று வருகிறது. ஆனால் அவர் எழுதுவதே கிடையாது. பின்? ஒரு போன்கால்! தொலைபேசி என்பதை இவருக்காகவே உருவாக்கினான் போலும். அதேபோல பிரித்தானிய தொலைபேசி நிறுவனம் இவருக்கு மிகவும் கடமைப்பட்டு இருக்கிறது. இவர் அதற்குக் கட்டியிருக்கும் 'பில்' கணக்கைப் பார்த்தால் இலங்கையில் வீடு கட்டிவிடலாம்! எப்போது எடுத்தாலும் மணிக்கணக்காகத்தான் பேசுவார். ஆனால், அது ஒரு பொழுதும் வெட்டி அரட்டையாக இருந்தது கிடையாது. ஆங்கிலத்தில் 'உரக்கச் சிந்திப்பது' என்று சொல்லுவார்கள். அது அவரது தொலைபேசிப் பேச்சில் நடக்கும். இம்மாதிரிப் பேச்சுக்களில் அடுத்தடுத்த திட்டங்களுக்கான முன்வரைவு நிகழும். அப்போதைய திட்டத்திற்கான பொலிவு முன்வைக்கப்படும். பேசும்பொழுதெல்லாம் 'பொறி' விழுந்து கொண்டே இருக்கும். அப்பொறியை ஊதி, ஊதிக் கனலாக்குவதில் ஐயரின் அயராத உழைப்பு. ஐயர் சோர்ந்ததாக சரித்திரமில்லை. அறுபது வயதைக் கடந்த இளைஞர் ஐயர்.

ஐயர் அமெரிக்காவில் பிறந்திருக்க வேண்டியவர். ஏனெனில் மாபெரும் கனவுகளுடன் நடமாடும் ஒரு நபர் அவர். அவரது கனவுகள் மெய்ப்படாமல்

வெகுவாகப் பேசப்படுகின்றன. அதே போல் ஐயர் குறுகிய வட்டத்துள் நின்று செயல்படுவதில்லை. எடுத்த எடுப்பிலேயே சர்வதேச நோக்கு கொண்டவர் ஐயர். அதை அவரது தொகுப்புகள் நன்கு பிரதிபலிக்கும். அவரது வீடு பூரா தமிழ், ஆங்கில நூல்கள் மண்டிக் கிடக்கும். மேலைப் பதிப்பிற்கு நிகராக தனது பதிப்பு இருக்க வேண்டுமென்று நினைப்பவர் ஐயர். நல்லவேளையாக அவருக்கு கிருஷ்ணராஜா என்ற ஒப்பற்ற கலைஞன் துணையாகக் கிடைத்தான். அதுகூட இல்லையெனில் ஐயரின் பல கனவுகள் இன்று உயிர் பெற்றிருக்காது.

ஐயர் ஒரு நவீன இலக்கியவாதி. இந்தியாவில் இருக்கக்கூடிய பல எழுத்தாளர்களுக்கு கணினி என்றால் என்னவென்று அறிவதற்குள் ஐயர் ஆறாம் திணைக்குள் (இணையம்) பிரவேசித்துவிட்டார். ஒரு இளைஞனின் உற்சாகத்துடன் புதிய தொழில் நுட்பம் கற்று இன்று ஈழத்து இலக்கியத்தை மதுரைத் திட்டத்தில் இலக்கப்பதிவாக்கி தமிழ் இலக்கிய சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்டார். இதைப் பெரும்பாலும் பணக்காரர்களும், தொழில் விற்பன்னர்களும் மட்டுமே இதுவரை சாத்தியப்படுத்தியிருக்கின்றனர். ஆனால் ஐயர் ஒண்டிக்கட்டையாக தன் உழைப்பால், தனது தளராத ஆர்வத்தால் இதை சாதித்து இருக்கிறார்.

ஐயருக்கு நண்பர்கள்தான் அதிகம். அவரது எதிரிகள் எனப்படுவோர் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று பொருள். அவரை அணுகியவரை இதுவரை அவர் புறம் தள்ளியதாக எந்தச் சான்றுமில்லை.

ஐயர் ஒரு சகாப்தம். அவருடன் பழகும் வாய்ப்புப் பெற்ற என் போன்ற பலர் அதிர்ஷ்டசாலிகளே! ❑



படிப்பகம்

www.padippakam.com



# ஐயர் நினைவுகள்

பேராசிரியர் சி. மௌனகுரு

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை



நாங்கள் அனைவரும் ஐயர் என அழைக்கும் பத்மநாப ஐயரின் அறிமுகம் எனக்கு 1980களில் யாழ்ப்பாணத்திற் கிடைக்கிறது. ஒரு சைக்கிள் கரியரில் – அதுவும் ஒரு பழைய சைக்கிள் என்பது ஞாபகம் – காத்திரமானதும், புத்தகக் கடைகளிற் கிடைப்பதற்கரியதுமான தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் நூல்களையும் சிறு கதைகளையும் கட்டாகக் கட்டிக்கொண்டு, சைக்கிளை உருட்டியபடி சிரித்துக்கொண்டு வரும் ஐயரின் உருவம்தான் படிமமாக மனதில் உறைந்து நிற்கிறது.

சிறு வயதிலிருந்தே வாசிப்பில் ஆர்வம் கொண்டிருந்த என்னை வாசிப்பின் வெவ்வேறு தளங்களுக்கு அறிமுகம் செய்தவர்களாக, என் வாசிப்பின் பரப்பை உயர்த்தியவர்களாக ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒருவரோ பலரோ இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் பெரும் நன்றிக்குரியவர்கள். அவர்களுள் ஐயருக்குப் பிரதான இடம் உண்டு.

1980களில் பரிணாமம், படிகள், ஃ, யாத்ரா, கொல்லிப்பாவை, கசடதபற, இனி போன்ற சிறு பத்திரிகைகளும், காத்திரமான எழுத்துக்களும், எழுத்தாளர்களும் ஐயர் மூலம்தான் எனக்கு அறிமுகமானார்கள். இவை எதுவும் புத்தகக் கடைகளிலோ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலோ கிடைப்பவை அல்ல.



அப்போதுதான் நான் எனது கலாநிதிப் பட்ட (Ph.D.) ஆய்வினை மேற்கொண்டிருந் தேன். ஆய்வின் தலைப்பு மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள். நாடகங்களில் ஏலவே தீவிர மாக ஈடுபட்டிருப்பினும் நாடகம் பற்றி அறிவு ரீதியாக அறிய ஆரம்பித்த காலங்கள் அவை. சடங்கிற்கும் நாடகத்திற்குமான உறவுகள் மெல்ல மெல்லப் புரிய ஆரம்பித்த காலம் அது. Janne Harrison, Ridgeway George Thomson, Richard Southern போன்றோரின் நாடகம் – சடங்கு உறவுகள் பற்றிய எழுத்துக்களும் அவற்றினடியாக உருவான பேராசிரியர் கா.சிவத்தம்பியின் நாடக ஆய்வுகளும் வியப்பு களையும், புதிய உலகங்களையும் காட்டிய காலம் அவை.

அக்காலத்தில் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த தமிழ் நாடக ஆய்வுகள் எம்மைக் கவர்வனவாக இருக்கவில்லை. இந் நிலையில்தான் ஐயர் என்னிடம் 'யாத்ரா' எனும் தமிழ் நாட்டிலிருந்து வந்த சிறு பத்திரிகை ஒன்றில் வந்த ரவீந்திரன் எழுதிய திரௌபதை அம்மன் கோயில் பாரதக் கதை படிப்பும், தெருக்கூத்தும் சம்பந்தமான ஒரு கட்டுரையை அறிமுகம் செய்கிறார்.

யாத்ராவைக் கொணர்ந்து "இதனைப் படித்துப் பாருங்கள்" என்று அவர் வீட்டில் தந்தது இன்றும் பசுமையாக ஞாபகத்தில் இருக்கிறது. அக்கட்டுரை என்னைப் பெரு வியப்பில் ஆழத்தியது. பாரதச் சடங்கை ரவீந் திரன் றிச்சட் ஹெக்னரின் சூழ் அரங்குடன் (environmental theatre) தொடர்புபடுத்தியிருந்தார். இன்று அது பற்றிப் பல வாதப் பிரதிவாதங்கள் இருப்பினும் அன்று அக்கட்டுரை என்னில் ஏற்படுத்திய பாதிப்பு மிக அதிகம். சிறப்பாக மட்டக்களப்புப் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோயிற் சடங்கினையும் பொதுவாக ஏனைய கோயிற் சடங்குகளையும் நாடகப்



படிப்பகம்

www.padippakam.com

பின்னணியில் புரிந்துகொள்ள அக்கட்டுரை எனக்கு பெரிதும் உதவியது. ஒரு சிறு அக்கினிக் குஞ்சாக என்னுள் விழுந்தது அக்கட்டுரை. அத்தோடு தெருக் கூத்து பற்றியும் சடங்குகள் பற்றியும் அன்று தமிழ் நாட்டில் எழுதிக் கொண்டிருந்த வெங்கட் சாமி நாதன், ந. முத்துசாமி ஆகியோரின் எழுத்துக்களையும் ஐயரே எனக்கு அறிமுகம் செய்தார். ஐயரை எப்படி மறக்க முடியும்?

80களின் நடுப்பகுதியில் என்ற நினைக்கிறேன். ஐயர் தமிழ்நாட்டுச் சுற்றுப் பயணத்தின் பின் என்னைச் சந்திக்கிறார். S.V. ராஜதுரை தந்துவிட்டதாக ஒரு நூலை என்னிடம் தருகிறார். அது Experimental theatre என்கிற, இவன்றூஸ் எழுதிய ஓர் அருமையான நூல். ஐரோப்பிய நவீன அரங்கையும், நவ வேட்கை வாத அரங்கையும் அறிமுகம் செய்யும் ஒரு நூல். அண்மையில் SVR மட்டக்களப்பில் எம் வீட்டுக்கு வந்தபோது அந்நூலை அவரிடம் காட்டி ஐயரை நினைவு கூர்ந்தேன். இன்னொரு நாள் Indian stage lighting சம்பந்தமாக அருமையான ஒரு நூலைக் கொண்டு என்னிடம் தருகிறார். இந்தியாவில் மேடைக்கு ஒளி பாய்ச்சும் முறைமை புராதன காலம் தொட்டு இற்றைவரை எவ்வாறு இயற்கைச் சூழலுக்கும் கால மாறுதலுக்கும் ஏற்ப வளர்ந்து வந்துள்ளது என்ற அதிலுள்ள ஒரு கட்டுரை, சிந்தனையைத் தூண்டும் கட்டுரை. இலங்கை அரங்கில், சிறப்பாக இலங்கைத் தமிழ் அரங்கில் ஒளியூட்டல் எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்று சிந்திக்க வைத்ததுடன் ஈழத்துத் தமிழ் அரங்கை மேலும் ஆழமாகப் புரிய அந்நூல் எனக்கு வெகுவாக உதவியது.

இவ்வண்ணம் என் துறையையும் ஆர்வத்தையும் புரிந்துகொண்டு அதற்குத்தக கிடைத்தற்கரிய நூல்களை அவ்வப்போது பெற்றுத் தரும் ஒரு நல்ல நண்பராக ஐயர் எனக்கு வாய்த்தார்.

இப்போது நினைத்துப் பார்க்கும்போது ஒரு சிறந்த நூலகர் (Librarian) போல அவர் நடந்துகொண்டிருக்கிறார். ஒரு சிறந்த நூலகர் வாசகரின் தரமறிந்து நல்ல நூல்களுக்கு அவரை ஆற்றுப்படுத்துவார். ஐயரை நாம் ஒரு வெளிக்கள நூலகர் (Outside Librarian) என அழைக்கலாம்.

அவருக்கும் எனக்குமிடையே அன்றைய கால கட்டத்தில் இலக்கியக் கோட்பாடுகள் சம்பந்தமாக பாரதூரமான வேறுபாடுகள் இருந்தன. ஆனால் அவை எம் நட்பை ஒருபோதும் பாதிக்கவில்லை. அதற்கு எங்கள் இருவரது குணங்களும் காரணமாயிருக்கலாம். என் துணை சித்திரலேகாவினதும் நண்பர் அவர். எங்கள் உறவு குடும்ப உறவாகவும் மலர்ந்தது. ஐயரின் பிள்ளைகள், மனைவி அனைவரும் எமக்கு நெருக்கமானவர்களானார்கள்.

நாடக சம்பந்தமான நூல்களைத் தந்து எம்மை ஊக்குவித்த பத்பநாப ஐயர். தமிழியல் என்ற வெளியீட்டு நிறுவனத்தை ஆரம்பித்தார். ரகுபதியின் நூலை வெளியிட்டார். என்னிடம் ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு பற்றி ஒரு நூல் எழுதுமாறு வேண்டினார், ஊக்குவித்தார். நானும் நூலை எழுத ஆரம்பித்தேன். நூலை எழுத்துப் பிரதியில் வாசித்த அவர் அதனை எடுத்துச் சென்று தட்டச்சு செய்து என்னிடம் தந்தார். மேலும் வேண்டிய திருத்தங்கள் செய்த பின் அதனைத் தமிழியல் வெளியீடாக வெளியிடுவது என்று தீர்மானித்தோம். ஆனால் இடையில் நாட்டுப் பிரச்சினைகள் எழுந்தன. ஐயரின் மனைவியார் காலமானார். ஐயர் வெளி நாடு போக வேண்டி ஏற்பட்டது. அந்நூல் பின் யாழ் பல்கலைக்கழக வெளியீடாக வந்தது. அந்நூலை வெளியிடுவதில் காலம் சென்ற பேராசிரியர் அ. துரைராஜா எடுத்த முயற்சி மறக்க முடியாதது. அந்நூல் சாஹித்திய மண்டலப் பரிசினைப் பெற்றதுடன் அண்மையில் இரண்டாவது திருத்திய பதிப்பாகவும் வெளி வந்துள்ளது. நாடகமும் அரங்கியலும் பயிலும் ஈழத்து மாணவர்கட்கு பெரும் உதவியாக அது உள்ளது என்பதனை அதிற் சம்பந்தப்பட்டோர் என்னிடம் கூறுகின்றனர். அந்நூலின் வருகைக்கு ஐயரின் உழைப்பும், ஊக்கமும்தான் பின்னணி என்பதனை நான் இப்போது சொல்லாமல் வேறு எப்போது சொல்ல முடியும்?

எனக்கு இவ்வண்ணம் உதவிய ஐயர் என் போன்ற பலருக்கும் அவர்கள் எழுத்துக்களுக்கும் பலம் வாய்ந்த பின்னணியாக இருந்திருக்கிறார். பல நல்ல எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் ஈழத்தில் உருவாக அடக்கமாகப் பின்னணியில் இருந்து கடமையாற்றியவர். ஐயர் என்பதனை யாரும் மறுக்க மாட்டார்கள்.

அண்மையில் மட்டக்களப்பில் சுனாமிப் பேரலையினாற் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பல்கலைக் கழக விருந்தினர் விடுதியில் நானும் மனைவியும் வாழ்ந்தபோது ஓர் இரவு 11 மணிக்கு ரெலிபோன் மணி கேட்டது. மறுமுனையில் ஐயரின் குரல். என்னை, சித்திராவை எமது இழப்பினைக் கவலை தோய்ந்த குரலில் விசாரித்தார். எமது ஆயிரக்கணக்கான நூல்களினதும், அரிய கல்விசார் ஆவணங்களினதும் இழப்பு எம்மைப் போல அவரையும் உலுக்கியிருந்தது. கனிவோடும் அன்போடும் ஆறுதல் கூறி மேலும் மேலும் தொடர்ந்து செயல் புரியவேண்டும் என்று உற்சாகமும் தெம்பும் தந்த ஐயரின் பண்பையும், அன்பையும் எப்படி மறக்க முடியும்?

ஐயரின் நினைவுகள் நாம் உள்ளவரை என்றும் இனிய ஊதுவத்தியின் புகை போல எம்முள் மணம் வீசிக்கொண்டே இருக்கும். ❑

**ஒரு சிறந்த நூலகர் (Librarian) போல அவர் நடந்துகொண்டிருக்கிறார். ஒரு சிறந்த நூலகர் வாசகரின் தரமறிந்து நல்ல நூல்களுக்கு அவரை ஆற்றுப்படுத்துவார். ஐயரை நாம் ஒரு வெளிக்கள நூலகர் (Outside Librarian) என அழைக்கலாம்.**



படிப்பகம்

www.padippakam.com



# ஐயரின் தமிழ்த் தூது

## எம். ஏ. நுஃமான்



தனிநாயகம் அடிகளைத் தமிழ்த் தூதர் எனச் சொல்வதுண்டு. உலகெங்கும் தமிழைக் கொண்டு சென்றதில் அவருக்கு இருந்த பங்கையே இது குறிக்கின்றது. அவருக்குப் பிறகு வேறு ஒரு வகையில் இந்த அடைமொழிக்குப் பொருத்தமானவர் பத்மநாப ஐயர்தான் என்று நான் நினைப்பதுண்டு. தனிநாயகம் அடிகள் சிறந்த புலமையாளர், தமிழறிஞர், ஆய்வாளர், உலகெங்கும் தமிழறிஞர் மத்தியில் நன்கு அறியப்பட்டவர், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் தோற்றுவித்தவர்களுள் முக்கியமானவர். இந்தப் பெருமையெல்லாம் ஐயருக்கு இல்லை. ஐயர் ஒரு சாதாரண எழுத்தாளர்கூட இல்லை. அவர் ஒரு பரந்த வாசகர்கூட இல்லை என்றும் சொல்வேன். என்றாலும், அவரை ஒரு தமிழ்த் தூதர் என்று சொல்லலாம் என்பதற்குக் காரணம் எழுத்துக்குப் புறம்பான அவரது இலக்கிய நடவடிக்கைகள்தான். அதற்கு உந்து சக்தியாக உள்ள, பகுத்தறிவால் விளக்கமுடியாத, அலுப்புச் சலிப்பற்ற அவரது கலை இலக்கியப் பற்றுத்தான். இந்தப் பற்று ஒரு போதைபோல அவருக்குள் ஊறியிருக்கின்றது. இது குடிப்பதனால் வரும் போதையல்ல; குடிக்கக் கொடுப்பதனால் வரும் போதை. ஐயர் தான் வாசிக்காமலே பிறரை வாசிக்கப் பண்ணுவார்; தான் எழுதாமலே பிறரை எழுதப் பண்ணுவார். இலக்கியக்காரர்களுடன் தொடர்பு கொள்வதிலும், பிறரைத் தொடர்புகொள்ளச் செய்வதிலும் அவருக்கு ஒரு போதை இருக்கிறது. இதற்காக அவர் தன் நேரம், சக்தி, பொருள் அனைத்தையும் செலவு செய்கிறார். இதை ஒரு கிறுக்கு என்று சிலர் சொல்லலாம். இந்தக் கிறுக்குத்தான் ஐயர். அதுதான் அவர் வாழ்வு, அதுதான் அவர் உலகம். அது இல்லாவிட்டால் ஐயர் இல்லை.

ஐயரை சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக எனக்குத் தெரியும். எங்கள் முதல் சந்திப்பு யாழ்ப்பாணத்தில்தான் நிகழ்ந்தது என்று நினைக்கின்றேன். ஐயரின் வீட்டில் புத்தகங்களும் சஞ்சிகைகளும் நிறைந்து கிடக்கும் காட்சி இன்னும் என் மனக்கண்ணில் தோன்றுகின்றது. தமிழ்நாட்டிலிருந்து அவர் கொண்டுவந்து குவித்து வைப்பவை அவை. முக்கியமான சிறு சஞ்சிகைகள் – கசடதபற, கணையாழி, கொல்லிப்பாவை, படிகள், பரிமாணம், யாத்ரா என்று – புதிய புதிய சஞ்சிகைகள்; அவற்றின் பழைய இதழ்களின் கட்டுகள்; முக்கியமான எழுத்தாளர்களின் படைப்புகள் என்று கால்வைக்க இடமின்றி நிறைந்து கிடக்கும். தமிழ்நாட்டில் இவரது புத்தகத் தேர்வுக்கு முதலில் உதவியவர்கள் க்ரியா ராமகிருஷ்ணனும் திலீப்குமாரும். அவர்களின் தேர்வு ஐயரின் தீவிர வாசகர்களுக்கு விருந்தாக அமைந்தது. அந்த நண்பர்களின் எண்ணிக்கை அதிகம் இல்லை. அவர்களுக்குக் கொடுத்தது போக மிகுதியானவை அட்டைப் பெட்டிகளிலும் அலமாரிகளிலும் உறைந்து கிடக்கும்.

இது ஐயரின் ஒரு பாதை என்றால் மற்ற பாதை ஈழத்து எழுத்தைத் தமிழக நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கிச் சென்றது. ஈழத்துப் புத்தகங்களை வாங்கி தன் செலவில் தபாலில் அனுப்புவார் ஐயர். அல்லது அங்கு போகும் யாரிடமாவது கொடுத்து அனுப்புவார். அல்லது தமிழகம் செல்லும்போது கட்டிச் சுமந்துசெல்வார். 1980களின் தொடக்கத்தில் சில முக்கியமான தமிழக எழுத்தாளர் மத்தியில் ஈழத்து இலக்கியம் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்தியதில் ஐயரின் பங்கு முக்கியமானது.

இந்த இலக்கியப் பரிவர்த்தனையில் ஐயருக்குக் கை நஷ்டமே தவிர லாபம் இல்லை. லாபம் இருந்திருந்தால் அது அவருக்குக் கிடைத்த சுய திருப்திதான். இதைத்தான் நான் போதை என்று சொல்கிறேன். அன்றாட வீட்டுச் சமையலுக்கு ஐயர் ஒழுங்காகக் காய்கறிகள் வாங்கிக் கொடுத்திருப்பாரா என்பது சந்தேகமே. 'மூன்று பெண் பிள்ளைகளை வைத்துக்கொண்டு இந்த மனுஷனுக்கு விசர' என்று நாங்கள் சிலவேளை கடிந்துகொள்வதுண்டு. ஆனால், ஐயரின் அக்கறையெல்லாம் இவ்வாறு புத்தகப் பரிவர்த்தனையிலேயே மூழ்கியிருந்தது. இப்படித்தான் ஐயரின் இலக்கிய வாழ்வு – தமிழ்த்தூது ஆரம்பித்தது என்று நினைக்கிறேன்.

இதன் அடுத்த கட்டமாகத்தான் ஐயரின் வெளியீட்டு முயற்சிகள் அமைந்தன. நர்மதா, அன்னம், க்ரியா, பின்னர் விடியல், காலச்சுவடு ஆகியவற்றுடன் ஐயர் ஏற்படுத்திய தொடர்புகள் ஈழத்து நூல்கள் சில தமிழகத்தில் வெளிவரக் காரணமாக அமைந்தன. எண்பதுகளின் தொடக்கத்தில் எனது இரண்டு கவிதைத் தொகுதிகள்



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறுதான் வெளிவந்தன. 'அழியா நிழல்கள்' தொகுப்பை நர்மதாவும் 'மழைநாட்கள் வரும்' தொகுப்பை அன்னமும் வெளியிடச் செய்தவர் ஐயர்தான். 'பதினொரு ஈழத்துக் கவிஞர்களை' க்ரியாவும் 'மஹாகவி கவிதைகளை' அன்னமும் வெளியிட்டன. ஐயரின் இடையறாத தூண்டுதல் இல்லாவிட்டால் இவற்றின் தொகுப்பு முயற்சியில் நான் ஈடுபட்டிருப்பேனா என்பது சந்தேகம். பதினொரு ஈழத்துக் கவிஞர்களை சமீபத்தில் காலச்சுவடு இரண்டாம் பதிப்பாக வெளியிட்டதிலும் ஐயரே பின்னணியில் இருந்தார். மஹாகவி கவிதைகள் தொகுப்புக்கு நான் எழுதிய சற்று நீண்ட முன்னுரையைப் புத்தகம் வெளிவருவதற்கு முன்னரே மலர் மன்னனின் '1/4' சஞ்சிகையில் பிரசுரிக்கச் செய்தவரும் ஐயர்தான். எனக்குத் தமிழ்நாட்டுடன் அப்போது தொடர்புகள் இருந்ததில்லை. ஈழத்துக் கவிஞர்களை, எழுத்தாளர்களைப் பிறருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற விருப்பம் ஒரு வெறியாகவே ஐயருக்குள் செயற்பட்டிருக்கின்றது.

இங்கிலாந்து நோக்கிய புலப்பெயர்வு ஐயரின் தமிழ்த் தூதின் மூன்றாவது கட்டம் என்று கூற வேண்டும். ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என 1990களில் விரிவடைந்த 'தமிழ் கூறும் நல்லுலகில்' தன் தொலைபேசி மூலம் ஐயர் ஒரு வலைப்பின்னலையே ஏற்படுத்திக்கொண்டார். அதிகாலை ஐந்து மணிக்கு அல்லது இரவு 11, 12 மணிக்கு தொலைபேசி ஒலித்தால் அது பெரும்பாலும் ஐயராகத்தான் இருக்கும். ஐயரிடமிருந்து தொலைபேசி அழைப்பு என்றால் எனக்கு உள்ளூரப் பயம். ஒன்று, அவர் இருபது முப்பது நிமிடங்களுக்குக் குறைவாகப் பேசுவதில்லை. மற்றது, ஏதாவது புதிய ஒரு வேலையைப் பாரம் தருவது பற்றியதாக அல்லது முன்பு அவருக்கு வாக்களித்த பழைய வேலை ஒன்றை நினைவூட்டுவதாக அது இருக்கும். ஐயரிடம் இருந்து தப்புவதற்காக நான் தொலைபேசி பில்லைப் பற்றி நினைவூட்டுவேன். ஐயருக்கு இந்தப் பூச்சாண்டியெல்லாம் ஒரு பொருட்டல்ல. அவருக்கு எப்படியும் காரியம் ஆக வேண்டும். நீங்கள் நேரத்துக்கு வாக்குறுதியை நிறைவேற்றினால் எனது பில்லைக் குறைக்கலாம் என்பார். ஆனால் அன்றாட வேலைச்சுமைக்குள் நசுங்கி மூச்சுத் திணறிக்கொண்டிருக்கும் என்னால் ஐயரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடிந்ததேயில்லை. உரையாடலின் இடையில் பிறிதொரு நண்பரைப் பற்றி விசாரித்தால் போதும். கொஞ்சம் பொறுங்கள், நீங்கள் நேரடியாகவே அவருடன் பேசலாம் என்பார். அடுத்த நிமிடம் மறுபுறத்திலிருந்து அந்த நண்பரின் குரல் ஒலிக்கும். இப்படித்தான் மு. நித்தியானந்தனுடன் ஐயர் எனக்குத் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார். லண்டன் வந்திருந்த இந்திரன், தமிழவன் போன்றோருடன் எல்லாம் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார். ஒருமுறை பேசிக்கொண்டிருக்கும்போது இப்போது அவுஸ்திரேலியாவில் இருக்கும், இலங்கையர் கோனின் மகள் சந்திரலேகா பற்றிக் குறிப்பிட்டார். சில விஷயங்கள்பற்றி அவரைத் தான் எழுதத் தூண்டுவதாகச் சொன்னார். நானும் சமீபத்தில் படிக்கக்கிடைத்த அவரது கட்டுரை ஒன்று பற்றிக் குறிப்பிட்டேன். அவ்வளவுதான். ஐயருக்குக் குஷி பிறந்துவிட்டது. லண்டனில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு இணைப்பை ஏற்படுத்தி நேரடியாகவே சந்திரலேகாவுடன் பேசும்படி செய்துவிட்டார். பணச்செலவைப் பொருட்படுத்தாது, நவீனத் தொழில்நுட்ப வசதிகளை ஐயர் எப்படியெல்லாம் பயன்படுத்துகிறார் என்பதற்கு இது ஒரு உதாரணம். ஐயரைத் தவிர பிறிதொருவரிடம் நாம் இதை எதிர்பார்க்க முடியாது என்றுதான் நினைக்கிறேன். இந்தத் தொலைபேசி இணைப்பைப் பயன்படுத்தித்தான் கடந்த பத்தாண்டுகளில் ஐந்து பெரிய இலக்கியத் தொகுப்புகளை லண்டனில் இருந்தபடியே ஐயரால் வெளிக்கொண்டுவர முடிந்திருக்கிறது. இதே தொலைபேசி இணைப்பின் ஊடாகத்தான் சுமார் நூற்றைம்பது ஈழத்துத் தமிழ் நூல்களை மதுரைத் திட்ட டிஜிற்றல் நூலகத்தில் ஐயரால் சேர்க்கவும் முடிந்திருக்கிறது.

இங்கிலாந்துக்குப் போனபிறகுதான் ஈழத்து எழுத்தை தமிழ்நாட்டுக்கு மட்டும் அறிமுகப்படுத்தினால் போதாது, ஆங்கிலத்தின் மூலம் உலகெங்கும் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் ஐயர் தீவிரமாக ஈடுபட்டார். அதற்கு முன்பும் அவரிடம் இந்த மொழிபெயர்ப்பு மோகம் இருந்ததுதான். பலருடைய கவிதைகள், சிறுகதைகளைப் பிறரைக் கொண்டு மொழிபெயர்ப்பித்திருக்கிறார். இப்போது அதை ஒரு பரந்த அளவில் செய்யவேண்டும் என்ற ஆர்வம் அவருக்குள் கிளர்ந்திருக்கிறது. இதன் விளைவுகளில் ஒன்றுதான் சமீபத்தில் கனடாவிலிருந்து வெளிவந்த Lute Song and Lament. செல்வா கனகநாயகத்தின் தொகுப்பு முயற்சியின் பின்னால் ஐயரின் அயரா உழைப்பும் இருக்கின்றது. இதுபோன்ற இன்னும் பல திட்டங்களை ஐயர் தன் தலையில் சுமந்துகொண்டுதானிருக்கிறார்.

கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளாக ஈழத்து எழுத்தையும், எழுத்தாளர்களையும் வெளி உலகுக்கு எடுத்துச் செல்லும் தூதுவராக ஐயர் செயற்பட்டிருக்கிறார். ஐயரின் தனிப்பட்ட ஆர்வமும் அக்கறையும் மட்டுமே இதற்கு மூலதனமாக இருந்திருக்கிறது. பிறருடைய உதவியையும் ஒத்துழைப்பையும் எவ்வாறு பெறுவதென்பது ஐயருக்குத் தெரியும். பிரதிபலன் எதிர்பாராத அவரது ஆர்வத்துக்கு முன்னால் மற்றவர்கள் அடிபணிவதைத் தவிர வேறு வழி இல்லை. ஐயரின் செயற்பாடுகளுக்குப் பின்னால் அவரது அரசியல் இருக்கிறது என்று சிலர் சொல்லக் கூடும். ஒவ்வொருவருக்கும் அவரவர் அரசியல் உண்டுதான். ஐயரைப் பொறுத்தவரை எனது அக்கறை ஐயரின் அரசியல் பற்றியதல்ல. அனைவரையும் ஈர்க்கும் அவரது தனிமனித ஆளுமை பற்றியது; அவரது இலக்கியச் செயற்பாடு பற்றியது.

விருதுகளால் ஐயருக்குப் புதிய கௌரவம் எதுவும் வந்துவிடாது என்றே நான் நினைக்கிறேன். தமிழ்ச் சூழலில் விருதுகளையும் பாராட்டுகளையும் நாம் மிகவும் மலினப்படுத்திவிட்டோம். விருதுகள் எவையும் பெறாது இருப்பதே ஒருவருக்கு உயர்ந்த மரியாதை என்ற நிலையை நாம் ஏற்படுத்திவிட்டோம் என்றே எனக்குத் தோன்றுகின்றது. ஐயருக்கு விருது வழங்குவது என்பது ஒரு பூவுக்குப் பொன்னாடை போர்த்துவது போன்றது. பூவுக்கு எதற்குப் பொன்னாடை? அதனால் அதற்கு என்ன பெருமை? போர்வையால் அது கசங்கிவிடக் கூடாது என்ற ஆதங்கம்தான் நமக்கு வரும். எந்த விருதும் ஐயரை மாசுபடுத்திவிடாது என்று நம்புகிறேன். எனது இந்த நம்பிக்கைதான் நான் ஐயருக்கு வழங்கும் பாராட்டு. ❑



படிப்பகம்

www.padippakam.com



# புறநடைகளை விதிகளாக்கும் விருது

என். கே. மகாலிங்கம்



அது 1974ஆம் ஆண்டு என்ற நினைவு. கொழும்பில் பூரணி சஞ்சிகையை நடத்திக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் பத்மநாப ஐயர் என் வீடு தேடி வந்தார். கிருஷ்ணமூர்த்தி தம்பதிகள் அழகாக வெளியிட்ட நூல்கள் பலவற்றை ஏற்கெனவே வாசித்திருந்தேன். அதில் அக்கரை இலக்கியம் என்ற நூலும் ஒன்று. அதை மு. தளையசிங்கத்திடம் வாங்கி 60 கடைசியிலே வாசித்ததும், அதற்கு இ. பத்மநாப ஐயர் ஈழத்து இலக்கியப் படைப்புகளை சேர்ப்பதில் உதவினார் என்பதும் ஏலவே நான் அறிந்ததே. ஆனால், முதன் முதலாக அப்பொழுதுதான் நேரடியாக அவரைச் சந்திக்கிறேன்.

எனக்கும் அவருக்கும் இன்னொரு ஒற்றுமை இருந்ததையும் எங்கள் ஆரம்ப சந்திப்பில் அறிந்துகொண்டோம். வேலையில்லாப் பட்ட தாரிகளை குறைந்த சம்பளத்தில் அரசு வேலைக்கு நியமித்து என்னை ஆங்கில ஆசிரிய ராகவும் அவரை விவசாய அலுவலராகவும் அனுப்பியும் இருந்தது. அதனால், எங்களுக்குத் தொழில் சம்பந்தமான பிரச்சினைகளும் இருந் தன. பின்பு, அது தொடர்பாக ஆங்கில நாளி தழுக்கு ஒரு கட்டுரை எழுதினார் என்பதும் என் நினைவு.

அன்று தொடக்கம் 80இல் நான் நைஜீரியா வுக்குச் செல்லும்வரை பல முறை சந்தித்திருக் கிறோம். அப்பொழுது அவர் கொழும்பில் வேலை. மனைவி மாத்தளையில் வேலை. அதில் இரண்டு சந்திப்புக்கள் இன்னும் ப்சுமையாக என்னில் உள்ளன.

ஒன்று. கே. கணேசை ஒரு முறை என் வீட்டுக்கு அழைத்து வந்து அவர்களுடன் உரை யாடியது. மற்றது, அசோகமித்திரன் எங்கள் வீட்டிற்கு வந்ததும், பின்பு நாங்கள் மூவரும் மாத்தளைக்கு புகையிரத்திலும் பேருந்திலும் ஐயருடைய வீட்டிற்குச் சென்று அவர் மனைவி யால் பரிமாறப்பட்ட தோசையைச் சாப்பிட்டு வந்ததும். அங்குள்ள மாரியம்மன் கோவிலையும் தரிசித்ததும்.





படிப்பகம்

www.padippakam.com

ஐயர் ஒரு நடமாடும் நூலகமாக, நூலகராக எனக்கும் என்னைப் போன்ற புத்தகப் பிரியர்களுக்கும் செயல்பட்டிருக்கிறார். பலரின் நூல்களை தமிழ் நாட்டில் அச்சேற்றியும் வெளியிட்டும் இருக்கிறார். (அதில் எனது 'தியானம்' தொகுதியும் ஒன்று. மு. தளையசிங்கத்தின் 'ஒரு தனி வீடு' என்ற நாவல் பல ஆண்டுகளாக அச்சேறாமல் கிடந்தது. அதை என்னிடம் வாங்கிச் சென்று, கி.ராஜநாராயணன் மூலம் வெளியிட்டார்.)

அவரின் தொடர்பு கிடைத்திருக்காவிட்டால் சீரிய நூல்களும் தமிழ் நாட்டின் சிற்றிலக்கிய இதழ்களும் எங்களுக்குக் கிடைத்திருக்க மாட்டா. அதே போல, அவர்களுக்கும் இலங்கையில் அச்சேறியதும் அச்சேறா மல் கிடந்து பின்னர் அச்சேறிய தமிழ் நூல்களும் கிடைத்திருக்க மாட்டாதென்பதும் மறுபக்கத்தில் உண்மை. ஏனெனில் அக்காலத்தில் கைலாசபதி, கணேசலிங்கன், டொமினிக் ஜீவா போன்றோருடைய நூல்கள் போன்றவையும் தமிழகத்திலேயே பிரசுர மாகி, அவர்கள் அங்கே அறியப்பட்டிருந்தார்கள். மற்ற ஈழத்திலக்கியம் தமிழக வாசகர்களுக்கு அறிமுக மாகாமலே இருந்தது. பத்மநாப ஐயர்தான் ஒருவழிப் பாதையை மாற்றி இருவழிப் பரிவர்த்தனையை ஆரம்பித்து வைத்தார். அதனால்தான், தளையசிங்கம், ஏ.ஜே.கனகரட்னா, மஹாகவி, பொன்னுத்துரை போன்றோர் அங்கு பரவலாக அறிமுகமாயினர். பின்னர் அது வேகமாயிற்று. ஈழப் பிரச்சினையும் போலத்தான் நீண்ட காலம் அங்கிருந்து சஞ்சிகைகளும் நூல்களும் இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால், ஐயர் கட்டிய பாலத்தால் தரமான சீரியவற்றைக் கொண்டு வரவும் செல்லவும் முடிந்தது. இத்தகைய தொரு பாலத்தை எவரும் நினைத்திராத காலத்தில் அவர் கட்டினார். அதில் அவர் ஒரு முன்னோடி. A trail-blazer. முதல் தடம் பதித்தவர்.

ஏறக்குறைய 40 ஆண்டுகளாக ஈழத் தமிழ் இலக்கி யங்களை நூலுருவாக்கம் செய்தும், தமிழைப் பரவ லாக்கி வளர்த்தும் வரும் ஒருவரை அங்கீகரிக்காமல், ஏதோ அவர் செய்வது கடமை என நினைத்து, அவர் வாழும் காலத்தில் சும்மா இருப்பது நாம் தமிழை வளர்ப்பவர்களைப் புறக்கணிப்பதற்குச் சமம். பின் மணி மண்டபம் கட்டுவதில் என்ன பிரயோசனம்?

விருதுகள், பரிசுகள் திறமைக்கு அளிக்கும் கௌர வம். அதுவும் தரமான அமைப்புக்களால் அளிக்கப் படும்போது அது இன்னும் கௌரவம் பெறுகிறது. அது பல வேளைகளில் பிழையான ஆட்களுக்கும் கிடைத்துவிடுகின்றது, விருதுகள் திறமையை மட்டிடு வதில்லை, திறமையுள்ளவன் –ள் தான் தோன்றியாகவே கண்டுபிடிக்கப்படுவான்–ள் கௌரவிக்கப்படுவான்–ள் என்ற காரணங்களில் அரை உண்மைகள் இருந்தா லும் ஐயரைப் போன்ற ஒரு வரைக் கண்டுகொள்ளா மல் இருப்பதற்கே பல காரணங்கள் உள்ளன. அதில் ஒன்று, அவர் எந்த பாரம்பரிய வகைமைப்பாட்டுக் குள்ளும் அடங்காதவர்.

**ஏறக்குறைய 40 ஆண்டுகளாக ஈழத் தமிழ் இலக்கியங்களை நூலுருவாக்கம் செய்தும், தமிழைப் பரவலாக்கி வளர்த்தும் வரும் ஒருவரை அங்கீகரிக்காமல், ஏதோ அவர் செய்வது கடமை என நினைத்து, அவர் வாழும் காலத்தில் சும்மா இருப்பது நாம் தமிழை வளர்ப்பவர்களைப் புறக்கணிப்பதற்குச் சமம்.**

அதனுடன் ஒட்டி வளர்ந்த எழுத்தாளர்களும் தமிழகத்தில் பேசப்பட வாய்ப்புக்கள் கிடைத்தன.

அதேபோல, ஈழத்திலும் பரவலாக தமிழக நவீன எழுத்தாளர்கள் சஞ்சிகைகள் மூலம் தெரிய வந்ததும் வாசிக்கப்பட்டதும் அக்காலத்தில்தான். அதில் ஓர் உண்மையும் துரதிர்ஷ்டமும் என்னவென்றால், அக் காலத்திலும் சரி. இக்காலத்திலும் சரி, தமிழக எழுத்தா ளர்களை இலங்கை வாசகர்கள் வாசித்த அளவுக்கு தமிழக எழுத்தாளர்களில் பலருக்கே ஈழத்து எழுத்துக் கள் இன்னும் பிடிபடவும் இல்லை. கிடைத்து வாசிக்கவும் இல்லை. வாசித்தாலும் நடை அவர் களுக்கு நெருடுகின்றது என்ற சாக்கு. ஆனால் எங்களுக்கு மட்டும், ராஜநாராயணன் துவங்கி பூமணி ஊடாக, புகழ் வரை புரிகின்றது. பிரச்சினை இல்லை.

ஐயரின் முயற்சியால், பல பதிப்பகங்கள் புத்தகங் களைப் பிரசுரித்தன. சில எழுத்தாளர்களைச் சந்தித்து அறிமுகப்படுத்தினார். அவ்வளவுதான் ஒரு தனி மனிதரால் முடிந்தது.

இராமர் கட்டிய பாலத்தால் இலங்கைக்கு வானரப் படையைக் கொண்டு வந்து இலங்கையை அழிக்க முடிந்தது. யுத்தத்தில் வெல்லவும் முடிந்தது. அதே

எந்தப் பிரதியுபகாரத்தையுமே எதிர்பார்க்காமல், தன் சௌகரியங்களையும், வசதிகளையும் தியாகம் செய்து தமிழை வளர்க்கப் பாடுபட்டிருக்கிறார். குடும்ப நலனைக் கூட கவனியாத ஒரு குடும்பத் தலைவனாக வாழ்ந்திருக்கிறார். இத்தகைய தியாகச் செயல்களைச் செய்யும் அபூர்வ மனிதர்கள் இறந்துகொண்டிருக்கும் ஓர் இலட்சியப் பரம்பரை. rare species.

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டமும் ரொறொன் ரோப் பல்கலைக்கழகத் தென்னாசிய மையமும் இணைந்து வழங்கும் இவ்விருது, இதுவரை தமிழில் பல காரணங்களால், ஆள், அரசியல் போன்ற செல்வாக்குகள் இல்லாததால் கவனம் பெறாமல், நீண்ட காலம் உண்மையாகத் தமிழுக்குச் சேவையாற்றி யவர்களுக்கு, அவர்கள் வாழும் காலத்திலேயே மதிக் கப்பட வேண்டும் என்ற காரணங்களால் கொடுக்கப் படுவது. அவ்விருது சாதி. மதம், தேசம் போன்ற குறுகிய மனப்பான்மைகள் கடந்த பரந்த அடிப்படை யைக் கொண்டது. அவ்வடிப்படையில் இம்முறையும் பொருத்தமான ஒருவருக்கு அவ்விருது கிடைப்பது வரவேற்கப்பட வேண்டியதே.

ஐயருக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்! ❑



படிப்பகம்

www.padippakam.com



# இலக்கியப் பாலம் கட்டுபவர்

ஏ. ஜே. கனகரட்ணா



2004ம் ஆண்டுக்கான இயல் விருது இ. பத்மநாப ஐயருக்குக் கிடைத்த செய்தியைக் கேள்விப்பட்டவுடன் எனது முதல் எதிர்வினை, 'இறுதியில், ஐயருக்குக் கிடைக்க வேண்டிய அல்லது கிடைத்திருக்க வேண்டிய அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. அதுவும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற, கீர்த்திமிக்க ஒரு அமைப்பால் வழங்கப்பட்டிருக்கிறது' என்பதே.

கடந்த கால் நூற்றாண்டு காலம் அல்லது அதற்கும் மேலாக ஐயர் ஓர் இலக்கியப் பாலமாக இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் சேவை செய்து வருகிறார். தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் சிறந்த சீரிய இலக்கிய சஞ்சிகைகளையும், நூல்களையும், இங்கே கிடைக்குமாறு செய்வதில் கருவியாக இருந்து வருகிறார்.

இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் நடைபெற்ற இலக்கியப் போக்குவரத்து ஒருவழிப் பாதையாகவே பல காலமாக இருந்து வந்துள்ளது. ஐயர் இந்த சமமற்ற தன்மையை சரிசெய்ய வெளிக்கிட்டார். தனது தனிப்பட்ட தொடர்புகளைக் கொண்டு இலங்கையில் வெளியான சீரிய இலக்கிய சஞ்சிகைகளையும் நூல்களையும் தமிழ் நாட்டு உய்த்துணரும் வாசகர்களுக்குக் கிடைக்கச் செய்தார்.

இப்பொழுது அவரின் இலக்கியச் செயற்பாடுகள் உலகளாவிய அளவில் விரிந்து விட்டது.

உட்கதை ஒன்று என் நினைவில் இன்றும் பசுமையாக உள்ளது, யாழ்ப்பாணப் பொது நூலகம் அரச குண்டர்களால் 'கொளுத்தப்பட்டு' ஏறக்குறைய எல்லாப் பெறுமதிமிக்க நூல்களும் எரிந்தபோது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 'மறுமலர்ச்சிக் கழகம்' என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார்கள். எரிந்த நூலகத்திற்கு நூல்கள் வாங்குவதற்குப் பணம் சேர்த்தார்கள். ஐயர் அதற்குத் தேவையான நூல்களை வாங்கி வருவதற்காக, தமிழ் நாட்டுக்கு கடற் பிரயாணம் செய்வதற்கு தன்னார்வத்துடன் முன்வந்தார். சிறிலங்கா கடற்படையால் கண்டுபிடிக்கப்பட்டால் நேரும் ஆபத்து அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தும், எந்த இடருக்கும் பயப்படாமல், களவாகக் கடற் பிரயாணம் செய்ய முன் வந்தார். எந்த ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் இந்திய சமுத்திரத்தைத் தாண்டிச் சென்று, தன் நண்பர்களின் உதவியுடன் மிகத் தரமான நூல்களைத் தெரிவுசெய்து பத்திரமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அந்த நூல்களுள் மிசேல் ஃபூக்கோவின் பல நூல்களும் இருந்தன. அப்படித்தான் முதன் முதலாக எமது கால முக்கிய சிந்தனையாளர் ஒருவரின் நூல்களுடன் எனக்குப் பரிச்சியம் ஏற்பட்டது.

ஐயர் பணத்தைப் பற்றிக் கவலைப்பட்டதோ படுவதோ கிடையாது, நான் வாசிக்க விரும்புவேன் என்று ஒரு நூலை எங்காவது அவர் கண்டுவிட்டால் அதை வாங்கி இங்கிலாந்திலிருந்து எனக்குத் தபாலில் அனுப்பிவிடுவார்.



கடைசியாக வந்த உலக இலக்கிய அறிவு அபிவிருத்திகளில் நான் பின் தங்கிவிடக் கூடாது என்ற காரணத்துக்காக அவர் கடன்படக் கூடாது என்று நான் அவரைக் கடிந்து கொண்டால், 'நான் அக் காலத்தில் இலங்கையில் இருந்தபோது ரூபாவில் கடனாளியாக இருந் தேன். இப்போ பவுணில் கடனாளியாக இருக்கிறேன். அவ்வளவுதான்' என்று பகிடியாக எனக்குக் கூறுவார்.

இயல் விருதுக்குச் சரியாகவே தெரிவு செய்யப்பட்ட இம்மனிதனின் குணவியல்பு இது. ❑



படிப்பகம்

www.padippakam.com





# தமிழ் ஈழத்தின் இலக்கிய தூதர்

எம். வேதசகாய குமார்

இலக்கியம் தொடர்பான நம் சிந்தனைகளைக் காலம் காலமாக நாம் படைப்பையும் படைப்பாளியையும் மையப்படுத்தியே வளர்த்துக் கொண்டுள்ளோம். ஒரு படைப்பாளியின் அறைக்குள்ளாகவே அவன் படைப்பு முழுமை பெற்றுவிட முடியும். இந்நிலையில் கூட்டு உழைப்பு என்று குறிப்பிட ஏதுமில்லை. படைப்பு என்றுமே தனி மனித அனுபவமே. படைப்பாளி சொந்த அனுபவத்தினைச் சார்ந்தே இயங்குகிறான். வாசிப்பு மூலம் படைப்பை தன்னுள் விரித்து தன் அனுபவ வாழ்வை விரிவடையச் செய்து தன்னை உயர்த்திக்கொள்ளும் வாசகனும் தனி மனிதனே. அழகியல் அனுபவம் என்பதே தனிமனித அனுபவம்தான். இத்திசையிலான சிந்தனை நவீனத்துவ காலகட்டத்தில் அதன் உச்சத்தைக் கண்டது. படைப்பாளியின் வாசக உறவுகூட கேள்விக்குள்ளானது. படைப்பாளி மட்டுமே பேர் வடிவம் கொண்டான்.

நவீனத்துவத்திற்குப்பின் இப்பார்வையை மறுபரிசீலனைக்கு உள்ளாக்க வேண்டிய கட்டாயம் எழுகிறது. இன்று பிரதி மேம்படுத்துபவர் படைப்பாளியின் எல்லைக்குள்ளாக நுழைந்து விட்டிருக்கிறார். படைப்பு ஒரு வாசக மனதை எட்டும் வரையில் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்து விட்டிருக்கும். நூற்றாண்டுகள் ஆனாலும் நிலை இதுவே. ஆக வாசகனே படைப்பைப் பொருளுடையதாக்குகிறான். படைப்பினுடனான வாசக உறவு தற்செயல் நிகழ்வல்ல. இதைத் தோற்றுவிக்க ஒரு சமூக இயக்கம் இயங்கியாக வேண்டும். படைப்பாளி, வாசகன், விமர்சகன், வெளியீட்டாளன் என்றும் படைப்பியக்கத்தின் கூறுகளில் எதனையும் முதன்மைப்படுத்தியாக வேண்டுமென்பதில்லை. அனைத்திற்கும் சம முக்கியத்துவமே. சமூகத்தின் வாசக நிலையில் தோன்றும் பிறழ்வினைக் கண்காணிக்க விமர்சனம் செயல்பட்டாக வேண்டும்.

இக்கூறுகள் அனைத்தும் காலம் காலமாக மரபில் நீடித்து வருவனதான். சில கூறுகளின் வடிவங்கள் மாறிக்கொண்டிருக்கும். கம்பனின் இராமாயணம் தோற்றம் கொண்டபோது, வெளியீட்டாளன் இருந்திருக்கவில்லை. ஆனால் வாசக உறவைத் தோற்றுவிக்க வேறொரு வடிவம் இருந்தது. ஒருவகையில் வெளியீட்டாளனின் மாற்று வடிவம்.

ஒரு மொழி நிலவியல் அரசியல் அடிப்படையில் பிளவுபட்ட இரு வேறுபட்ட சமூகங்களின் பேச்சு மொழியாக படைப்பு மொழியாக இயங்கக் கூடுமானால் சிக்கல் மேலும் வலுவடைகிறது. இரு சமூகங்களின் படைப்பியக்கத்தினையும் இணைக்கும் ஒரு பாலம் இருந்தாக வேண்டும். பத்மநாப ஐயரின் இயக்கம் இங்குதான் பொருளுடையதாகிறது.

இந்தியத் தமிழ் இலக்கிய வாசகன் எழுபதுகளில் ஈழத்தமிழ் இலக்கியப்பரப்பினைக் குறித்து அறிந்துகொள்வதற்குப் பொருத்தமான ஊடகம் ஏதும் இல்லாதிருந்தது. கைலாசபதியும், சிவத்தம்பியும்தான் ஈழத்தமிழ் இலக்கியத்தை இங்கு பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். இருவருமே விமர்சகர்கள். அதுவும் கல்விப்புலம் சார்ந்த விமர்சகர்கள். இயல்பாகவே 'படைப்பு வறுமை' அவர்களுடனான உறவை சீர்கேடாக்கியது. அவர்கள் முன்வைத்த அதுவும் உரத்த குரலில் முன் வைத்த டானியல், கணேசலிங்கன் போன்றவர்களை எவ்வகையிலும் படைப்பாளிகளாக அங்கீகரிக்க இளம் வாசகர்கள் தயாராகவில்லை. கூடவே அவர்கள் முன் வைத்த 'இலங்கை இலக்கியம்' 'புரட்சி இலக்கியம்' போன்ற வறட்டு கோஷங்கள் இடைவெளியை இன்னும் அதிகரிக்கச் செய்தது. வெங்கட்சாமிநாதன் என்னும் இளம் விமர்சகன் கையில் கைலாசபதியின் நாவல் இலக்கியம் சிதறுண்டது. கா.நா.சு.வை கைலாசபதி எதிர்கொண்ட விதம் முகம் சுளிக்க வைத்தது. ஈழத்தமிழ் இலக்கியத்தைக் குறித்த எதிர்மறையான மதிப்பீடே இளம் வாசகர்களிடம் வலுப்பெற்றிருந்தது. எஸ்.பொவின் சில படைப்புகள் வாசிக்கக் கிடைத்தனதான். ஆனால் கைலாசபதியோ, சிவத்தம்பியோ



படிப்பகம்

www.padippakam.com

அவர் பெயரை உச்சரிப்பதில்லை. ஈழத்தமிழ் இலக்கியம் குறித்த முறையான அறிமுகம் காலத் தேவையாக அன்றிருந்தது. மு. தளையசிங்கம் என்ற மகத்தான கலைஞனைக் குறித்த அறிவு அன்று இல்லாதிருந்தது. கைலாசபதியோ சிவத்தம்பியோ தமிழ் மண்ணில் ஒருமுறைகூட அப்பெயரை உச்சரித்ததில்லை.

பத்மநாப ஐயருடனான அறிமுகம் 'காகங்கள்' இலக்கியச் சூழலில் நிகழ்ந்தது. தமிழ்ச் சிறுகதை வரலாறு வெளிவந்து ஓரளவு இலக்கிய அங்கீகாரம் அன்று எனக்கு இருந்தது. ஈழத்தமிழ்ப் படைப்பாளி களைக் குறித்து எனது அக்கறை இன்மையைச் சுட்டி என்னுடன் தன் உரையாடலை அவர் துவக்கி யதாக நினைவு. தொடர்ந்து நாங்கள் கால இடை வெளிகளில் உரையாடிக் கொண்டிருந்தோம். நான் வாசித்ததாக வேண்டிய ஈழப்படைப்பாளிகளின் வரிசையைச் சுட்டினார். மறுமுறை சந்தித்தபோது வாசிக்க வேண்டிய புத்தகங்களையும் தந்தார். ஒவ்வொருமுறை சந்திக்கும் போதும் எனக்குத் தரும்படியாக அவரிடம் புத்தகங்கள் இருந்தன. ஈழத்தமிழ் இலக்கிய பரப்பு குறித்த என் பார்வை ஐயரின் நட்பினால்தான் விரிவடைந்தது.



மு. தளையசிங்கம் என்ற மகத்தான கலைஞனின் நூலை அவரிடமிருந்துதான் பெற்றுக்கொண்டேன். தளைய சிங்கம் குறித்த என் அக்கறை தீவிரமடைந்த போது, பெரும்பான்மையான அவருடைய புத்தகங் களை ஐயரிடமிருந்துதான் பெற்றுக்கொண்டேன். ஈழச் சூழல் குறித்த நீண்ட உரையாடல்கள், ஈழ மண்ணில் நிகழ்ந்த நிகழ்ந்து கொண்டிருந்த இலக்கிய நிகழ்வுகள் குறித்த உரையாடல்கள் 'ஈழத்தமிழ் இலக்கியம்' என்ற கருத்தாக்கம் என்னுள் மலர காரணமாக அமைந்தன. ஈழத்தமிழ் இலக்கியம் தொடர்பான என் புத்தக சேகரிப்புகள் முழுமையும் ஐயரிடமிருந்து நான் பெற்றுக் கொண்டவையே. ஒரு வகையில் கைலாசபதியிடமிருந்தோ, சிவத்தம்பி யிடமிருந்தோ பெற இயலாததை ஐயரிடமிருந்து அன்று பெற முடிந்தது.

சிறிய இடைவெளிக்குப்பின் நாங்கள் மீண்டும் சந்தித்தபோது தமிழ் ஈழத்தின் சோதனை மிகுந்த நாட்கள் துவங்கியிருந்தன. யாழ் நூலகத்தில் வைக்கப் பட்ட நெருப்பு ஐயருக்குள்ளாக பற்றி எரிந்துகொண்டி ருந்தது. யாழ் நூலகத்தை மீண்டும் எழுப்புவதையே தன் வாழ்நாள் நோக்கமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தார். இப்போது புத்தகங்களைத் தருபவ ராக அல்ல, சேகரிப்பவராக அவதாரம் கொண்டார். பத்மநாப ஐயர் எங்களிடமிருந்து புத்தகங்களை மட்டுமே பெற்றுக்கொண்டிருந்தார்.

நீண்ட இடைவெளிக்குப்பின் ஐயரைக் குறித்த செய்திகள் கிடைத்தன. அகதியாக அவர் ஐரோப்பிய மண்ணில் அடைந்த துக்கங்களைக் குறித்த செய்திகள். அவரும் மகளும் அடைந்த சோதனைகளைக் குறித்த செய்திகள்.

பத்மநாப ஐயர் எழுத்தைக் கையாளவில்லை. அவருடையதாகச் சுட்ட ஒரு கவிதையோ, ஒரு கட்டுரையோ இல்லை. என்றாலும் ஈழத்தமிழ் இலக் கியத்திற்கு அவர் பங்களிப்பு மகத்தானது. பத்மநாப ஐயர் என்ற பலகணி மூலமாகத்தான் ஈழத்தமிழ் இலக்கியத்தை எதிர்கொண்டோம். முன் தலை முறையைச் சார்ந்த தளையசிங்கத்தை மட்டுமல்ல சமகாலத்தைச் சார்ந்த அ. யேசுராஜாவைக் கூட அவர் வழியாகவே அறிந்தோம். ஈழத்தமிழ் இலக்கியம் குறித்த தெளிவான பார்வை எனக்குள்ளாக மலர்ந்தது. விமர்சகர்கள் செய்யத்தவறியதை ஒரு எளிய மனிதர் எவ்வித ஆரவாரமுமின்றி செய்து முடித்துவிட்டிருந்தார். இது என்னுடைய சொந்த அனுபவமாகச் சுருங்கிவிடாது – அன்றைய இளம் வாசகர்களின் பொது அனுபவமாக விரியும்.

தளைய சிங்கத்தைக் குறித்து ஒரு கருத்தரங்கை நிகழ்த்த வேண்டும் என்ற கனவு என்னுள் மலர்ந்து விரிந்ததில் ஐயரின் பங்களிப்பை எவ்வாறு மறுக்க முடியும்? காலம் இதழில் இந்தியத் தமிழ் வாசகனின் பார்வையில் ஈழத்தமிழ்ச் சிறுகதைகளை மதிப்பிட ஐயர் தந்த புத்தகங்களே துணை நின்றன என்ற எளிய உண்மையை எவ்வாறு புறக்கணிக்க முடியும்.

ஒருவகையில் பத்மநாப ஐயர் ஈழத்தமிழ் இலக்கியத் தூதர். இது எவ்வகையிலும் இலக்கியச் சூழலில் படைப்பாளிகள், விமர்சகர்கள் பெறும் முக்கியத்துவத்தை விட குறைவானதல்ல.



படிப்பகம்

www.padippakam.com





# மற்றவர்க்காய் பட்ட துயர்

அ. யேசுராசா

நண்பர் இ. பத்மநாப ஐயருக்கு 'இயல் விருது' வழங்கப்படுவதான செய்தி தெரியவந்த போது உடனே, பிறிதொரு சம்பவம் நினைவிற்கு வந்தது.

ஓரிரு வருடங்களின் முன்னர் 'தினக்குரல்' பத்திரிகையின் வாரவெளியீட்டில் – நான்கு இதழ்களில் தொடர்ச்சியாக – பத்மநாப ஐயரின் விரிவான நேர்காணல் வந்திருந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் எழுத்தாளர் (இவர், சிறுகதைத்துறையில் தன்னை ஒரு 'ஹீரோ' எழுத்தாளராக நம்புபவர்!), 'இவரெல்லாம் (பத்மநாபன்) என்ன செய்திற்றாரெண்டு நேர்காணல் போடுறாங்க...' என்று எரிச்சல்பட்டாராம். கதை, கவிதை எழுதுவது மட்டுந்தான் இலக்கியச் செயற்பாடு என்று கருதும்(!) இவர், இப்போது 'இயல் விருது' அறிவிப்பு வந்துள்ளதை அறிந்ததும் என்ன சொல்லப்போகிறாரோ தெரியவில்லை!

சிறுகதை, கவிதை எழுதித் தனது பெயரில் ஒருவர் வெளியிடுவதில் ஒருவித சுயநலம் இருக்கிறது. ஆனால், தான் 'படைப்பாக' ஒன்றையுமே எழுதாத போதிலும் ஏனைய தரமான எழுத்தாளர்களின் படைப்புகளை வெளிக்கொண்டுவருவதிலும், தரமான நூல்கள், சஞ்சிகைகளைப் பரவற்படுத்துவதிலும், எழுத்தாளர்களிடையே தொடர்பு ஏற்படுத்திக் கொடுப்பதிலும், ஈழத்துப் படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு விரிவான களத்தைச் சென்றுசேர்வதிலும் தன்னை அர்ப்பணித்துச் சோர்வறியாது பத்மநாபன் செயற்படுவதில், பொதுநல அக்கறையே அடிநாதமாயுள்ளது.



1968இல் சென்னை 'வாசகர் வட்டம்' வெளியீடாக வந்த 'அக்கரை இலக்கியம்' நூலின் பதிப்புரையில் 'இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகளைத் தொகுப்பதில் பேரார்வம் காட்டி, பல கதைகள், கட்டுரைகள் பிரதிகளை அனுப்பிவைத்த ஸ்ரீ. ஆர். பத்மனாபனுக்கு எங்கள் நன்றி உரித்தாகும்....' என்பதை வாசித்தபோது அவரைப்பற்றிய வேறு விபரமேதும் எனக்குத் தெரியவரவில்லை. 1972இன் பிற்பகுதி அல்லது 1973இன் முற்பகுதியில் இலக்கிய நண்பரான



படிப்பகம்

www.padippakam.com

'தில்லைக்கூத்தன்' மாத்தளைப் பகுதியில் அல்வத்தை என்ற இடத்திலுள்ள பத்மநாப ஐயர் என்பவரிடம், தமிழகச் சிறு சஞ்சிகைகளைப் பெறலாம் என்ற தகவலையும் முகவரியையும் தந்தார். அப்போது நான் பேராதனை அஞ்சலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். பத்மநாபனிற்குக் கடிதத்தின் மூலம் அறிவித்துவிட்டு, நானும் எனது அறைத் தோழரான நா.முருகதாஸும் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று மாத்தளைக்குப் பேருந்திற் சென்று, பின் வேறொரு பேருந்தில் அங்கிருந்தும் ஆறேழு மைல்கள் தொலைவிலுள்ள அல்வத்தைக்குச் சென்றோம்.

சுமார் நாற்பது சிங்கள இளைஞர்களும், நல்லின மாடுகளும், மாடுகளிற்கு உணவாகும் விசேட இனப் புல் வளர்ப்பதற்குரிய விசாலமான நிலப்பரப்பையும் கொண்ட ஒரு கூட்டுப் பண்ணைக்குப் பொறுப்பான 'பிரிவு அலுவலராக' பத்மநாபன் இருந்தார். அவரது குடும்பத்துடன் தங்கியிருந்த அலுவலக விடுதிக்குச் சென்றோம். அவரும் எம்மை எதிர் பார்த்திருந்தார். அதுதான் அவருடனான எனது முதற் சந்திப்பு.

ஈடுபாட்டுடன் எம்முடன் பழகி, தன்னிடமிருந்த 'எழுத்து', 'கசடதபற', 'நடை' 'அஃக்', 'ஞானரதம்', 'சதங்கை', 'வானம்பாடி' முதலிய தமிழகச் சிறு

200 பிரதிகள்வரை அனுப்பிக்கொண்டிருந்தோம். ஒரே இடத்தில் ஏராளமான எழுத்தாளர்களைச் சந்திக்க முடியுமென்பதாலும், தமிழக – ஈழத்துப் படைப்புகள் பற்றிய எமது கருத்துகளைத் தெரிவிக்கும் வாய்ப்பு உள்ளதென்பதாலும், கட்டாயம் அக்கருத்தரங்கில் நான் கலந்துகொள்ளவேண்டுமென்பது அவரது நிலைப்பாடு. சில காரணங்களால் நான் தயங்கிய போதிலும், அவரதும், நண்பர் நித்தியானந்தனதும் வற்புறுத்தலுக்கு இணங்க நேர்ந்தது. உடனே கொழும்பு திரும்பினேன். தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு என்பவற்றைப் பெறுவதற்கும் விமானப் பயண ஒழுங்குகளிற்கும் தனது நண்பர்கள் மூலம் ஆவன செய்தார். சென்னையில் 'க்ரியா' ராமகிருஷ்ணனின் வீட்டில் தங்குவதற்குரிய ஒழுங்கினையும் செய்திருந்தார்.

'இலக்கு' கருத்தரங்கின் முதல்நாளே 'எழுபதுகளில் தமிழ் இலக்கியமா?' அல்லது 'எழுபதுகளில் தமிழக இலக்கியமா?' என்ற கேள்வியை எழுப்பி, ஈழத்து இலக்கியங்கள் பற்றிய அக்கறை போதிய அளவில் காட்டப்படாததைச் சுட்டிக்காட்ட முடிந்தது. அங்கிருந்த எஸ்.எம்.ஜே.பைஸ்தீன், கி.பி.அரவிந்தன் ஆகியோரும் இணைந்து குரல் கொடுத்தனர்.

**தன்னலத்தைக் கடந்த இப் பொதுநல அக்கறை சார்ந்த பத்மநாபனின் வாழ்வுப்பணி 'மற்றவர்க்காய்ப் பட்ட துயர்...' என்ற கவிஞர் மஹாகவியின் வரியினை நினைவிற்குக் கொண்டு வருகிறது!**

சஞ்சிகைளையும் நூல்களையும் காட்டினார். வேறிடத்தில் பெறுவதற்கரிதான அவற்றைக் கண்டதில் மிக்க மகிழ்ச்சியாயிருந்தது. பலவற்றைச் சொந்தமாய்ப் பெற்றுக்கொள்ள முடிந்தது. வேறு சிலவற்றை வாசித்து விட்டுத் திருப்பித் தரும்படி கொடுத்தார். அங்கேயே மதிய உணவும் அருந்தி, இலக்கியம்பற்றி உரையாடி, மாலையில் பேராதனைக்குத் திரும்பினோம். அதன் பிறகு சில மாதங்களிற்கொரு தடவை சென்று அவரைச் சந்திப்பது வழமையாகியது. எனது நவீன இலக்கிய வாசிப்புத் தாகத்தைத் தீர்ப்பதற்கும் தரமான நூல்களின் சேகரிப்பை விரிவாக்குவதற்கும் அவருடனான சந்திப்புகள் துணையாயின. இது பிற்காலம் வரை – மிக நீண்டகாலமாய்த் தொடர்கிறது. அதனால் நிறையப் பயன் அடைந்தவன் நான்.

கொழும்பில் கடமையாற்றிக்கொண்டிருந்த நான், 1981 மார்கழியில் நத்தார்ப் பண்டிகைக்காக, விடுமுறையில் சொந்த ஊரான யாழ்ப்பாணம் வந்திருந்தேன். 1982 தை மாதம் 1, 2, 3 ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள 'எழுபதுகளில் கலை, இலக்கியம்' என்ற தலைப்பிலான 'இலக்கு' அமைப்பின் கருத்தரங்கில் நான் கலந்து கொள்ளவேண்டுமென்று பத்மநாபன் வற்புறுத்தினார். அப்போது 'அலை' இதழ் வெளிவந்து கொண்டிருந்தது. தமிழகத்திற்கும் டெல்லி, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற பிற மாநில நகரங்களிற்கும் சுமார்

இக்கருத்தரங்கிலேயே ஞானி, தமிழவன், ஞாநி, பிரபஞ்சன், சா.கந்தசாமி, ராஜ்கௌதமன், சாரு நிவேதிதா, எஸ்.வி.ராஜதுரை, கி.அ.சச்சிதானந்தம், வெ.மு.பொதியவெற்பன் முதலியவர்களோடு அறிமுகம் ஏற்பட்டது. ஒரு பெரிய சூட்கேஸ் நிறையப் பத்மநாபன் தந்துவிட்ட ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைப் படைப்பாளர் பலரிடமும் கொடுத்தேன்.

1982 பங்குனியில் பத்மநாபன், து. குலசிங்கம், நான் ஆகிய மூவரும் தமிழகத்தின் பல இடங்களிற்கும் சென்றோம். இம்முறை ஏராளமான இலக்கியக் காரரைச் சந்திக்கவும், அவர்களோடு தங்கி உரையாடல் நிகழ்த்தவும் முடிந்தது. பத்மநாபன் கொண்டிருந்த தொடர்புகளும், அவரின் உரிய திட்டமிடலும் எமக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தன. சுந்தர ராமசாமி, வண்ணநிலவன், ராஜமார்த்தாண்டன், கி.அ.சச்சிதானந்தம், வேதசகாயகுமார், அ.கா.பெருமாள் முதலியோரை நாகர்கோவிலிலும்: ஆ.மாதவனை திருவனந்தபுரத்திலும்: கி. ராஜநாராயணன், ஜோதிவிநாயகம், தேவதச்சன் முதலியோரைக் கோவில்பட்டியிலும்: சி.மோகன், தி. சு. நடராசன், வைகை குமாரசாமி முதலியோரை மதுரையிலும், சிவகங்கையில் 'மீரா'வையும், எஸ்.ஆல்பர்ட், க.பூரணச்சந்திரன், 'மானுடம்' விஜயகுமார் முதலியோரைத் திருச்சியிலும்: ஞானி, சிற்பி, புவியரசு முதலியோரை கோவையிலும்: ஜி.எஸ். ராமகிருஷ்ணன், தமிழவன், 'காவ்யா' சண்முகசுந்தரம்



படிப்பகம்

www.padippakam.com

முதலியோரைப் பெங்களூரிலும்: அசோகமித்திரன், சா. கந்தசாமி, கோபிகிருஷ்ணன், 'வாசகர் வட்டம்' லஷ்மி கிருஷ்ணமூர்த்தி, 'க்ரியா' ராமகிருஷ்ணன், திலீப்குமார் முதலியோரைச் சென்னையிலும் சந்திக்க முடிந்தது. இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் எழுத்தாளர்களுடன் – அவர்களிற் பலர் பிரபலமான வர்கள் – பழகமுடிந்தமை அரிய வாய்ப்பாகும். பத்மநாபன் இல்லையென்றால் இது சாத்தியமாகி யிருக்காது.

1975 கார்த்திகையில் 'அலை'யின் முதலிதழ் வெளி வந்தது. ஆரம்பத்தில் இதற்கு பத்மநாபனின் ஒத்துழைப்பு அதிகளவில் இருக்கவில்லை. பின்னர் ஒரு கட்டத்திலேயே அவரது ஈடுபாடு அதிகரித்தது. 'அலை'யின் கருத்துநிலை, அவற்றை வெளிப்படுத்தும் முறை, 'அலை'யின் பல்துறை ஈடுபாடுகள், ஆசிரியர் குழுவின் அர்ப்பணிப்பு என்பவை தனது ஈடுபாட்டை அதிகரித்ததாய்ப் பின்னர் குறிப்பிட்டிருக்கிறார். ஆசிரியர் குழுவிற்கு 'வெளியில்' இருந்தாலும், அலை யுடன் 'இணைந்த' ஒருவர்போலவே தனக்கேயுரிய தீவிர முனைப்புடன் பின்னர் செயற்பட்டார். ஈழத்தி லும் தமிழகத்திலும் எழுத்தாளர்களுடன் தொடர்பு களை ஏற்படுத்துதல், விடயங்களைப் பெறுதல், விளம் பரங்கள் சேகரித்தல், விநியோகம் எனப் பலவிதங்களில் ஒத்துழைத்தார். தமிழவன், திலீப்குமார், அசோக மித்திரன், எஸ்.வி.ராஜதுரை, ஜோதிவிநாயகம், கோபி கிருஷ்ணன் போன்ற தமிழக எழுத்தாளர்களின் படைப்புகள் 'அலை'யில் வெளியான பின்னணி இதுதான்.

'அலை வெளியீடாக' இதுவரை ஒன்பது நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில நூல்கள் வெளியா வதற்குரிய பொருளாதார ஆதரவையும் ஊக்கத்தையும் பத்மநாபனே தந்தார். 'மார்க்சியமும் இலக்கியமும்: சில நோக்குகள்', 'ஒரு கோடை விடுமுறை', 'தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்', 'அகங்களும் முகங்களும்' ஆகிய நூல்கள் இவ்வாறு வெளிவந்தவை.

'அலை'யின் பழைய இதழ்கள் தேவையென இங்கும் தமிழகத்திலுமுள்ள இலக்கிய ஆர்வலர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். 1 முதல் 12 வரையான இதழ்களை யாழ். புனித வளன் அச்சகத்திலிருந்த 'பேபி ஓவ்செற்' இயந்திரத்தின் மூலம் மீள்பதிப்புச் செய்ய பத்மநாபன் முயன்றார். தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு சஞ்சிகை இவ்வாறு மீள்பதிப்புப் பெறு வது இதுதான் முதன்முறை. எனினும் செலவு காரண மாக நான் தயக்கங்காட்டினேன். ஆனால் பத்மநாபன் தானே பொறுப்பெடுத்து, 300 பிரதிகள்வரை அச்சிட்டு, தரமான 'கலிக்கோ' கட்டமைப்புடன், 1986 ஆனியில் அத்தொகுதியை வெளிக்கொண்டுவந்தார்.

இன்றுவரை, எழுத்தாளர் பலரின் படைப்புகள் நூல்வடிவில் வருவதற்குப் பத்மநாபன் காரணராக இருக்கிறார். 1974இல் வெளிவந்த எனது 'தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்' சிறுகதைத் தொகுதி, அச்சுத் தெளிவீனத்தைக் கொண்டிருந்தது. அதற்கு நல்லதொரு பதிப்பு வருவதன் அவசியத்தை அச்சிறு கதைகளை இரசித்த நண்பர் பலர் சொல்லி வந்தனர். 1989இல், பூரணி வெளியீடாகச் சென்னையில் அதன் திருத்தமான இரண்டாவது பதிப்பை அழகிய முகப்பு டன், கொண்டுவந்தவர்கள் நித்தியானந்தனும் ஐயரும். எனது கவிதைகள் 'அறியப் படாதவர்கள் நினைவாக...'



என்ற பெயரில் அழகிய பதிப்பாக, புகழ்பெற்ற 'க்ரியா' பதிப்பக வெளியீடாக வருவதற்கும் (1984), நுஃமானும் நானும் தொகுப்பாளராகவுள்ள (உண்மையில், தொகுப்புப் பணியில் ஐயரும் பங்கேற்றிருந்தார் ஆனால் தனது பெயரைச் சேர்க்க அவர் விரும்ப வில்லை.) 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' 'க்ரியா' வெளியீடாக (1984) வருவதற்குமுரிய ஒழுங்குகளைச் செய்தவரும் அவர்தான்!

ஈழத்தில் பத்மநாபன் இருந்த வேளை, பதிப்புச் செயற்பாடுகளிலும் ஏனைய கலை – இலக்கிய வேலை களிலும் அவருடன் இணைந்து நீண்டகாலம் செயற் பட்டிருக்கிறேன் எம்மிடையே சுமுகமான உறவுநிலை நீடித்துவந்தது. அவர் இலண்டன் சென்றபின், இலக் கியச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குரிய தேவையும் – வசதிகளும் அங்கு இருபப்தாகத் தெரிவித்து, நிரந்தர மாக அங்கு வந்து வசிக்கும்படியும், அதற்குரிய ஒழுங்குகள் யாவற்றையும் எனக்கு எச்சிரமமுமின்றிச் செய்து தருவதாகவும் அறிவித்தார். 1992இலும், 1997இலும் இரு தடவைகள் இவ்வாறு வற்புறுத்தினார். ஆனால், வெளிநாடு சென்று நிரந்தரமாகத் தங்குவதில் எனக்கு ஆர்வம் இருக்கவில்லை. உண்மையில் நான் ஏற்றுக்கொண்டிருந்த கருத்து நிலையின்படி, அவ்வாறு நான் வெளியேறிச்செல்வது தவறு என்ற கருத்து என்னிடமிருந்தது.

ஈழத்திலுள்ள எழுத்தாளர்களை ஐரோப்பிய நாடு களிற்கு அழைத்து அங்குள்ள கலை – இலக்கிய – பண்பாட்டுச் சூழலில் அனுபவம் பெற வைப்பது பலவிதங்களில் நன்மை விளைக்கும் என்ற நோக்கில், அவ்வாறானதொரு நிகழ்ச்சிநிரலை வேறு நண்பர் களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப் பத்மநாபன் முற்பட்டார். அந்தவகையில் 'தமிழர் தகவல் நடுவம்' மூலமாக, இலண்டன் வரும் வாய்ப்பினை கவிஞர் சு.வில்வரத்தினத்திற்கும் எனக்கும் 2002இல் ஏற் படுத்தித் தந்தார் பல தடவைகளில் பயன்படுத்தக் கூடிய (Multiple Visa) நான்குமாத விசா பெற்று, அங்கு சென்றோம். அங்கிருந்து பிரான்ஸ், யேர்மனி, ஒல்லாந்து, நோர்வே, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிற்குச் சென்று வரக்கூடிய ஒழுங்குகளையும், தான் தொடர்பு வைத்திருந்த கலை – இலக்கியவாதி கள் மூலம் செய்து தந்தார். இதன்காரணமாக, புலம்



படிப்பகம்

www.padippakam.com

பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களுடன் கலந்துரையாட முடிந்தது. நோர்வே, பேர்கனில் நடைபெற்ற ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர்களின் இலக்கியச் சந்திப்பிலும் பங்குபெற்ற இயலுமானது.

பிக்காஸோ, வான்கோ, முன்ச் ஆகிய உலகப் புகழ் பெற்ற கலைஞர்களின் படைப்புகளிற்கான தனித்தனி அருங்காட்சியங்கள் இலண்டனிலுள்ள 'தேசிய கலை அருங்காட்சியகம்', நவீன கலைகளிற்கான அருங் காட்சியகம், பாரிஸிலுள்ள 'லூவ்ரே' அருங்காட்சியகம் போன்றவற்றில் பெற்ற உன்னத அனுபவத்தை, பேரு ணர்வை மறக்கவியலாது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இன்னும் ஏராளம் இடங்களைத் தரிசிக்கும் வாய்ப்பும் கிட்டியது. கலை பற்றிய நுண்ணுணர்வும், அறிதல் வேட்கையுங்கொண்ட – தன்னுணர்வுள்ள எவரிற்கும் கிடைக்கவேண்டிய வாய்ப்புத்தான் இது. ஆயினும், பத்மநாபனின் உதவில்லையேல் இத்தகு வாய்ப்பு எனக்குக் கிட்டியிருக்குமென்பது சந்தேகமே!

தான் எடுக்கும் முடிவுகளைச் செயலாக்குவதில் எப்போதும் தீவிரத்தன்மை கொண்டவர் பத்மநாபன் சோர்வடையாதவர், பணச்செலவையும் உடற் சிரமத்தையும் பொருட்படுத்தாதவர்.

சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் இலக்கியக்

டையும் சுமந்து சென்றார். திகைப்படைந்த நான் அதி லிருந்து விடுபட்டு, ஒரு மூடையைச் சுமந்து சென்றேன். இவ்வாறு இருவரும் எல்லா மூடைகளையும் கொண்டு சேர்த்தோம். குலசிங்கம் மூடைகளைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

முக்கிய எழுத்தாளர் – கவிஞர்களின் படைப்புக்கள் நூலுருவில் வரவேண்டுமென்பதில் அக்கறைகொண்ட வராய், முதலில் அவர்களிடமுள்ள பிரதிகளைப் பெற்றும் வேறு வெளியீடுகளில் வந்தவற்றைத் தேடித் திரட்டியும் – தனது பணத்தைக் கொடுத்துத் தட்டச்சுச் செய்வித்துத் தொகுப்பாகக் கட்டிவைத்திருப்பதில், சலியாது ஈடுபடுவார். இவ்வாறு பலருடைய ஆக்கங் களைப் பேணியுள்ளார். உடற்சிரமத்துடன் பணச் செலவையும் ஏற்படுத்தும் இச்செயற்பாடுகளில் அவர் திருப்தியுடன்தான் ஈடுபட்டார்.

தன்னலத்தைக் கடந்த இப்பொதுநல அக்கறை சார்ந்த பத்மநாபனின் வாழ்வுப்பணி 'மற்றவர்க்காய்ப் பட்ட துயர்...' என்ற கவிஞர் மஹாகவியின் வரி யினை நினைவிற்குக் கொண்டுவருகிறது!

ஆரம்பத்தில் நான் அறிமுகங்கொண்ட பத்மநாபன் நிறைய வாசிப்பவர். அதுபற்றிய விமர்சன – இரசனைக் குறிப்புகளைப் பரிமாறுபவர். 'கணையாழி' இதழில் அவர் எழுதிய சில விமர்சனக் கடிதங்கள் பரிசு பெற்றி

**ஐயர் தான் எடுக்கும் முடிவுகளைச் செயலாக்குவதில் எப்போதும் தீவிரத்தன்மை கொண்டவர். பத்மநாபன் சோர்வடையாதவர், பணச்செலவையும் உடற் சிரமத்தையும் பொருட்படுத்தாதவர்.**

காரரைச் சந்திப்பதற்கு அல்லது வெளியீட்டு முயற்சி களிற்காக பொருளாதார உதவிகளைத் திரட்டுவதற்கு பொருத்தமானவர்களைச் சந்தித்து, நோக்கங்களின் பெறுமதியை விளக்குவதற்கென்று – தொலைவிலுள்ள இடங்களிற்கும் சென்றுவிடுவார். அவர் யாழ்ப்பாணத் தில் வாழ்ந்தபோது முற்பகலில் வீட்டிற்குச் சென்றால், காலையில் கோப்பியை மட்டும் குடித்துவிட்டுச் சென் றிருப்பது தெரியவரும் . மாலையில் சென்றால் மத்தி யானச் சாப்பாட்டிற்கும் வந்திராதது தெரியவரும். பல தடவைகளில் எனக்கு இவ்வாறான அனுபவம் ஏற்பட்டிருக்கின்றது. தனது சௌகரியத்தை அலட்சி யப்படுத்தியபடிதான் அவர் செயற்பட்டிருக்கிறார்.

1982 பங்குனியில் விமானமூலம் தமிழகம் சென்ற நாங்கள், திரும்பும்போது இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மூலம் மன்னார் வந்து சேர்ந்தோம். யாழ் பொது நூலகம், பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம், மற்றும் எமது மூவரின் தேவைக்குரிய நூல்கள், சஞ்சிகைகள், அரிய வெளியீடுகளெனச் சுமார் பன்னி ரெண்டு சாக்கு மூட்டைகளில் சேர்த்துக் கொண்டு வந்திருந்தோம். இறங்குதுறையிலிருந்து சுங்க அலு வலகம்வரை அவற்றை எப்படிக் கொண்டுசெல்வது என்று குழப்பமுற்றோம். ஏனெனில் அலுவலகம் சுமா ரான தொலைவிலிருந்தது. பயணிகள் பலரும் தமது குறைந்த பொருட்களுடன் முன்னே சென்றுவிட்டனர். திடீரென ஒரு மூடையைத் தூக்கித் தோளில் வைத்த பத்மநாபன், இன்னொரு மூடையைத் தூக்கித் தனது தோளில் வைக்கும்படி என்னிடம் சொன்னார். இரண்

ருக்கின்றன. கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு கொண்டு இரசிப்பவர். அதுபற்றிக் கதைப்பவர். பின்னாளில் – பொது அக்கறை கொண்ட தொடர்புகள், செயற்பாடு கள் விரிவடைய அவரது வாசிப்பு குறைந்து விட்டது. ஒரு விதத்தில், பொதுநலனிற்காக அவர் கொடுக்க நேர்ந்த விலைகளில் ஒன்றுதான் அது.

மீண்டும்... முதலிற் குறிப்பிட்ட 'ஹீரோ' எழுத் தாளரைப் போன்றவர்கள் கதைகள் எழுதி, வசதியான பத்திரிகைகள் – சஞ்சிகைகளில் வெளிவரப் பண்ணி, தொகுப்புகளாக்கி, 'உரியவற்களிற்கு' இசைவாக நடந்து வெறும் 'அங்கீகாரங்களைச் சேமித்து', பரிசுகளையும் பெற்றுத் தாம் சௌகரியமாக வாழ்வதே பெரிது எனக் கருதலாம். ஆனால், சாராம்சத்தில் அவையெல்லாம் 'சுயநலம்' நிறைந்த செயற்பாடுகளே!

மாறாக, சக படைப்பாளிகளின் மேன்மை, நல்ல படைப்புகளின் – நல்ல இரசனையின் பரவலாக்கம், தமிழைப் பேசுவாராயினும் நிலவெளி கடந்த தனித்து வச் சிறப்பம்சங்களின் கொடுக்கல் – வாங்கல்கள், ஒரு தேசிய இனத்தின் தனித்தன்மைகளைப் படைப்புகள் வாயிலாகப் பிறமொழியினரிடமும் கொண்டுசெல் லும் மொழிமாற்ற முயற்சிகள் போன்றவற்றால் வளர்ச் சிப் பணி ஆற்றிக்கொண்டிருக்கும் பத்மநாப ஐயருக்கு 'இயல்விருது' வழங்கப்படுவதானது, என்றும் முன்னிறுத்தவேண்டிய 'பொதுநல அக்கறை'க்கு வழங்கப்படும் உரிய அங்கீகாரமே!

இந்த அங்கீகாரம் பெருமைக்குரியது!



படிப்பகம்

www.padippakam.com





# ஐயரின் தன்னலமற்ற பாதை

சேரன்

கண்டதும் கற்கப் பண்டிதர் ஆவர் என்ற முதுமொழி தமிழில் வழக்கில் இருக்கிறது. நல்ல, தீவிரமான வாசிப்புப் பழக்கம்தான் அறிவுத் தேட்டத்துக்கு மூல விசையாக அமைகிறது. துவக்க காலங்களில் 'கண்டதும்' தேடிப்பிடித்து வாசிக்கின்ற பழக்கம் பின்பு அனுபவத் திரட்சியோடு, நல்லதையும் அல்லதையும் இனங்கண்டு தெளிவடைய வழி செய்கின்றது.

என்னுடைய சிறு வயதில் எங்களுடைய வீட்டின் முன்னறையில் ஏராளமான புத்தகங்கள் இருந்தன. வாசிப்புப் பழக்கம் ஏற்பட்டுக் குறுகிய காலத்திலேயே அவ்வயதில் வாசிக்கக் கூடியமாக அமைந்த பெரும்பாலான நூல்களைப் படித்து முடித்தாயிற்று. புதிய நூல்கள் உடனடியாகக் கிடைக்காவிட்டால் பழையவற்றையே திருப்பித் திருப்பி வாசிப்பது என்பது இன்னொரு பழக்கமாகி விட்டிருந்தது.

அப்படி மீள மீள வாசித்த நூல்களில் ஒன்று சென்னை வாசகர் வட்டம் வெளியிட்ட அக்கரை இலக்கியம் என்பதாகும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ள இலக்கியகாரரின் படைப்புக்களைத் தாங்கி, தடித்த அட்டையுடன் அழகிய பதிப்பாக வெளிவந்திருந்தது அந்த நூல். மஹாகவியின் 'புள்ளி அளவில் ஒரு பூச்சி' கவிதை அதில் வெளியாகி இருந்தது. செ.யோகநாதனின் 'சோளகம்', பெனடிக்ற் பாலனின் 'விபசாரம் செய்யாது இருப்பாயாக', டொமினிக் ஜீவாவின் 'நடுப்பகலில் ஒரு கோடை மழை', நாவற்குழியூர் நடராசனின் 'இல்லையான காவியம்', கே. டானியலின் 'வீராங்கனைகளில் ஒருத்தி' ஆகிய படைப்புகளைத் திரும்பித் திரும்பிப் படித்தது இன்னும் நினைவில் எழுகின்றது. மலையக நாட்டுப் பாடல்கள் தொடர்பான 'தேயிலையில் பிறந்த தெம்மாங்கு' என்ற கட்டுரையில் இடம் பெற்றிருந்த நாட்டுப் பாடல்கள் புதியதொரு மனக்கிளர்ச்சியையும் அன்று ஏற்படுத்தியிருந்தது.

1971 அப்பா காலமான பிற்பாடு அவருடைய சேகரிப்புக்களைத் துருவித் தேடிக்கொண்டிருந்த போது, அவர் தனக்கு வந்த கடிதங்களை ஆண்டு முறைப்படி தொகுத்துக் கோவையாக்கி வைத்திருந்த கோப்புகளைப் படிக்க நேர்ந்தது. 1951–1968 வரையான காலப்பகுதியில் தனக்கு வந்திருந்த கடிதங்கள், கருத்தரங்கம், மற்றும் கவியரங்க அழைப்புகள், வங்கிச் சிட்டைகள் உட்பட எல்லாவற்றையும் முறைப்படத் தொகுத்திருந்தார் அவர்.

அந்தக் கடிதங்களுள் ஒன்றாகத்தான் இ. பத்மநாபன் மாத்தளையிலிருந்து மஹாகவிக்கு எழுதியிருந்த கடிதம் இருந்தது. அக்கரை இலக்கியம் தொகுதிக்கு மஹாகவியிடம் கவிதை கேட்டு அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார் அவர். அதன் பிற்பாடு கவிதை கிடைத்தமை, நூல் வெளியீடு போன்றன தொடர்பாகவும் அவரிடமிருந்து வந்த கடிதங்கள் கோப்பில் இருந்தன. அக்கரை இலக்கியம் நூல் வெளியான பிற்பாடு நூலில் இடம் பெற்றிருந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் உடனடியாக ஒரு பிரதி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது மட்டுமல்லாமல் எழுத்தாளர்களுக்கு சிறு தொகைப் பணமும் அனுப்பப்பட்டதாகவும் எனக்கு நினைவிருக்கிறது. இது தொடர்பாக வாசகர் வட்டத்தின் லட்சுமி கிருஷ்ணமூர்த்தி எழுதிய கடிதமும் கோப்பில் உள்ளது. கவிதைத் தொகுதிகளும் வேறு தொகை நூல்களும் இப்போது பலவாறாக வெளியாகிற போதும் எழுத்தாளர்களுக்கு உரிய முறையில் அறிவிப்பதும், அனுமதி பெற்றுக்கொள்வதும் என்கின்ற அடிப்படையான அறத்தைக் கூடப் பெரும்பாலானோர் இப்போது பின்பற்றுவதில்லை.

ஈழத்திலக்கியம் தொடர்பான அக்கறை, அவற்றை பரவலாக்க வேண்டும் என்கிற கடப்பாடு, நல்ல நூல்கள், நல்ல இலக்கியம், வாசிப்புப் பழக்கம் என்பனவெல்லாம் ஒன்றிணைந்த ஒரு செழுமையான புத்தகப் பண்பாட்டை உருவாக்குவதிலும், பேணி வளர்ப்பதிலுமே தனது வாழ்க்கையின் பெரும் பணியாகக் கொண்டவர்தான் பத்மநாப அய்யர் என்பது நான் பின்னர் அறிந்து கொண்டது.

மாத்தளையிலிருந்து அவர் யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி வந்த பிற்பாடு நண்பர் முருகதாஸ் ஊடாகவே அவருடைய அறிமுகம் கிடைக்கிறது. எண்பதுகளில், சங்கிலியன் வீதியிலுள்ள அவருடைய வீட்டுக்கு வாரத்துக்கு ஒரு முறையாவது போகாமல் இருந்ததில்லை. நெருக்கடியும் தீவிரமும் உற்சாகமும் கனவுகளும் பெருகிய போராட்ட காலமொன்றின் துவக்கம் அது. எழுத்தும் வாழ்வும் குருதியும் மாறி மாறியும் ஒன்றாகவும் இடை வெட்டியும் பீறிட்ட கணங்களும் காலங்களும் எங்களுடைய வரலாறாக மாறத் துவங்கியிருந்தன. அப்பொழுதும் எங்களுடைய



படிப்பகம்

www.padippakam.com

வாசிப்புப் பசிக்கு இடையறாது தீனி போட்டுக் கொண்டிருந்தவர் அய்யர்தான். புதிதாக வருகின்ற நூல்கள், சிற்றிதழ்களை யார் முதலில் பெற்றுக்கொள்வது என்பதில் எங்களில் பலருக்குள் பெரும் போட்டியே நிலவிற்று. பல தடவைகளில் அய்யருக்கென எந்த நூலும் மிஞ்சுவதில்லை. இத்தகைய நூல் தேட்டத்திலும், நல்ல நூல்களைப் பரவலாக்க வேண்டுமென்ற அவருடைய இடைவிடா முயற்சிகளிலும் அவர் இழந்த தொகைக்குக் கணக்கில்லை. அது பற்றி அவர் பெரிதும் அக்கறைப் பட்டதாகவும் தெரியவில்லை. தன்னுடைய உழைப்பையும், பொருளையும் இலக்கியப் பணிக்கும் நூல் தேட்டத்துக்கும் புத்தகப் பண்பாட்டுக்கும் வழங்கி விட்ட ஒரு பண்பாளர் அவர்.

II

எண்பதுகளின் துவக்கத்தில் தமிழ்நாட்டுப் புதுக்கவிதை இதழான வானம்பாடியின் இதழ் ஒன்று ஈழத்துக் கவிதைகளின் சிறப்பிதழாக வெளியாகியது. கிட்டத்தட்ட அதே காலத்தில் பெங்களூரில் இருந்து வெளியாகிய படிகள் இதழிலும் ஈழத்துக் கவிதைகள் பற்றிய கட்டுரைகளும், ஈழத்துக் கவிதைகளும் வெளியாகின. 83 ஜுலை இனப் படுகொலைகளுக்குப் பின்பாக ஈழத்தையும், ஈழ இலக்கியத்தைப் பற்றியதுமான கவனம் தமிழகத்தில் ஓரளவு ஏற்பட்டது எனினும், வானம்பாடிகள் ஈழத்துச் சிறப்பிதமும், படிகள் இதழும் அதற்கு முன்பானவை. அய்யரின் முயற்சியும் முன்னெடுப்புகளும் இல்லாவிட்டால் இவை சாத்தியப்பட்டிருக்காது.

அது போலவே தமிழகத்தின் சிற்றிதழ்களும் நல்ல நூல்களும் ஈழத்தில் ஒரு சிறுவட்டத்துக்குள்ளாவது உலாவ முடிந்தது என்றால் அத்தகைய பரிமாற்றத்துக்கும் அய்யருடைய உழைப்பு ஒரு உந்து விசையாக அமைந்திருந்தது. தீபம், கணையாழி போன்ற இதழ்களோடு ஆரம்பத்தில் நேரடியாகத தொடர்புற்றிருந்தாலும் பின்னர் அய்யருடைய தொடர்பு வட்டம் இன்னும் பெரிதாயிற்று.

வானம்பாடி சிறப்பிதழ், பதினொரு ஈழத்துக் கவிஞர்கள், மரணத்துள் வாழ்வோம் ஆகியவற்றின் வெளியீட்டில் அய்யருடன் நெருக்கமாகப் பணியாற்றுகிற வாய்ப்புக் கிடைத்தது. பல தடவைகளில் எங்களுடைய கவிதைகளின் மூலப்படியே எங்களிடம் இருக்காது. அத்தகைய நேரங்களில் அய்யர்தான் எங்களுடைய ஒரே ஒரு நம்பிக்கைக் கீற்று. அவருடைய கையெழுத்திலேயே பல கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதிப் பேணி வந்திருக்கின்றார். கவிதைகளையும் கட்டுரைகளையும் தேடிப் பெற்றுக் கொள்வதற்காக மைல் கணக்காக அவர் சைக்கிளில அலைந்திருக்கிறார். பல சந்தர்ப்பங்களில் அத்தகைய அக்கறை எமது எழுத்தாளர்களுக்கு இருந்ததில்லை.

III

அய்யருடைய வாழ்வும் சலியாத உழைப்பும் இலக்கிய மூச்சும் எங்களுக்கு உணர்த்துகிற சில விடயங்கள் எமது தீவிர அக்கறையைக் கோருபவை. இன்று வரையும் தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழின் பதிப்புத் துறைக்கும் சீரிய இலக்கிய மேம்பாட்டிற்கும் உழைத்தவர்கள் எந்தவகையான நிறுவன பலமோ, அரச ஆதரவோ அற்ற நிலையில்தான் அதனைச் செய்து வந்திருக்கிறார்கள். சி.வை.தாமோதரம் பிள்ளை யானாலும் சரி உ.வே.சா. வானாலும் சரி தமது முயற்சிகளுக்கு எத்தகைய நிறுவன ஆதரவையும் பெற்றிருக்கவில்லை. 'தமிழ் அரசுகளும்' தமிழ் ஆய்வுக்கும், தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமாகத் துணை செய்த வரலாறும் எம்மிடம் இல்லை. தமிழுக்கு அறிவைக் கொடுப்பதையும், தமிழ் நூல் பண்பாட்டைச் செழிக்க வைப்பதையும், சீரிய இலக்கியத்தைப் பரவலாக்குவதையும் எந்தக் காலகட்டத்திலும் எந்தத் தமிழ் அரசாவது செய்யும் என்ற நம்பிக்கை எவருக்காவது இருக்குமானால் அது பொய்யாயும் பழங் கனவாகவும்தான் இருக்கும்.

ஒன்றிரண்டு தனி மனிதர்களும், அவர்களைச் சூழ இருந்து தார்மீக ஆதரவு வழங்குகிற சிறுபான்மையினரான சில கலைஞர்களும், எழுத்தாளர்களும் ஆர்வலர்களும்தான் தமிழுக்கும் தமிழாய்வுக்கும் தமிழியலுக்கும் தமிழிலக்கியத்துக்கும் உயிரும் உரமும் ஊட்டி வருகிறார்கள். சி. வை. தா போன்றவர்களில் சிலருக்குப் பணமும் பொருளும் இருந்தன என்பது உண்மை. எனினும் பல தமிழறிஞர்களும் தமிழாய்வாளரும், பத்மநாப அய்யர் போன்ற தமிழியல், தமிழிலக்கிய மேம்பாட்டை வாழ்வின் குறியாகக் கொண்டு உழைத்து வரும் வேறு பலரும் காசற்றவர்கள். அக்கறையிலும் உழைப்பிலும் தமிழ் ஆர்வலர்களின் இதயங் கனிந்த உதவிகளிலுமே தங்கியிருப்பவர்கள்.

இப்படியானவர்களின் முயற்சிகள்தான் தமிழை மெல்ல மெல்ல முன்னேற்றிச் செல்கின்றன.

இதுவரை வெளியான அத்தனை தமிழ்நூல்கள், சஞ்சிகைகள் ஒன்றாகக் கிடைக்கக் கூடிய ஒரு நூலகமாக தமிழ் கூறும் நல்லுலகில் எங்குமே கிடையாது. ஆண்டிற்கு ஆண்டு என்று இல்லாவிட்டாலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது உரிய முறையில் தமிழ் அகராதி, தற்காலத் தமிழ் அகராதி போன்றவற்றைத் தொகுத்து வெளியிடுவதில் எந்தத் தமிழ் அரசுக்கும், எந்தப் பல்கலைக் கழகத்திற்கும் அக்கறை இல்லை. இந்த நிலையில் அரும் பொருள் அகராதி,தமிழில் புதுச் சொல் ஆக்கம், சொற்களஞ்சியங்கள் என்பன பற்றிப் பேசவே தேவையில்லை.

தன்னுடைய தமிழியல் வெளியீடுகளுக்கூடாக இலக்கியம் மட்டுமின்றி தமிழியல் சார்ந்து அனைத்துத் துறைகளினதும் அறிவுப் பரப்பை விரிவாக்க வேண்டும் என்ற பெரும் விருப்பு அய்யருடையது. பெரு நிறுவனங்களும் புரவலர்களும் போலித் தமிழ் அரசுகளும் தமிழாய்வையும் தமிழியலையும் வளர்க்கப் போவதில்லை. பத்மநாப அய்யரையும் அவர் போன்ற சிலரையும் நம்பித்தான் இத்தகைய அறிவுத்துறைகளும் பண்பாட்டுத் துறைகளும் இலக்கியமும் இருக்க வேண்டுமானால், " இரந்துதான் தமிழ் வளர்க்க வேண்டின் பரந்து கெடும் தமிழர்கள்" என்று சொல்லத் தோன்றுகின்றது.

ஆர்வமும், உழைப்பும், அர்ப்பணிப்பும் கொண்ட ஒரு சிறுபான்மையினரே ஆக்கபூர்வமான, தொலைநோக்கு மிக்க வரலாற்றை முன்தள்ளும் விசைகளாகச் செயல்படுவது என்பது தமிழ்ச் சூழலில் ஒரு பெரும் துயரம். வணிகமும், சந்தையும், லாபமும், சுயமோகமும் அரசியல் கபடத்தனமும் ஆடம்பரமும் நச்சுச் சிலந்தி வலைகளாக சூழ்ந்து வருகிற இன்றைய நிலையில் தமிழிலக்கிய சூழலும், தமிழிலக்கியப் பரிமாற்றத்துக்கும் புலமும், திணைகளும் கடந்து தமிழ் வாழ்வும் வளமும் பெறுவதற்கும் தம்மை வழங்கி வாழ்கிற பத்மநாப அய்யர் எமது மிகுந்த மதிப்புக்கும் அன்புக்கும் உரியவர்.

எல்லா நேரங்களிலும் அவரதும் என்னதும் அரசியல் ஒன்றிணைவதில்லை. அத்தகைய முரண்பாடுகளுக்கு அப்பாலும் தமிழ் வளம், இலக்கியச் செழுமை, புதுமை கண்டு கிளர்த்தல், நாம் பெற்றதை மற்றவர்களும் பெற்று மகிழட்டுமே என்கிற மனோபாவம் ஆகியன எமக் கிடையே நட்புக் கண்ணிகளாக உள்ளன. அவை நமது வாழ்வுக்கு மட்டுமின்றிச் சிந்தனைக்கும் வளம் தருகின்றன.

●



படிப்பகம்

www.padippakam.com



## ஏற்புரை



# கனவுகளும் நனவுகளும்

பத்மநாப ஐயர்

சென்ற ஆண்டின் இறுதியில், ஒருநாள் இரவு, பேராசிரியர் செல்வா கனகநாயகம் என்னைத் தொலைபேசியில் அழைத்து, 2004ஆம் ஆண்டுக்கான 'இயல் விருது'க்கு என்னைத் தெரிவுசெய்திருப்பதாகக் கூறிய போது, அதிர்ச்சியும் வியப்புந்தான் ஏற்பட்டன.

2001ஆம் ஆண்டு தொடங்கி வழங்கப்படும் 'இயல் விருது' முதலில், தமிழின் மிகச் சிறந்த படைப்பாளியான திரு. சுந்தர ராமசாமிக்கும், பின்னர் இந்திய, சீன, வியட் நாமிய, பல்கேரிய முதலான இலக்கியங்களைத் தமிழில் அறிமுகஞ்செய்தவரும், தமிழில் முற்போக்கு இலக்கிய முன்னோடியுமான திரு. கே. கணேஷுக்கும், மூன்றாவதாக தமிழகத்தின் சிறந்த கலை, இலக்கிய, திரைப்பட விமர்சகரான திரு. வெங்கட் சாமிநாதனுக்கும் வழங்கப்பட்டிருந்தது. இந்த வகையறாக்கள் எதற்குள்ளும் அடங்காத எனக்கு இது எவ்வகையில் பொருந்தும் என்பதே என் அதிர்ச்சிக்கும் வியப்புக்கும் காரணமாகும். ஆயினும், இந்த முடிவினை எடுத்தவர்கள் என் மதிப்புக்குரியவர்கள்; மறுத்தல் மதியாமையாகிவிடும்!

எழுத்தாளர் இரா. முருகன், அவரது 'ராயர் கிளப்' மடலாடல் குழுவில், "சொற்கள் கற்பிதம் என்றானபோது அவற்றின் பொருளும் அவ்வாறே. படைப்பாளி என்ற பதத்துக்கு இன்று வழக்கிலிருக்கும் 'இலக்கிய, கலைப் படைப்பை உருவாக்குகிறவர்' என்ற பொருள் சற்றே நீட்சிப்பட, 'ஒரு வழங்குமொழியை அடிப்படையாகக் கொண்டு அமைந்த நுண்ணிய ரசனையின் பாற்பட்டுத் தொடங்கி, அந்த அடிப்படையையும் கடந்து விரியும் பரப்பில் நேர்த்தியான வாசிப்பு, காட்சி, கேள்வி அனுபவத்தை ஓர் இனக்குழு பெறவும், அதை முன்னெடுத்துச் செல்லவும், செழுமையுறப் பேணவும், அதன் வழியே பெற்ற ஊக்கத்தை ஊற்றுக்கண்ணாகக் கொண்டு சமுதாய வாழ்க்கையின் பன்முகப் பிரதிபலிப்பாக இலக்கியமும், கலையும் பெருமைக்குரிய இன அடையாளங்களாகத் தொடர்ந்து காத்திரமாகப் பெருகி வெளிப்படவும் வழிவகையை உருவாக்குகிறவரும் படைப்பாளியே' என்று கொள்கிறேன். தூலமான படைப்பை உருவாக்கி அளிக்கும் முதல் வகைப் படைப்பாளியின் பணியைவிட, இவ்விரண்டாம் வகைப் படைப்பாளியின் இயங்கு நெறியும், களமும், செயல்பாடும் அறுதியிட்டு வகைப்படுத்த சற்றே கடினமானது. திரு. பத்மநாப ஐயர் இரண்டாம் வகையில் பட்ட அரிய படைப்பாளியாவார்" என கூறியுள்ளது எனக்குச் சிறிது ஆறுதலைத் தருவதாய் அமைகிறது.

விருது பற்றிய அறிவிப்பானது, என்னைச் சிறிது சிந்திக்க வைக்கிறது; எனது வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்க வைக்கிறது. எந்தளவில் எனது வாழ்வினைப் பயனுள்ளதாக்கியிருக்கிறேன்? சொந்த வாழ்க்கையைப் பொறுத்தளவில், எனது குடும்பத்தவரைப் பொறுத்தளவில், எதனையும் சாதித்திருக்கிறேனா என்றால், நிச்சயமாக இல்லை என்பதுதான் நிதர்சனம். இது பற்றி நினைக்கும் போதெல்லாம் கவலை கவிந்து வருமாயினும், இயல்பான எனது கலை, இலக்கிய ஈடுபாடுகள் பற்றிய சிந்தனை வர, அல்லது செயற்பாட்டில் ஈடுபட, பகலவனைக் கண்ட பனியென, கவலை அகன்றுபோய்விடுவதே வழமையாகிவிட்டது; வாழ்வாகிவிட்டது.

இச்சந்தர்ப்பத்தில், இந்த கௌரவத்தினை நான் பெற ஆதாரமாக இருந்த விஷயங்களையும், அதற்கும் மேலாக, எனது செயற்பாடுகளின்போது உதவிய, உறுதுணையாய் நின்றவர்கள் பற்றியும் எடுத்துரைப்பது இன்றியமையாதது எனக் கருதுகிறேன். ஏனெனில், இம்மாதிரியான விஷயங்களில் நான் ஒரு முன்னெடுத்துச் செல்பவனாகவோ அல்லது ஓர் உந்துசக்தியாகவோ செயற்பட்டிருக்கிறேன் என்றாலும், வெவ்வேறு காலங்களில் நண்பர்கள் பலரும், தொடர்ந்து சிலரும் தோளோடு தோள் நின்றமையினாலேயே அவை சாத்தியமாயின. வெளியில் தெரியும் முகம் எனதாயினும் வெளித் தெரிந்த, தெரியா முகங்கள் பல என்பதே சத்தியம். எனவே, எனக்கு வழங்கப்படும் இந்த கௌரவம் அவர்களுக்கும் ஆனதே.

○

மாணவப் பிராயம் முதலே கல்கண்டு, ஆனந்த விகடன், குமுதம் எனத் தொடங்கி, பின்



படிப்பகம்

www.padippakam.com

தீவிர வாசிப்புக்குரிய தீபம், கணையாழி, கசடதபற, நடை, ஞானரதம், பரிமாணம், யாத்ரா மற்றும் ஈழத்துச் சஞ்சிகைகளான மல்லிகை, அலை என, பல்வேறு பார்வைகளையுடைய சஞ்சிகைகளையும், மௌனி, லா. ச. ரா., புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி, தி. ஜானகிராமன், ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, இந்திரா பார்த்தசாரதி, அசோகமித்திரன் இன்னும் பிறரதும் படைப்புகளையும், ஈழத்து எழுத்தாளர் பலரதும் படைப்புகளையும், பிற மொழிபெயர்ப்பு நூல்களையும் வாசிக்க நேர்ந்தது.

என் நண்பர்கள் பலரும்கூட இவ்வாறான இலக்கிய ஈடுபாடு உடையவர்களாகவே இருந்தனர். கல்லூரி நண்பர்களிலே குறிப்பிடப்பட வேண்டியவர் அ. கந்தசாமி; தற்போது கனடாவில் வாழ்பவர். எனது மாமனார் – சோ. ராமச்சந்திரன் – ஒருவரும் இலக்கிய ஈடுபாடு உடையவர். அவரும் பல்வகை நூல்களையும் வாங்கி வாசிப்பவர். அவரின் பாதிப்பும் இருந்தது. சிறு வயதில் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களிடமும் திரு. இ. நாகராஜன் (மதுரகவி) அவர்களிடமும் படிக்க நேர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆக, மாணவப் பிராயத்திலிருந்தே இலக்கிய ஈடுபாடு ஏற்பட்டு அதன் வயப்பட நேர்ந்தது.

தொடர்ந்து, சோவியத் தூதரகத்தில் பணிபுரிந்த கு. ராஜகுலேந்திரன், மாத்தளையில் நான் வேலை பார்த்த காலத்தில் தலத்துஓய திரு. கே.கணேஷ் அறிமுகமானார்கள். முன்னவர் சோவியத் தூதரகத்தில் கிடைத்த நூல்களை அவ்வப்போதெல்லாம் தருவார். கே. கணேஷ் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல்வகை நூல்களையும் சஞ்சிகைகளையும் ஏராளமாகச் சேர்த்து வைத்திருந்தார். தினமும் தபாலில் பல நூல்களும் சஞ்சிகைகளும் அவருக்கு வந்த வண்ணம் இருக்கும். அவரும் நிறைய நூல்களையும் சஞ்சிகைகளையும் தரத் தயங்கியதில்லை.

பின்னர், 1972–73இல் அ.யேசுராசா மாத்தளை வந்து என்னைச் சந்திக்கிறார். 1975 முதல் மூன்று ஆண்டுகள் கொழும்பில் வேலை பார்த்தபோது என். கே. மகாலிங்கம் ('பூரணி' ஆசிரியர் குழுவில் ஒருவர்; தற்போது கனடாவில் வாழ்பவர்.), தெளிவத்தை ஜோசப், சாந்தன், எம். எல். எம். மன்சூர், க. பாலேந்திரா ஆகியோருடன் அடிக்கடி உறவாட முடிந்தது.

1981இல் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் திரும்பியபோது ஏ.ஜே.கனகரத்னா, மு. நித்தியானந்தன், நிர்மலா, எம். ஏ. நுஃமான், நா. சுப்பிரமணியம், மு. புஷ்பராஜன், க. சட்டநாதன், குப்பிழான் ஐ. சண்முகன், மு. பொன்னம்பலம், சு. வில்வரத்தினம், சசி. கிருஷ்ணமூர்த்தி, வ.ஐ.ச. ஜெயபாலன், சேரன், 'புதுசு' ரவி, நா. சபேசன் இன்னும் பலருடனும் தொடர்பும் நட்பும் ஏற்பட்டன.



**விருது பற்றிய அறிவிப்பானது, என்னைச் சிறிது சிந்திக்க வைக்கிறது; எனது வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்க வைக்கிறது. எந்தளவில் எனது வாழ்வினைப் பயனுள்ளதாக்கியிருக்கிறேன்?**

இக்காலகட்டத்தில், ஒரு பக்கம் அ.யேசுராசா முதலானோருடன் இணைந்து 'அலை' சஞ்சிகையை வெளிக்கொணர்வதில் துணை நின்றேன். மறு பக்கம் மு.நித்தியானந்தன், க. பாலேந்திரா ஆகியோருடன் தமிழ் அவைக்காற்று கலைக் கழகச் செயற்பாடுகளிலும் ஆர்வம் கொண்டிருந்தேன். இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், 'அலை'யின் பங்களிப்பில் மு. நித்தியானந்தன், நிர்மலா, க. பாலேந்திரா முதலியோரும் அக்கறை காட்டினர். அதுபோலவே, 'அலை' சார்ந்தோர் தமிழ் அவைக்காற்று கலைக் கழகச் செயற்பாடுகளில் அக்கறை செலுத்தினர். இதில் எம். ஏ. நுஃமானையும் சேர்த்துக் கொள்ளலாம். மு. நித்தியானந்தன், எம். ஏ. நுஃமான் 'அலை'யில் எழுதியதோடல்லாமல், ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் வழங்கத் தவறியதில்லை. தமிழ் அவைக்காற்று கலைக் கழக நாடகங்கள் பற்றி அ. யேசுராசா 'அலை'யில் எழுதியுமிருக்கிறார். 'அலை'யின் 14ஆவது இதழில் 'முகமில்லாத மனிதர்கள்' நாடகம் பற்றி 'கடலோடி' என்ற பெயரில் அ. யேசுராசா எழுதிய விமர்சனம் மிகவும் சிறப்பானது. இவை வெறும் பரஸ்பரம் முதுகு சொறிவது என்றில்லாமல் விமர்சனங்களுடன் கூடிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பரஸ்பர ஈடுபாட்டுக்கும் ஒத்துழைப்புக்கும் 'அலை'யினதும், தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தினதும் பங்களிப்புகள் காத்திரமானதாகவும் நவீனத்துக்குரியனவாகவும் இருந்தமையே.

இதுபோலவே, மு.நித்தியானந்தன் 'வைகறை' வெளியீடாக, தெளிவத்தை ஜோசப் பின் 'நாமிருக்கும் நாடே', என். எஸ். எம். ராமையாவின் 'ஒரு கூடைக் கொழுந்து' மற்றும் சி.வி.வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்' நூல்களை வெளியிட்டபோதும் அனைவரும் 'நமது' என்ற உணர்வுடனேயே செயற்பட்டோம்.

இலக்கிய ஆர்வம் என்ற நிலையிலிருந்து இலக்கியச் செயற்பாட்டுக்கு இட்டுச் சென்ற படிநிலை வளர்ச்சியினையே இங்கு கூற நேர்ந்தது.

○

இதேவேளை, 1960களின் நடுப்பகுதியிலேயே தமிழகத்திலிருந்து புத்தகங்களைத் தருவிக்கத் தொடங்கிவிட்டேன். அக்காலகட்டத்தில், மத்திய வங்கிக்கு விண்ணப்பித்து, அநுமதி பெற்று, தபாற் கந்தோர் ஊடாக காசுக்கட்டளையாகப் பணத்தினை அனுப்பலாம்.

1965இல், தீரர் சத்தியமூர்த்தியின் மகளான திருமதி. லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி ஆண்டுச் சந்தா அடிப்படையில் ஆண்டுக்கு ஆறு நூல்கள் என்ற திட்டத்தோடு 'வாசகர் வட்டம்' என்ற பதிப்பகத்தினைத் தொடங்கினார். தரமான நூல்களை வெளியிட வேண்டும்



படிப்பகம்

www.padippakam.com



என்பதோடு தரமான (அச்சுப்) பதிப்பாகவும் இருப்பது அவசியம் என்ற நோக்கோடு தொடங்கப்பட்டது 'வாசகர் வட்டம்.' நான் சந்தாதாரர் ஆனதோடு, நண்பர்கள் பலரையும் சந்தாதாரர்கள் ஆக்கினேன்.

ராஜாஜியின் 'ஸோக்கிரதர்', 'ஆத்ம சிந்தனை', பின் லா. ச. ராவின் 'புத்ர', தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்', நீல. பத்மநாபனின் 'பள்ளிகொண்டபுரம்', கி. ராஜநாராயணனின் 'கோபல்ல கிராமம்', தி. ஜானகிராமனும் சிட்டியும் சேர்ந்து எழுதிய 'நடந்தாய் வாழி! காவேரி!' என்னும் பயண நூல், ஆறு எழுத்தாளர்களின் குறுநாவல்களின் தொகுப்பான 'அறுசுவை' என முப்பதுக்கும் அதிகமான சிறந்த நூல்களை வெளியிட்டது 'வாசகர் வட்டம்'.

1974இல் சென்னை 'க்ரியா' நிறுவனம் தொடங்கப்பட்டு மூன்று நூல்களை முதலில் வெளியிட்டது. சா. கந்தசாமியின் 'தக்கையின் மீது நான்கு கண்கள்' (சிறுகதைகள்), சி. மணியின் 'வரும் போகும்' (கவிதைகள்), ந. முத்துசாமியின் 'நாற்காலிக்காரர்கள்' (நாடகங்கள்) அவை. 'வாசகர் வட்டம்' போலவே 'க்ரியா'வும் சிறந்த நூல்களை அழகான பதிப்பாகவும் கொண்டுவருவதில் முனைந்தது. அம்பையின் 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை', சுந்தர ராமசாமியின் 'ஜே.ஜே. சில குறிப்புகள்' (நாவல்), சார்வாகனின் 'எதுக்குச் சொல்றேன்னா' (சிறுகதைகள்), இமையத்தின் 'கோவேறு கழுதைகள்', 'ஆறுமுகம்' (நாவல்கள்), சிட்டியும் சோ. சிவபாதசுந்தரமும் இணைந்து எழுதிய 'தமிழில் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும்' எனச் சிறந்த பல நூல்களை 'க்ரியா' வெளியிட்டுள்ளது. அத்தோடு நூல் தயாரிப்பின் தரமும் தனித்தன்மையுடன் வளர்ந்து வந்திருக்கிறது.

காலப்போக்கில் 'க்ரியா' இலக்கிய நூல்கள் அல்லாத சில நூல்களை வெளியிட்டமை சில மட்டங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதில் ஓரளவு நியாயம் உண்டு எனினும், அது ஒரு சிறு குறையே எனத் தோன்றுகிறது. வியட்நாமிய உணவு, கிணறு வெட்டுதல் பற்றிய நூல்கள், 'டாக்டர் இல்லாத இடத்தில்' போன்ற நூல்களை அவற்றிற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஆயினும், 'டாக்டர் இல்லாத இடத்தில்' ஈழத்துப் போராட்டச் சூழலில் மிகவும் பயன் ஆனது என்பது அதிகம் கவனத்தில் வராத உண்மை.

எவ்வாறாயினும், பின்னர் வெளிவந்த 'தற்காலத் தமிழ் அகராதி', Colporul: A History of Tamil Dictionaries ஆகிய நூல்கள் தமிழ்ப் பதிப்புத்துறை வரலாற்றில் முக்கிய இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. ஓர் அரசு நிறுவனமோ அன்றேல் பல்கலைக்கழகம் போன்ற நிதி வசதியுடன் கூடிய பெரும் நிறுவனம் ஒன்றோ செய்திருக்க வேண்டிய பணிகள் இவை என்றால் மிகையாகாது. 'தற்காலத் தமிழ் அகராதி' பற்றிய பேச்சு எழும்போதெல்லாம், ஈழத் தமிழுக்கென்று 'தற்காலத் தமிழ் அகராதி' ஒன்று தயாரிப்பது மிக அவசியமானது என நண்பர் மு. நித்தியானந்தன் கூறுவதுண்டு.

'க்ரியா' தொடங்கிய காலந் தொட்டே, 'க்ரியா' வெளியிடும் நூல்களையும், 'க்ரியா'வில் கிடைக்கும் பிற நூல்களையும் சஞ்சிகைகளையும் தருவித்து நண்பர்களிடையே விநியோகம் செய்துவந்தேன். லண்டனில், ஓரிரு ஆண்டுகள் முன்னர், 'தற்காலத் தமிழ் அகராதி', Colporul: A History of Tamil Dictionaries உட்பட 'க்ரியா'வின் நூல்கள் பலவற்றைத் தருவித்து விநியோகம் செய்திருக்கிறேன். குறிப்பாக, colporul: A History of Tamil Dictionaries தமிழ் ஆர்வலர்கள் இல்லங்களிலெல்லாம் கிடைக்க வேண்டும் என நம்புகிறேன். சிறப்பாக, இங்கு வளர்ந்துவரும் இளம் தலைமுறையினருக்கு தமிழ் மேல் அக்கறை ஏற்படுத்தக்கூடிய நூல்களில் இந்நூலும் ஒன்றாகும் எனக் கருதுகிறேன். இதன் காரணமாக லண்டனில் இருவேறு இலக்கியக் கூட்டங்களில் இந்நூல் பற்றிய அறிமுகத்தினை மேற்கொண்டோம். அத்தோடு, ஜேர்மனியில் நடைபெற்ற 'ஐரோப்பிய இலக்கியச் சந்திப்பு' நிகழ்வின்போதும், பின்னர் லண்டன் 'தீபம்' தொலைக்காட்சியிலும் நண்பர் நித்தியானந்தன் இந்நூல் பற்றிய அறிமுகத்தினைச் செய்திருந்தார்.

○

1965இல் நா.பார்த்தசாரதியின் 'தீபம்' சஞ்சிகை வெளிவருகிறது. அக்காலகட்டத்தில் வெளிவந்த சஞ்சிகைகளுள் சிறந்த இலக்கியச் சஞ்சிகைகள் 'தாமரை', 'தீபம்' ஆகும். இவை அப்போது இலங்கையிலும் விற்பனைக்குக் கிடைத்தன. ஆனால், கி. கஸ்தூரிரங்கனை ஆசிரியராகக் கொண்டு டெல்லியில் 1965இலேயே தொடங்கப்பெற்ற 'கணையாழி' அடுத்த 2, 3 ஆண்டுகள் வரை எமக்கு அறிமுகமாகவில்லை. அறிய வந்தபோது, 'கணையாழி' அலுவலகத்துடன் தொடர்புகொண்டு, பல பிரதிகளைப் பெற்று நண்பர்களிடையே விநியோகித்து வந்தேன். அத்தோடு, யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையிலும், வெள்ளவத்தை விஜயலஷ்மி புத்தகசாலையிலும், மாத்தளையில் ஓர் கடையிலும் கிடைக்க ஒழுங்கு செய்தேன்.

படிப்படியாக மாதம் நூறு பிரதிகள் 'கணையாழி' விநியோகித்திருக்கிறேன். இவ்வாறாக, தமிழவன் குழுவினரின் 'படிகள்', கோவை ஞானி நடத்திய 'பரிமாணம்', வெங்கட் சாமிநாதனின் 'யாத்ரா' இன்னும் சில சஞ்சிகைகளையும் தருவித்து நண்பர்களிடையே விநியோகம் செய்துவந்துள்ளேன். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது, கொழும்பு, கண்டி, கிழக்கிலும் தெற்கிலும்கூட விநியோகித்திருக்கிறேன்.

சஞ்சிகைகள் மட்டுமல்லாது, 'க்ரியா', அன்னம், அகரம், கலைஞன் பதிப்பகம், நர்மதா, சாகித்திய



படிப்பகம்

www.padippakam.com

அகடமி, National Book Trust இன்னும் பிற வெளியீட்டாளர்களது சிறந்த கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், ஓவியம், மொழிபெயர்ப்பு என பல்வகை நூல்களையும் பெற்று நண்பர்களுக்குக் கிடைக்கச் செய்தேன். வணிக ரீதியில் இயங்கிவந்த பெரும்பான்மையான புத்தகக் கடைகளில் அவ்வகை நூல்கள் கிடைப்பது அரிது என்பது கவனிக்கத்தக்கது.

எனினும், 70களின் பிற்பகுதியில், கொழும்பு கோட்டை Front Street - Main Street சந்தியில் அமைந்திருந்த கிறிஸ்தவ இலக்கிய சங்கம் (CLS) புத்தகசாலையினர் எனது ஆலோசனையின்பேரில் பல நல்ல நூல்களைத் தருவித்து விற்பனை செய்த தோடு, அந்நூல்கள் பற்றிய பட்டியல் ஒன்றையும் தயாரித்து வெளியிட்டிருந்தனர். இதுபோலவே, பின்னர் யாழ். பெரிய கடையிலுள்ள சோதிட விலாச புத்தகசாலையினரும் செய்தமை குறிப்பிடத்தக்கது.

எனக்குக் கிடைக்கக்கூடிய சஞ்சிகைகள், நூல்கள் என் நண்பர்களுக்கும் மற்றும் தீவிர இலக்கிய வாசகனுக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆர்வத்தினாலேயே இவ்வாறு செய்தேன். எனது இந்த முயற்சியானது, குறிப்பாக 70களிலும் ஓரளவு 80களிலும் தீவிர வாசிப்பினுக்கு வலுவூட்டியும், நவீன கலை, இலக்கியப் பார்வையை விசாலிக்கச்செய்யவும், அவ்வகைப் படைப்புகளை உருவாக்க உந்துசக்தியாக அமையவும் உதவியிருக்குமென நம்புகிறேன். அத்தலைமுறைப் படைப்பாளிகள் வழி இன்றைய தலைமுறையினருக்கும்கூட சிறிதளவாவது சென்றடைந்திருக்குமெனவும் கருதலாம். எனவே, அது எனக்கு மன நிறைவைத் தருகிறது.

○

இந்திய மொழிகளில் வெளியான சிறுகதைகள் சில வற்றைத் தமிழாக்கம் செய்து 'மறுகதைகள்' என்ற முற்பாதி முழுவதும் எமது எழுத்தாளர்களின் ஆக்கங்களைக் கொண்டிருந்தது. உண்மையில், இந்த முதல் முயற்சி நான் எதிர்பார்த்ததுக்கும் மேலாக மன நிறைவைத் தந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

பின்னர், 'அலை'யுடனான உறவில், 'அலை'யின் அச்சாக்கத்திலும், அதற்கான படைப்புகளைப் பெறுவதிலும், குறிப்பாக விளம்பரங்கள் பெறுவதிலும் உதவினேன்.

1980இல் தமிழகம் சென்றபோது, கலை விமர்சகரான ஜோசப் ஜேம்ஸ் என்பவரின் 'நவீன ஓவியம் பற்றி ...' என்ற கேள்வி – பதில் ரூபத்திலான, எளிதானதும் அதேசமயம் ஆழமானதுமான கட்டுரை – ஓவியக் கண்காட்சியொன்றில் பயன்படுத்தப்பட்டது – 'க்ரியா' ராமகிருஷ்ணனிடமிருந்து பெற்றுவந்ததை ஓர் 'அலை' இதழில் பயன்படுத்தினோம். 20ஆவது இதழைத் தமிழகத்தில் கவிஞர் சி. மணியின் அச்சகத்தில் அச்சிட்டோம். ந. முத்துசாமியின் மகன் நடேஷின் ஓவியத்துடன் அவரது வீட்டில் வைத்து 'screen printing முறையில் தயாரிக்கப்பட்ட அட்டையினை 29ஆவது இதழுக்குப் பயன்படுத்தினோம்.

யாழ். கத்தோலிக்க அச்சுக்கூடத்தில் paper plate முறையில் அச்சிடும் வசதி வந்த புதிதில், 'அலை'யின் பழைய இதழ்களைப் பலரும் கேட்டபடி இருந்ததனால், அத்தகைய அச்சிடும் வாய்ப்பைப் பயன்படுத்தி, 'அலை'யின் முதல் 12 இதழ்களையும் ஒரு தொகுதியாக, 1986 ஆனியில் மீள்பதிப்புச் செய்தோம். 275 பிரதிகளை அச்சிட ரூபாய் 15,000 செலவானது. பிரதி விலை ரூபாய் 125.00 என விநியோகித்தோம். தமிழ்ச் சஞ்சிகையொன்று அவ்வாறு மீள்பதிப்புச் செய்யப்பட்டமை அதற்கு முன் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

இதுபோலவே, 'அலை'யின் முதல் 25 இதழ்களிலும்



**இக்காலகட்டத்தில், ஒரு பக்கம் அ.யேசுராசா முதலானோருடன் இணைந்து 'அலை' சஞ்சிகையை வெளிக்கொணர்வதில் துணை நின்றேன். மறு பக்கம் மு.நித்தியானந்தன், க.பாலேந்திரா ஆகியோருடன் தமிழ் அவைக்காற்று கலைக் கழகச் செயற்பாடுகளிலும் ஆர்வம் கொண்டிருந்தேன்.**

தலைப்பில் 'வாசகர் வட்டம்' ஒரு தொகுதியை வெளியிட்டிருந்தது. அதனைப் படித்தபோது ஏற்பட்ட உந்துதலால், ஈழத்துப் படைப்புகளைக் கொண்ட ஒரு தொகுதியையும் கொண்டுவந்தால் என்ன என்று கேட்டு லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு கடிதம் எழுதினேன். இலங்கை, மலேசியா எழுத்துக்களைக் கொண்ட ஒரு தொகுதியை வெளியிடுவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருப்பதாகவும், ஆக்கங்களை அனுப்பி உதவினால் தெரிவு செய்து பயன்படுத்தலாம் என்றும் அவர் பதில் எழுதியிருந்தார். செ. யோகநாதன் உதவியுடன் பல ஆக்கங்களை அனுப்பி வைத்தேன். அதிக எண்ணிக்கையில் சிறுகதைகளையும் ஒரு சில கவிதைகளையும் கட்டுரைகளையும் கொண்டு 'அக்கரை இலக்கியம்' என்ற பெயரில் அந்தத் தொகுப்பு 1968 டிசம்பரில் வெளியானது. 468 பக்கங்களைக் கொண்டிருந்த அதில்,

வெளிவந்த ஆக்கங்களை விஷயவாரியாக அட்டவணைப்படுத்தி 26ஆவது இதழில் பட்டியலிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

'அலை'யை வெளிக்கொணர்வதில் எதிர்கொண்ட சிரமங்கள், ஓரளவு சஞ்சிகைகள், நூல்களைக் கொணர்வதில் உள்ள பிரச்சினைகளை உணர்த்தின. அதேவேளை, 'அலை' வெளியீடாகச் சில நூல்களை வெளியிட எண்ணினோம். நண்பர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்களை அணுகி, ஆளுக்கு ரூபாய் 100.00 வீதம் பங்களிப்புச் செய்ய இயலுமா எனக் கேட்டோம். பலரும் முன்வந்தனர். ஏ.ஜே.கனகரத்னாவின் 'மார்க்சியமும் இலக்கியமும்: சில நோக்குகள்' நூலினை வெளியிட்டோம். பின்னர், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய 'ஒரு கோடை விடுமுறை' நாவலும், வ. ஐ. ச. ஜெயபாலனின் 'தேசிய



படிப்பகம்

www.padippakam.com

இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்', சு. வில்வ ரத்தினத்தின் 'அகங்களும் முகங்களும்' கவிதைத் தொகுதியும் வெளியாகின.

கலை, இலக்கியம் சார்ந்து 'அலை'யின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. கவிதை, சிறுகதை, விமர்சனம் என்பதோடு நின்றுவிடாது, ஓவியம், திரைப்படம் ஆகிய துறைகளிலும் சிறப்பாகக் கவனம் செலுத்தி யிருக்கிறது. தா. ராமலிங்கம், எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம், சு. வில்வரத்தினம், மு. புஷ்பராஜன் போன் றோரது கவிதைகளும், மொழிபெயர்ப்புக் கவிதை களும், சண்முகம் சிவலிங்கம், ஸ்ரீதரன், உமா வரத ராஜன், எம்.எல்.எம்.மன்சூர், ரஞ்சகுமார் போன்றோ ரது சிறுகதைகளும் 'அலை'யின் காத்திரத்துக்குதவின. சு.வில்வரத்தினம், ஸ்ரீதரன், எம்.எல்.எம். மன்சூர், ரஞ்சகுமார் ஆகியோர் பெருமளவிற்கு 'அலை'யினூ டாகவே அதிக கவனம் பெற்றனர். நவீன ஓவியம், திரைப்படம் பற்றிய பிரக்ஞையை 'அலை' ஏற்படுத்தி யது. குறிப்பாக, ஓவியர் அ.மாற்கு தமிழர் மத்தியில் கவனம் பெற்றமைக்கு, 'அலை' தொடர்ந்து ஓவியம் பற்றியும், அ.மாற்கு பற்றியும் கவனம் செலுத்தியமை தான் காரணம்.

○

எழுத்தாளர்களையும், பதிப்பாளர்களையும் சந்திப்பது என்ற நோக்கத்தில் முதல் முறையாக 1980இல் தமிழ்நாட்டுக்குப் போனேன். அப்போது தலை மன்னாரில் இருந்து இராமேஸ்வரத்துக்குக் கப்பல் சேவையிருந்தது. மூன்று மணித் தியாலம் எடுக்கும். நிறையச் சஞ்சிகைகளையும், நூல்களையும் கொண்டு போனேன், 'க்ரியா" ராமகிருஷ்ணனுடன் தங்கியிருந்து அசோகமித்திரன், சா. கந்தசாமி எனச் சில எழுத்தாளர்களைச் சந்திக்க முடிந்தது. பின்னர் 1982இல் நானும், யேசுராசாவும். குலசிங்கமும் போனோம். விமானத்தில் போய், கப்பலில் திரும்பினோம்.

இந்தத் தடவை ஆ. மாதவன், வேதசகாயகுமார், கி. ராஜநாராயணன், 'அன்னம்' மீரா, எஸ்.வி.ஆர், பரீக்ஷா ஞாநி, கோவை ஞானி, ந. முத்துசாமி, தமிழவன், வண்ணநிலவன், சிற்பி பாலசுப்பிரமணியம் எனப் பலரையும் சந்தித்துக் கதைக்க முடிந்தது. இவர்களுடைய தொடர்புகளினூடாகத்தான் தமிழகத்தில் சில நூல்களை யேனும் கொண்டு வருவது சாத்தியமாகியது.



முதன் முதலில் எஸ். வி. ராஜ துரை அவரது பொதுமை வெளியீடு மூலம், தலத்து ஒய கே.கணேஷ் மொழிபெயர்த்த 'போர்க்குரல்' நூலை வெளியிட் டார். இது புகழ்பெற்ற சீன எழுத் தாளர் லூசுன் எழுதிய சிறுகதை களின் தொகுப்பு. ஏறத்தாழ அதேசமயத்தில், கந்தையா நவ ரேந்திரனின் ஜே.கிருஷ்ண மூர்த்தி பற்றிய 'விழிப்புணர்வு பற்றிய விளக்கங்கள்" என்ற நூலின் இரண்டாவது பதிப்பை 'நர்மதா" பதிப்பகம் வெளியிட்டது. தொடர்ந்து எம்.ஏ.நுஃமானின் 'அழியா நிழல்கள்' கவிதைத் தொகுப்பையும், குப்பிழான் ஐ.சண்முகனின் 'சாதா ரணங்களும் அசாதாரணங்களும்' சிறுகதைத் தொகுப் பையும், பேராசிரியர் கைலாசநாத குருக்களின் 'வட மொழி இலக்கிய வரலாறு' நூலின் மறுபதிப்பையும் நர்மதா வெளியிட்டு உதவியது.

'அன்னம்' மீராவிடம் மஹாகவியினதும், தா. ராமலிங்கத்தினதும், எம்.ஏ. நுஃமானின தும் கவிதைகளைக் கொடுத்திருந்தேன். இரண்டு நூல்களை வெளியிடுவதாக ஒப்புக்கொண்டார். அதன்படி 'மஹாகவி கவிதைகள்' எம்.ஏ.நுஃமானின் 'மழை நாட்கள் வரும்' இரண்டையும் பிரசுரித்தார். நுஃமா னும் யேசுராசாவும் சேர்ந்து தொகுத்த 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்', யேசுராசாவின் 'அறியப்படாத வர்களின் நினைவாக', மு. தளையசிங்கத்தின் 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி', 'முற்போக்கு இலக்கியம்' ஆகியவற்றை 'க்ரியா' வெளியிட்டது.

மு. தளையசிங்கத்தை தமிழகத்தில் அறிமுகப்படுத் திய பெருமையில் கோவை சி. கோவிந்தனுக்கும் கணிசமான பங்கிருக்கிறது. கோவை சமுதாயம் பிரசுராலயத்தின் மூலம் தளையசிங்கத்தின் 'புதுயுகம் பிறக்கிறது', 'ஒரு தனிவீடு', 'போர்ப்பறை', 'மெய்யுள்', 'கலைஞனின் தாகம்" போன்ற நூல்களை அவர் வெளியிட்டிருக்கிறார்.

எஸ். வி. ஆரின் பொதுமை வெளியீடு மூலம் சேரனின் 'இரண்டாவது சூரிய உதயம்' கவிதைத் தொகுப்பின் மறுபதிப்பைக் கொண்டுவந்தோம். அதனை வெளியிட்ட சமயம், 1983 யூலைக் கலவரம் நடந்துவிட்டமையால், வெளியீட்டு விழா இனப்படு கொலையைக் கண்டிக்கும் நிகழ்ச்சியாகவும் அமைந்து விட்டது. விழா மண்டபம் முழுவதும் சேரனின் கவிதைகளை மட்டைகளில் எழுதிக் கட்டியிருந்தார் கள். ஆனந்த விகடன், குமுதம், குங்குமம் என அநேகமாக எல்லாச் சஞ்சிகைகளுமே போட்டி போட்டுக்கொண்டு சேரனின் கவிதைகளைப் பிரசுரித் தன. சேரன் பரவலாக அறியப்பட இந்தச் சந்தர்ப்பம் ஒரு வாய்ப்பாக அமைந்தது. இப்படி 1981 தொடங்கி 1984 காலப்பகுதியில் ஏழு பதிப் பகங்கள் எல்லாமாக 20 நூல்கள் வரை வெளியிட்டிருக்கின்றன.

தமிழ், தமிழர் சார்ந்த நூல் களை வெளியிடவென உருவாக் கப்பட்டதுதான் 'தமிழியல்'. இந்தப் பெயரை, அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தில் வரலாற்றுத் துறை விரிவுரை யாளராக இருந்த ரகுபதிதான் பிரேரித்தார். Early Settlements in Jaffna என்ற அவரது கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுக்கட்டுரை, யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் தமிழர்தான் என்ற வகையில் அமைந்தது. அதனை நூலாக வெளியிட வேண்டும் எனத் தோன்றியது. அதனைத் தமிழகத் தில் அச்சிடுவதற்கு விரும்பி னேன். ரகுபதிக்கு இதில் அதிகம்



படிப்பகம்

www.padippakam.com

ஆர்வம் இருக்கவில்லை. வற்புறுத்தியதில் சம்மதித்தார். தமிழகம் சென்று வர பயணச்செலவு வேறு வேண்டும் என்ற நிலையில் நண்பர் சிவரஞ்சித் வழியாக விடு தலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்ததில் படகில் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. நானும், ரகுபதியும் வடமராட்சி கடற்பகுதியொன்றிலிருந்து வேதாரண்யம் சென்றோம். இது நிகழ்ந்தது 1985இல். சென்னையில் 'க்ரியா' ராமகிருஷ்ணனும் நித்தியா னந்தனும், ரகுபதியுடன் இணைந்து நூற்பிரதியைச் செப்பனிட்டனர். தமிழியல் வெளியீடாக வந்திருக்க நானும் முன்வருவோம்.

ஈழத்திலும், போராட்டம் பெரும் நெருக்கடியைச் சந்தித்த காலத்தில்கூட சஞ்சிகைகளையும், நூல்களை யும் வெளியிடுவதில் கரிசனை இருந்திருக்கிறது. போராட்டம் கொடுத்த புதிய கருப்பொருள்களை உள்வாங்கி கணிசமான அளவில் கவிதை – சிறுகதைத் தொகுப்புகளும், நாவல்கள் சிலவும் வெளியாகி இருக்கின்றன. முன்னர் புத்தகங்களை வெளியிட முடிந்தாலும் தாபனரீதியான ஒழுங்குகள் இல்லாத தால் புத்தகங்கள் விற்பனையாவது கடினமாக



**'தற்காலத் தமிழ் அகராதி' பற்றிய பேச்சு எழும்போதெல்லாம், ஈழத் தமிழுக்கென்று 'தற்காலத் தமிழ் அகராதி' ஒன்று தயாரிப்பது மிக அவசியமானது என நண்பர் மு. நித்தியானந்தன் கூறுவதுண்டு.**

வேண்டிய நூல் இது. எல்லாம் தயாரான பின்னர் ரகுபதி தனது சொந்த வெளியீடாகக் கொண்டுவரு வது என முடிவு செய்து, இறுதியில் 1987 ஜூலையில் அதை வெளியிட்டார்.

ரகுபதியின் நூலை அச்சிடத் திட்டமிட்டபோதே ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த நா. சபாரத்தினம் அவர்கள் எழுதிய ஆசிரியத் தலையங்கங்களைத் தொகுத்து வெளியிடுவதெனவும் தீர்மானித்தோம். அவை போராட்டச் சூழலில் அரசியல் விமர்சனமாக அமைந்திருந்தன. 1984ஆம் ஆண்டு வந்த தலையங்கங் களில் இருந்து தேவையானதை மயிலங்கூடலூர் நடராசனும், ரகுபதியும் தெரிவு செய்திருந்தனர். அவற்றையும் தமிழகத்துக்கு எடுத்துச் சென்றிருந்தோம். 'ஊரடங்கு வாழ்வு' என்ற பெயரில் தமிழியல் வெளியீட்டின் முதல் நூலாக அது 1985இல் சென்னை யில் வெளியாகியது.

தமிழியல் வெளியீடாக 1991 வரையிலும் தமிழகத் தில் ஏழு நூல்களையும், ஈழத்தில் மூன்று நூல்களை யும் வெளியிட்டோம். இவற்றில் 'ஊரடங்கு வாழ்வு', 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுப்பு, சண் முகம் சிவலிங்கத்தின் 'நீர் வளையங்கள்', மு. பொன் னம்பலத்தின் 'ஆத்மார்த்தமும் யதார்த்தமும்' கட் டுரைத் தொகுப்பு, ஓவியர் மாற்குவை கௌரவிக்கும் முகமாக வெளியிடப்பட்ட 'தேடலும் படைப்புலக மும்' மனதுக்கு நிறைவைத் தருகின்றவையாக அமைந்தன. 'தேடலும் படைப்புலகமும்' நூலின் ஆக்கத்திலும் அதன் வடிவமைப்பிலும் பெரிதும் பங்கு கொண்டவர் நிலாந்தன் ஆகும். தமிழகத்தில் தமிழியல் நூல்கள் வெளிவரக் காரணமாக அமைந்த வர் நண்பர் சி. மோகன். நித்தியானந்தனும் சில நூல்கள் வெளியீட்டில் உதவியுள்ளார்.

'இலங்கையில் தோட்டப் பள்ளிக்கூடங்களின் கல்வியமைப்பும் பிரச்சினைகளும்' என்ற எனது மனைவியின் எம்.ஏ. பட்டத்துக்கான ஆய்வுக்கட்டுரை யையும் அவரின் நினைவாக நூலாக்கினோம். ஆய்வுக் கட்டுரைகள் பட்டப்படிப்பு முடிந்ததும் பல்கலைக் கழக நூலகத்துக்கும் வீட்டில் பரணுக்கும் போய் விடுவது விரும்பத்தக்கதல்ல. தகுதி கண்டு நூலாக்கப் படுவது அவசியம். அவற்றுக்கு உதவ நண்பர்களும்

இருந்தது. இப்போது நட்டம் ஏற்படாத அளவுக்குப் புத்தகங்கள் விற்பனையாகின்றன. வாசகர்களை நோக்கி புத்தகங்களை எடுத்துச் செல்லும் வகையில் புத்தகக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்வது ஈழத்தில் புத்தக வெளியீடுகளை மேலும் ஊக்குவிக்கும் என்று நம்புகிறேன்.

○

1990 பெப்ரவரியில் லண்டன் வந்தேன். இரண்டு, மூன்று ஆண்டுகள் குறிப்பான முயற்சிகள் எதிலும் ஈடுபடவில்லை. ஆனால், பின் மீண்டும் கலை, இலக்கிய விஷயங்களில் ஈடுபடலானேன்.

ஈழ, தமிழக கலைஞர்கள், எழுத்தாளர்கள் லண்டன் வர நேர்ந்தால், கலை, இலக்கிய நிகழ்ச்சி களையும், நூல் அறிமுக, விமர்சனக் கூட்டங்களையும் நண்பர்களுடன் சேர்ந்து ஒழுங்கு செய்வதுண்டு. இவ்வாறு வருபவர்களில் பலர் என் வீட்டிலேயே தங்கிச் செல்வதுமுண்டு.

உதாரணமாக, பேராசிரியர் கா. சிவத்தம்பி, எஸ். பொன்னுத்துரை, கலாநிதி க. சொக்கலிங்கம், மு. பொன்னம்பலம், அ. யேசுராசா, சு. வில்வரத்தினம், செங்கை ஆழியான் ஆகியோர் இங்கு வந்திருந்த சந்தர்ப்பங்களில் கூட்டங்கள், நூல் அறிமுகம், விமர் சனம் என ஒழுங்கு செய்திருந்தோம். இதுபோலவே, சுந்தர ராமசாமி, எஸ்.வி. ராஜதுரை, தமிழவன், திலகவதி முதலியோர் வந்தபோதும் கூட்டங்கள் நிகழ்ந்தன.

வெறுமனே, கூட்டங்களோடு நின்றுவிடாது, தனிப்பட்ட சந்திப்புகள், கருத்துப் பரிமாற்றங்கள், பயனுள்ள முயற்சிகளைத் திட்டமிடல் என்ற வகையில் இச்சந்திப்புகள் தொடர்ந்த விளைவுகளை அளிக்கும் வண்ணம் முயற்சிகளை மேற்கொள்வோம்.

இவ்வகையில்தான், ஈழத்திலிருந்து ஆண்டுக்கு ஒரிரு கலைஞர் அல்லது எழுத்தா எருக்கு ஐரோப்பியச் சுற்றுலாவுக்கான ஏற்பாடு செய்யத் திட்டமிட்டோம். ஐரோப்பிய நாடுகள் பற்றிய நேரடி அநுபவம், அவர்கள்தம் வாழ்நிலை, பண்பாடு, கலை, இலக்கியம் முதலானவற்றின் நேரடித் தரிசனம், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்தம் வாழ்நிலை, பிரச்



படிப்பகம்

www.padippakam.com

சினைகள், கலை, இலக்கிய முயற்சிகளை அறிதல் என பன்முக வாய்ப்பினை அளிப்பது நோக்கமாகும். ஈழம் திரும்பியபின் இவ்வாறு பெற்ற அநுபவங்கள் மூலம் அவர்களின் கலை, இலக்கிய முயற்சிகள் மேலும் செழுமையுறும். அதேவேளை, பிறருக்கும் தொற்ற வைப்பார்கள் என்றே நம்புகிறோம்.



இவ்வேற்பாட்டில் முதல்முதலாக 2001இல் நண்பர்கள் அ.யேசுராசாவும் சு.வில்வரத்தினமும் இங்கு வந்து மூன்று மாதங்களுக்கும் சற்று மேலாக ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், ஜெர்மனி, நோர்வே, சுவிஸ் ஆகிய நாடுகளில் பயணம் செய்தார்கள்.

2002ஆம் ஆண்டில் தவிர்க்கமுடியாத காரணங்களால் எவரையும் அழைக்கமுடியவில்லை. 2003இல் தெளிவத்தை ஜோசப் கனடாவுக்கும் இங்கிலாந்துக்கும் வந்து சுமார் மூன்று மாத காலம் தங்கிச் சென்றார். இதில் தங்கள் சொந்த முயற்சியில் அல்லது தொடர்பில் வரக்கூடியவர்களைவிடுத்து, எமது அழைப்பின்றேல் எப்போதுமே வரும் வாய்ப்பினைப் பெறமாட்டாதவர்களிலும், இதன்மூலம் ஐரோப்பிய கலை, இலக்கிய அநுபவங்களை உள்வாங்கிக்கொள்ளத் தக்கவராகவும், பின் நாடு திரும்பியதும், அவ்வாறான அநுபவங்களைப் பிறருக்குத் தொற்ற வைக்கக்கூடியவர்களிலுமே நாம் அதிக அக்கறை கொண்டுள்ளோம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேற்கூறிய முயற்சிகள் நண்பர்கள் பலரதும் ஒத்துழைப்பின்றிச் செய்யக்கூடியன வல்ல என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல. மு. நித்தியானந்தன், மு. புஷ்பராஜன், ஓவியர் க. கிருஷ்ணராஜா, யமுனா ராஜேந்திரன், 'புதுசு' நா.சபேசன், நாடக நடிகர் சாந்தன், சட்டத்தரணி ரங்கன் தேவராஜன் இப்படிப் பலருடைய ஒத்துழைப்புடனுமே நடைபெறும். தமிழ் தகவல் நடுவம் திரு. வி. வரதகுமாருக்கும் இதில் முக்கிய பங்குண்டு.

இது தவிர, 1994 முதல் 2002 இறுதி வரை லண்டன் நியூஹாம் (மாநகர சபை) நகரில் உள்ள தமிழர் நலன்புரி சங்கத்தில் பணிபுரிந்தேன். 1996இல், அதன் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி ஓர் இலக்கிய மலரினை வெளியிடலாமா என்று கேட்டபோது, தமிழர் நலன்புரி சங்க இயக்குநர் சபையினரும் இயைந்தனர். அதன்படி, '1995ஆம் ஆண்டறிக்கையும் 10ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்பு மலரும்' என முதன்முதலில் ஒரு மலரை வெளியிட்டோம். 176 பக்க அம்மலரில் 105 பக்கங்களில் புகலிடச் சூழலில் தமிழர் முகங்கொடுக்கவேண்டிய சில முக்கிய பிரச்சினைகள் குறித்த கட்டுரைகளும், சிறுகதைகள், கவிதைகளும், ராஜாவின் ஓவியங்களும், தமயந்தியின் புகைப்படங்களும் இடம்பெற்றன.

தொடர்ந்து, 1997இல் 'கிழக்கும் மேற்கும்', 1998, 1999, 2001இல் முறையே 'இன்னுமொரு காலடி', 'யுகம் மாறும்', 'கண்ணில் தெரியுது வானம்' ஆகிய தொகுதிகளும் வெளியாகின. புகலிடத்தில் வாழும் ஈழத்துப் படைப்பாளிகளது ஆக்கங்கள் மட்டுமல்லாது, இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ளோர் படைப்புகளும், ஐரோப்பா, வட அமெரிக்கா வாழ் தமிழகத்தோர் படைப்புகளும் (நா.கண்ணன், கோகுலக் கண்ணன், கோவர்த்தனன்) சேர்த்துக்கொண்டோம். இதன்மூலம் பரஸ்பரம் புரிந்துணர்வுக்கும், பரவலான கவனஈர்ப்புக்கும் ஏதுவாகும் என்பது எமது எண்ணம். இது ஓரளவுக்கு நிறைவேறியிருக்கிறது என்றும் நம்புகிறோம். மலர்கள் குறித்து பத்திரிகைகளிலோ அன்றேல் தனிப்பட்ட முறையில் பேச்சிலோ வரும் விமர்சனங்களிலிருந்தும், அடுத்த மலர் எப்போது வரும் என அவ்வப்போது பலரும் கேட்பதிலிருந்தும் இது புலனாகிறது.

இவ்வாறு பல நாடுகளில் வாழும் படைப்பாளிகளினதும் படைப்புகளின் தொகுதிஎன்ற வகையில், இம்மாதிரி தொகுப்பு வேறெதுவும் இல்லை என்பது உண்மை. அதேவேளை, ஐரோப்பாவில் 'இனியும் சூல் கொள்', 'இருள்வெளி' 'புது உலகம் எமை நோக்கி', 'ஊடறு' போன்ற மேலும் சில தொகுதிகள் வெளியிடப்படத் தமிழர் நலன்புரி சங்க மலர்கள் முன்மாதிரியாக அமைந்துபோனமை குறிப்பிடத் தக்கது.

அதேவேளை, இரு ஆண்டுகள் முன்னர், பாரிஸிலிருந்து கிடைக்கப்பெற்ற 'வெளிச்சம்' பவள இதழ் தொகுப்பைப் பார்த்தபோது உண்மையில் பிரமிப்பு ஏற்பட்டது. பக்க அளவிலும், தயாரிப்பிலும், உள்ளடக்கத்திலும் சிறப்பாக இருந்ததே காரணம். வன்னிப் பதிப்பினைக் காணவில்லை என்றாலும், பக்க அளவிலும், உள்ளடக்கத்திலும் சிறப்பாக இருப்பதைக் காண, போர்ச் சூழலிலும் இவ்வாறு ஒரு தொகுப்பினை வெளியிடக்கூடியதாக இருந்திருக்கிறது என்பது பிரமிப்பைத் தராமல் இருக்கமுடியுமா!

தமிழர் நலன்புரி சங்கத் தொகுப்புகள் மிகுந்த உழைப்பையும் பொறுமையையும் வேண்டிநின்றன. ஆக்கங்களைப் பெறுதல், தெரிவு, கணணியில் அச்சுப்பதிவு (typesetting) பிழைதிருத்தல், வடிவமைத்தல் என சகலநிலையிலும் மிகுந்த உழைப்பும் பொறுமையும் தேவைப்பட்டன. இதன் வெவ்வேறு நிலைகளில் நண்பர்கள் மாலி, யமுனா ராஜேந்திரன், மு. புஷ்பராஜன், மு.நித்தியானந்தன், அ. இரவி, ரமணி சாந்தகுணம், நா. கண்ணன், இரமணீதரன் ஆகியோரும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் உழைப்பையும் தந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக, ஓவியர் க. கிருஷ்ணராஜா கவிதைகள், சிறுகதைகள், அட்டைக்கான ஓவியங்களை பல நாட்கள் மனதில் இருத்தி, உருவாக்குவதோடு, உறக்கம் மறந்து, கருமமே கண்ணாக வடிவமைத்து உருவாக்குவதனாலேயே இத்தொகுப்புகள் தனித்தன்மையுடன் தனிக்கவனத்துக்குரியனவாகவும் அமைந்தன. ஓவியர் க.கிருஷ்ணராஜாவின் இச்சிறப்பியல்புகளை மூலதனமாகக் கொண்டே இத்தொகுப்பு முயற்சி உருவானது என்பதே உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு தொகுப்பினை மேற்கொள்ளும்போதும் முன்னைய தொகுப்பினை விடவும் மேலாக அமைய வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினோம். நூல் தயாரிப்பைப் பொறுத்தளவில் 'க்ரியா'வின் தயாரிப்புத் தரமே எமது இலக்காக இருந்தது. ஐந்து தொகுப்புகள் வெளிவந்த நிலையில், அண்மைக்காலங்களில் இத் தொகுப்புகள் பரவலான கவனிப்பையும் வரவேற்பையும் பெற்றிருப்பதை அறிய முடிகிறது. இது எமக்கு மனநிறைவு தரும் விஷயமாகும்.

இத்தொகுப்பு முயற்சிக்கான நிதியினைத் தேடித்தருவதோடு, ஆதரவும் தந்தவர் தமிழர் நலன்புரி சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினரான திரு. வா. ஜனார்த்தனன். இவரது உதவியின்றியும் இத்தொகுப்புகள் வெளிவந்திருக்க வாய்ப்பில்லை. சங்கத்தின் இயக்குநர்களில் ஒருவரான திருமதி. மஹேஸ்வரி பாலசிங்கம் அவர்களின் ஊக்குவிப்பும் குறிப்பிடத்தக்கது.

○

முன்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவரும், தற்போது ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியருமான கலாநிதி செல்வா கனகநாயகத்தைப் பதிப்பாசிரியராகக்கொண்டு, ஏ.ஜே.கனகரத்னா, சோ. பத்மநாதன், எஸ்ராஜசிங்கம், சுரேஷ் கனகராஜா, லக்ஷ்மி ஹோம்ஸ்ஹோம், நந்தியின் சகோதரர் திருநாவுக்கரசு போன்றவர்களுடைய ஆங்கில மொழிபெயர்ப்புகளுடன் கூடிய Lutesong and Lament என்ற தொகுதி 2001இல் வெளியானது.

36 கவிதைகளையும், 13 சிறுகதைகளையும் கொண்ட இந்தத் தொகுப்பை கனேடியப் பதிப்பகம் ஒன்று வெளியிட்டது. ஈழத்தின் இளங்கவிஞர்களில் ஒருவரான அமரதாஸ் சிறப்பாகப் புகைப்படங்களும் எடுக்கக்கூடியவர். அவர் எடுத்த படங்களில் ஒன்றுதான் இதன் அட்டைப்படமாக வந்திருக்கிறது. இந்த நூலைப் பொறுத்தளவில் ஒரு ஒருங்கிணைப்பாளனாக என்னுடைய பணி அமைந்தது.

லண்டனில் வாழும், ஆங்கிலத்தையும் தமிழையும் சரளமாகத் தெரிந்து வைத்திருக்கும் இளைய தலைமுறையினருக்குத் தமிழ் தகவல் நடுவம் மூலம் இரண்டு நாள் பயிலரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தோம். இலக்கியம் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்துவதும், இவர்களை மொழிபெயர்ப்பில் ஈடுபடுத்துவதுமே நோக்கமாக இருந்தது. திறமையுள்ளவர்களைக் கண்டறிந்து தொடர்ச்சியாகப் பயிற்றுவிப்பது என்றும் முடிவு செய்திருந்தோம். ஆனால் பலர் கலந்துகொண்டாலும் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கோ அல்லது ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கோ மொழியாக்கம் செய்யக் கூடியவர்களை இனங்காண முடியவில்லை. இதுபோலவே ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க் என்று பயிலரங்குகள் நடத்தி, தமிழ் படைப்புகளை அந்த நாட்டு மொழிகளுக்குக் கொண்டு செல்வதை ஒரு இயக்கமாகவே நடத்த முயல்வது அவசியம்.

ஈழத்து நூல்களையும் 'மதுரைத் திட்டம்' இணையத்தில் சேர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஜேர்மனியில் உள்ள நா. கண்ணனும், நானும் முயன்றோம். தமிழகத்தில் 30 நூல்களை பதிவு செய்து இதுவரையில் 13 நூல்களை ஏற்றியுள்ளோம். மு.தளையசிங்கத்தின் 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி', எம்.ஏ. நுஃமான், சி. மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு இணைந்து எழுதிய 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்', எம்.ஏ. நுஃமானின் 'அழியா நிழல்கள்', சு. வில்வரத்தினத்தின் 'அகங்களும் முகங்களும்', 'காற்றுவெளிக் கிராமம்', கைலாசபதியின் 'ஒப்பியல் இலக்கியம்', ரஞ்சகுமாரின் 'மோகவாசல்', கி.பி. அரவிந்தனின் 'இனி ஒரு வைகறை', 'முகம் கொள்', 'கனவின் மீதி', சோலைக்கிளியின் 'காகம் கலைத்த கனவு', அ.யேசுராசாவின் 'அறியப்படாதவர்கள் நினைவாக', 'மரணத்துள் வாழ்வோம்' தொகுப்பு ஆகியனதான் அவை.

இந்த நூல்களைச் சென்னையில் கணணியில் அச்சுப்பதிவு செய்து, பின்னர் ஒப்பிட்டுப் பார்த்து, பிழைதிருத்தம் செய்து, 'மதுரைத் திட்டம்' இணையத்தில் ஏற்றப்பட்டது. ஒப்பிட்டுப் பார்த்து, பிழை திருத்தம் செய்தவர்களில் இரமணீதரன் ஒருவரைத் தவிர ஏனையோர் ஈழத்தவர் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. முன் பின் அறிமுகமில்லாத, முகமறியாத, அமெரிக்காவில் வாழும் கோவர்த்தனன் ராமச்சந்திரன், முகந்தராஜ் முனிசாமி ஆகிய இருவரும், சிங்கப்பூரைச் சேர்ந்த கீதா ராமசாமியும் ஆவார். 'மரணத்துள் வாழ்வோம்' நூலின் இரண்டாம் பதிப்பினை வடிவமைத்து, கோவை விடியல் பதிப்பகம் வெளியீடாகக் கொண்டுவரக் காரணமானவர் சுவிஸ் ரவி. அவரிடமிருந்து மின்பிரதியைப் பெற்றே இணையத்தில் சேர்த்தோம்.

ஆனால் மீதி நூல்கள் எழுத்துப்பிழை பார்க்க இயலாமல் இணையத்தில் ஏற்றப்படாமல் இருக்கிறது. நண்பர்கள் பலரின் ஒத்துழைப்பினாலேயே என்னால் இவற்றையெல்லாம் செய்ய முடிந்திருக்கிறது. ஈழத்தில் புதிதாக நூல்களை அச்சிடுபவர்கள் அதனை குறுந்தகடில் ஏற்றித் தருவார்களேயானால் சிரமமின்றி உடனடியாகவே இணையத்தளத்தில் சேர்த்துவிடலாம். இதன்மூலம் உலகில் எந்த மூலையில் உள்ளவர்களிடமும் எங்களது படைப்புக்களை சேர்ப்பிக்க முடியும்.



**எனது இந்த முயற்சியானது, குறிப்பாக 70களிலும் ஓரளவு 80களிலும் தீவிர வாசிப்பினுக்கு வலுவூட்டியும், நவீன கலை, இலக்கியப் பார்வையை விசாலிக்கச்செய்யவும், அவ்வகைப் படைப்புகளை உருவாக்க உந்துசக்தியாக அமையவும் உதவியிருக்குமென நம்புகிறேன்.**



படிப்பகம்

www.padippakam.com

இதுகாறும் கூறியதன் மூலம் நான் எடுத்துரைக்க விழைந்தவை இவைதான்:

சிறுவயது முதலே இருந்துவந்த கலை, இலக்கிய ஈடுபாடும், அதனால் வாய்த்த நண்பர்கள் காரணமாகவும் கலை, இலக்கிய பரிமாற்றத்திலும், அதன் அடுத்த கட்டமாக ஈழத்துப் படைப்பாளிகளைப் பரவலாக அறியச் செய்யும் முயற்சியில் நூல் வெளியீட்டிலும் ஈடுபடலானேன்.



அதேவேளை, நூல் தயாரிப்பில் தரம் குறித்த பிரக்ஞையை நம்மில் ஏற்படுத்தியவர்கள் குறிப்பாக சென்னை 'வாசகர் வட்டம்' மற்றும் 'க்ரியா'வும் ஆகும். இங்கிலாந்து வந்தபின் ஆங்கில நூல்களின் வெளியீட்டுத் தரமும் எம்மை மூக்கில் விரல் வைக்கச் செய்துள்ளன. லண்டன் Folio Societyயின் நூல்கள் நல்ல உதாரணமாகும்.

நீண்டகால இடைவெளியின் பின், 2004 ஜூலையில் காலச்சுவடு பதிப்பகத்துடன் இணைந்து தமிழியல் வெளியீடுகளாக வெளியான மு. புஷ்பராஜனின் 'மீண்டும் வரும் நாட்கள்', தா. பாலகணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' ஆகிய இரு நூல்களதும் பதிப்புத் தரம், நூல் தயாரிப்பில் தரம் குறித்த எமது பிரக்ஞையின் வெளிப்பாடு என்று கூறினால் மிகையாகாது.

எனினும் நூல்கள் வெளியிடத் தேவையான வளங்கள் இல்லாத நிலையிலேயே அன்றும் இன்றும் செயல்படும் சூழல். அந்த வகையில், தொடக்கத்தில் நாம் கனவு காண்பவர்களாகவே இருந்துவருகிறோம். நாளடைவில் சில நனவுகளாகின்றன.

உதாரணமாக, ரகுபதியின் Early Settlements in Jaffna நூலினை வெளியிடத் தொடங்கியபோது, அதாவது 1985இல், 'க்ரியா'வின் உத்தேச அச்சுச் செலவு இந்திய ரூபாய் 55,000 ஆக இருந்தது என்பது கவனிக்கத்தக்கது.

பின்னர் 1987இல் 'தேடலும் படைப்புலகமும்' யாழ்ப்பாணத்தில் வெளியிட்டபோது ரூபாய் 45,000க்கும் மேலானது. அச்சுவேலை தொடங்கும்போது நண்பர்கள் தந்த நம்பிக்கை மட்டுமே மூலதனம். குறிப்பாக செ.க.சுகுமாரும் பொன்.பூலோகசிங்கமும் பல ஸ்தாபனங்களிடமிருந்து நிதியுதவி பெற்றுத் தந்தமை குறிப்பிடத்தக்கது. கட்டுரைகளைத் தெரிவு செய்தலில் அ.யேசுராசாவும், யாழ்ப்பாணத்து ஓவியர்கள் பற்றிய கட்டுரைகளை எழுதியதோடு, நூலின் வடிவமைப்பிலும் உதவியவர் நண்பரும் ஓவியருமான நிலாந்தன். தமிழகத்தில் ஓவியக் கலைஞர்களின் ஆக்கங்களைப் பெறுவதில் நண்பர் மு. நித்தியானந்தனும் உதவியுள்ளார். ஓவியங்களை அச்சிட அவற்றிற்கான வார்ப்புகளை (plates) யாழ்ப்பாணத்தில் செய்து தந்தவர் திரு. தவம்.

இப்போதைய கனவுகள் சிலவற்றைக் கூறி முடிக்கலாம் என நினைக்கிறேன். ஏ.ஜே. கனகரத்தினா, சோ. பத்மநாதன், எஸ். ராஜசிங்கம் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள தமிழ்ச் சிறுகதைகள், கவிதைகள் பலவும் உள்ளன. அவை தொகுப்புகளாக வர வேண்டும்.

இன்று அனைத்துலக ரீதியாகத் தமிழர் பரந்து வாழும் நிலையில், தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனி ஆய்வுச் சஞ்சிகைகள் (தொடக்கத்தில் ஆண்டுக்கு இரு இதழ்கள்) வெளிவர நாம் ஆவன செய்ய வேண்டும்.

லண்டனில் வாரம்தோறும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தவண்ணமே உள்ளன. எனினும், ஒரு லட்சத்துக்கும் மேலான தமிழர் வாழ்கின்றபோதும், தமிழருக்கென ஒரு கலைக்கூடம் இல்லை. அது பற்றி 4, 5 ஆண்டுகளுக்கும் மேலாகவே நாம் சிந்தித்து வருகிறோம். ஒரு சில ஆண்டுகள் கழிந்த பின்னராவது அதனை நனவாக்குவோம் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

கனடாவில் இரண்டு லட்சத்துக்கும் மேலான தமிழர் வாழ்கின்றபோதும், தமிழருக்கென ஒரு கலைக்கூடம் இல்லை என்றே அறிகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் கனடியத் தமிழர்களையும் மேற்குறித்த கனவுகளை நனவாக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக வசதி படைத்தோர் இது குறித்து முன்னெடுப்புகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

இன்னுமொரு விடயத்தையும் இங்கு கூறுவது பொருத்தம் என நினைக்கிறேன். அண்மையில் பேர்க்கிலி (Berkeley) கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோர்ஜ் ஹார்ட், கலிபோர்னியா வானொலியொன்றில் பேட்டியின்போது, ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழுக்கான ஒரு பிரிவு தொடங்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார். இது குறித்தும் கனடியத் தமிழர்கள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

இறுதியாக, 'இயல் விருது' வழங்கி என்னையும், என்னுடன் உறுதுணையாய் நின்றவர்களையும் கௌரவிக்கும் கனடிய தமிழ் இலக்கியத் தோட்டம் மற்றும் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தின் தென்னாசியக் கல்வி மையத்திற்கும் நண்பர்கள் சார்பிலும் எனது சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயம், எனது ஈடுபாட்டினையும் செயல்பாடுகளையும் தமது ஈடுபாடாகவும் செயல்பாடுகளாகவும் கொண்டு உறுதுணையாய் நின்ற அனைத்து நண்பர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

வணக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

# மைதிலி




**1**

ஒவ்வொரு நாளும்
ஏதோ ஒரு இழப்பு
கைகளிலும் கால்களிலும்
மனங்களில் உழல்பவையின்
எச்சங்கள் பொருக்குகள்
கருணையேதுமற்று
குரல்வளை நொறுக்கத்
தயாராகிவிடுகிறாய் நீ
இருளில்
வசீகரமும் வன்மமுமாய் ஒளிர்கின்றன
கண்கள்
தலையணைகளில்
நுரைத்தொழுகும்
எச்சில்
அளவளாவுவது
அன்பு கொள்வது
ஏதுமில்லை
பிடரிவழி தீசுக்கள் கழன்றொழுக
பேசுவது யாதென்ற
புரிதலுமில்லை
உரசிக்கொள்ளும் முதுகுகளின் முன்
எனக்கும் உனக்குமான
தனித்தனி உலகங்களில்
தவித்துப் போய்விடுகிறோம்
நாம்.

**2**

புராதனக் கோட்டைகளையும்
இடிபாடுகளையும் மேவிச் செல்கிறது
ஒரு துயரமான கண்ணீர்த் துளி
“வந்துவிடு”
கண்மூடி இறைஞ்சுகிறாள்
இதழ்கள் பிளந்துருகும்
முத்தத்தின் ஈரம்
எனக்கும் உனக்குமே பரிச்சயம் கொண்ட
பேரமைதி பெருகும் நீர்த்தடங்களிற்கு
அழைத்துச் செல்கிறது
ஒளியும் வர்ணங்களுமற்றது
என் உலகம்
வர்ணப்பூச்சிகளிற்கு
வாசனை மலர்களிற்கு
பரிச்சயமற்றதும் என் உலகம்.
குருதியும் தசையும்
என்புகளும் உருகி
உயிர்ப்பும் மூப்பும் வனப்பும்
ஒருங்கிசைவது.
“வந்துவிடு”
ஆழமான நீர்த்தடங்களிலிருந்தும்
வழுவி
உறையாது ஒளிர்கிறது கண்ணீர்
முலைகளும் இதழ்களாலும்
பேணப்படுகிற உலகைக் காண
குழந்தை தயாராகிவிடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com





# திருப்பப்பட்ட தேவாலயமும் காணாமல் போன சில ஆண்டுகளும்

## சண்முகம் சிவலிங்கம்

தேவாலயம் திருப்பப்பட்டிருந்தது. அதுதான் அவனுடைய பிரச்சினையா?

அது அல்ல. நத்தார் நள்ளிரவுப் பூசை இந்த முறையும் இல்லாமல் போனது. மார்கழி மாதம். மழை பெய்துவிட்டபின், ஈரமாய், இன்னும் கறுப்பாகத் தெரியும் நள்ளிரவு வீதியைப் பார்த்து ரசித்து எத்தனை காலம்? ஒருமுறை வளைந்து நிமிரும் அந்த பிரதான வீதியில், தூரத் தூரத் தெரியும் மின்குமிழ்களின் மங்கலான ஒளிர்வில், தள்ளித் தள்ளி, சின்னச் சின்ன கூட்டங்களாய், நாலைந்து நாலைந்து பேர்களாய், பிள்ளைகளும் பெரியவர்களும் ஊர்ந்தூர்ந்து செல்வது போல் தோன்றும் நத்தார் நள்ளிரவை அவன் இந்த முறையும் இழந்துவிட்டான். இதோ இந்த வெளிறிய விடியற்காலையில், ஓட்டமும் நடையுமாக மனைவி சுவர்ணாவுடனும் மகன் பிரகாஷ்தனுடனும் சௌஜன் குட்டியுடனும் ஓடிவந்து, இதோ தேவாலயத்தின் அண்ணார்ந்து பார்க்கும் இந்த யன்னல்களினூடு பாயும் வெள்ளொளிக் கிரணங்களுக்கு முகம் கூசி இருந்துவிட்டு போவதில் என்ன ரசம்? அதுதான் அவனுக்குப் பிரச்சினையா?



அல்ல. அதுகூட அல்ல. அவையெல்லாம் சற்று முன் அவனும் குடும்பமும் பூசைக்குப் புறப்பட்டு வரும்போது அவனுக்குள் எழுந்த பிரச்சினைகள். ஆலயத்துள் நுழைந்து, ஆலயத்தின் இந்த இடது பக்க ஆசனத்தில் சுவர்ணாவைத் தொடர்ந்து அமர்ந்த பிறகு எழுந்த புதிய பிரச்சினை இது. ஒரு பழைய நினைவின் புதிய பிரச்சினை! பதினைந்து வருடங்களுக்கு முந்திய அந்த பன்னிரண்டு வயதுப் பூஞ்சிட்டின் நினைவு. அந்த நினைவை அவன் ஒரு சில நிமிஷங்களுக்காவது வாழ்ந்துவிடத் தீர்மானித்து விட்டான். அந்த நினைவை ஒரு சில நிமிஷங்களுக்கு வாழ்ந்துவிடுவதெனினும் அவனுக்கு அந்த நள்ளிரவுப் பூசை அவசியம். நள்ளிரவுப் பூசை மட்டுமல்ல, திருப்பப்படாத அந்த பழைய தேவாலயமும் தேவை. உண்மையில் தேவாலயம் திருப்பப்பட்டதும் ஒரு பிரச்சினைதான். நள்ளிரவுப் பூசை இல்லாது போனதும் ஒரு பிரச்சினைதான்.

நல்ல வேளையாக இந்த மேர்கூரி மொட்டுக்களும் இந்த வெண்ணிற மின்குழாய்களும் இருந்திருந்து ஒளிர்கின்றன. பரவாய் இல்லை. இடையிடையேனும் இவைகள் ஒளிர்ந்து ஒரு நள்ளிரவுப் போலி உணர்வை தருகின்றனவே. பரவாய் இல்லை. நிஜம் அரிதாகும் போது பிரமைகளும் ஒரு வகையில் பயன் உள்ளவை தான்.

இதோ மீண்டும் மேர்க்கூரிகள் பிரகாசிக்கின்றன. மின்குழாய்கள் ஒளிர்கின்றன. நள்ளிரவுக் கோலம். வெளிறிய காலைப் பொழுதை நள்ளிரவாக்கும் மின்குமிழ் ஒளிர்வுகளின் கோலம்!

எதிரே, பீடத்தில், மெழுகுவர்த்தி சுடர்ந்து இளங் காற்றில் இமைப்பதை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவன், தன்னையும் மறந்து இந்த நள்ளிரவுக் கோலத்தில் திளைத்து சட்டெனத் திரும்புகிறான்.



படிப்பகம்

www.padippakam.com



கழுத்து $90^0$ சுழன்று, முகம் தோள் பொருத்தைத் தொடுகின்ற திரும்பல். ஆலயத்தில் அவன் இருக்கும் இந்த முன்இடது பக்க தூண் நிரையிலிருந்து வலது பக்க தூண் நிரையை சற்றுப் பின்னோக்கி கோடறுக்கும் பார்வை.

இந்தப் பார்வைக் கோட்டின் வழியே குறுக்குச் சரிவாகத் தெரிவது யார், யார்?

மிக அண்மையில், அவனுக்கு அடுத்த பின் ஆசனத்தில் வேஜினியாவும் தம்பிமாரும் தாயும்.

இரண்டு பக்க ஆசன நிரைகளுக்குமிடையே நடுவழியின் சிவப்புக் கம்பளம்.

சிவப்புக் கம்பளத்தை அடுத்து, அடுத்த பக்கத்தில் பண்டிதர் யேசுரெட்ணமும், மகள் ஏஞ்சலாவும்.. இன்னும் பின்னால் பஞ்சுத்தலை அன்னம்மா. இன்னும் அந்த பத்தர்வது தூண் ஓரமாய் சிஸ்ரர் திரேஸா. ஓ சிஸ்ரர் திரேஸா! காவிப் புடவையும், மூக்குக் கண்ணாடியும் முக்காட்டுக்குள் தெரியும் பொன்னிற நெற்றியின் முன்தலைமயிரும்! சிஸ்ரர் திரேஸா இருக்கும் அதே இடத்தில்தான் பதினைந்து வருடங்களுக்கு முன் அந்தச் சிட்டு இருந்தாள்.

...ஓ அந்த சிட்டு! முதுகுப் பக்கமாய் ஸிப் இழுத்து விட்ட ஊதாப் புள்ளிச் சட்டை...சிஸ்ரர் திரேஸாவே இப்போது அந்தச் சிறுமியாக உருமாறுவது போல... இடையின் பின்பக்கம் கொத்தாக முடிந்த லேஸ். கொழுமிய ஒரு பக்கக் கன்னம். அதே பக்கத்து இமையின் கடைக்கோணம். ஃபிறீஸ் வைத்த பொப் ஸ்லீவ்ஸ். காதின் அகன்ற வளையம். களிபொங்கும் உவகையே உருவானது போல் அந்தச் சிட்டு... நிற்கிறாள்... இருக்கிறாள்... எழுகிறாள்... நெளிகிறாள்... விட்டு விட்டு ஒவ்வோர் பக்கமாய் பார்க்கிறாள்... இது நினைவு தானே...? அல்ல, அல்ல, நிஜம். நிஜமாகத்தான் அவள் நிற்கிறாள், இருக்கிறாள், எழுகிறாள், நெளிகிறாள்... சேச்சே... இல்லை, இல்லை, உண்மையாகத்தான், உண்மையாகத்தான் அவள் தெரிகிறாள்... உனக்கு என்ன பைத்தியமா, ஹலுஸினேஷனா?... ஓமோம் அது ஒரு தோற்றந்தான்... ஆனால் மீண்டும் தோன்றுகிறாளே, மீண்டும் மறைகிறாளே, மறைந்தாளா, சிஸ்ரர் திரேஸாவாக மாறினாளோ... இதென்ன அபத்தமான சிந்தனைகள்? அபத்தந்தான். எல்லாம் அபத்தந்தான். சிஸ்ரர் திரேஸாவும் ஒரு அபத்தந்தான். என்ன அழகு! என்ன துடிப்பு! என்ன நளினம்! எவ்வளவு அறிவார்த்தம்! எல்லாம் அந்த காவிக்குள்ளா போய் முடங்க வேண்டும்?

பண்டிதர் யேசுரெட்ணமும் ஒரு அபத்தந்தான். மகளை சிறகுக்குள் கொண்டு திரிகிறார். இவன் இப்படி திரும்பிப் பார்ப்பதைக்கூட அவர் சந்தேகிக்கலாம். இவனது கிருதாவில் உள்ள நரையின் இழையையும் ஏஞ்சலாவுக்கு இவன் தனிப்பட ரியூஷன் செய்தவன் என்ற நினைவையும் இவர் மறந்திருப்பார். ஏஞ்சலா அந்த நாட்களிலேயே தக்காளிப்பழம் போன்றவள். அந்த வட்டக்கரு விழிகளால் எவரையும் கொத்தித் தின்றுவிடக் கூடியவள். ஆனால் இந்த தாஷீஸியசைத் தின்றுவிட அவளால் முடியவில்லை. இதைத் தெரியாத பண்டிதர்தான் அவர். இப்போது செட்டைக்குள் கொண்டு திரிகிறார்.



இவன் திரும்பும்போதெல்லாம் திடுக்கிட்டது போல் பார்ப்பது இதோ இவனுக்குப் பின் ஆசனத்தில் இருக்கும் இந்த வேஜினியாதான். இவனை எங்கு கண்டாலும் அந்த துணுக்குற்ற பார்வைதான் அவளுக்கு வரும். அது அவனிடம் அவளுக்குள்ள மரியாதையினால் என்பது அவனுக்குப் புரியும். அவனுக்குப் புரியாதது, அவளுடைய முகத்திலுள்ள அந்த நிரந்தரமான சோகக் களை. எதனால் அந்த சோகக் களை? அவளுடைய நிறத்தினாலா? மெல்லிய மஞ்சள் கலந்தது போன்ற சிவப்பு. ஒரஞ் நிற புடைவைக்கு ஏற்றால் போல் தெரியும் ஒரு வகையான சிவப்பு. அதனை ஒரஞ் நிறம் அல்லது தோடம் பழச் சிவப்பு நிறம் எனலாமா? ஒரஞ் சிவப்பு சோகத்தின் சாயல் உடையதா? அல்லது அவளுடைய மெல்லிய உதடுகள்தான் அவளுக்கு அத்தகையதொரு சோகக் களையான தோற்றத்தைக் கொடுக்கிறதா? அல்லது அவளுடைய அந்த பூனைக் கண்கள்தான் அந்தத் தோற்றத்துக்கு காரணமா? தாய்க்கு இல்லாத பூனைக்கண் இவளுக்கு எப்படி? தகப்பனுக்கு உரியதாக இருக்குமோ? ஏதோ ஒரு தலைமுறையில் எப்போதோ தோன்றக்கூடிய பின்னடைவான ஒரு இயல்பு அது. இவளுக்கு தாயைப் போல நீளமான முகம் இருக்கிறது. அந்த ஒட்டல் சரீரம்? தகப்பனுடையதா? இதெல்லாம் சேர்ந்ததுதான் அந்த சோகக் களையா?



படிப்பகம்

www.padippakam.com



பாவம், கொழும்பில் வசதியாக இருந்ததுகளாம். பிரிஜட் கொன்வெண்டில் படித்தவளாம். தகப்பன் கார் விபத்தில் சாக, இங்கே தாயின் ஊருக்கே வந்து விட்டார்களாம். இதெல்லாம் அவள் இடையிடையே சொல்லித்தான் தெரிந்தது. அப்போதெல்லாம் இவன் எங்கே? கொழும்பு வெளியீட்டுத் திணைக்களத்தில் சில வருடங்கள். கல்வி டிப்ளோமாவுக்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கொஞ்ச நாள். இடையிடையே ஊருக்கு வந்தபோது கேள்விப்பட்ட பரத நாட்டிய ரியூஷன் ஆசிரியையும் இவள்தான் என்பது பின்பு இவனும் ஊருக்கு வந்து அவளுடன் பழக நேர்ந்தபோது தெரிந்து கொண்டவைதான்... சே, எங்கெல்லாம் சிந்தனை ஓடுகிறது!

"ஆண்டவர் உம்மோடு இருப்பதாக"

"உம்மோடும் இருப்பதாக"

"இதயங்களை மேலே எழுப்புங்கள்"

"இதயங்களை மேலே எழுப்புகின்றோம்"

அவன் மேலே நோக்கினான். மேர்க்கூரிகளும் மின்குழாய்களும் அணைந்திருந்தன. சோடனைகளுக்கூடாக இளம் சூரியக்கதிர்கள் மென்மையாகவும் மெதுவாகவும் எட்டிப் பார்த்தன. பீடத்தில் குங்கிலியத்தின் வெண்புகை மெல்ல ஜதாகப் பரவி, இசைக் கோலங்களாக காற்றில் கரைந்துகொண்டிருந்தன. குங்கிலியத்தின் நறுமணம் எத்தனையோ பிரார்த்தனைகளின் நினைவுகளைச் சுமந்தபடி மெல்ல கமழத் தொடங்கியது.

அவன் மேலே நோக்கினான். மேர்க்கூரிகளும் மின்குழாய்களும் அணைந்திருந்தன. சோடனைகளுக்கூடாக இளம் சூரியக்கதிர்கள் மென்மையாகவும் மெதுவாகவும் எட்டிப் பார்த்தன.

"எங்கள் அன்புத் தந்தையே"

"நாங்கள் உமக்கு நன்றி கூறுகின்றோம்"

"நாங்கள் உம்மை வாழ்த்துகிறோம்..."

அது காணிக்கை மீதான மன்றாட்டு. இனி, எழுந்தேற்றம் – திவ்விய திருப்பலியின் மையம். ஆழிய உணர்வுகளுக்குள் இனியாவது இவன் திரும்பித் திரும்பிப் பார்ப்பதை தவிர்த்து மனதை ஒருநிலைப் படுத்த வேண்டாமா?

மனதை ஒருநிலைப்படுத்த அவன் இணங்கும் போதே மேர்க்கூரிகளும் மின்குமிழ்களும் மீண்டும் ஒளிரத் தொடங்குகின்றன. மீண்டும் அந்த நள்ளிரவுக் கோலம்!

'நள்ளிரவுக் கோலம்' என்ற அவனுடைய வார்த்தைக் கோர்ப்புக்கூட, அவன் மீண்டும் மீண்டும் திரும்பித் திரும்பிப் பார்ப்பதற்கான ஒரு சாக்கு தானா? அந்த பத்தாவது தூணில், சிஸ்ரர் திரேஸாவின் இடத்தில் மீண்டும் அந்தச் சிட்டு! இது வெறும் நினைவா? அல்லது திட்டவட்டமான, பூதகண ராசியில் பிறந்தவர்களுக்கு மாத்திரம் புலனாகக் கூடிய ஒரு நிகழ்வா? ஆன்மீக அடிப்படையில் அல்லது உளவியல் அடிப்படையில், தமிழில் தோற்றரவு என்றும் ஆங்கிலத்தில் Apparition என்றும் சொல்லப்படுவது இதுதானா? அவனுக்குத் தெரிந்த அளவில் மனவிம்பங்களை புறநிலைப்படுத்துகிற ஒரு மனநோயாகவே இது தெரிகிறது.

'மனநோய்' என்ற சிந்தனையில் திடுக்கிட்டுப் போகிறாள். நோயாளனுக்கு நோய் தெரிகிறது. எனினும் நோய் நோய்தானே... இதோ மீண்டும் தெரிகிறது அந்த ஊதா புள்ளிச் சட்டை. முதுகுப் புறமாக ஸிப் இழுத்த, பின் இடுப்பில் லேஸ் முடிப்புகள் வைத்த ஃபிறீஸ் பிடித்த பொப் ஸ்லீவ்ஸ் பொருந்திய ஊதா நிறச்சட்டை – ஒரு பக்கக் கன்னம் – இமையின் கடையோரக் கோணம் – காது வளையம் – தோளைத் தொட்டும் தொடாமலும் தொங்கும் பொப் சிலுப்பா கூந்தல் – உண்மைதான், நினைவு தடிப்படைந்த மனத்திரை விம்பங்களின் புறத்தள்ளல்கள் – இது ஒரு நோய் நிலைதான். மீண்டும் மீண்டும் துணுக்குற்றான், முகம் வியர்த்தான், எனினும் அதன் மாயக் கவர்ச்சி! இன்னுமொரு முறை, பிளீஸ், இன்னுமொரு முறை மாத்திரம் என்று அவன் தன்னைத் தானே கெஞ்சுவது போலத் தோன்றியது.

"என்ன நீங்க திரும்பித் திரும்பிப் பார்க்கறீங்க"

சுவர்ணா கேட்டுவிட்டாள். அடுத்து வேஜினியாவும் கேட்பாள். அவனிடம் பதில் இருந்தது.

"கோயில் திரும்பிவிட்டது, அதனால்தான்"

புரியுமா அவளுக்கு.

"கோயில் திரும்பிவிட்டதா? என்ன பைத்தியமா?"

"கொங்கிறீற் தூண்கள் அப்படியே இருக்க சுவரும் கூரையும் பறந்ததே, அந்தச் சூறாவளி நினைவிருக்கா?"

"இருக்கு. ஆனால் இரண்டுக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இருக்கு. சூறாவளிக்குப் பிறகு, தூண்களை வைத்துக் கூரை போட்டார்களே..."

"ஓமோம் அதுக்கென்ன?"

"கூரை பழையபடிதான். ஆனால் முகப்பு மாறிப் போனதே. தெற்கே பொலிஸ் வீதியை பார்த்திருந்த கோயில் இப்போ வடக்கே குளக்கரையை பார்க்கும் படி ஆனதே..."

"ஓமோம் அதுக்கென்ன"

"முன்பு பீடம் இருந்த இடத்தில் இப்போ கோயிலின் வாசற்கதவு – முன்பு கோயிலின் வாசற்கதவு இருந்த இடத்தில் இப்போ கோயிலின் பீடம். முந்திய கோயிலின் முற்றம் இப்போ கோயிலின் கொல்லைப்புறம்... புல்லும் புதருமாய் காடு பற்றி கால் வைக்கவும் அச்சம் தருவதாய் கிடக்கிறதே.."



படிப்பகம்

"அது சரி, இதுகளுக்கும் நீங்க இப்போ அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்க்கிறதுக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இருக்கு. இப்போ நம் முன்னால் இந்தப் பீடம் இருக்கல்லவா. பீடத்துக்கு இடது புறமாக பாடகர் குழு இருக்கிறாங்கல்லவா, அந்த பாடகர் குழுவின் இடத்தில்தான் நம்ம பழைய குடும்ப ஆசனம் இருந்தது. நினைவிருக்கா?"

"இருக்கு."

"இருந்தால் கேள். அந்த ஆசனத்தில் இருந்து நேரே பார்த்திருந்தால் என்ன தெரிந்திருக்கும்?"

"பழைய பீடம் தெரிந்திருக்கும்."

"அந்தப் பழைய பீடம் இருந்த இடத்தை, அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், அந்தப் பழைய பீடம் இன்னும் இருப்பதாக நான் எண்ணிக்கொண்டு அதைப் பார்ப்பதாய் இருந்தால், நான் என்ன செய்ய வேண்டும்?"

"சரி, பின்னால் திரும்பிப் பார்க்கத்தான் வேணும்."

"சந்தோஷம், அதேபோல அந்த வரிசையில் இருக்கிற 10ஆவது தூணை நான் திரும்பிப் பார்க்க வேணும் என்றால் நான் என்ன செய்ய வேணும்?..."

"அது சரி, ரொம்ப அளந்து நிறுத்துச் சொல்றீங்களே, அந்த 10ஆவது தூணில் என்ன விசேஷம்?"

"அதிருக்கட்டும், அந்தப் 10ஆவது தூணை நான் திரும்பிப் பார்க்க வேணும் என்றால் நான் திரும்பி ஒரு கோணமாய்..."

"ஏன் இப்படியும் செய்யலாமே..."

"எப்படி"

"அந்தப் பாடகர் குழுவோடு நீங்க போய் நின்றுகொண்டாலும் சரிதானே, நீங்க என்ன, பாடத் தெரியாதவரா?"

"அடி, கள்ளி" நாக்கைக் கடித்துக்கொண்டு நிமிர்ந்தான். முகம் வியர்த்து இருந்தது. சுவர்ணாவைப் பார்த்தான். அவள் பீடத்தை நோக்கி கண்கள் கலங்க மன்றாடிக்கொண்டிருப்பது தெரிந்தது. அப்படியானால் அவனுடன் இவ்வளவு நேரம் பேசியது யார்? எல்லாம் மனக்கோளாறுதானா? அந்தச் சிறுமி அவனுள்ளிருந்து வெளியே விகசிப்பதைப் போல, சுவர்ணா வெளியிலிருந்து அவனுள் விகசிக்கின்றாளா?

முதலாவது மணியின் கிலுக்கலுடன் பாடல் உயர்கிறது.

> "தூயவர்... தூயவர்
> மூவுலகுக்கு இறைவனாம் ஆண்டவர்
> உன்னதங்களிலே ஒஸானா...
> உன்னதங்களிலே ஒஸானா..."

சுவர்ணம் முழந்தாழிடுகிறாள். எல்லோரும் முழந்தாழிடுகிறார்கள். இவன் மட்டும் இன்னும் முழந்தாழிடாமல்...

இன்னும் முழந்தாழிடாமல்...

இன்னும் ஆசனத்தில் அமர்ந்தபடி ...

பின்னால் இவனுடைய வலது தோளில் படுகின்ற மூச்சு யாருடையது. ஓ, வேஜினியா! அவள் முழந்



தாளிட்டு இவனுடைய ஆசனப் பின்சாய்வில் கூப்பிய கரங்களுடன்... இவனுடைய தோளில் அவளுடைய மூக்கு நுனி படுவதுபோல... அவன் இன்னும் முழந்தாள் இடாமல் இருப்பது அவளுக்கு அசௌகரியமாய் இருக்குமோ? அவளுக்காகவேனும் இவன் இரண்டாவது மணிக்கு காத்திராமல் முழந்தாள் இடத்தான் வேணும்...

வேஜினியாவிடம் இவனுக்கு இரக்கம் சுரந்தது.

அந்த ஒரெஞ் சிவப்பு நிற சோகக் களையும், மெல்லிய உதடுகளும் பூனைக் கண்ணும் நிழலாடியது. அந்த ஒல்லி உடலின் ஒடிந்து விழுவது போன்ற சாயலின் மென்னுடலில் ஒரு பரிசுத்தம் பரிமளித்தது. ஒரு அறிவார்த்தமான ஆளுமை, அவள் ஒரு இன்ரலெக்ஷுவல்தான். ஒரு சோகமான இன்ரலெக்ஷுவல்.

அவளைத் திரும்பிப் பார்க்க வேணும் போலிருந்தது. எனினும் முடியாது. திரும்பிப் பார்த்தாலும் எப்போதும் போல் "என்ன ஸேர்" என்றுதான் கேட்பாள். எப்போதும், இவனிடம் ஒரு இணக்கத்தைக் கண்டவள் போல, மதிப்புமிக்க ஒரு பார்வையுடன், "என்ன ஸேர்" என்று அவள் அலட்டாமல் சொல்லிக்கொண்டு போவதே அலாதி. அவளுடைய சோகக் களையை ஆழ்ந்து ஆய்வு செய்கின்ற முயற்சியில் இவன் எத்தனையோ முறை தோற்றுப் போயிருக்கிறான். இவளுடைய ஒரு ரீச்சர் சம்பளத்தில் ஒரு தாயும்

www.padippakam.com



இரண்டு தம்பிமாரும் என்று மனம் காரணங்களை ஆராயும். அவளுக்குக் கல்யாணமாகி இருக்க வேண்டிய வயது என்பதிலும் அவனுக்குக் கவலைதான். அவனுடைய இந்த எல்லா எண்ணங்களினூடும் அவள், ஒல்லியாய், ஓரெஞ் சிவப்பாய், அறிவார்த்தமாய், அவனுக்குள் ஒரு சோகத்தை வளர்க்கின்ற சம்மனசாய் . . .

இரண்டாவது மணியையும் பீடப் பரிசாரகன் குலுக்குகிறான்.

உச்சாடன வேளை. உலகமெல்லாம் அமைதியாகி, உள்ளினுள் உள்ளான மையத்தை நோக்கி மனித உணர்வுகள் குவியப்படுகின்ற தருணம். குருவின் முகம் சூன்யப்படுகிறது. பீடத்தில் குனிந்து அப்பத்தை எடுக்கிறார். இவன் கைகூப்பி, சிரம் தாழ்த்தி . . .

"அனைவரும் இதை வாங்கி உண்ணுங்கள். ஏனெனில் இது உங்களுக்காக கையளிக்கப்படும் என் சரீரம் . . ."

". . . அனைவரும் இதை வாங்கிப் பருகுங்கள். ஏனெனில் இது நித்திய உடன்படிக்கைக்கான என் இரத்தம் . . ."

ஒரு மூச்சு விட்டபடி நிமிரும் திருச்ச முகம். மௌன ஆழியின் மையத்திலிருந்து வெளித்தாவும் விடுபாடுகள். உசும்பல்கள், உரசல்கள் . . .

இந்த விடுபாடுகள் உசும்பல்கள், உரசல்களுடன் அவனும் இந்த பாடகர் குழுப் பக்கமாகப் போய் விட வேண்டும். வளைத்துப் போவதா? குறுக்காகப் போவதா? வளைத்துப் போவது நோஞ்சாத்தனம். குறுக்கறுத்துப் போனால் முழுக் கோயிலே அவனைப் பார்க்கும். சுவர்ணாவின் முகத்திலும் கேள்விகள் எழும். முகம் வியர்ப்பது தெரிகிறது. கடலைப் பிளந்து இஸ்ரவேலரைக் கரை சேர்த்த மோயீசனைப் போல அவன் கோயிலைக் குறுக்கறுத்து தன்னைக் கரை சேர்க்கிறான், பாடகர் குழுவுக்கு.

இனித் தங்குதடையற்ற நள்ளிரவு! மேர்க்கூரிகளின் வெளிச்சங்கள். மின்குமிழ்களின் ஒளிர்வுகள். திரும்பித் திரும்பிப் பார்த்துச் சங்கடப்பட வேண்டியதில்லை. நேரே அந்த தூண் வரிசை. பத்தாவது தூண் ஓரமாய் அதோ சிஸ்ரர்! சிஸ்ரர் திரேசா பனிப்படலமாக, அந்தப் பனிப்படலத்தினுள்ளிலிருந்து புறப்படுவதாய் அதோ களிகொள் பேருவகையுடன் அந்தச் சிட்டு!

ஊதா நிறச் சட்டையும்

முதுகுப் புறமாய் மூடிய ஸிப்பும்

லேஸூம் பட்டன்களும்

அவள் இருப்பதும், எழுவதும்

முழந்தாள் இடுவதும்

பக்கங்களிலும் ஓரங்களிலும் பார்ப்பதும்

குனிவதும் நிமிர்வதும்

அவளுடைய பிடரிச் சிலுப்பா அசைவதும் சரிவதும்

ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு முகக்கோணம்.

முழுமையான அவளுடைய முகம் எங்கே?

மறந்தானா, அல்லது மங்கலாக விட்டானா?

உடைந்த கண்ணாடித் தெறிப்பைப் போன்ற அவளது சித்திரவடிவப் பிம்பத்தைத்தானா அவன் சேமித்திருந்தான்?

"இது கிறிஸ்துவின் சரீரம். விசுவாசிக்கிறாயா?"

"ஆமென்"

"இது கிறிஸ்துவின் சரீரம். விசுவாசிக்கிறாயா?"

"ஆமென்"

> நள்ளிரவுக் கோலம் . . . நள்ளிரவுக் கோலம் . . . பதினைந்து வருஷங்களுக்கு முன்பிருந்த கோயில் முற்றத்து நள்ளிரவுக் கோலம். மீண்டும் அந்த மனநோயா? . . .

எந்தப் பீடத்தில் இந்த சற்பிரசாதம் வழங்கப்படுகிறது? எல்லோருடைய கண்ணுக்கும் தெரிகின்ற தற்போதைய பீடத்திலோ, அல்லது இவனுடைய கண்ணுக்கு மட்டும் புலனாகும் அந்தப் பழைய பீடத்திலா?

எந்தப் பீடத்தை நோக்கி, சற்பிரசாதம் பெறும் விசுவாசிகளின் பெயர்வு நடைபெறுகிறது? எல்லோரின் கண்களுக்கும் தெரியும் இந்தப் பீடத்தை நோக்கியா, அல்லது இவனுடைய கண்ணுக்கு மட்டும் புலனாகும் அந்தப் பழைய பீடத்தை நோக்கியா? பின்னோக்கி ஓடும் காலத்தின் கானல்கள். கானல்கள் ஊடு நிகழும் குறுக்குப் பரிமாற்றங்கள் . . .

இவனுக்குத் தெளிவாகத் தெரியும் அந்த பழைய பீடத்தை நோக்கி எழுவதாய், மிகத் தெளிவாகத் தெரியும் அந்த பூஞ்சிட்டு. அவளுடைய சிலுப்பா ஏவி, ஏவி அசைய, அந்தத் தூண்களின் உள்ளும் புறமுமாக மாறி மாறி செல்கிறாள். அதோ அந்தப் பீடத்தின் கிராதியில் முழந்தாள் இடுகிறாள். அவளுடைய நாக்கு நுனி நீள்வதும் ஓர் ஓரமாய் தெரிகிறது.

"Et corpose christae" - "amen"

"Et corpose christae" - "amen"

பதினைந்து வருஷங்களுக்கு முந்திய அந்த லத்தின் மொழிச் சொற்கள்கூட அவனுக்குக் கேட்கிறதே! . . .

அவள் அந்த கிராதியிலிருந்து எழுகிறாள். எந்த விகற்பமும் இல்லாத பூஞ்சிட்டின் துள்ளலோடு இறங்கித் திரும்புகிறாள். திரும்பி வருகையில் அந்தத் தூண்களின் மறைப்பு. தூணுக்குத் தூண் பூக்கும் அவளுடைய முகம். தூணுக்குத் தூண் மின்னும் அவளுடைய கூப்பிய கையின் தங்க வளையல்கள்!

"சென்று வாருங்கள், பூசை முடிந்தது."



படிப்பகம்

www.padippakam.com



"இறைவா உமக்கு நன்றி."

பாடல்களுக்கு மத்தியில் கலைகின்ற விசுவாசிகளின் மத்தியில் சுவர்ணா எழுவதும் தெரிகிறது. அவள் வேஜினியாவுடன் கை குலுக்கிக்கொண்டே பேசுகையில், இவன் தான் யாருடன் கைகுலுக்குவது என்ற சிந்தனையில் பக்கத்துக் கதவில் நழுவி, பொலிஸ் வீதி ஓரம் உள்ள கோயில் மணிக்கோபுரத்துக்கு உள்ளான திறந்தவெளி அரங்கை நோக்கி கால் வைக்க, அவன் முன்னே பழைய கோயில் முற்றம் – புல்லும் புதருமாய் காடு பற்றியதாய் ... காலை இளம்வெயிலில் தளும்பும் பனித் துளிகளுடன் ...

கண்கள் துருதுருத்தன. புதர்களுக்கு மேல் படர்ந்து அப்பாலுள்ள அந்தப் புளியமரத்தில் நிலைகுத்துகின்றன அவனுடைய விழிகள். புல்லையும் புதரையும் கடந்து விரையும் அவனுடைய கால்கள். புளிய மரத்துக்கு அருகே இன்னமும் அணைக்கப்படாத இரவின் மின்குமிழ்கள். புளிய மரத்தடியில் அவன் நின்று பார்க்க, தேவாலயத்தினோடு தொடுத்த பழைய மிஷன் ஹவுஸ் கூடத்தில் இரவு முழுவதும் ஜொலித்து இன்னும் ஜொலித்துக் கொண்டேயிருக்கும் வர்ண மின்குமிழ்கள்! இந்த வேளையிலும், இங்கும் இந்த பழைய கோயில் முற்றத்திலும் நத்தார் நள்ளிரவின் கோலங்கள்!

நள்ளிரவுக் கோலம் ... நள்ளிரவுக் கோலம் ... பதினைந்து வருஷங்களுக்கு முன்பிருந்த கோயில் முற்றத்து நள்ளிரவுக் கோலம். மீண்டும் அந்த மனநோயா? ...

எல்லாம் தெரிகிறது. எல்லாம் கேட்கிறது. பதினைந்து வருடங்களுக்கு முன் பனி நனைந்த கோயில் முற்றத்து நள்ளிரவுக் கோலம் பதினைந்து வருடங்களுக்கு முன் பனியின் சீதனக் காற்றில் பதிவான வாழ்த்துக் குரல்கள்.

"ஹெப்பி கிறிஸ்மஸ் ... ஹெப்பி கிறிஸ்மஸ் .."

இரவின் மின் ஒளிர்வுகளூடு இன்பம் பொங்குகிற குரல்கள். இரவின் நிலவினூடு வரும் இதம் கனிந்த குரல்கள். இரவின் பனியுடன் கலந்து ஈரலிப்பாகும் குரல்கள்.

நிலவும் மின்குமிழ் ஒளியும் விழுத்தும் புளிய மரத்தின் வரிநிழல்கள். வரிநிழல்களுக்குள் இவன். பதினைந்து வருடங்களுக்கு முந்திய இவன். இப்போதும் பதினைந்து வருடங்களுக்கு முந்திய இவன் தான். இப்போதும் ... இப்போதும் ... இவன்தான் ... பதினைந்து வருடங்களுக்கு முந்திய தாசீஷியஸ்!"

"ஹெப்பி கிறிஸ்மஸ் ரூ யூ அங்கிள்"

இன்னமும் அதே நம்ப முடியாத பரபரப்பு. அவள் தான் அந்தப் பூஞ்சிட்டுத்தான். அருகில் வந்துவிட்டாள் ... நிலவொளியின் லேசான மங்கலில் நெற்றிப் புருவமேடும், மூக்கு நுனியும் நிழலிட.

"ஹெப்பி கிறிஸ்மஸ் ரூ யூ லிற்றில் உவொன். என்னைத் தெரியுமா? உங்களுக்கு?"

"பூசையில் நீங்க என்னையே பார்த்துக் கொண்டிருந்தீங்களே ..."

"ஓ! நீங்க கண்டிங்களா? நீங்க ரொம்ப ஸ்மார்ட், அதனால்தான்."

"தெங்கியூ அங்கிள் சே–ரியோ."



"நீங்க எங்க இருக்கிறீங்கள்?"

"கொழும்பு. வெள்ளவத்தையில. அங்கிள் சே–ரியோ .."

"உங்க பெயர் சொல்லலியே? ..."

துள்ளி ஓட எத்தனித்தவள் சட்டென்று திரும்பி நின்றாள். நீட்டிய இவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டு சிரிக்கிறாள். இவனும் அவளுடைய கையைப் பற்றியவாறே, உற்று உற்று, இதோ இன்னும் உற்று உற்று அவளுடைய முகத்தைப் பார்க்கிறான். நிலவில் மங்கலாகத் தெரிந்த முகம்அந்த நிலவின் ஓரெஞ் சிவப்பாக ஒளிர்கிறது. இன்னும் உற்றுப் பார்க்கிறான். பூனைக் கண்கள் ... மெல்லிய உதடுகள் ... பூனைக் கண்கள் ... மெல்லிய உதடுகள் ..... ஒரேஞ் சிவப்பு நிறம் .... பூனைக் கண்கள் ... பூனைக் கண்கள் ... ஓ! வே.. ஜி. .னியா... ஓ, வேஜினியா, அது நீயா?

வெயில் சுள்ளென்று குத்தியது. முகம் வியர்த்தது. எந்த தொலை தூரத்திலிருந்து எந்த இருட்குகையினூடு புகுந்து வந்த பயணி இவன்!

அதோ தேவாலயத்தின் பின்னால் உள்ள திறந்த வெளி அரங்கையும் கடந்து, புல்லையும் புதரையும் கடந்து அவனை நோக்கி காலை வெயிலின் நிழல்கள் நீள வந்து கொண்டிருந்தார்கள் சுவர்ணாவும் வேஜினியாவும், சிஸ்ரர் திரேஸாவும், ஏஞ்சலாவும், எல்லோரும் இவனை நோக்கி ... இவனை நோக்கி ... ஹெப்பி கிறிஸ்மஸ் சொல்லி கைகுலுக்க ... கைகுலுக்க ...

ஓவியங்கள் : குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com





# தொடரும் உரையாடல்

## வெங்கட் சாமிநாதன்

நம்மிடையே ஒரு தொடர்ந்த உரையாடலும் பரிமாறலும் இருக்க வேண்டும். அவ்வுரையாடலும் அதனின்று பெறப்படும் பரிமாறலும்தான் அங்கீகாரமும் ஆகும். பரஸ்பரப் பரிமாறல் வேண்டுவது, இயல்பாக வேண்டுவது, மொழி ஒன்று, குடும்பம் ஒன்று, இனம் ஒன்று என்ற காரணங்களால்தான். இதில் பரிவு, தட்டிக்கொடுத்தல், "நல்லா படிக்கிறாயாடா பையா? பேஷ்" என்னும் சமாச்சாரம் இல்லை. அநேகம் விஷயங்களுக்கு நான் என் மகனிடம் பாடம் கேட்கிறேன். அவன் படித்து வந்த காலத்தில் பிஷப் பெர்க்ளேயும் ஜேம்ஸ் ஜீன்ஸூம் நான் படிப்பித்த பையன்தான் அவன். இம்மாதிரி தமிழகத் தமிழர்களுக்குச் சொல்லியே தீரவேண்டிய பல விஷயங்கள் ஈழத்தமிழர்களிடம், அவர்கள் இன்று ஆஸ்திரேலியாவிலோ, மட்டக்களப்பிலோ, டோரண்டோவிலோ, எங்கிருந்தாலும், தமிழகத் தமிழர்களுக்கு கொடுக்க என்று அவர்களிடம் உண்டு என்பது எனக்குத் தெரியும்.

டோரண்டோ சிடி செண்டரில் நடந்த சந்திப்பின் போது என்னை அறிமுகப்படுத்த என்று வந்தவர் lambat. அவரை நான் அன்றுதான் சந்திக்கிறேன். அவர் பெயரே கூட எனக்கு அறிமுகமானது அன்றுதான். நான் பிறந்த மாவட்டமான தஞ்சாவூரிலேயே வாழ்ந்து வரும் ஒரு பேராசிரியர், ஒரு காலத்தில் தலித் இலக்கிய எழுச்சியின் பிதாமகராகத் தன்னை முடிசூட்டிக்கொண்டவர், மார்க்ஸீயர், மிகப்பெரிய படிப்பாளி எனப் பெயர் பெற்றவர், அ.மார்க்ஸ், இதற்கு முன் தன் ஐரோப்பியப் பயணத்தின்போது அங்கு வாழும் ஈழத்தமிழர்களுக்கு என்னைப் பற்றிச் சொன்னது, இவ்வளவே தான்: "வெங்கட் சாமிநாதன் வெகு வைதீகமான சாஸ்திரிகளின் பிள்ளை. அதனால் அவருக்கு மரபு சார்ந்த பார்வை." இதற்கு மேல் அவர் என்னைப் பற்றி ஏதும் சொல்லிவிடவில்லை. பிறப்பின் மூலத்தைச் சொல்லிவிட்டால், ஒருவரது ஆளுமையின் குணத்தைச் சொல்லிவிட்டதாகும் என்பது அவருக்கு அப்போதைய எண்ணமாக இருந்திருக்கிறது. இதே போல் கார்ல் மார்க்ஸின், ஏஞ்கெல்ஸின், ஸ்டாலினின், அண்ணாதுரையின், கருணாநிதியின், பெரியாரின் பிறப்பு மூலத்தை மாத்திரம் சொல்லி அவர் நிறுத்தமாட்டார். ஏனெனில் ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் நோக்கங்கள் வேறுபடுகின்றன. இது இன்றைய தமிழ் எழுத்தாளர், இலக்கிய அறிவுஜீவிகள் சமூகத்தின் குணங்களைப் பற்றிய ஒரு சித்திரம். இத்தகைய சாதி சார்ந்த முன் தீர்மானங்கள் மிக அவசியம் அவர்களுக்கு. போருக்குப் போகிறவன் கவசமும் ஆயுதங்களும் இல்லாமல் போவானா? இன்னொன்றையும் சொல்லிவிடலாம். பேராசிரியர் அ.மார்க்ஸ் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தன் கிறிஸ்துவ நாடார் சமுகத்தினரை மாத்திரமே கொண்ட திருச்சபையில் கலந்து கொண்டு தன் சாதிப்பிணைப்பை வாராவாரம் உறுதிப்படுத்திக்கொள்வார். நாடார் கிறிஸ்துவர் இல்லை. கிறிஸ்துவ நாடார். முக்கியத்துவம் பெறுவதும், அடையாளமாவதும் நாடார்தான். கிறிஸ்துவ என்பது அதன் உட்பிரிவையே குறிக்கும். அ. மார்க்ஸை நான் ஒரு தமிழக மாதிரியாகத்தான் இங்கு முன்வைக்கிறேன். அவரைப் பற்றி மாத்திரமான குறிப்பு அல்ல இது.

எல்லாராலும் எங்க ஊர் அ. மார்க்ஸ் போல இருப்பது சாத்தியமில்லை. எனவே என்னை அறிமுகப்படுத்த வந்துள்ள lambat பண்புள்ளவராக இருப்பார், என்னை வரவேற்று பொதுவாக ஏதோ சில நல்ல வார்த்தைகள் சொல்லி தன் கடமையை நிறைவேற்றுவார் என்றுதான் நினைத்தேன். அதுவே எனக்கு தமிழ் நாட்டிலிருந்து மாறுபட்ட அனுபவமாக இருந்திருக்கும். ஆனால், ஆச்சரியம், அவர் என்னைப் பற்றி நிறையவே படித்திருந்தார். அவர் நாடகத் துறையினராக இருந்த காரணத்தால் நாடகம் பற்றி நான் எழுதியுள்ளவை பற்றியே அதிகம் அவர் பேச்சு இருந்தது. அவர் பேச்சில் இருந்த புகழுரைகளை ஒதுக்கிவிட்டு, தகவல்களை மாத்திரம் எடுத்துக் கொண்டால், அதுவே அவரது ஈடுபாட்டின் ஆழத்தையும், விரிந்த அக்கறையையும், பரந்த படிப்பையும் சொல்லும். அங்கு டோரண்டோ தமிழர் ஒரு வைரமுத்துவையோ, சுந்தர ராமசாமியையோ நன்கு அறிந்திருப்பது ஆச்சரியமே இல்லை. டோரண்டோ புத்தகக் கடைகளில் நிறைந்திருந்த புத்தகங்களை நான் அறிவேன். அதன் காரணமாகவே என்னைப் பற்றி, lambat இவ்வளவு தெரிவோடு, தெளிவோடு பேசியது என்னை ஆச்சரியப்படுத்தியது. இம்மாதிரியான ஆச்சரியங்கள் எனக்கு நிறையவே டோரண்டோவில் கிடைத்தன. ஒரு நாள் இரவு திருமாவளவன் வீட்டில் நண்பர்கள் கூடியிருந்தபோது, திருமாவளவனின் நண்பர் ஒருவர் முன்னதாகவே அங்கு வந்திருந்தார். சற்று நேரம் இருந்துவிட்டுப் பின் அவர் போய்விட்டார். அவர் எழுத்தாளர் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



அவர் இருந்தபோது நடந்த அளவளாவலில் ஒரு சந்தர்ப்பத்தில் நான் எப்போதோ எழுதிய ஒன்றை எனக்கு அவர் நினைவு படுத்தினார். நானே அதை நினைவுக்குக் கொண்டுவர சற்று யோசிக்கும் தாமதம் ஏற்பட்டது. எனக்கு திகைப்பாக இருந்தது. இது ஒரு கோடி என்றால், அ. மார்க்ஸ் மறு கோடி. அ. மார்க்ஸுக்கு சாதி போதும், ஒருவரை நிராகரிக்க வும், அல்லது அங்கீகரிக்கவும். அவர் ஒரு பேராசிரியர், படிப்பாளி. பெரும்பாலான தமிழ் அறிவு ஜீவிகள் அ. மார்க்ஸ் போன்றவர்கள்தான்.

மாற்சரியங்கள் இல்லாது, தன் அறியாமையில் பெருமை கொள்ளாது, நாம் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் பிறந்து சில வருடங்களே இருந்த தஞ்சை மாவட்டத்தில் அக்காலங்களில் நதிகளில், கால்வாய்களில் தண்ணீர் ஓடும். காவிரி ஆற்றின் அனேக சிற்றாறுகளில் ஏதோ ஒன்று, அடுத்தடுத்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு கிராமம் இருக்கும். அதன் அருகே ஏதோ ஒரு சிற்றாறு ஓடும். அந்த சிற்றாறு, முடிகொண் டானோ, குடமுருட்டியோ, அரிசிலாறோ, திரு மலைராஜனோ எதுவாக இருந்தாலும், அல்லது அது ஒரு பெரிய கால்வாயாக இருந்தாலும் கூட, அது தஞ்சை கிராமத்து மக்களுக்கு, காவேரிதான். "காவிரிக்கு குளிக்கப் போகிறேன்" என்பதுதான் அன்றாடம் கேட்கும் வழக்கு. அதே போல் தமிழக மாயிருந்தாலும், ஈழமாயிருந்தாலும், புலம் பெயர்ந்த நாடு எதாக இருந்தாலும், வருவது, எழுதப்படுவது எல்லாம் தமிழ் இலக்கியம்தான். நம் பொதுச் சொத்து தான்.

இப்பரிமாறலில், என் பார்வைக்கு வந்த குறிப்பிடத் தக்க, என்னைக் கவர்ந்த, ஈழத்திலிருந்தும், புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்தும் வரும் எழுத்துக்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அத்தோடு, தமிழகத்து எழுத்துக்கள் பற்றியும். இவற்றில், பல பெயர்கள், சுந்தர ராமசாமி, ஜெயமோகன், மனுஷ்யபுத்திரன், எஸ். ராமகிருஷ்ணன் எனப் பல பெயர்கள் காலச்சுவடு, உயிர்மை போன்ற பத்திரிகைகளால் எடுத்துச் செல்லப்பட்டு நன்கு அறிமுகமானவற்றைப் பற்றி நான் பேச வேண்டிய அவசியமில்லை. ஆனால் புலம் பெயர்ந்த தமிழரிடையே கவனம் பெறாத, ஆனால் அவர்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய, படிக்க வேண்டிய, இன்றைய தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்துக்கள் என்று நான் கருதுவன பற்றி நான் எழுத விரும்புகிறேன்.

என் பார்வை வட்டமும், என் படிப்பு விஸ்தார மும், அவ்வளவு ஒன்றும் பெரிதானவையே அல்ல. இந்த எல்லைக் குறுகலையும் மீறி, என் கவனத்தில் வந்துள்ளவை கூட, புலம் பெயர்ந்த, ஈழத்து தமிழர் களின் கவனம் பெறாது போயுள்ளது எனக்கு வியப்பை அளித்தது. குந்தவையின் "யோகம் இருக் கிறது" என்னும் சிறுகதைத் தொகுப்பு. குந்தவை இளம் வயதினர் அல்லர். நாற்பதுக்கு மேலான ஆண்டுகளைத் தாண்டியவர் என்று நினைக்கிறேன். இதுவே அவரது முதல் தொகுப்பு. இதில் பதின்மூன்றே கதைகள்தான் உள்ளன. இக்கதைகள் பெரும்பாலான வற்றில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலேயான தொடர்ந்த போரில் நிர்மூலமாகி விட்ட சமூகத்தின் இடிபாடுகளிடையே வாழும் மக்களின் அன்றாட நிலையை, கோபக்கனல் வீசாது, உணர்ச்சிகளை எழுப்பாது, சொற்களாகவே வந்து விழும் வர்ணனைகள் இல்லாது, போர் விட்டுச் செல்லும் மனக்காயங்களையும், பொருள் சேதத்தை யும், வேரறுபட்ட வாழ்க்கையையும் நம் அனுபவத் திற்குள்ளாக்குகின்றன. இடைவிடாத போரின் அகோரங்களையும், நிலைகுலைந்த வாழ்க்கையும் 15–20 வருடங்களாக தொடர்ந்து அனுபவிக்கும்போது அதன் வேதனையும், பயங்கரமும் சாதாரண வாழ்க்கையின் குணம் பெற்று இயல்பாகிவிடுகின்றன. பற்றி எரியும் வீடுகள், உடல் குதறப்பட்ட ஜீவன்கள், ரத்தம் படிந்து காய்ந்த சாலைகள் எதையும் குந்தவை யின் கதைகளில் காண முடியாது. பஸ் நிறுத்தம் அடைய, நீண்ட தூர நடையும், பின் நீண்ட நேரம் பஸ்ஸுக்காகக் காத்திருத்தலும், இடையிடையே பார்த்துப் பழகிவிட்ட ராணுவத்தினரின் நடமாட்டம், துப்பாக்கிகள், ஆங்காங்கே வழியில் காணும் கண் காணிப்புக்கான ராணுவ முகாம்கள், பஸ்ஸை நிறுத்தி பிரயாணிகளை ஒவ்வொருவராக சோதனையிடும் ராணுவம், எல்லாமே சகஜமாகிவிட்டன. கொழும்பு புற நகரில் பாதுகாப்புக்காகக் குடியேறிய இடத்தில் தமிழர், கடைத்தெருவிலோ எதற்குமான க்யூவிலோ மானசீகமாக தனிமைப்படுத்தப்பட்டு சிறுமைப் படுத்தப்படும் அவலம், வந்த இடத்தில் தாமிருந்து விட்டு வந்த வீட்டின் கதிதான் என்ன என்று போய்ப் பார்ப்போமே என்று குறுகுறுத்த ஆவலில் போய்ப் பார்த்த வீடு கூரையற்று சுவரிடிந்து, கிடக்கும் சோகம், இந்த இடிபாடு இனி வீடும் இல்லை, தனதும் இல்லை என்ற கசப்பு. குண்டுத் தாக்குதலுக்கு இரையாகப் போகிறது யாழ்ப்பாணம் என்று அவசரத்தில் காலி செய்து, பாதுகாப்பு தேடிச் செல்லும் பயணத்தின் நடுவழியில் காய்ந்த ரொட்டி யைப் பிய்த்து தன் குழந்தைக்கு கொடுக்கும்போது சுற்றிப் பசியும் ஏக்கமுமாக கண் அகல பார்த்து கை நீட்டத் தயங்கி நிற்கும் குழந்தைகள்.

குந்தவை எழுதியுள்ளது அதிகம் இல்லை. மிக மிகச் சொற்பம். அதிகம் ஈழத்திலும் அறியப்பட்டவ ராகத் தெரியவில்லை. ஆனால் மிகுந்த தேர்ச்சி பெற்ற எழுத்து. அபாயங்கள் நிறைந்த சூழலில் நீண்ட பல வருடங்களாக போரின் அழிவுகளையும் மீறி அங்கு பிடிவாதமாக வாழ்ந்திருக்கும் குந்தவை யின் அடங்கிய குரலும், அமைதியும், நிதானமும், விசேஷமானவை. அவரது எழுத்தும் அலங்காரங் களோ, உரத்த குரலோ, ஆவேச உணர்வோ அற்றது. இவர் எழுத்தைப் படிக்கும்போது, ஒன்றிரண்டு காட்சிகள் என் மனதில் வந்து போகும். தேவகாந்த னின் ஒரு கதையில் போர்க்கால வாழ்க்கை பற்றிச் சொல்வார். எப்போது குண்டு எங்கே விழும், எந்த வீடு இடிந்து தரைமட்டமாகும், யார் உடல் சிதறும் என்று தெரியாது. மின் விளக்குகள் இல்லை. ஊரடங் குச் சட்டம், எரிபொருள் எதுவும் கிடைப்பதில்லை. நெருப்புப்பெட்டி மிக அரிய பொருள். குச்சிகள் அவ்வப்போது எண்ணப்பட்டு, செலவழிக்கப்படும். கடன் கேட்டு வரும் அடுத்த வீட்டவர்க்கு குச்சிகள் எண்ணிக் கொடுக்கப்படும். நெருப்புக்குச்சிகள்



படிப்பகம்

www.padippakam.com



எண்ணப்படும் என்று சொல்லிவிட்டபிறகு, குண்டு மழை பற்றி எல்லாம் சொல்லப்பட்டு விடுகிறது. ஊரடங்குச் சட்டம், மின் விளக்குகள் இல்லை என்ற நிலையில், குழந்தை ஷண்முகத்தின் நாடகம் ஒரு நாற்சார் வீட்டின் நடுக்கூடத்தில் நடத்தப் பட்டது என்று த.சனாதனன் என்று எனக்குச் சொன்னார். குந்தவை மிக விசேஷமான ஒரு எழுத்தாளர். அவர் எழுத்தும் அவரைப்போலவே விசேஷமானது. அவரது நிதானம், அலட்டலின்மை, தேர்ச்சி எல்லாம் என்னைக்கவர்ந்தன. அவரிடம் ஒரு பரிகாச உணர்வும் இழையோடுகிறது. இத்தகைய அவல நிலையிலும் லஞ்சம் (யோகம் இருக்கிறது) வெற்று படாடோபம் (திருவோடு) நம்மை விட்டுப் போவதில்லை (யோகம் இருக்கிறது: குந்தவை: சிறுகதைகள்: மித்ர, 375/8—10, ஆர்காட் சாலை, சென்னை—24.)

அடுத்து எனக்குப் படிக்கக் கிடைத்தது, மிக சுவாரஸ்யமும், ஆச்சரியமும் தந்த புத்தகம், சோ. பத்ம நாதன் தமிழில் மொழிபெயர்த்துள்ள 'தென்னி லங்கைக் கவிதை.' தூரத்திலிருந்தே படித்துக் கேட்டே அறிய முடிந்த எனக்குக் கிடைத்த செய்தி, ஒரு வெறித்தனமான தமிழர் எதிப்பும், சிங்கள மேலாதிக் கத்தில் உறுதியான நம்பிக்கையும் கொண்ட ஒரு இயக்கம் வளர்ந்துள்ள, ஜனதா விமுக்தி பெரமுனவின் கோட்டை எனக் கருதப்படும் பகுதி தென்னிலங்கை. தமிழருக்கு அளிக்கப்படும் எந்த சாதாரண ஒரு சில சலுகைகளுக்கும் தீவிர எதிர்ப்பு கிளம்பும் இடம் அது. அப்படிப்பட்ட இடத்தின் சிங்களக் கவிஞர்கள் சமூகத்தின் கவிதைகள் என்ன சொல்லும்?

ஆனால் இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கவிதைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை அல்லது சிங்களத்தில் எழுதப்பட்டு ஆங்கில மொழிபெயர்ப்பு மூலம் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டுத் தரப் பட்டுள்ளன. சிலர் இலங்கைத் தமிழரை, சிங்களவரை மணந்த அயல் நாட்டவர்: ஆன், ஜீன் போன்றவர்கள். சிலர் மூத்த கவிஞர்கள், ரணவீர ஆரிய வன்ஸ போன்றவர்கள். சிலர் மிக இளையவர்கள். இதையெல் லாம் நான் சொல்லக் காரணம், மதபேதமற்று, இனபேதமற்று, சக மனிதனின் வேதனைகளைத் தன் வேதனையாகக் காணும் மனிதாயப்பண்பு, தீவிரவாதத்தின் கோட்டையிலும், ஒரு தனித்த மரபாக, தொடரும் குரலாக இருந்து வருகிறது, அது எவ்வளவு பலஹீனமான குரலாக இருந்தாலும், அது இரண்டு தலைமுறைகளுக்கு தொடரக் காண கிறோம் என்பதைச் சொல்லத்தான். அக்குரல்களில் சில:

முன்னொருகாலத்தில்/ உன் வீடாக இருந்த / புகையும் இடிபாடுகள் / சாம்பற் குவியலருகே / நீயும் நானும் கடைசி முறையாக/ சந்தித்தது / நினைவிருக்கிறதா?

— கமலா விஜயரத்ந

ஆகையால் சித்தார்த்த/ தெளிவாய்ப் பதில் சொல் /.....................

நான் ஒருவன் ஆனாலும் / புத்தனாய் மாறும் / வழி புரியச் சொல்லையா?

நிச்சயமாய் தன்னந் / தனி மனிதனாய் அல்ல / பல்லாயிரவரோடு கூடி /

நான் பற்றறுக்க / ஒல்லும் வழியொன்றுரை.

— மஹகம் சேகர

கண்ணியமாக / சிங்களத்தில் விசாரித்தபோது / கம்பளிக்குள் ஒளித்திருந்த

அத்தோட்டத்து மக்களின் முகங்களில் / எழுதியிருந்த எதிர்ப்புணர்வு

சில்லிட்ட அக்கருக்கல் வேளையில்

எனக்குப் பிடிபடவில்லை

.......................

இரவுணவு சமைக்க வந்தவன் / கவலை தோய்ந்த முகத்தினன் / தென்னிந்தியத் தமிழன்

மறு நாள் நடக்கப்போகும் / தேர்தல் பற்றி அவனைக் கேட்டோம் / அவன் கவலைக்குக் காரணம் புரிந்தது/

அவன் / சுதந்திரத்திற்குப் பின் / ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களித்திருக்கிறான். / ஆனால் / நாளை வாக்களிக்க முடியாது / அவன் எதிர்காலம் / திடீரென இருண்டு விட்டது/

அவன் பிறந்த மலையகத்துக்கு / அவன் அன்னியனாகி விட்டான்.

— உபா நந்த கருணதிலக

1956 என்ற இக்கவிதை மிக நீண்ட கவிதை.

இலங்கைத் தமிழரும் சரி, சிங்களவரும் சரி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்கள். இருப்பினும், இவர்களிடையே பரிமாற்றங்களே கிடையாதோ? இக்கவிதைகள் அனைத்தையும் சோ.பத்மனாதன் பெற்றது ஆங்கிலம் வழிதான்.

(தென்னிலங்கைக் கவிதை : மொழிபெயர்ப்பு: சோ. பத்மநாதன்: தூண்டி, கேணியடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

இம்மாதிரியான மனிதாய எதிர்ப்புக் குரல் தமிழில் எழுந்துள்ளதா என்று யோசித்தேன். கட்சி சார்ந்து, இயக்கம் சார்ந்து, வியத்நாம் போர், பாட்டாளி மக்கள் எழுச்சி, வர்க்கப் போர், சாதி ஒழிப்பு, பார்ப்பனீய மேலாதிக்கம் என்று எழுதும் வீர தீர எழுத்துக்களைச் சொல்லவில்லை. அதிகாரத் தின், பதவியின் கை பட்டாலேயே மின்சாரம் பாய்வது போல கவிதை ஊற்றெடுக்கிறது நம் கவிஞர்களுக்கு.

ஆனால் ஈழத்தமிழரிடையேயிருந்து ஒரு குரல் கேட்கிறது. திருமாவளவனது. திருமாவளவனது பெயரை நான் முதலில் கேட்டது, யுகபாரதியிட மிருந்து. சோலைக்கிளி, மகாகவி, சேரன், வ.ஐ.ச.ஜெய பாலன் போன்றோர் பெயர்கள்தான் தெரிய வரு கின்றன. திருமாவளவன் பெயர் ஏன் அதிகம் தெரியவரவில்லை என்று திகைப்பாயிருக்கிறது. திருமாவளவன் என்ற பெயரையும், கவிஞனையும் நான் தெரிந்துகொண்டது டோரண்டோவில் அவரைச் சந்தித்த பிறகுதான். அவரது இரு தொகுப்பு களையும் (பனி வயல் உழவு, அஃதே இரவு, அஃதே பகல்,) பார்த்த பிறகு ஈழத்தமிழ் குரல்களில் இன்னும் சிறப்பாக தமிழ்க் கவிதைக் குரல்களில் மிக முக்கியமாக, விசேஷமாக குறிப்பிடத்தக்க கவிதைக் குரல் என்று எனக்குத் தோன்றுகிறது. அதுவும் காற்றடித்த திசையில் மிதந்து செல்லும், ஏதோ



படிப்பகம்

www.padippakam.com



ஒரு நிறுவனம் அல்லது கட்சி சார்ந்த எதிர்ப்புக் குரல் அல்ல. தனி மனித, தன்னிலேயே கால் பதித்த எதிர்ப்புக் குரல். மனித உயிர்களைக் கொள்ளை கொள்ளும் சித்தாந்தமும் இயக்கமும் எதுவானாலுமது என்ன கோஷங்களை எழுப்பினாலும் அதை எதிர்க்கும் குரல் திருமாவளவனது என்று தெரிகிறது. பெரும் சர்ச்சைகளுக்கும், கண்டனங்களுக்கும் உள்ளானதாகவும் சேரன் சொல்கிறார். வேறோர் இடத்தில் ஷோபா சக்தி, தம் போன்றவர்களும் எப்போதும், எங்கிருந்தாலும் ஒரு பயத்துடனேயே எழுதுவதாக, வாழ்வதாக சொல்கிறார். நச்சுக் கொடி என்ற கவிதையிலிருந்து சில பகுதிகள்:

வெடிவால் முளைக்கு முன்னர்/ அழைத்து / மூளை நீக்கி/ கபாலத்தைக் கோதாக்கி/சலவையிட்டு / துடைத்து/ வெடி மருந்தை நிரப்பி/ ஏவி விடும் கலையும் /

மாவீரம் செய்கின்ற / வல்லமையும் / வாய்த்திருக்கு / அவர்க்கு/

அழு பெண்ணே/ அழு

மாவீரமென்று/ சோகத்தைப் புகைத்து/ வெதும்பத் தெரியாத / பேதை நீ / அழு

உன் பிள்ளைக்காய்/ முற்றத்தில் தவழ்கின்ற / குழந்தைக்காய் / அழு

உன் ஒப்பாரிப் பாடல்/ எட்டுத் திக்கும் / ஒலிக்கட்டும்.

இது தனித்வம் மிக்க ஒரு கவிஞனின் தனதேயான சிந்தனையும் பார்வையும் கொண்ட ஒரு மனிதனின் குரல். இந்தக் குரல்தான் அவ்வப்போது மனிதத்வத்தின், மனச்சாட்சியின் குரலாக, உண்மையின் குரலாக ஒலிக்கும். இது எப்போதும் எந்த அதிகாரத்திற்கும் எதிரான குரல். திருமாவளவனின் கவிதை நேராகப் பேசுகிறது. அலங்கார ஜோடனைகள் ஏதுமற்றுப் பேசுகிறது. சில வேளைகளில் அது படிமமாக பேசுகிறது என்று சொல்லக்கூடும். அப்போதும் அப்படிமங்கள் பார்வை அனுபவங்களிலிருந்து, உண்மையின் தாக்கத்திலிருந்து பேசுகிறது. படிமங்களும் அனுபவத்திலிருந்தே பிறக்கின்றன. முல்லைத் தீவு என்ற ஒரு கவிதையில்,

சதைக்குவியலாய்/ சிதைந்து கிடக்கிறது / சூரியன் /
வானவெளியெங்கும்/ சிதறிக் கிடக்கிறது / இரத்தம் /
இந்த அதிகாலைப் பொழுதில்/ குண்டுப்பொதியுடன் / சூரியன் மீது/ பாய்ந்த/ பாலன் யார்?

என்று கேட்கிறார் திருமாவளவன். விளக்கம் தேவையில்லை. இதைத்தான், உணர்வுகளும் காட்சி அனுபவமும் ஒன்றிணைவதைத்தான் படிமம் என்போம். வலிந்து தேடிச்சென்று சொற்களைக் குவித்தல் கவிதையாகாது. அகதியாக வாழும் கனடாவில் குளிர் நிறைந்த காலை; பனிவயல் உழவு என்ற கவிதையிலிருந்து சில வரிகள்:

கோழிகளின் கூவல்/ கோவில் மணிகளின் / தொழுகை அழைப்பு /
இரண்டுமற்ற அம்மணக்காற்றில்/ நுழைந்தது காலை.....

........

துருவக் கொடுங்குளிரில்/ அலைகின்ற சூரியன் நீ/ ஆயுதந்துரத்த /நெடுந்துயர் கடந்த /
பரதேசி நான்/ உனை யார் துரத்த / இங்கு வந்து அகதியானாய்?

இவன் கவிஞன். திருமாவளவனே, மிகுந்த நட்புணர்வோடு எனக்குக் கொடுத்த றஷ்மியின் கவிதைகளில் அனுபவத் தாக்கமற்ற சொல்ஜாலக் குவியலைத்தான் நான் பார்க்க முடிந்துள்ளது. மாதிரிக்கென

அன்பே/ எனதன்பே/ முன்னே/ ஆளுயர யன்னலில் பனிபடியக்/ கசிந்தொழுகும் இந்நிலவின் காலிப்பை/

என்னவென்று நீயுணரல் கூடுமங்கு / என்போல உனக்குமது/ கனன்று தீயெரியும் கோளவென்று ஆயிடுமோ/

அன்றி/ சினந்து கொடுஞ்சொல்லால் ஒறுக்க / உனை உன் சுற்றமும்/ என்னால் இந் நேரம்/
அழுது நீ கரைதல் கூடுமோ/ அழுது நீ கரைந்து/ வீணே இலைகளுக்கு நெய்யிட்டு/
நிலா வழிந்து வீணாமோ?

காவு கொள்ளப்பட்ட வாழ்வு என்னும் தொகுப்பு முழுவதிலுமுள்ள கவிதைகள் இப்படியான அசட்டு உணர்வுச் சொல்லடுக்குகளாகத்தான் இருக்கின்றனவே ஒழிய அனுபவத் தாக்கமோ, கவி மொழியோ எங்கும் காணப்படுவதில்லை. இத் தொகுப்பில் காணும் பல கவிதைகளில் நிரம்பியுள்ள ஒருபாலுறவு, பாலுறவுப் பதிவுகள், அவற்றின் சொல்லாட்சியே புரட்சி என்று நினைத்துச் செய்யப்பட்டதாக எனக்குப் படுகிறது. அவற்றிற்கான அவசியம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை.

சமீபத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ஜீவகாருண்யன் வந்திருந்தார். 1970களின் முற்பாதி வருடங்களில் பூரணி பத்திரிகையோடு சம்பந்தப்பட்டவர் என்பதும் அவரும் நானும் கடிதங்கள் பரிமாறிக்கொண்டுள்ளோம் என்பதும் எனக்கு மறந்துவிட்டது. நான் அவருக்கு எழுதிய கடிதங்களை உடன் கொண்டுவந்து எனக்குக் காட்டினார். 30 வருடங்களாக அவற்றைக் காப்பாற்றி வைத்திருந்து, இப்போது சென்னை வந்து எனக்குக் காட்டுகிறார், ஆனால் நான் அவரை மறந்திருந்தேன் என்பது எனக்கு வெட்கமாக இருந்தது. இந்த சாட்சியங்களுக்கு என்ன அவசியம் என்றும் எனக்குள் நினைத்துக்கொண்டேன். புதுப்பிக்கப்பட்ட தோழமையோடு அளவளாவிக்கொண்டிருந்த போது, சு. வில்வரத்தினத்தின் கவிதைகளைப் பற்றிப் பேசலானார். எனக்குப் பிடிக்கவில்லையே அது பற்றி எழுதியுமிருக்கிறேனே என்றேன். அதுதான் அவருக்கு வருத்தமளித்திருக்கிறது, அதனால்தான் அது பற்றி பேச்சும் எடுத்துள்ளார் எனத் தெரிந்தது. எனக்கு இவர்கள் யாரையும் தெரியாது. யாரிடமும் எனக்கு விரோதம் கிடையாது. வில்வரத்தினத்தின் கவிதைகள் வலிந்து சொற்களைத் தேடி எழுதப்பட்டவை, பழங்கால மரபு வழி சொல் அலங்காரமும், சொல் அடுக்கும்தான் கவிதை என்ற நினைப்புத்தான் அவருக்கு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது என்றேன். கவிதைக்கு முந்திய அனுபவமும், பின் அதன் சொல்லாக்கமும் ஒரு spontaneity-யைக் கொண்டிருக்கும். பின் அதைச் செப்பனிடல் என்பது நேர்ந்தாலும், அனுபவத்தின், அதன் வெளிப்பாட்டின்



படிப்பகம்

www.padippakam.com



spontaneity செப்பனிட்ட கவிதையிலும் தெரியும். தேடிச் சென்று வலியக் கொண்டு வந்ததும் அதன் தடங்களில் தெரியும் என்றேன். நான் சொன்னது அவருக்கு வருத்தம் தருவதாக இருந்ததால். பின் நான் அதை வலியுறுத்தாது வேறு விஷயங்களுக்குச் சென்றேன். உண்மையிலேயே, சு.வில்வரத்தினத்தின் கவிதைகள் பற்றி சிறப்பான அபிப்ராயம் பலருக்கு இருப்பது தெரிந்தது. அது எனக்குப் புரியவில்லை. என்ன இருந்தாலும்

ஒளிக்கனி நாடி/சிறகடித்த பறவைகளின் சங்கீதத்தை/எரிந்த சாம்பரினின்றும் மீட்டுத்தா/
இருள் படிந்த புதைவுகளினின்றும்/ புதிய குருதிப் பொலிவோடு/ இவள் பிள்ளைகளை எழுப்பித்தா

என்று எழுதுவது யாழ்ப்பாண மண்ணின் குருதியும் சாம்பல் புழுதியும் பார்த்த அதில் வாழும் அனுபவம் தந்த வெளிப்பாடு என்று எனக்குத் தோன்றவில்லை. அவர் நினைப்பில் இருந்தது ஃபீனிக்ஸ் பறவையும், கால் சம்மணமிட்டு பழம் பனையோலைச் சுவடியும் எழுத்தாணியுமாக அமர்ந்து காவியம் படைக்கும் ஒரு பிம்பமுமே என்று எனக்குத் தோன்றியது. மேற்கண்ட வரிகள் காலத்துயர் என்னும் தொகுப்பிலிருந்து எடுத்தவை. எனக்கு வேறு தொகுப்புகள் பற்றித் தெரியாது. அவர் இன்னும் நிறைய எழுதியிருப்பதாக இணைய இதழில் படித்த நினைவு எனக்கு. இதே போல சரி நிகர் பத்திரிகையில், இரண்டு மூன்று வருடங்களாகப் பார்த்தவரை, ஈழத்தில் மிகப்புகழ் பெற்றவராகத் தோன்றும் சோலைக்கிளி என்பவரின் கவிதைகளும், படிமங்கள், வர்ணனைகள், அலங்காரச் சொற்கள் என்று முனைந்து தேடிப் பொறுக்கிக் கோர்த்த, எத்தகைய அனுபவ, காட்சி ஒன்றிணைவையும் தராத சொற்குவியலே என்று எனக்குப் படும்.

எனக்கு கவிதை எனப் படுவது, உயர்ந்த கவிதைக் கணங்கள் என்னுள் எழுப்புவதெல்லாம் மிக எளிய வரிகள்தாம், அனுபவத்திலிருந்து எழுந்தவை என்று எனக்கு உடன் சொல்லும் வரிகள்தாம்.

சில சமயங்களில் வெறுமனே விறைத்து/ உறைந்து கிடப்பதும்/
வேறு பொழுதுகளில் நுனி துளிர்த்து/ தளிர் எறிந்து தளுக்காய்ச் சிரிப்பதும்/ மகிழ்வுறு கணங்களில்/ பூக்களை விரித்து புன்னகைத்து போதை தருவதும்/ துயருறும்போது இலைகளை உதிர்த்து கண்ணீர் விடுவதும்/ விருட்சத்தின் வாழ்வாயிற்று.

திருமாவளவனின் காட்சி அனுபவங்கள், ஈழமோ, கனடாவோ, எங்கிருந்தாலும், கடல், விருட்சங்கள், இலைகள் அவர் மனதை ஆர்ப்பரிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் கடந்த கால நினைவுகள், சண்டைகள், ப்ரச்சினைகள், அகதியாக அலைந்த நாட்களின் அனுபவங்கள், இப்போதும் உயிர்வாழ யந்திரங்களிடையேயான நீண்ட உழைப்பும், பின் களைப்பும், மீண்டும் தன் மீள இயலாது இழந்துவிட்ட யாழ் வாழ்க்கையும், எல்லாமே, ஏக்கங்களும் நினைவுகளும் நிறைந்த கணங்களே அவர் கவிதையாகியுள்ளன.

இன்னம் இருக்கிறது/ என் ஊர்/ தாழம்பு மணங்கமழ/ இதழ் பரப்பி

என்று தொடங்கும் அக்கவிதை தான் விட்டு வந்த ஊரின் மறையாத மாறாத காட்சிகளை விவரித்துக் கொண்டே, கடைசியில்,

கொத்தியாலடி சுடலை மடச்சுவரில்/ கிள்ளிப் பிடிக்க இடமிலாதளவுக்கு
கரித்துண்டால் குறித்து வைத்த/ தோற்றம்–மறைவுக் குறிப்புகள்/
ஆனாலும்/ ஆனி பன்னிரண்டு 1990க்குப் பின்/ எவர் குறிப்பும் இல்லை

என்று முடிகிறது. மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்று. இது போன்ற கவிதைகள் திருமாவளவனின் இரு தொகுப்புகளிலும் நிறையவே கிடைக்கும்.

ஈழத் தமிழரிடையே, புலம்பெயர்ந்த தமிழரிடையே, ஏன் தமிழகத்தமிழரிடையே கூட, அதிகம் பேசப் படாத ஒரு முக்கியமான புதுக் குரலைப் பற்றிப் பேச வேண்டும். இக்குரல் தனித்துவமான குரல். ஆவேசம் கொள்ளாத, உரத்து எழும்பாத, ஆர்ப்பாட்டம் ஏதும் செய்யாத எதிப்புக் குரல். இப்படி ஒரு எதிர்ப்புக் குரல் வருவதே ஆச்சரியமாகவும் நம்ப முடியாததாகவும் இருக்கிறது. அதிலும் மரபு சார்ந்த ஆசாரம் மிக்க திருநெல்வேலி அய்யங்கார் குடும்பத்தின் நான்கு தலைமுறைகளின் சரித்திரமும் புனைவுமான ஒரு நாவலில் (பி.அனந்தகிருஷ்ணனின் புலிநகக் கொன்றை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்) அக்குரல் எழுகிறதென்றால்!

நாவல் 19ஆம் நூற்றாண்டின் பின் பாதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் பின் பாதி வரை சுமார் 150 வருட' கால வாழ்க்கை, அதனுடன் நிகழ்ந்த சரித்திர சமூக மாற்றங்கள் விழச்செய்யும் நிழல்களையும் உடன் பதிவு செய்துகொள்ளும் வாழ்க்கை. எல்லாமே பின்னிப் பிணைந்தது. இது ஒரு குடும்ப சரித்திரமா, அல்லது அரசியல் நாவலா என்று பட்டிமன்றப் பொருளாகும் அளவுக்கு பின்னிப் பிணைந்தது. பொன்னா மரணத்தை எதிர்நோக்கி படுக்கையிலிருக்கும் காட்சியிலிருந்து தொடங்குகிறது. ஆனால் நாவல் பொன்னாவின் திருமணத்திலிருந்தே சொல்லப்படுகிறது. பொன்னாவின் திருமணம் 19ஆம் நூற்றாண்டின் பின் பாதியில் நிகழ்வது. மிக ஆசாரமான குடும்பம். 1880க்களில் திருநெல்வேலி அய்யங்கார் குடும்பம் வேறு எப்படி இருக்க முடியும்? இன்றைய சீர்திருத்தப் புரட்சிச் செம்மல்களின் 1880 வருட முன்னோர்களும்தான் வேறு எப்படி இருந்திருப்பார்கள்? பொன்னா திருமணம் செய்து கொண்ட குடும்பம் அப்போதும் பின் இரு தலைமுறைகளுக்கும் வானமாமலை ஜீயரிடம் தம்மை அர்ப்பணித்துக்கொண்டது. அதுதான் மரபும் எதிர்பார்க்கப்படுவதும் கூட. அந்த ஜீயர் தன் விளையாட்டுத் தோழனாக இருந்திருந்த போதிலும், இப்போது ஜீயர். பெருமாளின் திருவடிக் கமலத்திற்கு வழி காட்டும் உரிமை பெற்ற ஜீயர். அதுதான் எதிர்பார்க்கப்படுவதும் கூட. ஜீயரின் கட்டளைக்கு தன்னை ஒப்படைத்துக்கொண்டு விட்டால், பின் பெருமாளின் பாதாரவிந்தங்களில் சேர்ப்பது ஜீயரின் பொறுப்பு. பின் வரும் தலைமுறைகள், காங்கிரஸ், சுதந்திரப் போராட்டம், கம்யூனிஸம், ஜஸ்டிஸ் பார்ட்டி, பெரியார், திராவிட கழகம், என்றெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com



வெளியுலக சமூக, சரித்திர மாற்றங்களால் பாதிக்கப்பட்டு, அவற்றோடு தன்னையும் ஐக்கியப்படுத்திக் கொண்டு, சந்தேகங்கள் கொண்டு, விலகி, இப்படித்தான் சரித்திரம் செல்கிறது. ஒவ்வொரு தலைமுறையிலும் அக்குடும்பத்தினரோ அவர் தம் கூட்டாளிகளோ, நண்பர்களோ தாமும் இச்சமூக, அரசியல் மாற்றங்களோடு தம்மை ஈடுபடுத்திக்கொள்கின்றனர். வெவ்வேறு விதங்களில், நெருக்கத்தில்தான். முழுதுமாக ஆழ்ந்துவிட்டவர்கள் என்றில்லை. செயல்பாடுகள், எண்ணங்கள், சிந்தனை ஓட்டங்கள், தம் சார்புகள் என பல வெவ்வேறு தளங்களில் அவர்கள் தம்மை ஈடுபடுத்திக்கொள்கின்றனர். பாதிக்கப்படுகிறார்கள்.

இது குடும்ப சரித்திரமா, மறைமுகமான அரசியல் நாவலா என்று நினைக்கத் தோன்றும். கல்வியறிவும், சுயசிந்தனையும் கொண்ட ஒரு தலைமுறை வேறு எப்படி இருக்க முடியும்? ஆனால் தம்மையே ஜீயரிடம் ஒப்படைத்துக்கொண்ட குடும்பத்தின் தலைமைத் தொடக்கத்திலிருந்து, கடைசித் தலைமுறையின், கம்யூனிஸ்ட், பெரியார், தி.மு.க. ஈடுபாடு வரை எதுவும் யாரும் ஒரு நிறுவனமாக, கேள்வி எழுப்பப்பட முடியாத சித்தாந்தமாக, அப்பழுக்கற்ற புனிதமாக, புனிதர்களாக, இந் நாவலில் யாரும் பார்க்கப்படவில்லை. ஜீயரிலிருந்து ஆரம்பித்து, காந்தி, ராஜாஜி எனக் கடந்து, மாவோ, பெரியார், எம்.ஜி.ஆர். எம்.ஆர்.ராதா வரை எல்லோரும், ஒரு சமயப் போற்றலுக்கும் பின் கேலிக்கும் இரையாகின்றனர். எதுவும் புனிதமல்ல. எதுவும் குறையற்றதுமல்ல. எதுவும் கேலிக்கு அப்பாற்பட்டதுமல்ல. இத்தகைய ஒரு வாழ்க்கைப் பார்வை, சமூகத்தை கேலியுடனேயே பார்க்கும், எதையும் வணங்கத்தக்க புனிதமாக ஏற்றுக்கொள்ளாத பார்வை, நிகழ்கால தமிழ் எழுத்தில் இருந்ததில்லை. புதுமைப்பித்தனைத் தவிர. ஆனால் புதுமைப்பித்தனின் சிறுகதைகளில் இத்தகைய பரந்த தளம் சாத்தியமில்லை. அதற்கு அவர் எழுத்து முழுமையையுமே எடுத்துக்கொண்டால் அத்தகைய மனமும் பார்வையும் கிடைக்கும்.

அனந்தகிருஷ்ணன் வைஷ்ணவர். மார்க்ஸிஸ்ட். இரண்டிலும் அவருக்கு ஆழ்ந்த படிப்பும் ஞானமும் உண்டு. தேர்ச்சி பெற்ற இலக்கிய, கலை உணர்வும் சேர்த்து. இருப்பினும் இரண்டும் ஒரு தளத்தில் அவருடைய மரியாதையையும், கவுரவத்தையும் பெற்றவை. தன் இன்றைய ஆளுமையின் கலை உணர்வுகள், அறிவார்த்தம் இரண்டிற்கும் அவர் கடன் பட்டிருப்பதை அவர் மறுக்க மாட்டார். இருப்பினும் மற்ற எல்லாவற்றையும் போல இவையும் வேறு தளத்தில் அவர் கேலிக்கு இரையாகின்றன. மிகுந்த சுவாரஸ்யம் தரும் எழுத்து. கேலி பொருளானவற்றை கேலி செய்யத் தயங்காத எழுத்து. அத்தகைய கேலி பக்கத்திற்குப் பக்கம் இந்நாவலில் நிறைந்துள்ளது. இதன் குணத்தில் தனித்துக் காணும் எழுத்து இது.

காலம் சஞ்சிகையின் இனிய நண்பர் வெங்கட் சாமிநாதனின் இக்கட்டுரை மார்ச் 2005 இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டியது, நமது தவறுதலால் பிரசுரிக்கப் படாமல் போய் விட்டது. இதற்காக வெங்கட் சாமிநாதனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, இந்த இதழில் முழுமையான அவருடைய கட்டுரையை பிரசுரித்துள்ளோம்.

–ஆசிரியர்

Supercare Pharmacy
3228 Eglinton Ave. East
Scarborough ON M1J 2H6
Tel : 416 298 3784
Fax : 416 298 3052

PharmaGrace Drug Mart
3850 Finch Ave. East
Scarborough ON M1T 3J6
Tel : 416 267 9900
Fax : 416 267 1800

Rx

Contact: RAM, Pharmacist



படிப்பகம்

www.padippakam.com

# சோலைக்கிளி



Craig Aurness

## உலகம் நின்ற சுவர்

நான் இடிந்து கிடப்பதுவாய்
தானும் இடிந்து
தெருச் சுவர் அழுகிறது
முழுமை குன்றி

ஆடு எட்டி
வேலிக்கு உள்ளே இருக்கும்
மரத்தின் துளிரை நக்கி
"மே" என்ற போது
சுவர் சபிக்கின்றது
தனது தலையெழுத்தை

வீட்டின்
உள்ளே ஒரு பெண்
தன் பாவாடை மாற்றி
அணிந்திருந்த அழுக்கை
ஏறு வெயிலுக்குச் சாப்பாடு வழங்க
வாசல்
கொடியில் கொண்டு போடுவது
தெருவில்
நிற்கின்ற எனக்கு
படமாகும் சோகம்
இச் சுவருக்கு மட்டுமல்ல
எனக்குமே

நடந்து
சிவந்த கால்
வெள்ளை முகம்
ஒரு சின்னக் குழந்தை
வந்து
கைபோட்டுப் பார்க்கிறது
மதிலில்
ஆடு போக
இது குட்டியாகி
வாசற்
படிபோலானது
சுவர்
உலகம் என்னில் ஏறி நிற்பது போல்
எதுவும் நின்றதா
உடைந்து போனது
அதற்கு
வளர விருப்பம்
ஆனால் வீட்டுக்காரியின் முகத்தைப் பார்த்து
கையேந்தத் தெரியாது
அண்ணார்ந்து பார்த்தே
பிரார்த்தனைகள் புரிகிறது
இன்னும் ஆகவில்லை ஒன்றும்

மேகப்
புடவை விரித்து
கடவுளை மறைக்கிறதா
வானம்
அட கடவுளே



படிப்பகம்

# ஒரு சாண் மனிதன்

## செழியன்

சாதாரணமாக ஒரு புகையிரத நிலையத்தில் நிகழ்வது போலத்தான் இது நடந்து வந்தது. ஏழு வித்தியாசங்கள் சொல்லலாம் என்றாலும் அதில் முக்கியமானது, இது அங்கு நடப்பது போல, இங்கு தினமும் நடைபெறுவதில்லை. வாரத்திற்கு ஒரு தடவை வருகின்ற புதன்கிழமைகளில் மட்டுமே நடக்கின்றது.

கண் இமைக்கும் நேரத்தில், மிக வேகமாக வருகின்ற புதையிரதத்தில் இருந்து, புகையிரத நிலைய அதிபரின் கைக்கு மாறுகின்ற அந்த வளையம் போல, கணநேரத்தில் இது கைமாறுகின்றது. பார்க்கின்ற போதெல்லாம், ஒரு கைதேர்ந்த சர்க்கஸ்காரர் நடத்துகின்ற அற்புதமான மாயாஜாலக் காட்சி போல எனக்குள் அதிசயத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. அதிசயம் மட்டுமல்ல, யாராவது ஆசிரியர்கள் கண்டுவிட்டால் என்ன நடக்குமோ என்ற பெரும் பதைபதைப்பும், நடுக்கமும் எப்போதுமே எனக்குள் இருக்கும்.

புதன்கிழமைகளில் இரண்டாவதும், மூன்றாவதுமான தொடர் பாடமாக எமக்கு வருவது சுகாதாரம். இந்தப் பாடத்திற்காக பத்து – A வகுப்பில் இருந்து பத்து – C வகுப்புக்கு, எமது வகுப்பில் இருந்த பாதி மாணவர்கள் அணிவகுத்துச் செல்ல வேண்டும். மிகுதி பாதிப் பேரும் பிரயோக கணிதத்திற்காக பௌதீக ஆய்வுக் கூடத்திற்குச் சென்று விடுவார்கள்.

இந்தப் புதன்கிழமை எப்போது வரும் என்று வகுப்பு முழுதும் காத்திருக்கும். சிலர் வெளிப்படையாக உணர்ச்சிவசப்பட்டுப் போய் நிற்பார்கள். இன்னும் சிலர் வெளியில் வேண்டா வெறுப்பாக இருப்பது போல காட்டிக்கொண்டு உள்ளூர ஆசை ஆசையாக உமிழ்நீர் வடித்துக் கொண்டிருப்பார்கள்.

இதற்கு நியாயமான காரணம் ஒன்று இருந்தது. இது ஒன்றும் பௌதீக விதிகளைப் போல குழப்பமான, விளங்க முடியாத விடயம் ஒன்றும் கிடையாது. இந்தப் பாடநேரத்தின்போது மட்டும்தான் இருபது அழகான மாணவிகளுடன் நாம் ஒன்று சேர்ந்து ஒரே வகுப்பில் படிக்கின்ற வாய்ப்புக் கிடைத்து வந்தது. இத்தனைக்கும் இரு பாலாரும் சேர்ந்து படிக்கின்ற இந்துக் கல்லூரியாம் என்று இந்தக் கல்லூரிக்கு ஒரு மட்டமான பெயர்.



www.padippakam.com



கொழும்பு நாலாம் குறுக்குத் தெருவில் இருக்கின்ற குறுகலான ஒரு சந்து போல இரண்டு அடி அகலமும், பன்னிரெண்டு அடி நீளத்துடன் இந்தக் கல்லூரியிலும் ஒரு சந்து இருக்கின்றது. புதன்கிழமைகளில் இதைக் கடந்துதான் நாம் செல்ல வேண்டும்.

அந்த இடத்தில் சற்று அவதானமாக இல்லாது விட்டால் ஒரே சமயத்தில் எதிர் எதிராக வருகின்ற இரண்டு பேர் மோதிக்கொள்ள வேண்டி வரும்.

மோதிக்கொண்டது ஒரு மாணவனுடன் என்றால் அந்த இடத்தில் ஒரு குத்துச் சண்டைக்கு நாம் தயாராக இருக்க வேண்டும். மாணவியுடன் என்றால் பெச்சு மாமா என்று மாணவர்களால் அன்போடு அழைக்கப்படும் உப – அதிபரிடம் பத்து பிரம்படி ஆவது வாங்கிக்கொள்ள வேண்டும். அதைக் கூட சமாளித்து விடலாம். கல்லூரி விட்டதும் வாசலில் காத்திருக்கும் அவளது அண்ணனின் அடியைத் தாங்க முடியாது. அதனால் அந்த சந்தில் வரும்போது மெதுவாகவும், சற்று அவதானமாகவும் வர வேண்டியது மிக அவசியமான விடயமாக எமக்கு இருந்து வந்தது.

யுத்தப் பிரதேசத்தில் செயல்படுகின்ற கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைப் போல இந்த சந்தைக் கவனிப்பதற்கு என்றே விசேடமாக மாணவ முதல்வர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் இந்தக் கண்காணிப்புக் குழுவின் கண்ணுக்கே மண்ணைத் தூவுவதைப் போலத்தான் சுப்புறுவின் நடவடிக்கை இருந்தது.

அவன்தான் எங்களுடைய வகுப்பின் பின்வாங்கு உறுப்பினர்களில் மிக முக்கியமான ஆள். பின்வாங்கு உறுப்பினர்களின் தலைவன் என்றும் சொல்லலாம். ஆனால் முன்வாங்குகளிலும் அவனது செல்வாக்கு இருந்தது. அவனுக்கு விருப்பம் இல்லாத எந்த ஒரு முன்வாங்குப் பயலையும், வகுப்புத் தலைவராகக் கூட நியமிக்க முடியாது.

சுகாதார பாடத்திற்குச் செல்வதற்காக நாம் அந்த சந்தைக் கடக்கின்ற நேரம் பார்த்து, எதிர்த் திசையில் இருந்து பத்து – C வகுப்பு மாணவிகள் இருபது பேர் பிரயோக கணிதத்திற்குச் செல்வதற்காக அதே சந்துக்குள் நுழைவார்கள்.

எந்தவிதமான தற்பாதுகாப்பு உணர்வும் இன்றி வெகு அட்டகாசமாக அந்த சந்துக்குள் நுழைந்து அவர்கள் வரும்போது, நாம்தான் அவர்களின் அண்ணன்மாரை நினைத்துப் பயந்து சற்று ஒதுங்கிக் கொள்வது வழக்கம். அந்த இடத்தில்தான் இந்தச் சம்பவம் நடந்து வந்தது.

சுப்புறுவின் கையில் அனாயாசமாக இருக்கின்ற கொப்பி ஒன்று வெகு இலகுவாக யோகலட்சுமியின் கைக்கு இடம் மாறும். அடுத்த வாரம் யோகலட்சுமி மார்போடு அணைத்து வரும் கொப்பி சுப்புறுவின் கைகளுக்குள் கண் இமைக்கும் நேரத்திற்குள் மாறி விடும்.

இந்தக் கைமாற்றத்தின்போது இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள மாட்டார்கள் ஆனாலும் குறி பிசகாமல் கொப்பி கைமாறிக்கொண்டே இருந்தது.

நமது வகுப்பின் பின்வாங்குத் தலைவனுக்கும், பெண்கள் வகுப்பின் முன்வாங்குத் தலைவிக்கும் எப்படி உறவு வந்தது என்று பல நாட்களாக எனக்குக் குழப்பமாக இருந்தது. நித்திரை இல்லாமல் பாயில் பல நாட்கள் உருண்டுகொண்டிருந்தேன்.

பிரபஞ்சத்தில் எல்லாவற்றுக்கும் ஒரு ஒழுங்கு இருக்கின்றது. இரசாயனத்திலும் விதிகள் இருக்கின்றன. அந்த ஒழுங்கு முறையின் பிரகாரம்தான், மூலகங்கள் ஒன்று சேர முடியும்.

ஒன்றுடன் ஒன்று சேரவே முடியாத இரண்டு மூலகங்கள் ஒன்று சேர்ந்தது என்றால், இரசாயனத்தில் எப்படி நம்ப முடியாதோ அது போல நம்ப முடியாத அதிசயமாக இது எனக்கு இருந்தது.

ஒழுங்கு முறையின்படி பார்த் தால் முன்வாங்கு உறுப்பினரான, எனது வகுப்பு மாணவ தலை வன் விக்னாவைத்தான் யோகலட்சுமி காதலித்து இருக்க வேண்டும். அது தள்ளிப் போனால் ரஞ்சித். போகட்டும் என்று அதையும் விட்டால் அடுத்து இருக்கின்றவன் நான். ஒழுங்கு முறை இப்படி இருக்க ஒரு ஆசிரியரின் மகளான யோக லட்சுமி எப்படி தறுதலையான சுப்புறுவைக் காதலிக்க முடியும்?

இந்தக் கேள்விக்கு விடை கண்டு பிடித்தே ஆக வேண்டும் என்று நான் தீர்மானித்து விக்னாவிடம் சென்று கேட்டேன்.

“அடுத்த தடவை இந்த மாதிரி ஏதாவது ஏடாகூடமான விடயத்தைப் பற்றி நீ கதைத்தால் மிஸ்ஸிஸ் தவ ரட்ணம் டீச்சரிடம் சொல்லி விடுவேன்.” மிரட்டலோடு என்னை விரட்டி அடித்துவிட்டான். வகுப்புத் தலைவனாக அவன் வருவதற்கு ஓட்டுப் போட்டது சுத்த ‘வேஸ்ட்’.





படிப்பகம்

www.padippakam.com





ரஞ்சித் ஒரு அற்புதமான ஆள். இப்படி விக்னாவைப் போல முகத்தை முறித்துக் கதைக்க மாட்டான். தன்னால் இயன்ற அளவு நேரம் செலவழித்து எமது சந்தேகத்தை தீர்த்து வைக்கின்ற பேர்வழி. மறுநாள் காலை வகுப்புக்கு வந்ததும் 'எல்லாம் விளங்கிவிட்டதா? இன்னமும் ஏதாவது சந்தேகம் இருக்கின்றதா? என்று வெகு அக்கறையாகக் கேட்பான். ஆனால் அவனுடன் கதைப்பதற்கு ஏதாவது உயிரியல், இரசாயனக் கேள்விகளுடன் போக வேண்டும். பௌதீகத்தில் ஏதாவது சந்தேகம் என்று போனால் கூட ஒரு வாரத்திற்கு முகம் கொடுத்துக் கதைக்க மாட்டான்.

இந்த மாதிரி சமாசாரத்திற்கு, எனக்குப் பக்கத்தில் இருந்துகொண்டு அடிக்கடி ஏதாவது பிரச்சினை பண்ணிக்கொண்டிருக்கின்ற ஸ்கொட் ரவீந்திரன்தான் சரி என்று எனக்குத் தோன்றியது.

நான் எனது சந்தேகத்தை கேட்ட மாத்திரத்தில், கடந்த ஒரு வருடமாக என்னுடன் இருந்த எல்லாப் பகையையும் ஸ்கொட் ரவீந்திரன் உடனேயே விட்டொழித்துவிட்டான்.. அபயம் என்று வந்தவனை ஏற்றுக்கொள்கின்ற பண்பு அவனுக்குத்தான் இருக்கின்றது.

ஸ்கொட் ரவீந்திரனுக்கு எங்கள் வகுப்பில் ஒரு செல்வாக்கும் இருந்தது. ஏதாவது பாடத்திற்கு ஆசிரியர்கள் வரவில்லை என்றால் அவனைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் சேரும். ஸ்கொட் ரவீந்திரன் ஏதாவது கதை சொல்லத் தொடங்கிவிடுவான். இந்தக் கூட்டத்தில் பின்வாங்கு உறுப்பினர்கள் சேர மாட்டார்கள். அவர்களுக்கு வேறு பிராக்கு இருந்தது.

இப்படிக் கதை சொல்லிச் சொல்லியே இவன் களைத்துப்போய்விட்டான். கடைசியில் தனது ரசிகர்களை சமாளிக்க 'ஒரு சாண் மனிதன்' என்ற முடிவே இல்லாத ஒரு தொடர்கதையை ஆரம்பித்து விட்டான். உலகம் விட்டு உலகம் மாறி வந்த ஒரு சாண் மனிதன் ஒருவனின் கதை அது. ஸ்கொட் கதை சொல்லத் தொடங்கிவிட்டால், வாயைப் பிளந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். அதற்குள் ஈ, இலையான் போனாலும் தெரியாது.

எனக்கும் ஸ்கொட் ரவீந்திரனின் கதைகள் பிடிக்கும் என்றாலும் எனக்குப் பக்கத்தில் இவன் இருக்கின்றபடியால் சில சமயம் கூட்டம் கூடி எனக்குப் பெரும் இடைஞ்சலாக இருந்தது. அதனால் எப்போதும் எனக்கும் ஸ்கொட் ரவீந்திரனுக்கும் ஒரு உரசல் இருந்துகொண்டுதான் இருந்தது.

"சுப்புறு மட்டுமல்ல பின்வாங்கில் இருக்கின்ற எல்லாருக்கும், ஒரு மணி நேரத்திற்காவது ஒரு காதலி இருந்திருக்கின்றார்கள்" ஸ்கொட் ரவீந்திரன் என்னிடம் சொன்னபோது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"இரசாயனத்திற்கு ஒரு விதி, உயிரியலுக்கு இன்னோர் விதி. அது போலத்தான் காதலுக்கு இன்னோர் விதி இருக்கின்றது" என்று ஸ்கொட் ரவீந்திரன் கிசுகிசுத்தான்.

"உனக்குத் தெரியும்மா அது?"

"எனக்குத் தெரியாது. ஆனால் சுப்புறுவுக்குத் தெரியும்"

"சுப்புறுவா" அருவருப்பாக இருந்தது எனக்கு.

அத்தோடு அந்தக் கதை முடிந்து போனாலும் இரண்டு மூன்று தினங்களாக என் மனதில், வங்காள விரிகுடாவில் துள்ளி விழுகின்ற மீன்களைப் போல ஆசை துள்ளி விழுந்துகொண்டிருந்தது.

ஸ்கொட் ரவீந்திரன் நல்லவன். என் மன நிலையைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப மிக பக்குவமாக நடந்துகொண்டான். மகாபாரத யுத்தத்தில் அர்ச்சுனன் பலவீனப்பட்டுப் போகின்றபோது வெகு நிதானமாக கிருஷ்ணர் கீதா உபதேசம் செய்தது போல பலவிதமான அறிவுரைகளை எனக்கு எடுத்துச் சொன்னான்.

"வில்வித்தையை துரோணரிடம்தான் கற்றுக் கொள்ள வேண்டும். உயிரியலை நமது பூரணச் சந்திரன் மாஸ்டரிடம் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழை நவரத்தினம் பண்டிதரிடம் கற்க வேண்டும்... இந்த மாதிரியான விசயத்தை சுப்புறுவிடம்தான் கற்க வேண்டும்."

"சரி இந்த வித்தையை சுப்புறு சொல்லித் தருவானா?" எல்லா குழப்பங்களையும், வெறுப்புகளையும் ஆசையால் ஒரே ஊதாக ஊதித் தள்ளி விட்டுக் கேட்டேன்.

பதில் சொல்லாது சிரித்தான்.

சொன்னதைச் சொல்லியபடி செய்பவர்களும் இருக்கின்றார்கள் என்பதை நீங்களும் கொஞ்சம் நம்பத்தான் வேண்டும். ஸ்கொட் ரவீந்திரனின் பெரு முயற்சியினால், ஒரு நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு சுப்புறு சம்மதித்தான். அது என்னை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளலாமா? இல்லையா என்பதற்காக.

இந்த நேர்முக பரீட்சைக்காக, யாழ்ப்பாணம்



படிப்பகம்

www.padippakam.com



ஐந்துலாமுச் சந்திக்கு அண்மையில் இருக்கின்ற 'மொக்கன்' கடையடியில், புதன்கிழமை இரவு ஏழு மணிக்கு நான் நின்றேன்.

'மொக்கன்' கடைக்கான எல்லாச் செலவுகளுக்கும், தயாராக வரும்படி ஸ்கொட் ரவீந்திரன் சொல்லியிருந்தான். இதற்காக சாமி அறையில் சேமிக்கப்பட்டிருந்த செத்தல் மிளகாய் மூட்டைகளில் இருந்து, மேலதிகமாக ஒரு கிலோ இந்த மாதம் எடுக்க வேண்டியதாகி விட்டது.

பாவத்திற்கு மன்னிப்பு கேட்டு, அந்த மாதம் மேலதிகமாய் ஒரு ரூபாய், உரும்பிராய் கற்பக விநாயகரின் உண்டியலில் போட்டேன்.

'மொக்கன்' கடையில் சாப்பாடுகளை ஓடர் செய்யும்போதே சுப்புறுவின் திறமையை என்னால் எடை போட முடிந்தது. புட்டோடு சேர்த்து சாப்பிட மாட்டுக் குருமா, மாட்டீரல் அத்தோடு மாட்டு இரசம் என்று அவன் எடுத்த எல்லாமே மிகச் சுவையாக இருந்தது.

மாட்டு இறைச்சி சாப்பிடுவதா என்று எனக்கு தயக்கமாகத்தான் இருந்தது. "மாட்டு இறைச்சியும், மாட்டு ஈரலும் சாப்பிட்டால், தேகத்தில் ஒரு முறுக்கும், முகத்தில் ஒரு ஜொலிப்பும் வரும். பெட்டையளுக்கு எங்களைப் பார்க்கின்றபோது ஒரு கவர்ச்சி இருக்கும்" காஞ்சிப் பெரியவரைப் போல ஒரு பிரசங்கமே செய்துவிட்டான். சாப்பிட்டால் இனி மாட்டு இறைச்சி மட்டும்தான் என்று முடிவெடுத்தேன்.

"நீ நல்லாய் படிக்கிறனி. பிறகு என்னத்துக்கு உனக்கு இதுகள் எல்லாம்?" சாப்பிட்டு முடிந்ததும் தனது முதலாவது கேள்வியை எடுத்துவிட்டான் சுப்புறு.

இந்தக் கேள்விக்கு என்ன பதிலை நான் சொல்வது என்று குழப்பமாகப் போய்விட்டது. எனக்கும் ஒரு இளம் பெண்ணின் சினேகிதம் வேண்டும் என்று பச்சையாக எப்படிச் சொல்வது?

ஆபத்பாண்டவனாய் ஸ்கொட் ரவீந்திரன் தலையிட்டான்.

"சுப்புறு, இது படிக்கிறது, படிக்காமல் இருக்கின்றது என்ற பிரச்சினைக்குள் அகப்படாத ஒரு கிளுகிளுப்பான விசயம். பெடியளுக்கு ஒரு பெட்டை வேண்டும். பெட்டையளுக்கு ஒரு பெடியன் வேண்டும். நீ என்ன சொல்லுகிறாய்?"

"பெடியளுக்கும், பெட்டையளுக்கும் ஒன்டுதான் வேண்டும் எண்டு சொல்லாதே. அப்பிடி யாரும் சொன்னாலும் நம்பாதே. பெடியளும், பெட்டையளும் இரண்டு, மூன்று என்று வைச்சிருக்கினம். இப்ப எனக்கு இருக்கிறவள் என்னுடைய ஆறாவது ஆள். அவளுக்கு நான் மூன்றாவது ஆள்."

"பாத்தியே சுப்புறு. ஆளுக்காள் அஞ்சாறு பெட்டையள் என்று வைச்சிருக்கிறான்கள். இவன் இன்னமும், ஒரு பெட்டையோட கூட நேருக்கு நேர் நின்று கதைச்சதேயில்லை. பாவம்." ஸ்கொட் ரவீந்திரன் எனக்காக அழுது வடித்தான்.

"என்ன? ஒரே பெட்டைக்கு இரண்டு மூன்று காதலர்கள் இருக்கினமோ?" அதிர்ச்சியோடு நான் கேட்க, என்னை பரிதாபமாக சுப்புறு பார்த்தான்.

பதில் சொல்ல விருப்பம் இல்லாமல், தடால் என்று ஒரு மாட்டெலும்பை எடுத்து ஸ்கொட் ரவீந்திரன் உறிஞ்சிக்கொண்டிருந்தான்.

"நீ நிறைய கதையள் வாசிக்கிறனியோ?" சுப்புறு என்னைப் பார்த்துக் கேட்டான். எனக்கு உற்சாகம் தொற்றிக்கொண்டது.

"குமுதம், ஆனந்த விகடன், கல்கி இதுகளில வாற எல்லாக் கதைகளையும் வாரா வாரம் வாசிக்கிறனான். அதைவிட ராணி முத்து மாதா மாதம் வாசிக்கிறனான்."

"அதுகளில கண்ணும் கண்ணும் சந்தித்து, காதல் எல்லாம் வெடித்து கிளம்பி இருக்குமே"

எனக்கு பெரிய அதிர்ச்சியாக இருந்தது. காதலின் தொடக்கமே இந்த கண்கள்தான். கண்கள் இரண்டும் சந்தித்துவிட்டால் பிறகு என்ன? புத்தகங்கள் வாசித்தே இருக்க மாட்டான் இந்த சுப்புறு. ஆனால் அவனுக்கும் இதுகள் தெரிந்துதான் இருக்கின்றது. பின்ன இதுகள் தெரியாமல் என்னெண்டு இவனால இந்த விசயத்தில கிங்காக வந்திருக்க முடியும்?

"இராமர் காலத்தில் இருந்தே இந்த கண்கள்தான் காதலின் ஆரம்பம்" உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னேன்.

"இவன் சரிப்பட்டு வர மாட்டான்."

கோப்பையில் கரண்டியை எறிந்தான். கோபம் கடுப்பேற சுப்புறு, ஸ்கொட் ரவீந்திரனைப் பார்த்தான்.

சத்தம் கேட்டு கல்லாவில் காசு எண்ணிக் கொண்டிருந்த முதலாளி எங்களை ஒரு முறை பார்த்துவிட்டு தனது வேலையைத் தொடர்ந்தார்.

மொக்கன் கடைக்கு செலவழித்தது சுத்தமாக 'வேஸ்ட்' என்று எனக்கு அழுகையே வந்துவிட்டது.

"கண்கள், காதுகள், கடிதங்கள் எல்லாம் காதலுக்கு சரியாய் வராது. அதெல்லாம் கதையளில தான்டா."

"நிசமாய் காதலிக்க வேண்டும் எண்டால், அவளவையின்ட மார்பை நீ பார்க்க வேண்டும். அப்பத்தான்டா காதல் வரும்."

"குட் பொயின்ட்" சூப்பி முடித்த மாட்டுக்காலை கோப்பையில் மெல்ல வைத்தபடி ஸ்கொட் ரவீந்திரன் கூறினான்.

அதிர்ச்சியில் உறைந்து போய் வாய் பேச முடியாமல் இருந்தேன்.

கண்களில் இருந்து தொடங்க வேண்டிய காதலை எப்படி மார்பில் இருந்து தொடங்குவது? அசிங்கம்.

"பார்க்கிறதோட நிற்பாட்டுறதில்லை. பிறகு பிடிக்க வேண்டும்." அடுத்த குண்டை எறிந்தான்.

ஒரு கிளாஸ் தண்ணீரை அப்படியே குடித்து முடித்தேன்.

"இன்னும் ஏதாவது வேணும?" கடைப் பையன் வந்து நின்றான். அவனது முகத்தில் ஒரு விசமம் தெரிந்தது. ஒட்டுக் கேட்டிருப்பான்.

"பில்" ஸ்கொட் கூறினான்.



படிப்பகம்

www.padippakam.com



“ஒரு சிகரட் பிடிக்கப் போறன்... பில்லைக் குடுத்திட்டு வாங்கோ”

சுப்புறுவின் தலை மறைந்ததும் ஸ்கொட்டைப் பார்த்தேன்.

“எல்லாமே உனக்குப் புது புது விசயமாய் இருக்குது என்ன?” கண்சிமிட்டினான்.

“சுப்புறு சொல்லுற மாதிரியெல்லாம் என்னால செய்ய ஏலாது. இது பெட்டையளிட்ட செருப்படி வாங்குறதாய் முடியும்.”

“செருப்பாலை இல்லை, குடையாலை தான் அடிப்பாளவை” சுப்புறு வந்து நின்றான். நெருப்புப் பெட்டி எடுக்க வந்திருந்தான்.

“சைக்கிளில போகேக்கை எதிர்க்க நடந்து வாற பெட்டையளின்ர மார்பை அப்பிடியே ஒரு பிடி பிடிச்சுட்டு போய்க் கொண்டே இருக்கலாம். அடுத்த தடவை அவளைப் பார்க்கேக்கை கண்டுபிடிக்கலாம். ஆளை அமத்தலாமா? இல்லையாவெண்டு”.

“இதில ஒரு கவனம் இருக்க வேண்டும். யாராவது குடையோட வாறாளவை எண்டால் உசாராய் இருக்கவேணும்.. குடையாலை கையை முறிச்சுப் போடுவாளவை.”

ஓகோ குடைக்கு இப்படியும் ஒரு பயன்பாடு இருக்குது. இது தெரிஞ்சால் குடையளின்ர விலை ஏறிவிடும்.

தனது இடது மணிக்கட்டை தடவியபடி “பில் முப்பது ரூபாய் வருகுது” ஸ்கொட் கூறினான். எங்கயோ குடையாலை அடிவாங்கி இருக்கின்றான்.

செத்தல் மிளகாய் வித்த காசில் எழுபது ரூபாய் மிச்சம். கடையை விட்டு வெளியே வந்தோம்.

“இதே உன்ர சைக்கிள்.”

மாடு வாங்க வந்தவன், மாட்டைச் சுத்திச் சுத்திப் பார்த்த மாதிரி சைக்கிளைத் தடவிப் பார்த்தான்.

“இது என்னடா கெரியல்?”

“ஒரு சைக்கிள்தான் நிற்குது. அப்பர் சந்தைக்கு கத்தரிக்காய் மூட்டை ஏத்துறதுக்குத்தான் பெரிய கெரியல் போட்டவர்.”

“சந்தைக்கு வாழைக்குலை கட்டிக்கொண்டு போற சைக்கிள்களில திரிஞ்சா உங்களை எவளடா பார்ப்பாளவை.”

“மட்காட் எல்லாம் ஆடுது. பிரிவில் சத்தம் போடுது. நீ நாளைக்கு சைக்கிளை ஒருக்கா கழட்டிப் பூட்டக் கொடுத்திடு. பிறகு வெள்ளிக்கிழமை மத்தியானத்துக்குப் பிறகு சைக்கிளை பள்ளிக்கூடத்தில விடாதே. முன்வீட்டு வளவுக்கை நிற்பாட்டிவை.”

பெரிய தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிடுகின்ற தளபதியைப் போல சுப்புறு தெரிந்தான்.

“உந்த கெரியலை கழட்டி வைச்சிட்டு வா. கொப்பர் காலையிலதானே சந்தைக்குப் போறவர்.”

“நான் வழமையாய் சைக்கிளை பள்ளிக்கூடத்தில தான் விடுறனான்.”

“வெள்ளிக்கிழமை; நாங்கள் பள்ளிக்கூடம் முடிய பத்து நிமிசம் முந்தியே வெளிக்கிட்டுட வேண்டும்.”

“பள்ளிக்கூட கேட் பூட்டிக் கிடக்குமே.”

“முன்வழியால இல்லை. பின் மதில் ஏறிக் குதிக்க வேண்டும். குதிப்பைதானே? சைக்கிளை முன்வீட்டில விட்டால்தான் அதை எடுத்துக்கொண்டு போகலாம்.”

“பள்ளிக்கூடம் விட்டதுமே போகலாமே?”

“கோப்பாய் கிறிஸ்டியன் கொலிச் விட்டுப் பெட்டையள் ரோட்டில வாற நேரம், நாங்கள் அங்க நிற்க வேண்டும்.”

“அதுக்கு இஞ்சை இருந்து பதினைஞ்சு நிமிசம் முந்தி வெளிக்கிட்டால்தான் சரி சுப்புறு” ஸ்கொட் கூறினான்.



“பத்து நிமிசம் போதும். இரண்டு தரம் ஊன்றி உழக்க வந்திடும்.”

அங்க அழகான பெண் ஒருத்தியை எனக்கு சுப்புறு அறிமுகம் செய்து வைக்கப் போகின்றான். எனக்கு குதியாட்டமாய் இருந்தது. எப்படி முதலில் கதையை ஆரம்பிப்பது என்று எனக்குத் தெரியேலை. அது தெரியும்தானே என்று நினைத்து, எனக்குச் சொல்லித்தராமல் விடப்போகின்றான்.

“என்னெண்டு முதலில நான் பேச வேண்டும்..?” தயங்கியபடி கேட்டேன்.

“பேச்சு ஒன்றும் கிடையாது. உனக்கு எப்படி இந்த மார்பு பிடிக்கின்றது என்று காட்டித்தாறன்.”

எனக்கு அந்த இரவிலும் வியர்த்துக் கொட்டியது.

இரவிரவாக நித்திரையில் விதம் விதமான மார்புகளும், விதம் விதமான குடைகளும் வந்து வந்து பயமுறுத்தின.

காலையில் முதல் வேலையாக சைக்கிள் கெரியலை சாவி போட்டு கழட்டி வைத்தேன்.

“டேய் கொப்பர் நாளைக்கு காலை சந்தைக்குப் போக வேண்டுமடா.” ஆச்சி புறுபுறுத்தாள்.

“சும்மா தொணதொணக்காதையன. இரவைக்கு



படிப்பகம்

www.padippakam.com



திரும்பவும் பூட்டலாம்."

சைக்கிளை ஓட்டும்போது தெரிந்தது. கடகட என்று ஒரே சத்தம். இவ்வளவு நாளும் எனக்கு கேட்காமல் இருந்திருக்கு.

வல்லிபுரம் கடையில் பிரேக் போட்டு நிறுத்தினேன்.

"அண்ணை சைக்கிளை ஒருக்கா கழட்டிப் பூட்ட வேண்டும்."

"உதில விட்டு பூட்டித் திறப்பை தந்திட்டுப்போம்."

"பின்னேரம் எடுக்கலாமே அண்ணை."

"பின்னேரமே ? சனிக்கிழமை வந்து பாரும்."

"அண்ணை அவசரமாய் வேணும். காசைப் பற்றிப் பிரச்சினை இல்லை."

வல்லிபுரத்தார் ஏற இறங்க ஒருக்காப் பார்த்தார்.

"இருபது கூட வரும். ஓ கேயோ?"

"ஓ கே அண்ணை."

"நாளைக்கு மத்தியானம் வாரும். ரெடியாய் இருக்கும்."

சைக்கிளை விட்டு விட்டு பள்ளிக்கு நடந்தேன். இரண்டு புறம் மாணவர்களும் மாணவிகளுமாய் நடந்துகொண்டிருந்தனர். நடப்பதும் சந்தோசமாகத் தான் இருந்தது.

ஒரு பத்து அடி தூரத்தில் வனிதா போய்க்கொண்டிருந்தாள். அவளை உரசிக்கொண்டு தாண்டுவம் என்று இரண்டு அடி எட்டு வைத்தேன். நேரம் பார்த்து, அரச வீதியால் வந்துகொண்டிருந்த மிஸ்சிஸ் தவரட்ணம் டீச்சர் மெயின் ரோட்டுக்குள் ஏறினார்.

அவ எப்பவும் வெகு நிதானமாகத்தான் நடந்து வருவா. நடையில் எந்த அவசரமும் கிடையாது. இன்னமும் எத்தனை காலடி எடுத்து வைச்சால் பள்ளிக்கூட வாசலில் நிற்கலாம் என்று அவவுக்கு தெரியும்.

அங்கை இங்கை என்று எந்தப் பக்கமும் திரும்பிப் பார்க்கிற பழக்கமும் இல்லை. ஆனால் மனுசிக்கு என்னென்ன நடக்கிறது என்று தெரியும்.

"குட் மோனிங் டீச்சர்."

"குட் மோனிங். குட் மோனிங்."

"என்ன சைக்கிளைக் காணேல்லை. நேற்றைக்கு டவுனுக்கு போய் வந்ததில பழுதாப்போச்சுப் போல" ஒரு பார்வை பார்த்தார். அது கண்களை துளைத்து அதில் உள்ளதை படிக்க முயன்றது.

"இல்லை டீச்சர். காத்துப் போட்டுது. ஓட்ட விட்டிருக்கிறன்." மனுசி எங்கயோ வழி தெருவில, சுப்புறுவோட வைச்சு என்னைக் கண்டிட்டுது என்று எனக்குப் புரிந்துவிட்டது.

"வீட்டில ஒரு டொக்கிமனை விட்டுட்டன். சைக்கிள் எண்டால் நீர் எடுத்துக்கொண்டு வரலாம்."

"ஓடிப்போய் எடுத்துக்கொண்டு வாறன் டீச்சர்."

"மிக்க உபகாரமாய் இருக்கும். வீட்டில மகள் நிற்கிறா. இண்டைக்கு அவ கொலிச்சுக்குப் போகேல்லை. கதவை கொஞ்சம் ஊண்டித் தட்டும். ஏதாவது கதைப் புத்தகத்தோட இருப்பாள், கேட்காது. எண்ர மேசையில உள்ள பச்சை கலர் அட்டை போட்டது எண்டு சொல்லும்."

டீச்சர் சொல்லி முடிக்க முதல் பறந்தேன். டீச்சரின் மகளும் வடிவுதான். இராமநாதன் கொலிச்சில படிக்கிறாள். மெல்லமாக கதவைத் தட்டினேன். கதவு உடனேயே திறந்தது.

டீச்சரின் அம்மாதான் வந்தார். தலை மயிர் எல்லாம் நரைத்திருந்தது. முகத்தில் இரண்டு குழி விழுந்திருந்தது. அந்த குழிகளுக்குள் இருந்த கண்களைக் கொண்டு, என்னை ஒரு அசிங்கமான பிராணியைப் பார்ப்பது போல பார்த்தார்.

"என்ன வேணும்?"

"இல்லை... டீச்சர் தன்ர டொக்கிமன் ஒன்றை விட்டுட்டாவாம்... மேசையில பச்சைக் கலர் அட்டை போட்டபடி இருக்கும்..." நான் முடிக்கும் முன் முகத்திற்கு நேரே அது நீண்டது.

"ரோட்டில விழுத்தாமல் கொண்டு போடா."

இந்தக் கிழவிக்கு என் மேல் என்ன ஆத்திரம் என்று புரிந்துகொள்ள முயற்சி பண்ணினேன். அதற்குள் பள்ளிக்கூடம் வந்துவிட்டது.

ஆசிரியைகளின் அறையடியில் நின்று எட்டிப் பார்த்தேன்.

வாசலில் என்னைக் கண்டதும் டீச்சர் உள்ளே வரும்படி சைகை காட்டினார்.

பவ்யமாக அந்த டொக்கிமன்டை அவர் கையில் ஒப்படைத்தேன்.

"தாங்யூ சுந்து."

ஜப்பானியர்களின் ஸ்டைலில் தலை சாய்த்து டீச்சருக்கு மரியாதை செய்துவிட்டுக் கிளம்பினேன்.

"He is my favourite student . . . நல்ல பிள்ளை" மிஸ்சிஸ் தவரட்ணம் சொல்லியது எனக்கும் கேட்டது.

பத்திரிகையும் கையுமாக இருந்தவர்கள், தமது கைப்பைக்குள் எதையோ தேடிக் கொண்டிருந்தவர்கள், தங்களுக்குள் ஏதோ வம்பளந்துகொண்டிருந்தவர்கள் என்று எல்லா டீச்சர்மாரும் என்னை நிமிர்ந்து பார்த்தது என் உள்ளுணர்விற்குத் தெரிந்தது.

கர்வமாக இருந்தது. வகுப்பை நோக்கிப் போனேன். சுப்புறுவும் அப்போதுதான் வகுப்புக்கு வந்துகொண்டிருந்தான்.

"சைக்கிளை கழட்டிப் பூட்டக் கொடுத்தனியே?"

"ஓம்"

"குட். நாளைக்கு பின்னேரம் மூன்று மணிக்கு மதில் பாயிறம். மறந்து போகாதே."

"நான் உதுகளுக்கெல்லாம் வரேல்லை."

சுப்புறு ஆச்சரியமாக என்னைப் பார்த்தான். அண்டம் காகம் கண்ணை உருட்டி விழித்தது போல கோணலாக முகத்தை சரித்து விழித்தான். பிறகு சிரித்தான்.

"உங்களுக்கு ஒரு சாண் கதைதான்டா சரி" திரும்பியே என்னைப் பார்க்கவில்லை, போய் விட்டான்.

அதற்குப் பிறகு என்றைக்குமே என்னை திரும்பிப் பார்த்தது கிடையாது. சுப்புறு நல்லவன், யாரைப் பற்றியும் யாருக்கும் எந்தக் காலத்திலும் சொன்னவன் இல்லை.

**ஓவியங்கள் : குணசேகரன்**



படிப்பகம்

www.padippakam.com

# தாஞ்யா கவிதைகள்



Kim Tkatch

**1**

தொலைவில் கேட்கும் உன் குரலை
என் வீட்டுச் சாளரங்கள்
தடுக்கின்றன

கால்களை அகட்டி வைக்க இயலாத
வெள்ளைப் புதர்களுக்குள்
பாதங்கள் தாழ
இனங்காணத் தெரியாத
சில குரல்களுடன் தொடர்கின்றேன்

மேகங்களுக்குள் ஒளிந்து கொண்டு
ஏதோ ஒன்று அச்சமூட்டுகிறது
தனிமை நீண்டு
விரக்தியில் என் அகங்காரம்
அழுகையாய் வெடித்து
கேவலாய் அவ் ஒலி
காற்றில் கலக்கும்

அப்பொழுது
ஆழ்ந்த நேசத்தில் உருகும்
இடைவிடாத உனது தவிப்பை
என்னை அடைய விடாமல்
இச்சாளரங்கள்
தடுக்கின்றன.

**2**

நீண்டு கொண்டிருக்கிறது
ஒற்றையடிப்பாதை
தீராத மோகத்துடன்
பிணைந்து திரிந்த நானும் நீயும்
வெவ்வேறு தெருக்களில்
வெவ்வேற காலநிலைகளில்

உன் நினைவில்
இந்த தெருக்களில்
மஞ்சள் மர இலைகளின் நிழலில்
அமர்ந்து கொள்கிறேன்
மெல்லிய சலசலப்பு
இனிய நினைவுகளுள்
இழுத்துச் செல்கிறது

இன்னமும்
நம்பிக்கைகளை தந்துகொண்டிருக்கும்
உன்னிடமிருக்கும் இந்த வீட்டின்
திறப்புக்கள்.
அர்த்தமற்ற கணங்களில்
கிழித்துப் போட்ட எல்லாக் காகிதங்களும்
காதலால் உயிர் பெற்றுக் கொள்கிறது
இந்த ஊதா நிற சேலை
அந்த பச்சைக் கலர் வேட்டி
நினைவுகளை அறுத்தெறிய
முடிகிறதா?

ஒவ்வொரு கணமுறிவிலும்
உயிர்ப்புற்று எழுகிறது
தூக்கிப் போட முடியாத 108 கணங்கள்

வீட்டுக்குத் திரும்பும்
ஒவ்வொரு பொழுதுகளிலும்
சந்தோசம் தருகிறது
நீ காத்திருக்கக் கூடும் எனும் பிரம்மை

வாழ்வும் காதலும்
பிரிவும் கூட
நம்பிக்கைகளால் தான்
வாழ்ந்து கொண்டிருக்கிறது


படிப்பகம்

www.padippakam.com




# பொய்

வெங்கட்ரமணன்

பொய் என்பது என்ன? உண்மைக்குப் புறம்பான வ்ற்றைக் கூறுவது, நிகழ்த்துவது அல்லது சுட்டுவது என்று வைத்துக்கொள்ளலாம். பொய்கள் இரண்டு வகைப்படும்; சுடும் பொய்கள், சுடாத பொய்கள். "எங்க வீட்டு சுந்தரி அற்புதமா கோலம் போடுவா" என்று அமெரிக்க மாப்பிள்ளைக்காக அம்மாக்கள் சொல்வதைச் சுடாத பொய் வகையில் சேர்க்கலாம். சுந்தரி சியாட்டிலில் கோலம் போடுவதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைவு. அப்படியே அங்கே பிரமாதமாகக் கோலம் போடாமல் கிறுக்கித் தள்ளினாலும் அடுத்த வீட்டு அமெரிக்கப் பொம்பளை வந்து பார்க்கப் போவதில்லை. அப்படியே அவர் பார்த்தாலும் "ஓ வெரி ப்ரெட்டி" என்று கையைப் பிடித்து முத்தம் கொடுப்பதற்குத்தான் சாத்தியங்கள் அதிகம். அந்த அம்மணி நாலாவது வீட்டுக்குப் போய் "யூ நோ, சுண்டரி ஈஸ் வெரி பேட் அட் கொலம்" என்று முகவாய்க்கட்டையைத் தோளில் இடித்துக் கதை பேசச் சாத்தியங்கள் மிகவும் குறைவு. மறுபுறத்தில், வழக்கு நடக்கும்பொழுது ஜோடிக்கப் பட்ட சாட்சியங்களை வைத்துக் கொண்டு மரண தண்டனை வாங்கித் தரவும் பொய்கள் பயன்படலாம். அவை சுடும்.

வள்ளுவர் ஒரு படி மேலே போய் "புரை தீர்ந்த நன்மை பயந்தால்" பொய்யை உண்மையின் கணக்கில் எழுதலாம் என்று சொல்லிவிட்டார். அதாவது, ஒருவருக்கு அதனால் நன்மை கிடைக்கும் என்றால் (வேறு யாருக்கும் கெடுதல் இல்லாமல்) தாராளமாகப் பொய் சொல்லலாம். சாகப் போகிறார் என்று தெரிந்தவரிடம் பல நாட்கள் டாக்டர்கள், "ஒன்னுமில்லை சார், பாருங்க நீங்க ஜாம் ஜாம்னு எழுந்து நடப்பீங்க" என்று முடிந்தவரை சொல்லிக்கொண்டிருப்பதை வள்ளுவர் கணக்குப்படி அந்தப் பக்கத்தில் தாராளமாக வரவு வைக்கலாம். இதற்காக, தெரிஞ்சா எங்கப்பா வருத்தப்படுவார் என்று சொல்லிக்கொண்டு "இல்லப்பா சத்தியமா சிகரெட் பிடிக்கல்ல, சீச்சீ ... நாம் போயி ... இதெல்லாம் ..." என்று மழுப்புவது கட்டாயம் 'புரை தீர்ந்த' சமாசாரம் கிடையாது. ஆனாலும் அவரவர்கள் வசதிப்படி கணக்குப் புத்தகத்தின் கோட்டை இந்தாண்டையும் அந்தாண்டையும் நெகிழ்த்திக்கொண்டிருப்பது என்னமோ உண்மைதான்.

### யார் பொய் சொல்கிறார்கள்?

எல்லோரும் சொல்கிறோம். அட, ஒத்துக்குங்க, நீங்களும்தான். பூமியில் மானிட ஜென்மம் எடுத்தவர்கள் புரை தீர்ந்த, தீராத வகைப் பொய்களைத் தினசரி சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சந்தோஷமான விஷயம் என்னவென்றால் இவற்றில் பெரும்பாலானவை சுடாத பொய்கள்தான். என்ன இப்ப ஒத்துக்கிறீங்களா?

பொதுவில் பொய் சொல்வது மட்டமான செயல் என்று கருதப்பட்டாலும் சமூகத்தில் பொய்கள் சொல்பவர்கள் சிறப்பான இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது பலராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவர்களில் அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள் முக்கியமானவர்கள். சில சமயங்களில் இவை தொழில் தர்மமாகக் கருதப்படுகின்றன. தன்னுடைய கட்சிக்காரரைக் கரையேற்றுவதற்கு வழக்கறிஞர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். "நல்ல வூடு சார், ஒரு பொட்டு தண்ணி உள்ள வராது" என்று ஓட்டை வீட்டைத் தலையில் கட்டுவது வீட்டுத் தரகரின் தொழில் சாமர்த்தியம். இதே போல விளம்பரத் துறை முழுவதும் பொய்யாலோ, அல்லது தவிர்க்கப்பட்ட உண்மைகளாலோ நிறைந்தது. பொய்யால் கட்டியெழுப்பப்பட்டது நடிப்புலகம். எனவே பொய் முழுவதுமாகத் தவிர்க்கப்பட வேண்டிய விஷயமில்லை. வள்ளுவர் கணக்கு, தொழில்தர்மம் இத்யாதி என்று பொய்களுக்கு லைசென்ஸ் உண்டு. இதை முறையாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் வாழ்க்கையில் முன்னுக்கு வருகிறார்கள். எனவே நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் வரையறைக்கு உட்பட்டு பொய் சொல்லி பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

### பொய்யும் சமயங்களும்

மனிதனை உய்விக்க வந்தவையாக அறியப்படும் சமயங்களிடையே பொய்யைப் பற்றிய ஒரு தீர்க்கமான முடிவு இல்லை. கிறிஸ்துவம்

"ஆனால் கோழைகள், நம்பிக்கை இல்லாதோர், அருவருப்புக்குரியோர், கொலையாளிகள், பரத்தைமையில் ஈடுபடுவோர், சூனியக்காரர்கள், சிலைவழிபாட்டினர், பொய்யர் ஆகிய அனைவருக்கும் நெருப்பு கந்தகமும், எரியும் ஏரியே உரிய பங்கு ஆகும். இதுவே இரண்டாம் சாவு"– (திருவெளிப்பாடு, 21:8, புதிய ஏற்பாடு).

என்று உறுதியாகச் சொன்னாலும், பல இடங்களில் அது நெகிழ்ந்துகொள்வதைப் பார்க்கலாம். உதாரணமாக ஒருவரை கிறிஸ்துவராக மாற்றுவதற்குப் பொய் சொல்வது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதே போல



படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொரு மதமும் பொய்யைப் பற்றி இருதலையான கருத்துக்களைச் சொல்லுகின்றன. இஸ்லாத்தில் ஒருவர் உயிரைக் காப்பாற்ற, சமாதானத்தை அடைய, புனிதப் பயணத்தை மேற்கொள்ளப் பொய் சொல்ல லாம் என்று ஹதீது இருக்கிறது. ஆனால் அங்கே அல்லாவிற்கும் முகம்மது நபிக்கும் பொய்யானவர் களுக்கு மன்னிப்புக் கிடையாது.

"நான் இறை தூதர் சொல்லக் கேட்டேன்; 'என் மீது பொய்யானவற்றைச் சுமத்துதல் என்னையல்லாத வர்கள் மீது சுமத்துதலுக்கு ஒப்பானதல்ல. எனக்கெதிராக வலிந்து பொய் சொல்லு பவர் நரகத் தீயில் தனக்கான இடத்தை நிச்சயத்துக் கொள்கிறார்' " (ஷகீஹ் அல்–புக்ஹாரி 2.378).

யூதர்களுக்குக்கூட பரிந்துரைக்கப்பட்ட பொய்கள் சில உண்டு; சாட்சி சொல்லும் பொழுது உண்மையைச் சொல்லாமல் விட்டுவிடலாம், ஆனால் ஒட்டுமொத்த மாகப் பொய் சொல்லக் கூடாது. பணக் காரர்கள் பொறாமையைத் தவிர்க்கப் பொய் சொல்லலாம். மதாச்சாரியாரின் (டோரா ஆசிரியர்) செலவுக்குப் பணம் வசூலிக்கும்பொழுது பெண்ணின் திரு மணத்திற்காக என்று பொய் சொல்ல லாம். குருக்களுக்கு என்றால் பணம் தராமல் போகக்கூடும். ஸப்பாத் தொழுகைக்கு வீட்டுப் பெண்கள் கிளம்ப நேரமானால், லேட்டாகிவிட்டது என்று பொய் சொல்லலாம் என்று கூட நடை முறைக்கு ஏற்றபடி டோராவில் வரை யறுக்கப்பட்டுள்ளது. நாட்டைக் காக்க ஷத்ரியர்களும், வியாபாரத்தில் வைசியர் களும் பொய் சொல்லலாம் என்று கீதை சொல்லுகிறது. நெகிழ்வு கொண்ட இந்து மதத்தில் பொதுவில் மறுதலையான கோட்பாடுகள் இறைந்து கிடக்கின்றன.

இப்படி நீதிநெறிகளைப் போதிப்பதாக வந்த மதங்கள்கூட பொய்யைப் பற்றி தீர்க்கமாக தவிர்க்கப் பட வேண்டியது என்று சொல்லவில்லை. சில வகையான பொய்களை முற்றிலும் தடைசெய்யும் இறைநூல்கள், வேறு இடங்களில் பொய் சொல்ல அனுமதிக்கின்றன. ஒரு வகையில் இந்த அனுமதி பொய் சொல்லுவதை ஊக்குவித்தல் என்றுதான் கொள்ள வேண்டும்.

**பொய்யின் வகைகள்**

செய்ததை மறுப்பது: "இல்லை, நான் செய்யல" – இதுதான் உலகிலேயே அதிகமாகப் புழங்கி வரும் பொய்யாக அடையாளம் காணப்படுகிறது. "டேய் ஏன்டா செவுத்துல கிறுக்கினே?" என்று கேட்டால் அடுத்த நிமிடம் என்னுடைய மூன்று வயது மகன் "நா இல்லேப்பா, அண்ணந்தான் ..." என்று பதில் சொல்கிறான். இதில் தொடங்கி எண்பது வயதாகும் என்னுடைய டயாபடீஸ் அப்பாவிடம் "ஏம்பா கல்யாணத்துல பாயஸம் சாப்டே?" என்று கேட்டால், "சீ, இல்லேடா, நா எங்க சாப்டேன்" என்று அனிச்சை யாகப் பொய் சொல்கிறார். இதுபோன்ற பொய் களுக்கு மனிதனின் பத்திரமற்ற உணர்வுகள்தான் காரணம் என்று ப்ராய்ட் சொல்கிறார் (இல்லையா? அப்ப வேற யாராவது இதே மாதிரி கட்டாயம் சொல்லியிருப்பார்).

செய்ததைச் செய்யாததாக்கிப் பிறர் தலையில் கட்டுவது: "நான் கிழிக்கல்லப்பா, சித்ராதான் கிழிச்சா" என்று பொடிசுகள் தங்கள் பொய்யின் திறத்தை அதிகரிக்க காரண காரியங்களைப் பிறர் தலையில் சுமத்துவதைப் பார்க்க முடியும். உலகத்தி லேயே அதிகமாகப் புழங்கி வரும் பொய் என்று ஏதோ பெரிய ஆராய்ச்சிகள் நடந்ததைப் போலவும் அதில் தீர்மானமாக முடிவு கண்டதைப் போலவும் சொல்வதுகூட இந்த வகைதான். சில சமயங்களில் இது தேவையாக இருக்கிறது. ஏனென்றால் இதுதான் அதிகமான பொய் என்று வெறுமனே எழுதினால் படிக்க சுவாரசியம் வருவதில்லை. சுடாதவரை இதுவும் பரவாயில்லை. ஆனால், கொன்னுடுங் கோன்னு சாமியார் சொன்னார் என்று நேரில் இருந்து பார்த்ததைப் போலச் சொல்வது?



செய்யாததை செய்ததாக ஏற்றுக்கொள்வது: பல சமயங்களில் சிலர் செய்யாத தவறுக்குப் பொறுப்பேற் பதைப் பார்க்கலாம். 1956ஆம் ஆண்டு ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸ் அரியலூருக்கு அருகே விபத்துக்குள்ளா னது. அதில் கிட்டதட்ட 144 பேர்கள் செத்துப் போனார்கள். இதற்குத் தானே காரணம் என்று பொறுப்பேற்பதாகச் சொல்லி அப்பொழுதைய இரயில்வே மந்திரி லால் பஹதூர் சாஸ்திரி தன்னுடைய பதவியைத் துறந்தார். ஒரு வகையில்



படிப்பகம்

www.padippakam.com



இதுவும் பொய்தான் – பொதுநலம் கருதி பொய் சொல்வது. பலரும் சாஸ்திரியின் 'நேர்மையைப்' பாராட்டுகிறார்கள். வேடிக்கையான விஷயம் என்ன வென்றால் இங்கே பொய் சொல்லுவது நேர்மையாகக் கருதப்படுகிறது.

தன்னைத் தானே சமாதானம் அல்லது திருப்தி செய்யச் சொல்லும் பொய்கள்: என்னடா வெயிட் போட்டுக்கிட்டே போறே, என்று யாரிடமாவது சொன்னால் உடனே வரும் பதில், "சீச்சீ, வெயிட்டெல் லாம் போடல, கொஞ்ச நாளா எக்ஸர்ஸைஸ் பண்றத நிறுத்தியிருக்கேன்ல அதுனாலதான், நெனச்சா ஒரே வாரத்துல அஞ்சு கிலோ கொறைக்க முடியும்" என்ற ரீதியில் இருக்கும். பல சமயங்களில் பொய் சொல்லுவது தன்னுடைய சுயத்தை நிலைநாட்டிக் கொள்ளப் பயன்படுகிறது. இது சில சமயங்களில் தன்னை மாத்திரமல்லாமல் தன்னைச் சேர்ந்தவரை யும் உள்ளிட்டுப் பொய் சொல்வது தவறில்லை என்று கருத வைக்கிறது. "மாநிறம், சராசரி உயரம், குடும்ப வேலைகளில் தேர்ச்சி பெற்ற பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை" என்று வந்தால் அந்தப் பெண் கறுப்பு நிறமாகவும், குள்ளமாகவும், படிப்பு குறைவான வளாகவும் இருப்பது வழக்கம். இதே ரீதியில் மண மக்கள் விளம்பரங்கள் எல்லாவற்றிலும் பொய்கள் நெடுகத் தூவப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்த லாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை.



ALIEN_BOB

### பொய்யின் நம்பகத்தன்மை

பொய்யின் நம்பகத்தன்மை முற்றாக அதைச் சொல்பவரின் திறமையையே சார்ந்தது. சுய மறுதலிப்பு (self-negation) என்று தர்க்கத்தின் ஒரு வகை உண்டு. "இந்த வாக்கியம் பொய்யானது" "நான் ஒரு பொய்யன்" என்பதைப் போன்ற தன்னெதிர்களின் (Paradoxes) மெய்திறத்தை அறுதியிடுவது இயலாதது. இப்படியான வாக்கியங்கள் பொய்யையும் உண்மை யும் பிரித்துக் காட்டலில் மொழிகளின் இயலா மையைக் காட்டுகின்றன. மொழியின் இயலாமைதான் பேச்சுத்திறனைச் சார்ந்து பொய்க்கு நம்பகத்தன்மை அளிக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் பேரழிவு ஆயுதங்கள் இராக்கில் இருக்கின்றன என்பதை முன்னிறுத்தி இராக்கின் மீது போர் தொடுத்தார். தொடர்ந்து வந்த நாட்களில் அமெரிக்க அரசு இயந்திரம் முழுவதும் இந்தப் பொய்யை வார்த்தைகளின் சிலம்பாட்டங்களால் திறமையாக மறைத்து, ஜார்ஜ் புஷ் அடுத்த முறையும் ஜனாதிபதி யாக உதவியது. மிகைபடக் கூறல், திசை திருப்பல், சொல்லடுக்கல், போன்ற மொழியியல் வித்தைகளெல் லாம் இங்கே பயன்பட்டன. மறு தேர்தல் சமயத்தில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தனவா இல்லையா என் பதைப் பற்றிய பேச்சு கிடையாது. "அவருக்குக் கிடைத்த தகவல்கள் அப்படித்தான் இருந்தன", "என்ன, கொஞ்சம் கூடச் சேர்த்துச் சொன்னார்", "அரசியலில் இப்படித்தான் முன்னே பின்னே இருக்கும்", "அவர் உண்மையாகவே அப்படித்தான் நம்பினார்" என்ற ரீதியில்தான் வாதங்களெல்லாம். அதாவது முற்றறுதி உண்மை (absolute truth) என்பதைப் பற்றி யாருக்கும் கவலை கிடையாது. கடந்த ஐந்து வருட அமெரிக்க அரசியலை ஆராய்பவர்களுக்குப் பொய் என்பதன் வரையறை நீர்த்துப் போனது நன்றாக விளங்கும். புஷ்ஷின் இரண்டாவது தேர்தலை நிர்ணயித்ததே அமெரிக்கா ஈடுபட்டிருக்கும் போர் தான். அது பேரழிவு ஆயுதங்கள் என்ற பொய்யை முன்னிறுத்தித் துவக்கப்பட்டது. பேரழிவு ஆயுதங்கள் இல்லாமை மறு தேர்தல் காலத்தில் நன்கு தெரிந் திருந்தும் புஷ் அமெரிக்க மக்களால் தெரிந்தெடுக்கப் பட்டார். அதற்கு முக்கிய காரணமாகச் சுட்டப் பட்டது புஷ்ஷின் நம்பத்தன்மை. அரசியலில் தற் காலத்தில் சரடு திரிப்பவர்கள் (Spin Doctors) என்று ஒரு பெரிய கூட்டமே இயங்குகிறது. இவர்களின் முக்கிய திறமை கூட்டியும் கழித்தும் உண்மையையும் பொய்யையும் தேவையான அளவில் கலந்து பொது மக்களிடம் நம்பகமூட்டுவது.

இருந்தாலும் காலப்போக்கில் உண்மை வெளிவரு வது நிச்சயம். "ஓநாய் . . . ஓநாய்" என்று கூவிய சிறுவனின் குரல் மூன்றாம் முறை எடுபடாமல் போனதைப் போல பொய் ஒரு நாள் தெரிந்துபோகும். ஆனால், தெரியும்வரை காலத்தை ஓட்டலாம், தெரிந்தால் மன்னித்து விடுவார்கள், தெரிந்தும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது போன்ற தந்திரங் களை முன்வைத்தே பொய்கள் சொல்லப்படுகின்றன.

### பொய் சொல்லக் கற்றுக்கொள்ளுதல்

பொய் சொல்லும் வழக்கம் எப்படித் துவங்கு கிறது? குழந்தை உளவியல் நிபுணர்களின் கருத்துப்படி,



படிப்பகம்

www.padippakam.com

வெங்கட் ரமணன்



முதலில் பயத்தால் பொய் துவங்குகிறது. தண்ணியைக் கீழே கொட்டியது நான்தான் என்று சொன்னால் அடி விழும் என்று பயப்படும் குழந்தை, இல்லேம்மா என்று மெதுவாகச் சொல்லிப் பார்க்கிறது. இதில் வெற்றி கிடைத்தால் இதன் பலன் அடுத்த முறை இன்னும் கொஞ்சம் உரக்க, தைரியமாக இதே போன்ற பொய்யைச் சொல்லத் தூண்டுகிறது. மாறாக இதில் தோல்வி கிடைத்தால் சற்று நின்றுபோகும் பொய், பின்பு வேறொரு சமயத்தில் வெளிவந்து வெற்றி பெறுகிறது. பொதுவில் பொய்கள் வாழ்க்கையில் சுலபமாக வெற்றியைத் தேடித் தருகின்றன. கஷ்டப்பட்டு உழைப்பதைவிட கொஞ்சம் பொய் சொன்னால் எளிதாகக் கைமேல் பலன் கிடைக்கிறது. இயற்பியல் விதிகளின்படி நாம் தேர்ந்தெடுக்கும் பாதைகள் எல்லாமே சுருக்கமானவை.

சில சமயங்களில் பொய் சொன்னதற்காகக் குழந்தைக்கு அடி கிடைக்கக் கூடும். அது பயத்தை அதிகரிக்கிறது. எனவே அடுத்த முறை இன்னும் திறமையான பொய் வெளிவருகிறது. அதேபோல் சில சமயங்களில் பொய் கண்டுபிடிக்கப்பட்டாலும் அதற்கான தண்டனை வழங்கப்படுவதில்லை. இப்படியான சமயங்களில் பொய் சொல்லித்தான் பார்க்கலாமே என்று தோன்றுகிறது. இன்னும் சில சமயங்களில் தன்னைவிடப் பெரியவர்கள் நெஞ்சு நிமிர்த்தி தைரியமாகப் பொய் சொல்வதைப் பார்க்க நேரிடுகிறது. “சர்க்கரையா, இல்லயே, இவர் நாளைக்குத்தான் வாங்கிக்கிட்டு வர்றேன்னார்” என்று நேற்று வாங்கி வந்த சர்க்கரையை உள்ளே வைத்துக்கொண்டு சொல்வதைப் பார்க்கும் குழந்தைக்கு பொய் சொல்வது ஒரு பெரிய விஷயமே இல்லை என்று தோன்றுகிறது. கூட்டிக் கழித்துப் பார்த்தால், தண்டனை, தண்டனைக் கிடைக்காமல் இருத்தல், தப்பிக்கும் சாத்தியம், தண்டிப்பவரே பொய் சொல்வது என்று இப்படிக் குழப்பமான நிலையில் வளரும் குழந்தை பொய் சொன்னால் எளிதாக வேண்டியதை நிறைவேற்றிக்கொள்ள முடிவதால் பொய் சொல்லக் கற்றுக்கொள்கிறது.

பொய் சொல்வது மனிதர்களுக்கு மாத்திரமே சொந்தமானது என்று நினைக்க வேண்டாம். நிறத்தை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தியும், இலைகளினூடே மறைந்து கொள்ளும் பச்சைப் பாம்பும் பரிணாம வளர்ச்சியில் தங்கள் சுயத்தை மறைத்து பொய்யாக நடக்கக் கற்றுக்கொண்டவை. இப்படிச் சூழலில் தன்னை மறைக்க முயலாத (நேர்மையான?) விலங்கினங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. தேனீ ஆர்க்கிட் (Bee Orchid) என்று சொல்லப்படும் ஒரு வகைப் பூக்கள் கிட்டத்தட்ட தேனீயை ஒத்ததாகவே இருக்கின்றன, இவற்றின் வடிவத்தில் ஏமாந்த தேனீக்கள் ஆர்க்கிட்டின் இதழ்களுக்கு இடையே உடலுறவு கொள்ள முயற்சிக்கின்றன. இந்த உடலுறவினால் நன்மை என்னமோ ஏமாற்றும் ஆர்க்கிட்களுக்குத்தான். எனவே மறைத்தல், மறுத்தல், பொய் சொல்லுதல் என்பவை பரிணாமம் உயிரிகளுக்குக் கற்றுக் கொடுத்த பாடம்தான். அடுத்த முறை யாரையாவது பார்த்து “ஏய் நீ ரொம்ப அழகா இருக்கே” என்று பொய் சொல்ல வேண்டியிருந்தால் பழியை சார்ல்ஸ் டார்வின் மேல் போட்டுவிட்டு கண்களைப் பார்த்து தைரியமாகச் சொல்லுங்கள்.

### பொய்யைக் கண்டுபிடித்தல்

பல சமயங்களில் பொய்யைப் பொய்யாலேயே எடுக்க முடியும். “நா இல்லப்பா அக்காதான்” என்று சொல்லும் சிறுவனிடம் “டேய், நாந்தான் பாத்துக்கிட்டே இருந்தேனே” என்று இன்னொரு பொய்யைச்



படிப்பகம்

www.padippakam.com



சொன்னால், அடுத்ததாக ஒத்துக்கொள்வது நிச்சயம். பல கூடாத பொய்களை எடுக்க வேண்டிய அவசியமே இல்லை. இதற்குக் காரணம், பொய் சொல்பவர்கள் அடிமனதில் தங்கள் தவறைத் தாங்களே ஒத்துக் கொள்கிறார்கள். நாலு முறை “ஏன்டா வெயிட் போட்டுருக்கே” கேள்விக்குப் பொய் சொல்லும் நபர் கட்டாயம் அடுத்த முறை சாப்பாட்டில் கை வைக்கும் பொழுது ஒரு நிமிடம் நிறுத்திக்கொள்வார். இதை யெல்லாம் பொய் என்று அறுதியாக நிரூபித்தாக வேண்டிய கட்டாயம் யாருக்கும் இல்லை.

பொய்யைக் கண்டுபிடிக்கும் கருவி ஒன்றைச் செய்தாக வேண்டும் என்ற ஆர்வம் அறிவியலாளர்களுக்கு இருந்துகொண்டேயிருக்கிறது. அப்படியான கண்டுபிடிப்புகளுக்குள் மிகவும் முக்கியமானது பாலிகிராஃப் என்று சொல்லப்படும் கருவி. பொய் சொல்பவரின் உடலில் இரத்த அழுத்தம், வெப்பம், இருதயத் துடிப்பு, தோலின் விறைப்புத்தன்மை என அசாதாரண மாற்றங்களை அளந்து அவர் பொய் சொல்கிறார் என்று இந்தக் கருவி முடிவெடுக்கும். பல விசாரணைகளில் இந்தக் கருவி பயன்படுத்தப் பட்டாலும் இதன் நம்பகத்தன்மை இன்னும்



தெளிவாக அறுதியிடப்படவில்லை. சமீப காலங்களில் பொய் சொல்பவர் மூளையில் ஏற்படும் மின்னோட்ட மாறுபாடுகளை அணுக்கரு காந்த ஒத்திசைவு (Nuclear Magnetic Resonance) என்ற கருவியின் மூலம் நேரடியாக அளக்க முயற்சி செய்து வருகிறார்கள். உயிர்த்தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில் இலக்காகக் கொள்ளப்பட்ட முக்கிய துறைகளில் ஒன்று பொய்.

### அறிவியலும் பொய்யும்

பொய்க்கு முற்றாக இடம் மறுக்கப்பட்ட ஒரு துறை உண்டென்றால் அது அறிவியல்தான். ஆதார நம்பிக்கைகள் என்று எதுவுமில்லாத அறிவியலில் எந்த வழியிலும் பொய் ஒத்துக்கொள்ளப்படுவதில்லை. முரண்பட்ட அறிவியல் அறிக்கைகள் நாள்தோறும் வருவதைப் பலரும் இதற்கு எதிர்வினையாகச் சுட்டக் கூடும். உதாரணமாக, இன்றைக்கு ஒரு அறிக்கை மது அருந்துவது தீமை விளைவிக்கும் என்று வரும், நாளை அளவோடு அருந்துவதன் நன்மையைச் சொல்லக் கூடும். இதில் எது உண்மை – பொய் என்று பலரும் வியப்படையக் கூடும். இங்கு ‘அளவோடு’ என்ற வார்த்தையின் இடம் மிகவும் முக்கியமானது, இதுதான் உண்மை – பொய்யை நிர்ணயிக்கிறது. (இதற்கும் அரசியலில் பேரழிவு ஆயுதங்களைப் பற்றி மிகைபட பேசுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அளவோடு என்ற முன்னடை இல்லாமல் மதுவின் நன்மை பற்றி பேசுவது அறிவியல் கிடையாது). தங்களுடைய வர்த்தகத்திற்குச் சாதகமாக நிறுவனங்கள் ஆய்வு முடிவுகளைத் திரித்துக் கூறுவதும் அறிவியலுக்குப் புறம்பானதுதான். மெய்யல்லாத வார்த்தைகளுக்கு அறிவியலில் இடம் கிடையாது.

அடிப்படை அறிவியல் உண்மைகள் மாறிக் கொண்டே இருப்பதாகப் பலரும் குற்றம் சாட்ட முடியும். உதாரணமாக இருபதாம் நூற்றாண்டின் துவக்கம் வரை, ஒரு பருப்பொருளின் இடம் – திசை வேகம் இரண்டையும் தெரிந்திருந்தால் அந்தப் பொருளின் நிலையைத் துல்லியமாக உணர முடியும் என்ற தீர்க்கமான நம்பிக்கை இருந்தது. இதற்கு செவ்வியல் அறுதிப்பாடு (Classical Determinism) என்று பெயர். குவாண்டம் இயற்பியல், சார்நிலைக் கோட்பாடுகள் இவற்றின் வருகைக்குப் பிறகு நிச்சயமின்மை (uncertainty) போன்ற கருத்துகள் அறிவியலில் இடம் பிடிக்கத் தொடங்கின. அப்படியென்றால் செவ்வியல் அறுதிப்பாடு பொய்யா என்று கேட்கலாம். இந்த இடத்தில் பருப்பொருளின் தன்மை முக்கியமானதாகிறது. நாம் அன்றாடம் வாழ்வில் புழங்கும் பெருமப் பொருள்களுக்கு (macroscopic matter) செவ்வியல் விதிகள் முற்றாகப் பொருந்துகின்றன. ஆனால் அணுக்களின் உலகில் நிச்சயமின்மை தலையெடுக்கிறது. எனவே செவ்வியல் இயக்கவிதிகள் 'பொய்த்துப்' போகவில்லை, மாறாக அணுக்களின் உலகில் அவை ‘நீர்த்துப்’ போகின்றன.

அறிவியலில் பொய்க்கு இடமில்லாமல் இருப்பதன் காரணம், முற்றறுதி உண்மை (absolute truth) என்று விஷயத்தை அது தன் எல்லையில் உட்படுத்தாமல் இருப்பதே. அறிவியலில் உண்மை என்பது நம் இன்றைய புரிதலின் அடிப்படையிலானது. அறிவியல் உண்மையை அடைய முற்படுவதில்லை. தொடுகோடாக உண்மையின் அருகாமைக்கு நம்மை இட்டுச் செல்கின்றன.

பொய்யின் இடத்தை முற்றாக அறிவியல் மறுப்பதே அதன் உயர்வுக்குக் காரணம். இந்த ஒரே காரணத்தினால்தான் மதவாதிகளும், அரசியலாரும் அறிவியலுக்கு அடிபணிய வேண்டியிருக்கிறது. உருண்டையான பூமி, அது சூரியனைச் சுற்றி வருகிறது, உயிரினங்கள் தோற்றுவிக்கப்படவில்லை, அவை பரிணாம வளர்ச்சியால் உருவெடுத்தவை என்று மதங்களும் தம் அடிப்படை நம்பிக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. மறு புறத்தில் எந்த விதமான நம்பிக்கைகளும் இல்லாமல் அறிவியல் உண்மையின் திறத்தை நாளுக்கு நாள் உயர்த்திக் கொண்டேயிருக்கிறது.

இவ்வுலகில் அறிவியலுக்கு இடமிருக்கும் வரை உண்மை – பொய் என்ற வரையறையை மாற்றியெழுத யாராலும் முடியாது. ●



படிப்பகம்

www.padippakam.com



# ஒவ்வொரு நாவினதும் இறுதி வரி – எதிரொலி

## பிரதீபா தில்லைநாதன்

இடம்:

என்னை எப்பேர்ப்பட்ட இடத்தில் சிறை வைத்திருக்கிறாய். அரண்களோ திடமான இரும்புக் கேடயங்களோ அற்றும் ஸ்திரமான. எனக்குக் கூடத் தெரியவில்லை உன் ஒலியை வாங்கி எப்படி நான் சிறு அறைக்குள் நகர்ந்தேனென. ஒன்பது அறைகளா எல்லாமாய்ச் சேர்த்து, ஒன்றுள்தானே என்னை சிறை வைத்திருக்கிறாய். நான் விரும்பியதெல்லாம் மஞ்சள் கனலுள் கருகிய கறுப்புத் தணல். நீ காட்டியதோ சிவப்புச் சூரியன்.



காதல் (அப்படி அழைக்கலாமா அதை?) பரபரப் படைய உந்தும்போது, அறிவு ஊறுமாம் தெரிய வில்லை. செயலிழந்த மூளை, முகத்தின் திட்ட மிடப்படா உறுப்புகள் மற்றும் மெல்லிய தசைகள் சலிக்க, உடல் களைக்கிறது.

நீயே சகலதும் எனச் சொல்வது பொய், நீ என் அன்பின் மொத்தம். உடல், உயிர் என்பதுடன் ஆன்மா, நோவும் முதுகுகள், மெலிந்த கழுத்து. உடன் என் மெல்லிய விரல்கள், சிறுத்த கண்கள், சொரசொரப்பான தோல், அழுத்தி மூடிய உதடுகள், அதிகரித்து அல்லது மறைந்து வரும் பருக்கள்: இவை மீறி எழும்பும் வயதின் பூரிப்புகளை மாத்திரம் தொடரும் உனக்கு என் பற்றின புரிதல்களின் ஆழமின்மைகளை அறிவேன்.

சித்திரை மாதம். மாதங்களில் அழகானதல்லவா ஏப்ரல், அதுவும் இங்கே. முக்கியம் என்பதால் அழகெனப் புனைகிறேனோ என்னமோ.

இமைகள் தாழ்கின்றன, அதிகம் சோர்ந்தும் போகின்றன. உடல், மார்புள், மர்மங்களுள் நோவெடுக் கிறது. நோகிறது. உன் ஒலிப்பில் அவை பூரிப்படைந்த தென்னவோ உடலியலின்படி உண்மைதான். ஏதோ தயக்கம். இந்தச் சிறைக்குள் வாழ்நாளெல்லாம் நசுங்குவேன் எனவொரு சோர்வு.

உன் சிறைக்குள் கிடக்காத அன்றுகளில் எனக் கென்றொரு உலகம் உருவாக்கி, வியூகம் அமைத்து, வாழ்வதற்கு எதிரான குரல்களை வெட்டிவிட்டு எழ முனைந்து கொண்டிருந்தேன். தோல்விகளும் சாய்வுகளுமாய் சமனமற்றுத் தொடர்கையில், புதிதாய் உன் குரல். அப்பாவழி உறவுக்காரரின், உனக்குப் பிடிக்கா கூட்டத்தில் ஒருவனின் ஒலிகளின் சேர்வை யாய் ... சாதாரணமாய் ஆனால் ... என்னை உன்பால் அது இழுத்துவிடவில்லை, என்னை நோகப் பண்ணிய நொடியின் இழுப்பு வரை. அது ஓர் ஆனி முடிவு. ஆடி பிறக்க இருக்க, அந்த ரோசாக்களை அழுத்த மான சிவப்பில் பிரியங்கள் கிளர்ந்து நெகிழ பரிசளிக் கிறாய்.

வாசல்கள், சாளரங்கள், வீதிகள், புல்வெளிகள், மழை. ஈரமும் காதலும், இசையும் மோகமும் உண்மை என்று சொன்னாய். 'என்றென்றைக்குமாய்' 'இறுதி வரை' 'என்றென்றும்' என வார்த்தை பாடச் சொன்னாய். பூரிப்பின் கிளர்த்தல்கள், பயங்கள், என் பாலிற்குரிய அந்த தயக்கங்கள் ... நான் மீளவே இல்லை (இன்னும்).

சொட்டச் சொட்டக் காதல் வெறுத்துவிட்டது. உன்னை எப்படி அழைப்பது? உன் பெயரில் ன் எடுத்து ா போட்டு இழுத்து, கண்ணா, அன்பே இப்படி எப்படியோ. வார்த்தைகளை வெறுத்தேன்.



படிப்பகம்

www.padippakam.com



உன்னை வெறுமனே காதலிப்பது எவ்வளவு அர்த்தமற்றது.

நீயெனக்கொரு கனவு, நீயெனக்கொரு உண்மை, நீயெனக்கொரு வாழ்தல். ஆனால் கம்பிகளின் இரும்பு என் உடலுக்குத்தான் தேவைப்படுகிறது.

நான், பிறந்த நாள், என் இடம் – பொருள் – ஏவல் மறந்தே விடுகிறேன். நீ உணர்வாயா, நான் என்றொரு கனவு, நானென்றொரு உண்மை, நானென் றொரு வாழ்தல் உன்னால் தொடப்படாமல் கிடப்பில் கிடப்பதை.

பச்சை மரங்கள், புற்கள் – பூண்டுகள், செடிகள் – கொடிகள், பூக்கள், மகிழ்வுகள் எதிர் மறையாய் வறுமை, வக்கிரம், சின்னத்தனங்கள், பிற்போக்குகள் இவற்றூடே, என் மார்புகளை நீ வருடிக்கொள்ளும் போது பயணம் எவ்வளவு இதமாக இருக்கும் . . .

இயந்திரமாகிவிடும் வாழ்க்கை. 'அது அழகானது' அடிக்கடி சொல்வாயா நீ. ம். உயிர் விட்டு சூடிய நேசம் பொய்த்து ஈர்ப்பற்று வில்லங்கமாய்த் தொடர்வது கொடுமை.

எனக்கிருக்கும் நம்பிக்கை உச்சம் என்றால், எனக்கிருக்கும் பயம் அதைக் காலடியில் போட்டு மிதித்தே கொன்று விடும். அதைச் சொல்ல வேண்டும் உனக்கு: நம்மைப் போல காதலர்களின் கதை.

நாம் பேசி மயக்கமுற்றது போல அவர்களும் காதல் செய்தார்கள். 'என்றென்றைக்குமாய்' எனக் கடிதம் எழுதி முத்தம் இட்டு ஒட்டினார்கள். இன்று வாரிசுகள் கண்டு தொடரும் வாழ்க்கையில், சமைத் தல் உண்ணல் தவிர, இதமாய் வார்த்தைகள் அற்று எங்கு போய் ஒளிந்துள்ளது அந்தக் காதல்? சின்னச் சின்ன சந்தோஷங்களையும் விட்டுக் கொடுக்காது கௌரவம் பேசும் காதலா அவர்கள் வார்த்தை கட்டி, பயிரிட்டு குடும்பங் கொள்ள 'எங்கட காதல் வேற' எனக் கொண்டாடியது?

என் கொடிய சிறைக் காவலனே! இங்கு வாழ்தலுக்கான போரிடல், அந்நியமாதலில் அல்ல, இயந்திரமாதலில் என்கிறேன்.

**கேள் :**

ஒரு வெட்டரிவாள், விரிந்த ஆங்கில யூ அல்லது சரிந்த சீ எழுத்துப் போல, அறுவடை நெல்லு வெட்டும் அருவிக் கத்தி போல குத்திட்டு நிற்க, அதற்குள் அவள் அடங்கி விடுகிறாள். வெட்டரி வாளின் வளைவுக்குள் அவளது கழுத்து. இரத்தம் சொட்டுகிறது. 'சுகமில்லாமற் போகும்' போதிருக்கும் கறுத்தக் கலவையற்ற இரத்தச்ச் சிவப்பு. உடம்பும் அதற்குள்தான். ஆனால் அசைய விருப்பமில்லை – அது ஒரு குரூரமான இன்பமாய். கழுத்தை நிமிர்த்தி னால் தலை வெட்டரிவாளின் நுனியில் மோதும், சரி என நன்றாக கீழே உட்கார்ந்தால் அதன் ஆரம்பம் அவளது தொடைகளை, பிறப்புறுப்புகளை இல்லாதொழித்துவிடும், அவ்வ்வ்வளவு கூர்மை.

**அவன் ஒலி :**

இரவிற்தான் அவள் எனக்குத் தேவையாக மித மிஞ்சிய அழகுடன் இருப்பாள். பகல் குறைப்பிக்கும் முக அழகைக் கூட்டும் இரவின் குளிர் சீண்டலில் அவள் அழ ஆரம்பிப்பாள். 'இந்த உலகத்திலிருந்து விடுதலை வேண்டாம், முன் ஜன்னலை நெருக்க மாய்ப் பார்க்கும்படியாய் செய்' என உளறுவாள், ஏன் நான் களைத்துத் தூங்கிப் பாதி விழிக்கும் இராக்களிற் கூட. கண்ணீர் விறைப்பூட்டும். எதுவும் செய்வேனென வாக்குகளை வீசுவேன்.

அவள் அவற்றை நம்பினாள். இறுதி வரைக்கும் நான் உணர்ந்ததெல்லாம் 'மீளமீள வீதிக் குமிழ் விளக்கில் மோதி வீழும் விட்டில்கள் போல' அவளால் நம்ப மட்டுமே முடியும் என்பதே. நகர, அதுவும் 2 bed-room apartment ஐத் தாண்டி ஒரு அடியும் எடுத்து வைக்க முடியாதென்பதுவும். முக்கியமாக, அவ் ஜன்னல் வீட்டில், வேலை செல்லும் பிள்ளை களை உடைய கிழவர் இருப்பதை இவளால் என்றுமே அடையாளங் கண்டு, அறிந்துகொள்ள முடியா தென்பதும்.

கொட்டிக்கொண்டிருக்கும் முடி குறைந்து, நூற்பந்தாய் சாம்பல் நிறமாய் வெள்ளை வரைந்த பின்பும், இவள் என்னுடன் இருப்பாள், இரவுகளை சுலபமாக்குவாள்.

**எதிரொலி :**

அந்த வரி இறுதியில்தான் துளைக்க ஆரம்பிக்கும். சொல்லப் போனால் ஒவ்வொரு துளிர்வின், மலர்வின் பின் எழும் ஒலம் அது. அதை கட்டடக் கடசியில் விட்டு விட்டு, முன் கட்டிடத்தில் ஒளிர்ந்திருக்கும் ஒரு பிரத்தியேகமான யன்னலில், சுழல்வின் சாய்வில் கண் செருகுவாள்.

அங்கே அவளைப் போலொரு ஜீவன், அவளைப் பார்த்தபடி, அவளைப் போலவே. கண்டிருக்கிறாள், அதை ஆணாக்கிக் கிளுகிளுப்பாய் உணர்ந்திருக் கிறாள். இல்லாமல் இருக்கக் கூடும், சிறு தள்ளாட்டம் இருந்தது ஒரு முறை நிழலில். ஆனால் அவளைப் போலவேதான் . . . பூமரங்கள் தொங்கும் அவ் மாடி யன்னல், நீர் ஊற்றும் கரங்களின் நிழல் நன்கு பரிச்சயமான ஆன்மாவுடையதே. அதில் தன் நிலையைத் தேடும், தனிமையை உதைக்கும் உந்தல்.

மெல்ல மெல்ல கசியுமிந்த மாலை, சிறு கிளர்ச்சியை, காமத்தை, சமயத்தில் சிலிர்ப்பைக் கொன்று விழுங்கியபடி ஆணாய் முன்னேறுகிறது உடலில். ஒரே சுவாரசியமும், பயனும் அந்த முன் வீட்டு ஒளிர்தல் மாலை வடிய வடிய கூர்ந்து, நெருக்கத்தைத் தருவதுதான்.

அலங்கரித்துக்கொண்டு நின்றால் அவன் பார்ப்பது போல் . . . இங்கே இவளது இரசித்தல்கள், முனகல்கள், இளகல்கள் அங்கொரு 'அவனிலிருந்து'தான் வந்தாக வேண்டும்.

விறாந்தையில் ஷோபா, சுவர்ப் படங்கள், பச்சை, கண்ணாடி விம்பங்கள் வர்ணங்கள் எவையும் பேசுவ தில்லை, "என்ன சாப்பிட்டியா, என்ன களைப்பா இருக்கா . . ." போன்ற வசனங்களை. உடலின் இணை வில் எழுப்பப்படும் பாசாங்கான திரவ ஊற்றுக்கள் திண்மமாய் இங்குதான் உருமாறின.

ஆரம்பத்தில் முதன்முதலாய் கொணர்ந்து



படிப்பகம்

www.padippakam.com



வைத்தபோது அவ்விடங்களில் அந்தப் பொருட்கள் எவ்வாறெல்லாம் ஒளிர்ந்தன. ஒளி: முன் மாடியில் நிழல் அசைவுகள் ... அவளின் வருகைகூட இவ்விடத் துக்கு சூட்டையும் மணத்தையும் வழங்கின நீண்ட வருடங்களுக்கு முன்பு. இசையும், உயிரும், முன் ஒளிர்தலும் தவிர, தண்ணீரின், தாவரங்களின் மொழிதான் பிறகெல்லாம் துணை வந்தன.

'தாவரங்களுடன் பேசாதே, மனிதர்களோடு பேசு' உரக்கக் கத்தியபோதும் உணர்வதில்லை.

'கொஞ்சி, ஊடி, முத்தமிடு ஒரு முறை. உண்மை யாய், இயந்திர இயங்கல் தவிர்த்து' என்பதை எவை கேட்கும்?

சுகமில்லாதபோது, கவனத்துக்கு ஏங்கும் சிறுகாலப் பொழுதில், அம்மா 'ஊத்தி' வரும் இஞ்சிப் பிளேன் ரியாய், முலை காம்புறிஞ்சும் குழந்தையின் நிறைவு தரும் ஆனந்தமாய், காதலை அடையும் ஏக்கம் வாழ்வில் தனிமையில் இறுகும்.

அன்றோ கொடுப்பதற்கு எதுவுமில்லை. இறுதி நேர விடைபெறல். உணர்த்த அவளுக்கு திடம் மறுக்கப்பட்டு. அருகிருந்திருந்தால் உணர்த்தியிருக்க லாம் (சிலவேளை?). என்றுமே கொண்டு அலைய அவ் ஆழ் முத்தத்தை, அடித்து வீழ்த்துகையில் தன்னம்பிக்கை தரும் விதமாய் இட்டே இருக்கலாம் ஒரே முறை. மனசு அடிபட்டு ஓய பழசு அதையே சுற்றும். தாவி வரும் குழந்தை காண்கையில் உள் உறங்கும் அந்நாட்கள் புடைக்கும்.

மாத விலக்கொன்றில் உடல் ஸ்பரிசம் இச்சை யின்றிக் கிட்டுமென்றால் எதையும் தூசியாக்கி சிறு தட்டலில் ஒழிந்தேவிடும் நெருடும் இடறல்கள். அதுவே மென்வடுக்களை, கவனிக்க ஏங்குதலை இட்டு நிரப்புமென்றால்.

எதிர்பார்ப்பது போல நடப்பதில்லை, பருத்தோ சிறுத்தோ போகும் உடலையும் மனசையும் தவிர வேறொன்றும் ... மாலை வந்துபோகும். விடியல்களும், கூடவே நாட்களும்.





படிப்பகம்

www.padippakam.com



சொற்ப நேரத்து, சப்பற்ற ஓட்டத்தில் 'வாழ்க்கை, வாழ்தல்' மறுக்கப்பட்டதை உணர்ந்த 'ஏன்' இன் அரும்புதலில், வேகமாய் வரும். வெறியுடன் வாழ்ந்து விட – வெகுதூரம் ஓடி, என்றுமே தீராத காமத்தையும் வென்றுவிடும் தாகம்.

ஓடும் பாதணி அணிந்து, பருத்தி ரீ – சேர்ட் உம் காற்சட்டையும் போட்டு, இந்த கட்டிடத்திலிருந்து இறங்கி நடைபாதையில் ஓட வேண்டும். பையனைக் கொண்டு செல்லும் பாடசாலை, அத்தியாவதிய – அவசரப் பொருட்கள் வாங்கும் கடைத் தெரு தாண்டி தூரவாய் ... நெடுந்தூரம் களைக்கக் களைக்க.

ஆகாயவெளி, மனித நடைபாதை. அவள். அவள் மட்டுமே. கரை வீடுகள். சைக்கிள். ஆசைகள், இச்சைகள் பின்னிய முகங்கள் சுவர்களிடை பேதலிக்க உள்ளூர சைக்கிள் உழக்கிற்று. இருபுறமும் மனைகள் நிரம்பிய அந்த சிற்றொழுங்கையில் ஊன்றி உழக்க வேண்டும். உடம்புள் போடப்பட்டிருக்கும் உள்ளாடை வயிற்றை அமத்தவில்லை. பருத்தியில் முன்னால் சிப் போடக்கூடிய அதிலும் இறுக்காத ஆனால் அதிகம் ஆடவிடாத வசதியான உள்ளாடை. மிதிக்கிறாள். கழுத்துக்கு சற்றுக் குறைவான மயிர்கள் பறக்கின்றன. அவை இருப்பதே தெரியவில்லை – பஞ்சு போல.

காற்று, மிதிக்கிறாள்.

காற்றின் விசை மிதிக்க மிதிக்க கூடுகிறது.

நீர். நீந்த, ஓசையடித்து கடலில் கால் நனைய விரும்புறாள். கார்... ஓட்டுகிறாள் திறந்துவிடப்பட்ட கண்ணாடியூடே காற்று. எதிர்த்திசை. முடி முன்னால் பறக்கிறது. உடம்பும் பறக்க விரும்புகிறது. லாவகமாய் ஓட்டுகிறாள். இதமாய் தன்னம்பிக்கை தருகிறது.

பிறிதொரு ஓசையில் திரும்ப முன் மாடி ஒளிர்தல். இறுதியில் அங்குதான் வரவேண்டி என நினைவுறுத்த, அவன்.

மனிதர்களைக் காண வேண்டும். ஐரோப்பியக் கடற்கரையில், ஆசியாவில், சீனப் பெருஞ் சுவர் தாண்டி காத்திருக்கும் அவனை மீட்க, அல்லது முன் மாடி அவனையாவது காண, மனம் மீறிப் பரக்கிறது.

(நிறம், சாதி, வர்க்கம் என பலவாறாய் பல்வேறாய் பிரிவுபட்டுக் கிடக்கும் லோகாயத சமுதாயத்தில் ஒரு பெண்ணின் இருப்பு அடங்கியிருக்கிறது அதிகம் வெள்ளை அல்லது வெவ்வேறு நிறங்கள் அடிக்கப் பட்ட சுவர்களுக்குள். பெண்ணின் தனிமை கட்டி வைத்திருக்கும் அவளுடைய சிந்தனைப் பரப்பு, அதிகார மூளைகளைக் கழுவும்வரை இந்த லோகத் தில் எந்த ஆணும் சந்தோஷமாயிருத்தல் சாத்திய மில்லை. நிகழ்ந்தால் அங்கே உண்மையான விடுதலை இல்லை.)

அதைப் படித்துவிட்டு சின்னதாய் ஒரு நகையுடன் தான் உருவாக்கிய உருவத்திடம் அந்த வீட்டின் மென்வெளிச்சம் தன்னை செயலிழக்கப் பண்ணும் விந்தையை முறையிட்டாள்.

அவன்: நன்றாகச் சாப்பிடுகிறான், நொட்டைகள் பிடிக்கிறான், தூங்குகிறான், இழுத்து இழுத்து. நிச்சயமாக சந்தோஷமாக இல்லைத்தான், அவனுக்கு

## கலைச்செல்வனுக்கு காலத்தின் அஞ்சலி



**காலத்தின் இனிய நண்பனும், ஐரோப்பா வில் இயங்கியவனும், தமிழ் மானுட வாழ்வை முன்னெடுத்தவனுமான கலைச் செல்வனுக்கு காலத்தின் அஞ்சலி.**

**அவனது இழப்பால் துயருற்று இருக்கின்ற குடும்பத்தினர், நண்பர்களுடன் எமது துயரங்களைப் பகிர்ந்துகொள்கிறோம்.**

அது தேவையும் இல்லை. ஆதலால் மற்றவர்களின் சந்தோஷமென்பது அவனுக்கு இனி எப்போதும் அவசியமற்றதொன்றாக ...

அன்று, அவளை அடித்து 'நீ நான் குறிப்பிட்ட கோட்டுக்குள் குடும்பம் நடத்து, பிள்ளைகளைக் கவனி, சமை, படு' என்றவன், எதிர்த்தபோது உன்னால் வேறென்ன செய்ய இயலும் என்றவன் அப்பால் ... அப்பால் ... வெகுதூரம் தாண்டி அகன்ற தோள், உயரம், மீசை, உடம்பு என அடையாளங்கள் கொண்டவன் (அகராதி). ஆம், அவைக்காகத்தான் அவனை நேசித்தாள். எங்கிருந்து ஆரம்பிக்கிறது அது. அவளுக்குப் பிடித்தமான திரை நாயகன்கள் தந்த கணவன் பிம்பங்களில்.

இயந்திரமாகிவிட்ட வாழ்தல் என்கிற இழுத்தலில், துள்ளி மயங்கி ஆட கிளுகிளுப்பான மனசு. கோபிகை களில் ஒருத்தியாய் கானத்தில் கரைந்து, அது குரலில், ஒலியில், எழுத்தில், கவிதையில், அவனின் அசைவில், உதட்டில், சிரிப்பில் விரவிக் கிடக்க விரகித் தவித் தாள். இசை பரவி சுவர்களில் மோதிக் கிறக்கும்.

... உயிர்ப் பெண்ணே ... உனக்காக உயிரும் தருவேன். உடல் தழுவி உலகம் மறந்து வா காதல் செய்வோம் ... இறுதி தாபத்துக்கு அலை போல அவள் உயிர் எழும்பும். காற்றில் கீதங்கள், இசை. தனித்திருக்கும்போது, அவை கேட்டு, இன்னொரு கோபிகையாய் மயங்குவதும், மார்புக்குக் குவட்டுக்குள் காதல் பொங்கிப் பொங்கி வருவதும், இயலா, தனி, வெறு 'மை' களைத் துணைக்கழைக்கும்.

அப் பாடலின், ஒரு கிளர்வின், அவ் உணர்ச்சியின் உந்தலின் ஓய்வில், பாடிய பெண்ணைச் சுற்றி காட்சிப் படிமங்கள் சூழும் 'பாவம்' என. "பாடல்கள் ஏமாற்று வது கூடப் பறவாயில்லை" எனும் அப்பட்டம்



படிப்பகம்

www.padippakam.com



காலம் கட(ல)ந்து அனுபவமாகும். ஆனால் உருகிய கணங்களை எப்படி மறுதலிக்க இயலும்?

காதல்! மனிதன் மறக்க விரும்பாத பக்கம். மனிதன் யார், இன்னொரு அவன்தானே ...

குழந்தை பிரியனுக்கு ஈராறு வயது. ஆம்பிளைப் பயல், அச்சில் அப்பனைப் போல. ஏனோ இவனோடு பல்க்கனி உரையாடல்கள் கூடுவதுபோல, நெருக்கம் என்பது கைகூடவில்லை. அந்தக் காலங்களில் 'அவனின்' விந்தில், வாரிசு உரித்து என எத்தனை அர்த்தங்களை கனவுகளில் கட்டியவன் இந்தக் குழந்தை. அவனுக்குப் பெற்றே போட்டு விட வேண்டும் ஒரு சூரியக் குஞ்சை என (சூரியன்தான் எத்தனை வீச்சுக்களும், சூடும், கிளர்வும் உடையவன்!) இன்ப அவஸ்தைகளை இவ் உடலுள் போட்டு இறுக்கிய இவன் லேசுபட்டவனா ... இப்போது 'அவனின்' பிரதி என்பதாலேயே ஒட்ட மறுத்து, என்ன ஒரு துயரம்!

"தூரப் பார் ராசா, வானம் இல்ல. ஆனா இருப்பதுபோல ஒரு பிரம்மை ..."

"வானம் அப்பா போல... எனம்மா?"

(சிலவேளை அவன் அப்பனை மாதிரி பேச மாட்டான்!)

" ... பல்லாயிரம் மைல்களுக்கப்பால் – அதை எண்ணமுடியாது – எனக்கும் எண்ணிக்கை தெரியாது. அங்கு மனிதர்கள் போல உயிரினங்கள் இருக்கின்றன ..."

"ஆங் றொபோட் அம்மா ..."

" ...இல்லையடா கிரகங்களில் உயிரினங்கள்"

அவனுக்கு றொபோட் என்பது மிகுந்த சிலிர்ப்பை ஊட்டுதாய்.

"இன்னும் சில காலம் போனதும் பூமியிலும் றொபோட் வரும்"

"றொபோட்டைச் செலுத்தும் பவர் எனக்கும் வருமா அம்மா?"

"என்னைச் செலுத்திக்கொண்டிருக்கும் அப்பாவிடம் கேள், நான் றொபோட் போல சொல்வதைச் செய்யும் இயந்திரம். நீ செலுத்தப் போகும் உன் மனைவியிடம் கேள் இயந்திரங்களின் துயரம்" அவள் அழ ஆரம்பித்தாள்.

வழமையானபோதும் பையன் பயந்தான்.

"அவளை ... முன் மாடியில் இருப்பவனையாவது பார்க்குமாறு சொல்" குரல் பருக்க ஒலியில் பேரொலி ... இத்தனை கடுமையாய், இதை ஏன் வாழ்தல் என்று சொல்ல வேண்டும்?

கட்டில், தலையணைகள், போர்வைகள், மேசை, கதிரை, நேற்றிரவின் நீர்க் கோலங்கள், தரை, வெளிக் குளிர்,

சுவர்கள்.

பேசாத தாவரங்கள், பேசாத தளபாடங்கள், பாத்திரங்கள், நீர்

சுவர்கள்.

மலம், சலம் அவையின் கூடம், தூசிகள்,



குப்பைகள்,

சுவர்கள்.

தொலைக்காட்சி – பேசி

சுவர்கள்.

இவை தாண்டினால், பல்க்கனி புறாக்கள் ...

விழி நோக்கு மட்டும் விழுந்து கிடக்கும் கட்டிடங்கள், தார் வீதிகள், வாகனங்கள், வீதிக் கார்கள் ...

திசைகள் எங்கும் குழுமிக் குரல்கள் கொல்லும்: திராணியற்று மொழி மடியும்: அவ் வரி அவளுக்குள்ளிருந்து வெளி வரும், கட்டக் கடைசியாய் ...

இவைகள் என்னை எப்படி வலித்தன என்பது உனக்குத் தெரியுமா,

இவைகள் என்னை எப்படி வலித்தன என்பது உனக்குத் தெரியுமா,

இவைகள் என்னை எப்படி வலித்தன என்பது உனக்குத் தெரியுமா,

இவைகள் என்னை எப்படி வலித்தன என்பது உனக்குத் தெரியுமா,

இவைகள் என்னை எப்படி வலித்தன என்பது உனக்குத் தெரியுமா...

ஓவியங்கள் : ப. ரா. சரவணன்

●



படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# வில்லை உடைப்பேன்

அ.முத்துலிங்கம்

இந்த முறை புது வருடம் பிறந்தபோது வழக்கமான டெலிபோன் வாழ்த்துக்களும், வாழ்த்து அட்டைகளும் வந்தன. பலர் மின்னஞ்சல் வாழ்த்து தெரிவித்திருந்தனர். அதிலே ஆறு மாத காலமாக வேலை தேடிக்கொண்டிருக்கும் ஓர் இளம் நண்பர் விநோதமான வாழ்த்து அனுப்பியிருந்தார்:

இந்தப் புது வருடத்தில்
உங்கள் பற்கள் விழாமல் இருக்கட்டும்
உங்கள் முடி விழாமல் இருக்கட்டும்
உங்கள் பங்குச்சந்தை விலை விழாமல் இருக்கட்டும்.

உங்கள் இரத்த அழுத்தம் உயராமல் இருக்கட்டும்
உங்கள் கொலொஸ்ட்ரோல் உயராமல் இருக்கட்டும்
உங்கள் வீட்டுக்கடன் வட்டி உயராமல் இருக்கட்டும்

உங்கள் முகத்தோல் சுருங்காமல் இருக்கட்டும்
உங்கள் சேர்ட் சுருங்காமல் இருக்கட்டும்
உங்கள் பயோடேட்டா நீளம் சுருங்காமல் இருக்கட்டும்.

அவருடைய கடைசி வசனம் எனக்குச் சிரிப்பை வரவழைத்தது. தமிழருக்கும் பயோடேட்டாவுக்கும் ஒத்துவராது. அது இன்று தொடங்கிய சமாச்சாரம் இல்லை. 'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்' என்று வள்ளுவர் பாடி வைத்தபோதே ஆரம்பமாகிவிட்டது. குண்டூசிக்குகூட விளம்பரம் செய்யும் காலம் இது. அப்படியிருக்க வேலை தேடும்போது தன்னைத் தானே விளம்பரம் செய்ய வேண்டியது அவசியம். இந்த இளம் நண்பருடைய தகைமைகள் மதிப்பானவை. ஆனால் அவருடைய அடக்கமான குணத்தினால் அவர் எழுதும் சுயவிபரக் குறிப்பில் போதிய பலம் இருக்காது. அதனால் அவருக்கு வேலை கிடைப்பதும் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கிறது.

கம்பரை எடுத்துக்கொள்வோம். பத்தாயிரம் பாடல்கள் பாடியவர். உலகக் கவிகளில் ஒருவர். அவர் எப்படி ராமாயணத்தை ஆரம்பிக்கிறார். ஓயாமல் சத்தம் போடும் பெரிய பாற்கடலை ஒரு பூனையானது முழுவதையும் நக்கிக் குடித்துவிட முயல்வது போல நானும் ராமாயாணத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன் என்று தொடங்குகிறார். எத்தனை பெரிய கவி, ஆனாலும் எவ்வளவு அடக்கம். இவர் குலோத்துங்க சோழனிடம் வேலை கேட்டு எப்படி விண்ணப்பித்திருப்பார். தெரியவில்லை. ஆனால் இன்று கம்பர் இருந்து அவர் ஒரு வேலைக்கு விண்ணப்பம் எழுதினால் அவருக்கு மாத நாவல் அச்சிடும் பதிப்பகத்தில் மெய்ப்புப் பார்க்கும் வேலைகூட கிடைக்குமா என்பது ஐமிச்சம்தான்.

எனக்கு பிடித்த கவி காளமேகம்தான். அடக்கம் என்ற நோய்க்கு ஆற்படாதவர். ஒரு சுயவிபரக் குறிப்பு எழுதுவது எப்படி என்று அவரிடம்தான் கற்க வேண்டும். தன்னை விளம்பரம் செய்ய அவர் தயங்கியதே கிடையாது. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நால்வகைக் கவிகளையும் கரைகண்ட அதிமதுரக் கவிராயர் 'நீவிர் யாவரோ' என்று கேட்க காளமேகம்,

தூது அஞ்சு நாழிகை
சொற்சந்த மாலை ஆறு நாழிகை
அந்தாதி ஏழு நாழிகை
கோவை பத்து நாழிகை
பரணிபாட நாள் முழுதும்
பாரகாவியமோ ஓரிரு தினத்திலே
பாடும் வல்லமை படைத்த நான்
திருமலைராயன் முன்னே
திருட்டுக் கவிராயரைப் பிடித்துக்
காதறுத்து வெற்றிக்கொடி நாட்டும்
காளமேகம்

என்று இறுமாப்பாகச் சொல்கிறார்.





படிப்பகம்

www.padippakam.com



இந்த நூற்றாண்டிலே சுயவிபரக் குறிப்பு எழுதி பிழைக்கக்கூடிய ஒரேயொரு கவி காளமேகம்தான். பாரதி புதுவையில் இருந்து திரும்பி வந்த பிறகு மறுபடியும் எட்டயபுரம் ராஜாவிடம் வேலைக்கு மனுப்போட்டிருக்கிறார். அப்பொழுதே பாரதி பெரிய கவி. பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு எல்லாம் எழுதிவிட்டார். இது தவிர எண்ணிறந்த கட்டுரைகள். பாரம்பரியமான தமிழ் பண்பாட்டின்படி அவருடைய சுயவிபரக் குறிப்பு வெகு அடக்கமாகவே இருந்திருக்கும். இன்னும் மூன்று வருடத்தில் அவர் அந்த வேலை கிடைக்கா மலே இறந்துபோவார். மேல் நாடுகளில் சுயவிபரக் குறிப்பு எழுதுவதற்கு தனிக் கம்பனிகள் இருக்கின்றன. என்னுடைய நண்பன் ஒருவனுக்கு எவ்வளவு தேடியும் வேலை கிடைக்கவில்லை. அவனுடைய படிப்பு தகைமைகள், அனுபவம் எல்லாவற்றையும் ஒரு கடித உறையின் பின் புக்கத்தில் எழுதிவிடலாம். அரைப் பக்கம்கூடத் தேறாது. அவன் என்ன செய்வான். ஒரு 65 டொலர் காசு கொடுத்து தன் சுயவிபரத்தை ஒரு கம்பனியைக் கொண்டு தயாரித் தான். அவர்கள் 'வானை வளைப்பேன், வில்லை உடைப்பேன், வற்றாத சமுத்திரத்தை உருட்டிக் குடிப்பேன்' என்ற வகையாகப் பீற்றி அவனுடைய விண்ணப்பத்தை 18 இன்ச் நீளத்துக்கு நீட்டிவிட்டார் கள். படித்துப் பார்த்தபோது அவனுக்கே அது தன்னுடைய சுயவிபரம் என்பது புரிபடவில்லை. ஆனால் அவனை நேர்முகம் கண்ட கம்பனி நிர்வா கிக்குப் புரிந்தது ஆச்சரியம். வேலை கிடைத்துவிட்டது.

ஆனால் அதற்காக அளவுக்கு மீறி புளுகக் கூடாது. அதற்கும் ஓர் எல்லை உண்டு. சுப்ரதீபக் கவிராயர் என்று ஒருவர் இருந்தார். இவர்தான் கூளப்ப நாயக்கன் காதலைப் பாடினவர். மனுசன் புளுகத் தொடங்கினால் அதற்கு ஒரு வரையறை கிடையாது. அவர் கூளப்ப நாயக்கனுடைய சுயவிபரக் குறிப்பைத் தருகிறார். எவ்வளவு புளுகு என்பதை நீங்களும் உங்களுடைய ஐந்து வயது பிள்ளையும் ஒரே சமயத் தில் கண்டுபிடித்துவிடலாம். கூளப்ப நாயக்கன் ஒரு சிற்றரசன். அவன் நடந்து போனால் ஒரு இலையான்கூட திரும்பிப் பாராது. ஒரு சாம்ராஜ்யத் தின் பேரரசரைப் பாடுவது போல கவிராயர் அவரை உச்சியில் வைத்துக் கொண்டாடுகிறார்.

– அவன் பல்லக்கில் ஏறி அமரும் முன்னரே அவன் படைகள் போய் எதிரிகளை விழுத்தித் திரும்பி வந்துவிடும்.

– அவன் அரண்மனையில் பொன்னும் வச்சிரமும் மின்னும். முன் கதவு பொன்னாலும், பின் கதவு முத்துக்களாலும் நிறைந்திருக்கும்.

– சிங்கள ராசாக்கள் கப்பம் கட்ட வாயிலில் நிற்பார்கள். யானைக் குட்டிகள் அரண்மனை முகப்பில் விளையாடும். சீனர்கள் திறையுடன் காத்திருப்பார்கள்.

அசோகச் சக்கரவர்த்தியே வெட்கும்படியாக கவிராயர் அவரைப் புகழ்ந்து தள்ளிவிடுகிறார்.

அரை உண்மை என்று ஒன்றிருக்கு. சுயவிபரக் குறிப்பில் புளுகும்போது அது கைகொடுக்கும்.



உதாரணமாக கனடாவின் CN கோபுரத்தைக் கட்டும் போது அதில் செங்கல் எடுத்துக் கொடுக்கும் வேலை யாளராக நீங்கள் வேலை செய்திருக்கலாம். அதை நீங்கள் இப்படி எழுத வேண்டும். 'ஒன்ராறியோ வாவியின் வடக்கு கரையோரத்தில் உள்ள உலகத் தின் மிக உயர்ந்த கட்டடமாகிய CN கோபுர நிர்மாணக் குழுவில் முக்கிய அனுசரணையாளராக இருந்தேன்.'

இதுதான் எழுதும் முறை. சூக்குமம். இது தெரியாத வர்களுக்கு தகைமைகள் எவ்வளவு இருந்தாலும் வேலை கிடைப்பது கஷ்டம்தான்.

அரை உண்மை எழுதுவது வேறு; சில இடங்களில் முழு உண்மையைக்கூட மறைக்க வேண்டும். அந்த ரஸ்யப் பெண்ணின் பெயர் ஓல்கா. கங்கா, யமுனா, காவேரி என்று ஆற்றின் பெயரை வைப்பது போல ரஸ்யாவிலும் ஆற்றின் பெயரைத் திருடி வைப்பார்கள் போலும். இந்தப் பெண் அமெரிக்காவில் கம்புயூட்டர் நிரல் எழுதும் வேலை ஒன்றுக்கு மனுப்போட்டார். அவருடைய சுயவிபரத்தில் தான் மூன்று வைரஸ் களை உற்பத்தி செய்திருப்பதாக எழுதியிருந்தார். நேர்முகம் கண்ட அதிகாரிகள் திகைத்துவிட்டனர். நான் ஒரு ரஸ்யப் பெண்ணை இதற்குமுன் நேருக்கு நேர் சந்தித்தது கிடையாது. பிற்பாடு அவரிடம் கேட்டேன், எதற்காக வைரஸ் விஷயத்தை பயோ டேட்டாவில் குறிப்பிட்டிருந்தீர்கள் என்று. அவர் சொன்னார் 'ரஸ்யாவில் வைரஸ் உண்டாக்குவது பெரிய தகைமை. நான் அவற்றை எழுதியது உண்மை தான். ஆனால் அதனால் ஒருவருடைய கம்புயூட்ட ருக்கும் கெடுதி செய்யவில்லை'. காலம் கடந்து பிறந்த ஞானம். அவருக்கு வேலை கிடைக்கவில்லை.

சமீபத்தில் ஒரு புத்தகம் படித்தேன். அதில் புகழ்பெற்ற சில கலைஞர்கள் தங்கள் காலங்களில் எப்படி வேலை கேட்டு எழுதினார்கள் என்ற தக வலைக் கூறி அவர்களுடைய உண்மையான விண்ணப்பங்களையும் தந்திருந்தார்கள். அதிலே முக்கியமான இரண்டு விண்ணப்பங்களின் சுருக்கத்தை கீழே தரலாம் என்று நினைக்கிறேன்.

Franz Schubert என்பவர் சிறந்த இசை மேதை. 18ம் நூற்றாண்டில் வியன்னா நகரத்தில் வாழ்ந்தவர். மேற்கத்திய இசையின் போக்கை திசை திருப்பியவர் என்று இவரைப் புகழ்வார்கள். இசைநாடகம், இசைக் கோவை அத்துடன் 600க்கு மேற்பட்ட பாடல்களைப்



படிப்பகம்

www.padippakam.com



படைத்திருக்கிறார். இவருடைய சில படைப்புகள் போல் இதற்கு முன்னும் இல்லை பின்னும் இல்லை என்று சொல்வார்கள். பிறந்த நாள் முதல் வறுமையில் உழன்ற இவர் பேரரசர் இரண்டாம் பிரான்ஸிசிடம் வேலை கேட்டு இப்படி எழுதினார்:

மாட்சிமை பொருந்திய மன்னர் பிரானுக்கு கீழ்க்காணும் அடியேன் துணை இசை நடத்துநர் பதவியை யாசித்து சமர்ப்பிக்கும் விண்ணப்பமானது:

கீழ்க்கண்டவர் பிறந்தது வியன்னா நகரில்.

அவர் ஐந்து வருடங்கள் அரசு கல்லூரியில் வேலை பார்த்தார்.

அவர் அண்டன் ஸலியேரி என்ற மேதையிடம் இசை இயற்றுவதில் பயிற்சி பெற்றார்.

அவருடைய பெயர் வியன்னாவில் மட்டுமல்ல ஜேர்மனியிலும் பிரபலமானது. அவர் மாதா கோயிலில் வாத்தியக் குழு இசை அமைத்திருக்கிறார். அவருக்கு தற்போது வேலை இல்லை. தங்களிடம் நிரந்தர உத்தியோகம் கிடைத்து அவருடைய அரிய இசை ஆசைகள் எல்லாம் நிறைவேறும் பட்சத்தில் தங்களுக்கு முழுத் திருப்தி கிடைக்க இடையறாது உழைப்பார். தங்களுக்கு கீழ்ப்படிந்த விசுவாசம் நிறைந்த உண்மையான சேவகன்.

மன்னர் இந்தக் கடிதத்துக்கு பதில் எழுதவில்லை. வேலையும் கிடைக்கவில்லை. இன்னும் இரண்டு வருடங்களில் இசை மேதை மேகநோய் பிடித்து இறந்துபோனார்.

இன்னொருவர் எப்படி வேலைக்கு விண்ணபித்தார் என்று பார்ப்போம். இவர் 15ம் நூற்றாண்டுகாரர். பெயர் லியானர்டோ டாவின்ஸி. இவரைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. விலை மதிக்கமுடியாத மோனா லிஸா ஓவியத்தை வரைந்தவர். இன்னும் பல ஓவியங்கள் இன்றும் அவர் பேரைச் சொல்லுகின்றன. அவருடைய இன்னொரு புகழ்பெற்ற ஓவியம் யேசுவின் கடைசிப் போசனம். அவர் காலத்தில் அரசராக இருந்த லொடொவிக்கோ ஸ்ஃபோஸா விடம் அவர் வேலை கேட்டு அனுப்பிய மனுவின் சுருக்கம்:

போருக்கான போலி ஆயுதங்களைத் தயார் பண்ணும் பலரது முயற்சியின் நடுவே என்னுடைய சில ரகஸ்யங்களைத் தங்களுக்கு சொல்லுகிறேன். நான் பாரம் குறைந்ததும், வலிமையானதும், இலகுவில் நிறுவக்கூடியதுமான பாலங்களைக் கட்டுவேன்.

கல்லின் மேல் கட்டி எழுப்பாத எந்தக் கோட்டையையும் தகர்த்துப் பொடியாக்குவேன். முற்றுகையின்போது ஏணிகளையும் தோணிகளையும் உண்டாக்குவேன். நேராகச் செல்லும் அல்லது வளைந்து செல்லும் சுரங்கப் பாதைகளை ஓசைப்படாமல் செய்து முடிப்பேன்.

எதிரிகளை பயங்கரமாகத் தாக்கி பேரழிவு உண்டாக்கும் பீரங்கிகளைத் தயாரிப்பேன்.

எதிரிப் படைகளின் வியூகத்தைக் கிழிக்கும் பேராற்றல் கொண்ட எறி யந்திரங்களைக் காவிச் செல்லும் கவச வாகனங்களை உண்டாக்குவேன்.


# காலம்

**25ஆவது சிறப்பிதழ்**

அடுத்த காலம் இதழ் 25வது இதழாக வெளிவருகிறது. இந்த முக்கியமான சந்தர்ப்பத்தை செறிவூட்டும் விதமாக இவ்விதழ் இலக்கியச் சிறப்பிதழாக அதிக பக்கங்களுடன் வெளிவருகிறது. உலகெங்கிலும் இருக்கும் தமிழ்ப் படைப்பாளிகளை இச்சிறப்பிதழில் பங்கேற்க அன்புடன் அழைக்கிறோம். மின்னஞ்சலில் ஆக்கங்களை அனுப்புகிறவர்கள் பாமினி, டிஸ்கி எழுத்துருக்களைப் பயன்படுத்தி அனுப்பலாம். கையெழுத்துப் பிரதியாகவும் அனுப்பி வைக்கலாம்.

முகவரி

**KALAM**

16, HAMPSTEAD COURT

MARKAM, ONT L3R 3S7

CANADA

kalam@tamilbook.com


கடலிலே கப்பல்களைத் தாக்கவும் அவற்றை எதிரியிடம் இருந்து காப்பாற்றவும் தகுதிபடைத்த யந்திரங்களை உருவாக்குவேன்.

சமாதான காலங்களில் கட்டிடங்களையும் கால்வாய்களையும் கட்டுவேன்.

இவற்றைத் தவிர ஓவியமும் வரைவேன்.

அந்தக் காலத்தில் நாட்டில் எந்த ஒரு மூலையிலாவது சண்டை நடந்துகொண்டே இருக்கும். அரசர்களுக்கு போர் உபகரணங்கள் அவசியம். அரசருக்கு என்ன தேவையோ, அவர் என்ன எதிர்பார்த்தாரோ அதில் தன் ஆற்றலை பலப்படுத்தி கடைசி கடைசியாக ஏனோதானோ என்று தன் ஓவியத் திறமை பற்றிக் கூறுகிறார் டாவின்ஸி. கேட்கவே தேவை இல்லை. அரசரிடம் இருந்து அவருக்கு உடனேயே வேலைக்கு அழைப்பு வந்தது. பதினேழு வருடங்கள் அரசரிடம் வேலை பார்த்தார்.

நான் மேற்சொன்ன இரண்டு விண்ணப்பங்களையும் நகல் எடுத்து வாழ்த்து தெரிவித்த அந்த நண்பருக்கு அனுப்புவதாக இருக்கிறேன். அப்போதாவது எப்படி விண்ணப்பம் தயாரித்தால் வேலை கிடைக்கும் என்பது அவருக்கு புரியும். முக்கியமாக என்ன மாதிரி எழுதினால் கிடைக்காது என்று தெரியவரும். இந்த விடயத்தில் சுப்ரதீபக் கவிராயரும், காளமேகமும் அவருக்கு கைகொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த வருடம் முடிவதற்கிடையில் அவருடைய பயோடேட்டா பத்து சைஸ் எழுத்துருவில் மேலும் 18 இன்ச் நீளமாக வளரட்டும். ●



படிப்பகம்

www.padippakam.com

# துர்க்கா



Kevin Fleming-

எனக்குள் ஏதோ, சில
அணுக்கள் அசைக்கப்பட்டது போல்
அந்த இசையின் ஆக்கிரமிப்பு
எல்லா நாட்களையும் விட
இன்றைய என் கண்கள்
மிக அழகாக
அதற்குள்
காதல்
நட்பு
பாசம்
தாய்மை என
பல பரிணாமங்கள்
வார்க்கப்பட்டு
என் விழிகளில்
ஏதோ ஒரு ஒளியின்
பரிணமிப்பு
எதிரில்
வடிந்துபோன கண்கள்
காண்கையில்
அந்த விழிகளையும்
ஒளி கொண்டு
பற்றி விட்டாற் போல்
அக்கினிக் குஞ்சுகள்
எனக்குள்ளும்.
அதன்மீது
தேவாமிர்தம் படிந்துபோய்
காமம் கொன்று
பொறாமை கொன்று
பல மிருக அவதாரங்கள்
கொன்று
ஒரு தேவதையின்
சதிராட்டம்
இதுதான் இளமையா?
தேடுதலின்
கடைசிப் புள்ளியா
முதுமையில் முனகித் தேடும்
பேரின்பமா?
இது பிரமையாயினும்
உலகம் அமைதியாய்
இந்த இரவில்
பரவியிருக்கும்
நட்சத்திர சமுத்திரம்
மனதுக்குள்
மென் மிதப்புகளின்
பிரவாகங்கள்
இந்த சணப்பொழுதுகளின்
நீளுதல்களாய்.



படிப்பகம்

www.padippakam.com



# எரிந்த சிறகுகள்

**சாந்தினி வரதராஜன்**
ஜேர்மனி

முகில்களின் கைகளும் கால்களும் நீண்டு படர்ந்து கறுக்கத் தொடங்கின. அம்மாவின் முகமும் அது போலவே. எடி பிள்ளை இந்த தேங்காய் மட்டைகளை எடுத்து அடுக்கு. இந்த சனியன் பிடிச்ச மழை எப்ப வரும் எப்ப போகும் எண்டும் தெரியாது. இந்த அம்மாவுக்கு மழையை திட்டத்தான் தெரியும். பாவம் மழை. முந்தி நாங்கள் சிலேற் காயவேணும் எண்டாலும் மழை போ வெய்யில் வா எண்டுதானே பாடுறனாங்கள்.

நான் கத்துறது உனக்கு கேக்கேல்லையே ?

இதை எங்க அடுக்கினாலும் நனையத்தானே போகுது. அதைவிட இதிலேயே கிடந்து நனையட்டும்.

உனக்கு நல்லா வாய் கூடிப்போயிற்றுது. எல்லாம் உன்ரை அப்பா தர்ற செல்லம்.

சே இந்த அம்மாவுக்கு ரசனையே இல்லை. எப்ப பார்த்தாலும் மழையை பேசிக்கொண்டே இருப்பா. பிறகு தண்ணி இல்லையெண்டும் அழுது கொண்டு இருப்பா. மழையைக் கண்டா மரம், செடி, கொடி எல்லாம் மகிழும். இந்த மண்ணும் மழையை சேர்த்து வைத்துக்கொண்டு எனக்காகக் காத்திருக்கும். நானும் என்ரை சொந்தக் கிணற்றில சுகந்தி, ராகினி, கமலா மாதிரி அள்ளி அள்ளிக் குடிப்பன், குளிப்பன். தண்ணி எண்டு கேட்டு வாறா எல்லாரையும் நீங்களே அள்ளிக்கொண்டு போங்கோ எண்டுதான் சொல்லுவன். அவையள் என்னைக் கண்டா வேணுமெண்டு தங்கட துலாவில தொங்கி தொங்கி அள்ளுவினம். எனக்கும் ஆசையாக இருக்கும் நானும் எப்பவாவது ஒரு நாள் அவையள் மாதிரி துலாவில தொங்கி தொங்கி அள்ளவேணும். நான் பார்க்கிறது தெரிஞ்ச இன்னும் கொஞ்சம் கூட தொங்குவினம். ஒரு நாளைக்கு இந்த கயிற்றை தொட்டுப் பார்க்கவேணுமெண்டு ஆசை துளிர் விடும். ஆனால் சரஸ்வதி பூஜை அன்று நடந்ததை நினைச்சா துளிர்த்த வேகத்தில கருகி விழும்.

பாவம் சிவராசா நானும் அமுதாவும்தான் கேட்டனாங்கள். எங்களாலதானே அவன் இப்ப பள்ளிக்கூடத்துக்கு வாறதே இல்லை. அதுக்கு பிறகு இந்த துலாவைப் பார்க்கிற நேரமெல்லாம் ஆறுமுக வாத்தியாரின்ட கோபமுகமும் சிவராசாவின்ர சிவந்த முகமும்தான் ஞாபகத்தில வரும். மனுசரின்ர தோற்றத்துக்கும் அவையளுக்கும் சம்பந்தமே இருக்கா தெண்டு வாத்தியரைப் பார்த்துதான் எனக்கு தெரிஞ்சது. ஏன் என்ரை அப்பாவையும்தான். ஊத்தை துரை எண்டுதானே என்ரை அப்பாவை எல்லாரும் கூப்பிடுவினம். அதுக்குள்ள இருக்கிற வெள்ளை மனசை ஆருக்கும் தெரியாது. ஆனா எனக்கு மட்டும் இல்லை என்ரை அம்மாளாச்சிக்கும் தெரியும்.

அண்டைக்கெண்டு பார்த்து கிணத்தில தண்ணி எடுத்து தர ஆரும் இல்லை. அப்பவும் ஆறு முக வாத்தியார் சொல்லுவார்,





படிப்பகம்

www.padippakam.com



எடி பெடிச்சியள் வாளியில முட்டாமல் குடியுங்கோ.

இவர் டாப்பு கூப்பிடேக்க மட்டும்தான் எங்கட பெயரை சொல்லுவார். அண்டைக்கும் இப்பிடித் தான் தேவிகா எண்டு கூப்பிட்டுட்டு,

ஏனடி உன்ரை கொப்பர் நல்லா படம் பார்ப்பாரோ ?

ஏன் இப்பிடி கேட்கிறார் எனக்கு அன்று விளங்கவே இல்லை. ஆனா வகுப்பில எல்லாரும் சிரிச்சவை. அதிலேயும் சுகந்தியின்ரை சிரிப்பு தனிச்சு கேட்டது. ஆனா நான் அழுததைப் பார்த்து அமுதாவும் அழுதவள். வாத்தியாருக்கு வெட்கையா இருந்தா பிள்ளையள் வாங்கோ இன்டைக்கு மா மரத்துக்கு கீழ இருந்து படிப்பம் எண்டு சொல்லி விட்டு என்னையும் அமுதாவையும்தான் அவரின்ர கதிரையை தூக்கிக்கொண்டு வரச் சொல்லுவார். பிறகு மகாபாரதக் கதை சொல்லுவார். அவர் கதை சொல்லேக்க எனக்கு வாத்தியார் சகுனி மாதிரி, துரியோதனன் மாதிரித்தான் தெரிவார். ஆனா இதே கதையை வைகுந்தசாமி வாத்தியார் சொல்லேக்க அவர் கர்ணன் மாதிரி, தருமன் மாதிரி இருப்பார். அவர்தான் இந்த பள்ளிக்கூடத்துக்கு அதிபர். எங்களைப் பெயர் சொல்லித்தான் கூப்பிடு வார். சில நேரத்தில இங் முடிஞ்சு போயிற்றா தன்ரை பேனாவை தருவார். இப்பஅவரின்ர இடத்தில எனக்கு பிடிக்காத இவர். உண்யையான அதிபர் எப்ப வருவார்? எனக்குள் இக்கேள்வி எழுந்து கொண்டே இருக்கும்.

வகுப்பு தொடங்கி விட்டதுக்கு அடையாளமா ஆறுமுக வாத்தியார் நமச்சிவாய பதிகம் சொல்லத் தொடங்கிவிடுவார். எல்லாரும் கத்தி கத்தி பாடு வினம். ஆனா எனக்கு அந்த பாட்டு பாடவே பிடிக்காது. இது செத்த ஆட்களுக்கு படிக்கிற தேவாரம் எண்டு பயம். ஆனா அவர் பாடேக்க எத்தனை பிறப்புக்கு பிறகு கிடைச்ச பிறப்பு இந்த மனுச பிறப்பு என்று மனதுக்க எண்ணிக்கொண்டே இருப்பன். அவரும் கண்ணை மூடிக்கொண்டு எல்லோரும் ஏற்க்க பணிந்து என்று சொல்லேக்க நல்லவர் மாதிரித்தான் தெரிவார். வாத்தியாரின்ர வெள்ளை வேஷ்டியும், நஷனலும், கழுத்தை சுற்றி பாம்பு மாதிரி இருக்கிற சால்வையும். அந்த சால்வை மடிப்பு விரிஞ்சா நாக பாம்பு படம் விரிச்ச மாதிரி இருக்கும். அதை தொட்டு பார்க்க வேணும் எண்டு எனக்கு ஆசை. ஆனா பயம். என்ரை அப்பா பாவம். அவருக்கும் இப்பிடி போட்டா எப்பிடி இருக்கும்? அப்பாட்டை ஒரே ஒரு சாரம்தான். அதில இனி தைக்கிறதுக்கு இடமே இல்லை. அம்மா சொல்லுவா...

ஏனுங்க ஒரு சாரமேனும் வாங்கலாம்தானே

உனக்கென்ன விசரே எனக்கு சாரம் வாங்கிற காசில என்ரை பிள்ளைக்கு சட்டை துணி எடுத்திடு வன். எனக்கென்னத்துக்கு பிள்ளை. இந்தா தீபாவளி வருகுது. அதுக்கு ஆரும் பலகாரம் தரேக்க கோடித் துணியும் தருவினம்தானே. தார எண்டுதான் சொன்னவை.

அப்பா தீபாவளியை எதிர்பார்த்து ஏமாந்து



போவார். பிறகு சரி சரி தைப்பொங்கலுக்கு தருவினம். இப்பிடியே எல்லாம் வரும் போகும். ஆனா அப்பாவை விட்டு அந்த கிளிஞ்ச சாரம்மட்டும் போகாது.

என்ரை கவலையை மகிழ்வை எல்லாம் நான் முற்ற வெளி மீனாட்சி அம்மனிடம்தான் சொல்லு வன். மதியம் ஆரும் இருக்க மாட்டினம். அவவின்ரை ஆலமர வேரில இருந்து கொண்டு நான் கவலையை சொல்லி அழேக்க அவவும் அழுவா. நான் சிரிச்சா அவவும் சிரிப்பா. பிறகு அங்கை விழுந்து கிடக்கிற அரளி பூக்களை எடுத்து அவவின்ரை வாசலில வைப்பன். அம்மாளாச்சி உன்ரை கிணத்திலையும் தண்ணி அள்ள என்னை ஆரும் விடுகினம் இல்லை. நீ அவைக்கு சொல்லலாம்தானே. நீ சொன்னா கேட்பினம். அவை உனக்கு சரியான பயம். நீ கனவில வந்து சொன்னபடியாலதானே உனக்கு கோயில் கட்டினவையாம். சித்திரா பவுர்ணமி அன்று மாத்திரம் எங்களுக்கு சில சலுகைகள் தருவினம். அம்மா சொல்லுறவா அது அம்மாளாச்சிக்கு பயந்து தான் விடுகினம். அண்டைக்கு என்ரை அம்மாளாச்சி என்னை பார்த்து பார்த்து சிரிப்பா. பின்னேரம் வீதிவலம் வரத் தொடங்கினா எண்டா விடியத்தான் இருப்பிடத்துக்கு வருவா. நாங்களும் அவவுக்கு பின்னால போவம். நல்ல சாப்பாடெல்லாம் கிடைக்கும். சுகந்தி, ராகினி, கமலா எல்லாரின்ர வீட்டிலையும் மண்டபடி நடக்கும். நான் அப்பாட்டைசொல்லியிருவன்.

அங்கை மாத்திரம் சுண்டல் அவல் வாங்கக் கூடாது.

ஏன் பிள்ளை வாங்கக் கூடாது ?

அது வாங்கக் கூடாது எண்டா வாங்கக் கூடாது தான்.

சுகந்தி கண்கொத்தி பாம்பு மாதிரி அவ்வளவு சனத்துக்கையும் என்னை துலாவுவாள். நான்



படிப்பகம்

www.padippakam.com



அம்மனின்ரை சக்கரத்துக்கு பின்னால ஒளிஞ்சிடுவன். நல்லா தேடட்டும் எண்டு ஒளிச்சிருப்பன். பிறகு கேட்பாள்,

ஏனடி நீ அண்டைக்கு வரேல்லை ?

ஏங்க ? எண்டு நானும் தெரியாத மாதிரி கேட்பன். அவள் என்னை ஒரு மாதிரி பார்த்திட்டு போவாள். இவை மூன்று பேரிலையும் இவள்தான் பொல்லாதவள் எண்டு அமுதா சொல்லிறது சரி. என்னை கண்டா காணும் மூக்கை பிடிச்சுக்கொண்டு

எடியே நீ உன்ரை அப்பாட்டை சொல்லு நாங்கள் பள்ளிக்கூடம் வரேக்க அந்த வண்டில தள்ளிக் கொண்டு வரவேண்டாம் எண்டு. சீச் ஒரே நாத்தம். ஏனடி உனக்கு உன்ரை அப்பாவில அரியண்டம் இல்லையே? எங்கட கோடிக்குள்ளால உன்ரை அப்பா வந்து போனால மணக்கும் எண்டு சொல்லி முகத்தை கோணலாக்கி சிரிப்பாள். நான் அப்பாட்டை போய் அழுவன்.

அப்பா சொல்லுவார், இந்த ஊத்தை துரை இல்லாட்டி அவையளின்ரை வீடு மணக்கத் தொடங்கிவிடும். சரி சரி விடம்மா அது சின்னப் பிள்ளைதானே.

இல்லை அவள் சின்னப் பிள்ளை இல்லை. இந்த அப்பாவுக்கு அவளைப் பற்றி ஒன்டும் தெரியாது. அப்பாவுக்கு எல்லாரும் நல்லவை. வைகுந்தசாமி வாத்தியார் சொன்னவர். ஒரு நாள் துரோணர் தருமனிட்டையும் துரியோதனட்டையும் சொன்னாராம், இந்த உலகத்தில எவ்வளவு நல்ல மனுசர் கெட்ட மனுசர் இருக்கினம் எண்டு கணக்கெடுத்திட்டு வாங்கோ என்றாராம். துரியோதனுக்கு எல்லாரும் கெட்டவர்களாகவே தெரிஞ்சதாம். தருமனுக்கு எல்லாரும் நல்லவர்களா தெரிஞ்சுதாம். அதுக்கு துரோணர் சொன்னாராம். எல்லாம் அவரவர் மனசை பொறுத்தது எண்டு சொல்லிற்று என்னை பார்த்து சிரிச்சவர். அவரும் அம்மாளாச்சி மாதிரித்தான் சிரிப்பார். அவர் வருத்தம் மாறி வந்த உடனே எங்களை கேட்டவர்,

ஏப்பிடி பிள்ளையள் படிக்கிறீங்களோ? கவன படிக்கவேணும் என்ன

எனக்கும் அமுதாவுக்கும் சரியான சந்தோஷம். நாங்கள் அவருக்காக அம்மாளாச்சியிற்றை நேர்த்தி வைச்சதையும் ஆரும் இல்லாத நேரத்தில கோயிலை சுற்றி அடிஅளிச்சதையும் சொல்ல வேணும் போல இருந்தது.

என்ன பிள்ளையள் சிரிக்கிறியள் ? எண்டு தலையை தடவிவிட்டவர். நானும் அமுதாவும் அழுதிட்டம். அவர் சிரிச்சுக்கொண்டு சின்னக் குழந்தைகள் தேவதைகள் அவை சிரிக்கவேணும் அழக் கூடாது. அவர் வந்தாப்பிறகு பள்ளிக்கூட தோட்டப்பூக்கள் எல்லாம் பூத்து சிரிச்சது. அதால வில்லூன்றி சுடலைக்கு போறவையை பார்த்து எனக்கும் அமுதாவுக்கும் பயமே வரேல்லை. ஆனா ஆறுமுக வாத்தியார் மட்டும் இன்னும் கோபமா உலாவினார். அவரை பார்த்தா எனக்கு பகடைக்காய் இழந்த சகுனி போல இருந்தார். ஆனாலும் அவர் சூரன் சாகேல்ல உருவம் மட்டும்தான் மாறியிருக்கு எண்ட மாதிரித்தான் எங்களை பார்த்தார்.

அவருக்கும் அவர் படிப்பிக்கிறதுக்கும் சம்பந்தமே இருக்காது. பாரதியார் பாட்டில எனக்கு பிடிச்ச பாட்டு காணி நிலம் வேண்டும் பராசக்தி பாட்டை சொல்லி தரேக்க கத்தும் குயிலோசை எண்டு சொன்னவர். எனக்கு கேட்க வேணும் போல இருந்தது. குயில் கூவும் எப்பிடி கத்தும்? வாய் உன்னிக்கொண்டு இருந்தது கீழ கிடந்த பிரம்பு என்னை பார்த்து சிரிக்கிற மாதிரி இருந்ததால வாய் தன் பாட்டில மூடிற்று. சிலர் கையால அடிக்கவே தேவையில்லை. அதைவிட கொடுமையான அடியை வேறுவிதமாய் தருவினம். அண்டைக்கு இப்பிடித்தான் சிவராசா எங்களுக்காக துலாக்கயிறை தொட்டதுக்கு . . .

உங்களுக்கு தண்ணி அள்ளக் கேட்குதோ எண்டு எவ்வளவு அடி அடிச்சவர். நாங்கதான் அழுதனாங்கள். சிவராச அழவே இல்லை. அவனுக்கு அப்பிடியொரு கோபம் வந்ததை நான் பார்த்ததே இல்லை.

ஏன் மாஸ்ரர் அள்ளக் கூடாது ?

கூடாது எண்டா பிறகென்ன கேள்வி.

அப்ப ஏன் சாதிகள் இல்லையடி பாப்பா எண்டு படிப்பிக்கிறீங்கள் ?

எட வாத்தியார் எண்ட மரியாதை இல்லாமல் எதிர்த்தோ கதைக்கிற. உங்களுக்கு இடம் கொடுத்தா கடைசியில காகத்துக்கு இடம் கொடுத்த கொக்கின்ரை கதையாப் போயிடும் எண்டு எத்தனை அடி அடிச்சவர். எல்லாரும் பார்த்துக்கொண்டு சும்மா இருந்ததை பார்க்க. அஸ்தினாபுரத்து அநீதிகளை எல்லா கண்களும் பார்த்துக்கொண்டு இருந்தது போல விழிகள் விழித்திருக்க மனங்கள் கோழைகளாகி எங்கேயோ ஓடி ஒளிந்திருந்தது.

அம்மாளாச்சியிற்றை நான் சத்தியம் பண்ணியிருக்கிறன். எப்பிடியாவது ஒரு கிணறு வெட்டுவன். பிறகு அதில அரளி மரம் வைச்சு மரத்தில இருந்தே பூ பிச்சு உனக்கு தருவன். ஆனா எப்பிடி வெட்டுறது? சிவராசாவும் நானும் இதை பற்றி கதைப்பம். அவனும் அவையளின்ரை அப்பாவோட கிணறு வெட்ட போறவன். அவன் சொல்லுவான்.

கிணறு வெட்டுறது நாங்கள். தண்ணி அள்ளுறது அவையள். ம் என்ன செய்யலாம். நான் வெடிவைக்கவும் பழகீட்டன். இனி கொஞ்ச காசும் மனுசரும் வேணும். உன்ரை அப்பாட்டை கேட்டா அவர் பயப்பிடுறார். எத்தனை நாளுக்கு இவையளின்ரை கை தண்ணி அள்ளுறதை நாங்க வாய் பார்த்துக் கொண்டு இருக்கிறது. இதுக்கு ஒரு முடிவு வேணும். நீதான் உன்ரை அப்பாட்டை சொல்லி உங்கட காணிக்கை வெட்ட விடவேணும். அதில நல்ல தண்ணி வரும் எனக்கு தெரியும். எல்லாருக்கும் பொதுக் கிணறா இருக்கட்டும் எண்டு சொல்லிக் கொண்டே போனான். அவனோட சேர்ந்து அம்மன் கோவில் மண்ணும் போனது. நானும் அம்மனும் பார்த்துக்கொண்டே இருந்தம்.

எவ்வளவு நேரமெண்டு ஆரும் வராயினமோ எண்டு பார்த்துக்கொண்டு இருக்கிறது. நிழல் இன்றி முற்றவெளி அந்த நீண்ட பகல் பொழுதில் தவித்துக் கொண்டிருந்தது. நானும் குடத்தோடும் தாகத்தோடும்



படிப்பகம்

www.padippakam.com



தவித்துக்கொண்டு இருந்தன். இந்த பொழுதுகளில் தான் குளத்தின்ரை நடுவில எறிந்த கல்லு வட்டம் போட்டு அது விரிஞ்சு விரிஞ்சு பெரிசாகிற மாதிரி எனக்குள்ள புதைந்து கிடக்கிற கவலை எல்லாம் விரிஞ்சு வெடித்து வெளியில வரும். அம்மாளாச்சி யிற்றை எல்லா கவலைகளையும் பகிர்ந்துகொள்வேன். அவவும் கவலையா கேட்டுக்கொண்டு இருப்பா.

மிகுதி நேரத்தில் பஞ்சு பஞ்சாய் குவிந்திருக்கும் வானத்தை பார்த்துக்கொண்டே இருப்பன். முகில்கள் முதலை போல மலை போல எல்லாம் இருக்கும். அதை அள்ளி அள்ளி விளையாடுவன். என்னோட விளையாட தேவதைகள் வருவினம். அவை என்ரை கையை பிடிச்சுக்கொண்டே விளையாடுவினம். ஒரே கோப்பையில சாப்பிடுவம். என்னை தண்ணி அள்ளி விளையாட விடுவினம். ஆரும் ஒன்றும் சொல்ல மாட்டினம்.

என்ன தண்ணி வேணுமோ ? என்ற குரல் என்னை நரகத்தில் மறுபடியும் இறக்கியது.

நீங்கள் எல்லாரும் இப்ப பெரியாக்கள் ஆகிட்டீங் களாக்கும்?

என்ன கேட்கிறார் ஐயர் என்று யோசிச்சுக் கொண்டு நிற்க

கிணறெல்லாம் வெட்டுறீங்களாம் எல்லாம் கலிகாலமா போயிற்றுது அம்மாளாச்சி.

எனக்கு ஒரே ஆச்சரியமா இருந்தது. இவருக்கு என்ன செய்யுது? அதை வெட்டுறதுக்கும் அப்பாவை சம்மதிக்க வைக்கிறதுக்கும் நானும் சிவராசவும் பட்ட பாடு எங்களுக்குதான் தெரியும். அம்மாளாச்சி என்று முற்ற வெளி காற்றை எல்லாம் ஒருமுறை இழுத்து சூறாவளியாய் வெளியே தள்ளினபடி ஆயத்த மணியை அடித்தார். இனி அம்மனை சுற்றி கூட்டம் இருக்கும். அவையள் அம்மாளாச்சியை பார்த்து அழுவினம், கதைப்பினம். என்னை கண்டா மாத்திரம் முகத்தை சுளிப்பினம். அதுக்கிடையில கெதியாய் போயிடுவம்.

ஒவ்வொரு அடியும் எனக்கு பலதையும் நினைவு படுத்தியது. அம்மாளாச்சி கிணறு வெட்டி முடியும் மட்டும் மழை பெய்யக் கூடாது. மழையும், இடி முளக்கமும் எனக்கு நன்றாகவே பிடிக்கும். ஆனா சண்டைக்கோழி மாதிரி திரியிற சுகந்திக்கு இடி முளக்கம் எண்டா பயம். உனக்கு பயமில்லையேடி? ம் இதைவிட சத்தத்தோட வெடி வெடிச்சு தண்ணி சீறிபாய்கிற நாளுக்காக பார்த்துக்கொண்டிருக்கிற எனக்கு பயமோ? சொல்லவேணும் போல இருக்கும்.

அந்த நாளும் வந்தது. எல்லா அனுமதியும் பெற்று நாளைக்கு வெடி வைக்கிற நாள். இரவிராவா நித்திரையே இல்லை. அம்மாவும் அம்மாளாச்சி அம்மாளாச்சி எண்டு கும்பிட்டுக்கொண்டே இருந்தா. அப்பாவை பார்த்தன். புரண்டு புரண்டு படுப்பது தெரிந்தது. கண்ணை மூடினாலும் முளிச்சாலும் தண்ணி சீறிக்கொண்டு வாற மாதிரியே இருந்தது. எப்படா விடியும் என்று மனம் ஏங்கியது.

அப்பாவும் சிவராசாவும் கிணற்றுக்குள்ள இறங்க வெளிக்கிட நான் அம்மாளாச்சியிற்ற ஓடி வந்திட்டன். என்னால அம்மனோட ஒன்றும் கதைக்கவும் முடி



யேல்ல. நடப்பமா இருப்பமா என்ன செய்ய ? மனம் என்னவோ செய்தது.

என்ன குட்டி போட்ட ஏதோ மாதிரி நடந்து திரியிறாய் ? ஐயரின் கேள்விக்கு எப்பவும் போல மௌனம் சாதித்தாலும். மனம் ஒரு நிலை இல்லாமல் தவித்துக்கொண்டு இருந்தது. ஒரு நிமிடம் முற்ற வெளியே இரண்டாக பிளப்பது போல் ஒரு சத்தம். என்ரை உடம்பெல்லாம் நடுங்கியது. ஐயர் அம்மா ளாச்சி என்று கத்தியபடி தட்டத்தை கீழே போட நெய்வேத்தியம் எல்லாம் சிதறியது. நான் அம்மனை பார்த்தன். அவ சிரிக்கவே இல்லை. திரும்பவும் நிலம் நடுங்கியது. அதோட அம்மாவின்ரை சத்தமும்

அம்மா ஏன் கத்திறா சந்தோஷத்திலையா ? இல்லை அழுகிறவா? என் கால்கள் காற்றை விட வேகமாக ஓடியது. எல்லாரும் கிணற்றை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிவராசா அம்மாவை பிடிச்சபடி நின்றான்.

என்ன நடந்தது? தண்ணி வந்திட்டுதா? எனக்கு எதுவும் புரியவில்லை. அம்மா பிள்ளை பிள்ளை என்று கிணறை காட்டிறாவே தவிர வேற எதுவும் சொல்லிறவே இல்லை. கிணற்றை எட்டிப் பார்த்தேன் அங்கே தண்ணி சீறி பாய்ந்து வெளியே வந்து கொண்டிருந்தது. தண்ணியோட தண்ணியோட என்ரை குஞ்சு அப்பாவின்ரை இரத்தமும் . . .

**ஓவியங்கள் : ப.ரா. சரவணன்**

●



படிப்பகம்

www.padippakam.com

# நட்சத்திரன் செவ்விந்தியன்

**ஐப்பசி 1991**

அவனது
பதினேழாவது மாரிக்காலத்திற்கு
கொஞ்சம் முதல்
வீட்டையும் குடாநாட்டையும்
விட்டு
ஓடி வந்து
வன்னிப் புகையிரத நிலையத்தில் இருந்தான்

காட்டு வெக்கையிலும்
சென்றடையப் போகிற
ஒரு புதிய தேசத்தின்
நிலவுருவத்தின் மாயப்புனைவுகளிலும்
களித்திருக்க
வழியனுப்ப வந்த நண்பன்
ஒரு யானை மார்க் சோடா தந்து
விடைகொடுத்தான்

ரயிலேறினான்
நாற்பது காத தூரப் பயணம்
விட்டு விட்டுச் செல்கிற
காடுகளும் கழனிகளும் நதிகளும் நகர்களும் போக
கவிஞனாவானோ என அங்கலாய்ப்பு வருகிறது

**மாடு தேடின கதை**

மாலையில் நெடுநேரமாகியும்
மாடுகள் கட்டுக்குத் திரும்பவில்லை
மாடுகள் தொலைந்திருக்குமோ என்கிற துயரம்
குழந்தைகளான எங்களை
வருத்தத் தொடங்குகிறது

நாங்கள் வீட்டை விட்டு
மாடு தேடிப் புறப்பட்டோம்
வெளியேறிய கொஞ்ச நேரத்தில்
சோளகக் காற்றில்
படலை தவறி பூட்டப்பட்டு விட்டது
வீட்டில் யாரும் இல்லை



படிப்பகம்

www.padippakam.com

மப்பு வேறு
எங்களின் சிலமனற்ற நாய்
அசாதாரணத்தையும் மோந்து கொண்டு
வேலிப் பொட்டுக்குள்ளால்
ஒழுங்கைக்குள் இறங்கியது

(நாங்கள் இறங்கியதற்கும்
நாய் இறங்கியதற்கும்
இடையில்
மாடுகள் வீட்டுக்குள் வந்து விட்டன
படலை சாத்தப்பட்டு விட்டதால்
வீதியில் படுத்து
இரைமீட்டிருந்தன)



Craig Aurness

நாயும் மாடுகளும் சந்தித்தன
எங்களை மோப்பம் பிடித்து
நாய் நடந்தது
இசகு பிசகாக ஏதோ நடந்ததென்று
மாடுகளும் நாயைப் பின் தொடர்ந்தன

மாடுதேடி
நெடுந்தூரம் சென்ற நாங்கள்
ஊரின் எல்லைக்குப் போக
நிலவும் வருகிறது
துயரை மறந்து
மாடுதேடுகிற இடைவெளிகளில்
நாங்கள் வேட்டையாடுகிற விளையாட்டும்
விளையாடுகிறோம்
வேட்டையின் சுதியில்
நிலவிற்கும் பகலிற்கும் வித்தியாசம் தெரியவில்லை

இவ்விதமிருக்க
கொடிய வடமராட்சிக் காடுகள்
வசியம் செய்து
இரவிரவாக நிலவில்
கடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று தெரியாமலே
தென்மராட்சியின் மணல் கரைகளுக்கு கடத்தியது

அதிகாலையில்
எங்களை தேடிவந்த
நாயும் மாடுகளும் சொல்லித்தான் தெரியுமாம்
நாம் கடத்தப்பட்டோமென்று

●



படிப்பகம்

www.padippakam.com



*Daniel Orozco*

# ORIENTATION

## புதிய உத்தியோகத்தருக்கு ஒரு வார்த்தை

தமிழாக்கம்: மணி வேலுப்பிள்ளை

இதுதான் எங்கள் அலுவலகம். அறைகள் அந்தப் பக்கம். அடைப்புகள் இந்தப் பக்கம். அந்த அடைப்பு எனக்கு. இந்த அடைப்பு உனக்கு. இந்தத் தொலைபேசியும் உனக்குத்தான். தொலைபேசி அலறினால் மூச்சுக் காட்டப்படாது. தொலைபேசியே பதில் சொல்லட்டும். இது பதில் சொல்லக்கூடிய தொலைபேசிதான்! இந்தக் கையேட்டைப் பார்த்தால் அந்தக் கைங்கரியம் புரியும். உனது சொந்தத் தேவைக்குத் தொலைபேசி பாவிக்கப்படாது. அவசர தேவைக்குப் பாவிக்கலாம் தான்! அதற்கு முதல் உன்னுடைய மேலதிகாரியைக் கேள். அவனைக் காணாவிட்டால் பிலிப்பனைக் கேள். பிலிப்பன் இருப்பது இங்கேதான். சொல்லாமல் கொள்ளாமல் தொலைபேசி பாவிக்கப்படாது. பாவித்தால் சீட்டுக் கிழியலாம்.

இவைதான் வருகை, போகைப் பெட்டிகள். வருகைப் பெட்டிப் படிவங்களின் இடது பக்க மேல் மூலையில் ஒரு தேதி இருக்கும். அந்தத் தேதிக்குள் அவற்றை எல்லாம் பதிவு செய்து, வலது பக்க மேல் மூலையில் ஒப்பமிட்டுப் படிமுறை ஆய்வாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த ஆளின் இலக்கம் இடது பக்கக் கீழ் மூலையில் இருக்கும். இதுதான் அந்த இலக்கம். வலது பக்கக் கீழ் மூலை வெறுமனே இருக்கும். மேலதிக விபரங்களுக்கு இந்தக் கையேட்டைப் பார்.

மற்றது, சரிக்கட்டி வேலை செய்யத் தெரிய வேண்டும். என்ன? புரியவில்லையா? நீ கேட்டது நல்லது. கேள்வி கேட்கத் தயங்கக் கூடாதுதான்! ஆனால் கண்டபடி கேள்வி கேட்கப்படாது. கேட்டால் சீட்டுக் கிழியலாம். சரிக்கட்டி வேலை செய்வது இப்படித்தான்: நாங்கள் ஒரு நாளுக்கு எட்டு மணித் தியாலம்தான் வேலை செய்வோம். அதாவது உன்னுடைய வருகைப் பெட்டியில் பன்னிரண்டு மணித் தியால வேலை இருந்தால், அதை நீ எட்டு மணித் தியாலத்துக்குள் செய்து முடிக்க வேண்டும். வருகைப் பெட்டியில் ஒரு மணித் தியால வேலை இருந்தால், அதை நீ எட்டு மணித் தியாலத்துக்கு இழுத்தடிக்க வேண்டும்.

அவள்தான் எங்களுடைய வரவேற்புக்காரி. அவள் கொஞ்ச நாள்தான் வேலை செய்வாள். வரவேற்புக் காரிகள் மாறியபடியே இருப்பார்கள். சட்டென்று வேலையை விட்டுப் போய்விடுவார்கள். அதனால் தான் எங்களுக்கு ஏக்கம். அவர்களோடு நீ மரியாதையாகவும் பண்பாகவும் நடக்க வேண்டும். அவர்களுடைய பெயர்களைக் கேட்டறிந்து, இடைக்கிடை மத்தியானச் சாப்பாட்டுக்கு வரச் சொல்லிக் கேட்டுப் பார்க்கலாம். ஆனால் நெருங்கிப் பழகக் கூடாது. நெருங்கிப் பழகினால், அவர்கள் வேலையை விட்டுப் போகும்பொழுது நீ வீணாகச் சிரமப்பட நேரும்.





படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் வேலையை விட்டு விடுவார்கள். அது நடந்தே தீரும்.

ஆண்களின் கழிவறை அங்கே. பெண்களின் கழிவறை இங்கே. அதில் இருப்பவன் ஜோன். அவன் இடைக்கிடை பெண்களின் கழிவறையைப் பாவிப்பான். தற்செயலாகப் பாவித்ததாகத்தான் சொல்லுவான். எங்களுக்கு உண்மை தெரியும். நாங்கள் அதைப் பெரிதுபடுத்துவதில்லை. ஜோன் கெடுதியான ஆள் அல்ல. அது பெண்களின் கழிவறை, அது அவர்களின் ஆள்புலம், அங்கே ஆண்கள் போகக் கூடாது என்பதெல்லாம் அவனுக்குத் தெரியும். இருந்தும் அவன் அதற்குள் நுழையத் தவறுவதில்லை. அதில் அவனுக்கு ஒரு சுதி இருக்கத்தான் செய்கிறது. அதனால் அவனுடைய சோம்பிய வாழ்வில் ஒரு சூம்பிய சிலிர்ப்பு தோன்றத்தான் செய்கிறது.

உனக்கு வலது பக்கத்தில் ஒரு அடைப்பு. இடது பக்கத்தில் ஒரு அடைப்பு. வலது பக்கத்தில் இருப்பது அமந்தா. இடது பக்கத்தில் இருப்பது ரசல். ரசலுக்கு அமந்தாவில் ஒரு கண். அவர்கள் வேலை முடிந்து கூடிப் போவது ஒரே பஸ்ஸில். அமந்தாவுக்கு பஸ் பிரயாணம் என்றால் ஒரே சலிப்பு. ஆனால் ரசலின் அலம்பல் அவளுடைய சலிப்பைக் குறைக்கும். ரசலுக்கோ அலம்பலே அன்றைய நாளின் முக்கிய அம்சம். ஏன்? அலம்பலே அவனுடைய வாழ்க்கையின் தலையாய அம்சமும் கூட. அவன் வீட்டில் வைத்து விறைத்த பீற்சாவும் ஐஸ் கிறீமும் விழுங்கியபடி நிர்வாணப் படங்களைப் பார்ப்பவன். அடைப்பில் வைத்து உருளைக் கிழங்குப் பொரியலும் விசுக்கோத்தும் கொறிப்பவன். அவனுடைய எடை நாற்பது இறாத்தல் கூடிவிட்டது. மாதத்துக்கு மாதம் அவன் கொழுத்து வருகிறான். வாயில் கொறிப்பு, மனத்தில் வாட்டம், அடைப்புக்கு மேலே எட்டி அமந்தாவை ஒரு நோட்டம் என்று அவனுடைய வாழ்வு கழிகிறது.

அமந்தாவுக்கு ஒரு மகன். ஜேமி என்று பெயர். ஆறு வயது. ஒரு தற்பித்துப் பையன். தாள் தாளாகவும் துல்லியமாகவும் கிறுக்கித் தள்ளுவான். அவன் கறுப்பு நிறத்திலும் மஞ்சள் நிறத்திலும், வட்ட வடிவத்திலும் முட்டை வடிவத்திலும் கிறுக்கித் தள்ளிய படங்கள் அவளுடைய அடைப்பு முழுவதும் ஒட்டியிருக்கும். அந்தப் படங்களை அவள் ஒவ்வொரு வெள்ளியும் இடம் மாற்றி ஒட்டுவாள். நீ அந்தப் படங்களைப் பார்த்து அவளிடம் ஒரு சொல்லுச் சொல்லத் தவறக் கூடாது. அப்புறம் அவளுக்கு ஒரு கணவன். அவன் ஒரு வழக்குரைஞன். அவன் வரிசைக் கிரமமாகப் பல்வேறு சிற்றின்ப விளையாட்டுகளுக்கு அவளை உட்படுத்துவான். அவள் தயங்கித் தயங்கி, நோக நோக அந்த அவமானங்களுக்கு உட்படுவாள். அவள் ஒவ்வொரு நாளும் சப்பித் துப்பப்பட்டவளாய், புதுக்கப் புண்பட்டவளாய், வடுப்பட்ட மார்புடன், தழும்புற்ற வயிற்றுடன், கொப்புளித்த தொடையுடன் பதைபதைத்தபடி வேலைக்கு வருவாள்.

போகட்டும். இதெல்லாம் எங்களுக்குத் தெரியத் தேவையில்லை. இதை உளறிக் கொட்டப்படாது. உளறிக் கொட்டினால், சீட்டுக் கிழியலாம்.

ரசலின் கைங்கரியங்களை அமந்தா சகித்துக் கொள்ளுவாள். உண்மையில் அவளுக்கு அல்பேட்டின் மீதுதான் ஒரு கண். அதுதான் அல்பேட்டின் அறை. அவன் அமந்தாவைப் போகிற போக்கில்தான் கவனிப்பான். ஆனால் அவன் உண்மையில் எல்லியில்தான் கண் வைத்திருக்கிறான். எல்லி இருப்பது அங்கே. அவளுக்கு அல்பேட்டைப் பிடிக்காது. கேட்டிசைத்தான் பிடிக்கும். கேட்டிசை அடைவதற்கு அவள் தீக்குளிக்கவும் தயார். கேட்டிசுக்கோ எல்லியைப் பிடிக்காது. இதை எல்லாம் பகிடியாக எடுத்துச் சிரிப்பதற்காக நான் சொல்லவில்லை. இது ஒரு வேடிக்கையான உலகம் என்றுதான் சொல்லுகிறேன்.



அந்த அடைப்பில் இருப்பது அனிக்கா. அவள் போன வருஷம் பேரியுடன் நின்று காலாண்டுக் கடதாசிகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். திடீரென அவளுடைய வலது கையிலிருந்து – உள்ளங் கையிலிருந்து – இரத்தம் பீறிட்டது. அவள் மெய்மறந்து, தனது கையை முழிசிப் பார்த்து, பேரியின் பெண்சாதி சாகும் தேதியையும் விதத்தையும் அவனிடம் சொன்னாள். என்ன சொன்னாலும் அவள் புதுக்க வேலைக்கு வந்தவள். ஆனபடியால் நாங்கள் சிரித்து விட்டுப் போய்விட்டோம். என்ன நடந்தது தெரியுமா? பேரியின் பெண்சாதி செத்துப்போனாள்! ஆனபடியால் நீ சாகும் தேதியையும் விதத்தையும் திட்டவட்டமாக அறிய விரும்பினால் ஒழிய, அனிக்காவிடம் போய் வாய்கொடுக்கக் கூடாது.

அந்த அடைப்புக்குள் இருப்பது கோலின். உன்னைப் போலவே அவனும் ஒரு காலத்தில் புதியவன். அனிக்காவிடம் போய் வாய்கொடுக்கக் கூடாது என்று நாங்கள் அவனை எவ்வளவோ எச்சரிக்கை பண்ணினோம். அவன் கேட்டால்தானே! போன வருஷம் நத்தார் விருந்தின்பொழுது அனிக்காவுடன் ஒருவரும் கதைக்கவில்லை. அவனுக்கு அவள் மீது இரக்கம் ஏற்பட்டது. அவள் குடிப்பதற்கு என்னவோ கொண்டுபோய்க் கொடுத்தான். அதிலிருந்து அவன் மாறிவிட்டான். அவனுடைய கதை முடிந்துவிட்டது. இனி அவன் எதுவும் செய்ய முடியாது. நாங்களும் அவனுக்கு உதவ முடியாது. நீயும் கோலினை நெருங்கப்படாது. உனது வேலை



படிப்பகம்

www.padippakam.com



எதையும் அவனிடம் கொடுக்கப்படாது. என்னிடம் தாரும், செய்து தருகிறேன் என்று சொல்லி அவன் எதையாவது கேட்டால், என்னுடன் கதைத்துச் சொல்லுவதாகச் சொல்லு. அவன் திரும்பவும் கேட்டால், நான் இன்னும் மறுமொழி சொல்ல வில்லை என்று சொல்லு.

நெருப்புப் பிடித்தால் தப்பி ஓடும் வழி இதுதான். இந்த மாடியில் தப்பி ஓடும் வழிகளுக்குக் குறை வில்லை. அவற்றுக்கெல்லாம் அடையாளம் போடப் பட்டிருக்கிறது. நாங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாடியிலிருந்து தப்பி ஓடுவது பற்றி மீளாய்வு செய்வோம். தப்பி ஓடும் பாதை பற்றி எல்லாம் மாதத்துக்கு ஒரு தடவை வேடிக்கை வினாவிடைப் போட்டி நடத்துவோம். வருஷத்துக்கு இரண்டு தடவைகள் நெருப்புக்குத் தப்பி ஓடிப் பழகுவோம். வருஷத்துக்கு ஒரு தடவை நிலநடுக்கத்துக்குத் தப்பி ஓடிப் பழகுவோம். இதெல்லாம் முன்னெச்சரிக்கை தான். இப்படி எல்லாம் நடப்பதே இல்லை.

இன்னொரு சங்கதி: எங்களுடைய சுகாதாரத் திட்டம். அது முற்றுமுழுதான சுகாதாரத் திட்டம். எக்கச்சக்கமான சுகயீனம், எதிர்பாராத பேரிடி எதுவாயினும், அது முற்றுமுழுதாக ஈடுசெய்யப்படும். குடும்பத்தவர்கள் எல்லோருக்கும் இது பொருந்தும். உதில் குந்துவது லாறி. அவனுக்கு ஆறு பெட்டைகள். எந்தப் பெட்டைக்காவது அல்லது எல்லாப் பெட்டை களுக்குமே ஏதாவது நடந்தால், அவர்களுடைய அலுவல்களை நாங்களே கவனிப்போம். ஆறு பெட்டைகளும் நோய்வாய்ப்பட்டால், அவர்கள் தசைநார் உரியும் கோர நோய்க்கு அல்லது இரத்தம் நஞ்சாகும் கோளாறுக்கு ஆட்பட்டால், அல்லது காயப்பட்டால், வகுப்பு மாணவிகளோடு வெளிக்களம் போகும்பொழுது அவர்களை யாரேனும் யந்திரத் துப்பாக்கியால் சுட்டு விழுத்தினால் அல்லது இரவில் திரியும் விசரன் ஒருவன் அவர்கள் துயிலும் அடுக்குப் படுக்கையில் வைத்து அவர்களைப் பலிகொண்டால், அவர்களுடைய அலுவல்களை நாங்களே கவனிப் போம். லாறிக்கு ஒரு செப்புச் சல்லியும் செலவில்லை. அவன் எதைப் பற்றியும் கவலைப்படத் தேவை யில்லை.

ஆண்டு விடுமுறையா? சுகயீன விடுகையா? தாராளமாகத் தருவோம். கை கால் ஒடிந்து வேலை செய்ய முடியாமல் போய்விட்டதா? ஏராளமாக நட்ட ஈடு தருவோம். ஓய்வூதியமா? ஓயாது தருவோம். கைநிறையத் தருவோம். ஆளும் பேருமாக ஆடல், பாடல், பந்தாடல் காணப் போவோமானால் கட்டணத்தில் கழிவு கிடைக்கும். பயணம் செய்த படியே சீட்டாடுவோமானால் இலவசமாகச் சீட்டுக் கட்டுகள் கிடைக்கும். எங்கள் சம்பளம் நேரே வங்கிக் குப் போகும். நாங்கள் எல்லோரும் கொஸ்ற்கோகாரர். என்ன முழிக்கிறாய்? நாங்கள் அந்தச் சந்தையில்தான் மொத்தக் கொள்வனவு செய்வோம்.

இதுதான் எங்கள் கோப்பிக் கூடம். இதுதான் எங்கள் கோப்பி உலை. நாங்கள் ஒரு கோப்பிச் சங்கம் வைத்திருக்கிறோம். நாங்கள் கிழமைக்கு, தலைக்கு இரண்டு டாலர் கட்டி கோப்பித் தூள், சீனி, பால்மா, வடி எல்லாம் வாங்குவோம். உனக்குப் பால்மாவை விடப் பால்தான் பிடிக்கும் அல்லது அவற்றை அரைக்கரைவாசி கலப்பதுதான் பிடிக்கும் என்றால் அதற்காகவே ஒரு சங்கம் வைத்திருக்கிறோம். அதற்கு கிழமைக்கு மூன்று டொலர் கட்ட வேண்டும். உனக்கு இனிப்புக் கூடிய சீனியைவிட இனிப்புக் குறைந்த சீனிதான் பிடிக்கும் என்றால் அதற்காகவும் ஒரு சங்கம் வைத்திருக்கிறோம். மற்றது, நாங்கள் ஒரு தடவை பாவித்த கோப்பித் தூளை மறுபடியும் பாவிக்க மாட்டோம். உனக்கு விருப்பமான கோப்பிச் சங்கத்தில் நீ சேரலாம். ஆனால் நீ கோப்பி உலையைத் தொடப்படாது.

இதுதான் மின்னலை அடுப்பு. வேண்டுமானால் உனது சாப்பாட்டை நீ இதில் சூடாக்கலாம். மறந்தும் உனது சாப்பாட்டை இதில் சமைக்கப்படாது.

மதியச் சாப்பாட்டுக்கு எங்களுக்கு ஒரு மணித் தியால இடைவேளை கிடைக்கும். காலையும்





படிப்பகம்

www.padippakam.com



மாலையும் ஒரு பதினைந்து நிமிட இடைவேளையும் கிடைக்கும். நீ ஒருபொழுதும் இடைவேளையை நழுவ விடப்படாது. விட்டியோ விட்டதுதான். இன்னொரு சங்கதி: உனது இடைவேளை ஒரு சலுகையே ஒழிய உரிமை இல்லை. நீ இடைவேளையைக் கெடுத்தால் நாங்கள் அசைய முடியாது, உன்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம். எங்களுக்கு அது பிடிக்காது.

இதுதான் எங்களுடைய குளுமைப்பெட்டி. உனது மத்தியானச் சாப்பாட்டை நீ இதற்குள் வைக்கலாம். உதில் இருப்பது பேரி என்று சொன்னேன் அல்லவா? இந்தக் குளுமைப்பெட்டிக்குள் இருக்கும் சாப்பாடுகளை அவன் களவெடுப்பது வழக்கம். அவன் சின்னஞ்சிறிய களவில் பென்னம்பெரிய கவலையை மறப்பவன். போன புத்தாண்டு பிறப்பதற்கு முன்னதாக அவன் தனது பெண்சாதியைக் கொஞ்சிக் கொண்டிருந்தபொழுது அவளுடைய மூளைக்குள் ஓர் இரத்த நாளம் வெடித்துவிட்டது. அப்பொழுது அவள் இரண்டு மாதக் கர்ப்பிணி. அவள் ஆறு மாதங்களாக மயங்கக் கிடந்து இழுபட்டுத்தான் செத்தவள். பேரிக்கு அது பேரிழப்பு. அதற்குப் பிறகு அவன் பழைய பேரி ஆகவே இல்லை. பேரியின் பெண்சாதி பேரழகி. அவளுக்கும் முழுக் காப்புறுதி இருந்தது. பேரி ஒரு சல்லியும் செலவழிக்கவில்லை. ஆனால் செத்தவள் அவனைப் பிடித்தாட்டுகிறாள். ஏன்? அவள் எங்கள் எல்லாரையும்தான் பிடித்தாட்டுகிறாள்! நாங்கள் அவளைப் பார்த்திருக்கிறோம். அவள் எங்களுடைய அடைப்புகளைக் கடந்து நகர்வது எங்களுடைய கணினித் திரைகளில் விழுந்திருக்கிறது. அவளுடைய மங்கிய முகத்தின் மெல்லிய சாயலை எங்களுடைய படப்பிரதிகளில் நாங்கள் பார்த்திருக்கிறோம். எங்களுடைய வரவேற்புக்காரியின் நேரகாலப் பதிவேட்டில் பேரியைச் சந்திப்பதற்கு என்று குறிப்பிட்டுத் தனது கைவண்ணத்தை அவள் காட்டியிருக்கிறாள். வரவேற்புக்காரியின் பதிவுத் தொலைபேசியில் குரல் வைத்துச் சேதி பதிந்திருக்கிறாள். தொலைபேசி இணைப்பில் கேட்கும் மின்னனு ஓசையாலும் இரைச்சலாலும் அவளுடைய சேதிகள் சிதைந்திருக்கும். இருந்தும் அவளுடைய குரல் வெகு தொலைவிலிருந்து பல ஓசைகளினூடே எதிரொலிக்கும். அது அவளுடைய குரல்தான். அந்தக் குரலுக்குள் அலைபோன்ற சத்தங்களையும் கரகரப்பையும் மீறி ஒரு குழந்தை கேவி அழுவதும் கேட்கும்.

போகட்டும். நீ மத்தியானச் சாப்பாடு கொண்டுவர விரும்பினால் பேரியை யோசித்து உனது சாப்பாட்டுச் சரைக்குள் மேலதிகமாக எதையாவது போட்டு வை. இந்த இடத்தில் நாலு பேரிகள் வேலை செய்கிறார்கள். அது தற்செயலாய் நடப்பதுதானே?

இதுதான் மைத்தியூவின் அறை. அவன்தான் எங்களுடைய பிரிவு முகாமையாளன். அவனுடைய கதவு எப்பொழுதும் மூடியே இருக்கும். அவன் இங்கேதான் நிற்கிறான். நீ ஐமிச்சப்படத் தேவையில்லை. அவன் எங்களைச் சுற்றிக்கொண்டுதான் திரிகிறான். ஆனால் நாங்களும் அவனைக் கண்டதில்லை. நீயும் அவனைக் காணப் போவதில்லை.



இதுதான் எங்களுடைய சாமான் பெட்டகம். உனக்கு ஏதாவது சாமான் தேவைப்பட்டால் கேட்டிசைக் கேள். அவன் உனது பெயரைச் சாமான் பெட்டக அனுமதி ஏட்டில் பதிந்த பிறகு உனக்கு ஒரு சாமான் அனுமதி நறுக்கைத் தருவான். இந்த நறுக்கின் சிவப்புப் பிரதியை எல்லியிடம் கொடு. அவள் உனது பெயரைச் சாமான் பெட்டகச் சாவி ஏட்டில் பதிந்த பிறகு சாவியைத் தருவாள். அந்தச் சாமான் பெட்டகம் இந்தப் பிரிவு – முகாமையாளனுடைய அறைக்கருகில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. நீ உன்னுடைய சாமான்களைச் சந்தடியில்லாமல் சேகரிக்க வேண்டும். சாமான் பெட்டகத்தில் நாலு கூறுகள் இருக்கும். முதலாவது கூறில் தாபனத்தின் முகவரித் தாள், வெறும் தாள், தபாலுறை, சேதியேடு, குறிப்பேடு வகைகள் இருக்கும். இரண்டாவதில் பேனை, பென்சில், தட்டெழுத்து – அச்செழுத்து யந்திர நாடா வகைகள் இருக்கும். மூன்றாவதில் அழிகட்டை, அழிதிரவம் , கண்ணாடி நாடா, பசை வகைகள் இருக்கும். நாலாவதில் செருகூசி, குண்டூசி, கத்தரிக்கோல், சவர அலகு வகைகள் இருக்கும். இதுதான் தாளைத் தூளாக்கும் யந்திரம். இவையெல்லாம் அந்த யந்திரத்தின் உதிரி அலகுகள். இந்த யந்திரத்தை நீ தொடப்படாது. அதுக்கும் உனக்கும் சம்பந்தமில்லை.

அந்த அறையில் இருப்பவள் குவின்டலின். அவளுக்குப் பெண்குவின் பைத்தியம். பெண்குவின் உருவம் பொறித்த சாமான் சண்டிகளை அவள் சேகரித்து வருகிறாள். பெண்குவின் உருவம் பொறித்த விளம்பரங்கள், கோப்பிக் குடுவைகள், பேனை கடதாசி



படிப்பகம்

www.padippakam.com



வகைகள், கம்பளிச் சட்டைகள், இறுகிய அரைக்கைச் சட்டைகள், பாத உறைகள், நகை நட்டுகள், பெங்குவின் பொம்மை வகைகளை அவள் சேகரித்து வருகிறாள். அவள் தனது அறையில் நேரம் பிந்தி வேலை செய்யும் வேளைகளில் பெங்குவின் குஞ்சம் வைத்த செருப்புகளை அணிந்திருப்பாள். பெங்குவின் கொக்கரிப்பதை அவள் ஒரு பேழையில் பதிந்து வைத்திருக்கிறாள். ஆறுதல் வேண்டிய பொழுதெல்லாம் அவள் அதனை முடுக்கிக் கேட்டுத் தேறுதல் அடைவது வாடிக்கை. கறுப்பும் வெள்ளையும்தான் அவளுக்குப் பிடித்த நிறங்கள். பெங்குவின் கறுப்பு – வெள்ளைப் பறவைதானே? அவளுடைய காரின் இலக்கத் தகட்டில் பெங்குவின் என்று பொறிக்கப் பட்டிருக்கிறது. அது பிரத்தியேக ஏற்பாடுதான். அவள் ஒவ்வொரு நாளும் வேலைக்கு வந்த கையோடு எல்லா அடைப்புகளையும் எட்டிப் பார்த்து எங்கள் ஒவ்வொருவருக்கும் வணக்கம் சொல்லிக்கொண்டு போவாள். புதன்கிழமை என்றால் காலை இடை வேளைக்குப் பணியாரம் வைத்துத் தின்னுவாள். வெள்ளிக் கிழமை என்றால் பின்னேர இடை வேளைக்கு மாவடை வைத்துத் தின்னுவாள். வருஷா வருஷம் நத்தார் விருந்துக்கு ஏற்பாடு செய்வதும் அவள்தான். பிறந்த நாள் பட்டியலுக்கும் அவள்தான் பொறுப்பு. அவளுடைய கதவு எப்பொழுதும் எங்களுக்காகத் திறந்திருக்கும். அவள் எப்பொழுதும் ஒருவரைக் காது கொடுத்துக் கேட்டு, மற்றவர் காதில் இதமாக ஒரு வார்த்தை போட்டு வைப்பவள். எவருக்குமே கை கொடுப்பவள், உடுக்கை இழந்தும் இடுக்கண் களைபவள், முகம் புதைத்து முனகுவோருக்குத் தோள் கொடுத்து நிற்பவள். அவளுடைய கதவு எப்பொழுதும் திறந்திருப்பதால் அவள் மாதர் கூடத்து அடைப்பொன்றில் ஒளித்திருந்து புலம்புவது வழக்கம். அவள் அங்கே வாந்தி எடுத்த சத்தத்தை ஜோன் கேட்டிருக்கிறான். ஜோன் தனது அடைப்பில் அருளாமல் குந்தியிருப்பவன். கூட்டுக்குள் ஒரு பெட்டை அடி எடுத்து வைத்தால் மெய்மறப்பவன். குவின்டலின் படிக்கட்டில் கூனிக் குறுகியபடி, சீறிக் கிளம்பும் காற்றில் நடுநடுங்கியபடி, பேணியிலடைத்த பானத்தை உறிஞ்சியபடி, முழங்கால்களை அரவணைத்தபடி பரிதவிப்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். எதுவும் தனது வேலையைப் பாதிக்க அவள் விடுவதில்லை. அப்படி விட்டால் சீட்டுக் கிழியும்.

அந்த அடைப்பில் இருப்பது கோவன். அவன் ஒரு கொலைகாரன். அடுத்தடுத்துக் கொலை செய்பவன். நகரம் பூராவும் ஆட்களைக் கண்டதுண்டமாய் வெட்டிக் கொல்பவன். ஆட்களைத் திட்டம் தீட்டித் தீர்த்துக் கட்டச் சித்தம் கொண்டவன். அந்த விபரம் எல்லாம் எங்களுக்குத் தேவையில்லை. அதை வெளியே சொல்லப்படாது. நீ பயப்பட வேண்டாம். அவனுக்கு முன்பின் தெரியாதவர்களைக் கண்டால்தான் கொலைவெறி பிடிக்கும். கறுத்த மயிர், கண், அப்படி இப்படி இருக்கக்கூடிய முப்பது வயதிலும் குறைந்த கொழுத்த வெள்ளைக்கார ஆடவனாகப் பார்த்துத்தான் அவன் பலி எடுப்பான். இருளும் தறுவாயில் ஒரு வெளியிடத்தில் வைத்துப் போகடி போக்காகத்தான் இரை தேடுவான். வீடு வரை இரையை நிழல் போல் தொடர்வான். இரையாகுவோர் இடறுவதும் திமிறுவதும் அவனுக்கு வேட்கையை ஊட்டும். அப்புறம் நடப்பது அப் பழுக்கற்ற படுகொலை. இலக்கு வைத்து நேர்த்தியாக உடலை அறுப்பான். தோலையும் தசைநாரையும் பட்டை பட்டையாய் உரிப்பான். உள்ளுறுப்புகளை அக்கு வேறு ஆணி வேறாக வெட்டிக் குதறுவான். இதை எல்லாம் தன்னுடைய வேலைக்குப் பாதிப்பில்லாமல்தான் செய்வான். உண்மையில் எங்களுடைய தட்டெழுத்துக்காரருள் கோவனே வேகம் கூடியவன். அடுப்பில் இருப்பவனைப் போலத் தட்டித் தள்ளுவான். கோவனுக்கு குவின்டலினில் ஒரு மோகம். ஒவ்வொரு நாளும் பின்னேரமாகப் பார்த்து அவளுடைய மேசையில் ஹேர்சி சொக்கலட்டை சிவப்பு உலோகச் சருகில் சுற்றி வைப்பான். அவனுக்கு அனிக்காவைப் பிடிக்காது. அவளை அவன் நெருங்குவதும் இல்லை. அவன் நெருங்கினால் அவளையும் மீறி அவளுக்கு உருவேறும். அவளுடைய இடது உள்ளங்கையிலிருந்து குருதி கொட்டத் தொடங்கும்.

போகட்டும். கோவன் கைதானால் நீ ஆச்சரியப்படுவது போல நடி. அவனைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல ஆளைப் போலவே இருந்ததாகச் சொல்லு. ஓரளவு தானும் தன்பாடுமாகத் திரிந்திருக்கலாம் என்று சொல்லு. அதேவேளை அமைதியாகவும் மரியாதையாகவும் நடக்கத் தவறவில்லை என்றும் சொல்லு.

இதுதான் படப்பிரதி யந்திரக் கூடம். யந்திரம் தென்மேற்கைப் பார்த்தபடி இப்படி இருக்கும். நாங்கள் அதனைப் பார்த்தபடி இப்படி நிற்போம். மேற்கில் தண்ணி குடிக்கும் இடம். அதற்குப் பின்னுக்கு வடக்கு. நாங்கள் பதினேழாம் மாடியில் இருக்கிறோம். அதனால் எங்கள் கண்ணுக்கு நல்ல விருந்து கிடைக்கிறது. இது கண்ணுக்கு விருந்தில்லையா? இந்தச் சோலையைப் பார். அந்த மரங்களின் உச்சியைப் பார். இந்தக் கட்டடங்கள் இரண்டையும் பார். இந்தக் கட்டடங்களின் இடைவெளியைப் பார். அந்தக் கட்டடங்கள் இரண்டையும் பார். அந்தக் கட்டடங்களின் இடைவெளியில் சூரியன் மறைவதைப் பார். அந்த வீதிக்கு அப்புறமாக இருக்கும் கட்டடத்தின் யன்னல் கண்ணாடிகளைப் பார். இந்தக் கட்டடம் அந்தக் கண்ணாடிகளில் பட்டுத் தெறிப்பதைப் பார். என்ன, தெரிகிறதா? இங்கே பார், நீ கை அசைப்பது தெரிகிறது. அங்கே பார், கோப்பிக் கூடத்திலிருந்து அனிக்கா பதிலுக்குக் கையசைக்கிறாள்.

பிரதி எடுக்கும்போது இந்தக் காட்சியைக் கண்டு களி. யந்திரம் தொந்தரவு தந்தால் ரசலுக்குச் சொல்லு. ஏதாவது கேட்டறிய விரும்பினால் உனக்கு மேலே உள்ளவனைக் கேள். அவனைக் காணாவிட்டால் பிலிப்பனைக் கேள். அவன் அங்கேதான் இருப்பான். அவன் கிளிசாவைக் கேட்டுச் சொல்லுவான். கிளிசா இருப்பது அங்கே. அவர்களைக் காணாவிட்டால் தாராளமாக என்னைக் கேட்கலாம். அதுதான் என்னுடைய அடைப்பு. நான் அங்கேதான் இருப்பேன்.

**ஓவியங்கள் : சசி**

●



படிப்பகம்

www.padippakam.com

# ‘பாரிஸ் கதைகள்’ தொகுப்புப்பற்றிய பகிர்வுகள்

## தேவகாந்தன்

சென்ற ஆண்டு ஜுலை மாதத்தில் கி.பி.அரவிந்தனின் தொகுப்பாய் வெளிவந்திருக்கும் அப்பால் தமிழின் வெளியீடான ‘பாரிஸ் கதைகள்’ நூலிலுள்ள பல கதைகளையும் நான் ஏற்கனவேயே படித்திருக்கிறேன். நூல் மதிப்புரைக்காக இந் நூல் ‘கால’த்திடமிருந்து எனக்குக் கிடைத்து வாசித்துப் பார்த்தபொழுது அவை முதலில் செய்த அளவு கூட ஒரு ஆதர்ஷத்தை என்னில் விளைக்காமல் போயின. அய்ரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் முதல் புலம்பெயர்ந்தோர் தொகுப்பான ‘அய்ரோப்பிய தமிழ்ச் சிறுகதைகள்’ 1987 இல் வெளிவந்த காலத்திலிருந்து புலம்பெயர்ந்தோர் இலக்கிய முயற்சிகளை மிக உன்னிப்பாகக் கவனித்து வந்திருக்கிறேன். தமிழ்ப் பரப்பில் ஒரு புதிய துறையின் பிரவேசத்தை அவை ஆக்ரோஷமாக முன்மொழிந்தன என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். மூன்று தசாப்தங்களின் பின் அவை இன்னும் அதே தடத்திலேயே குதிரையோட்டிக்கொண்டிருக்கின்றன என்பது உவப்பான விஷயமில்லை. இன்னும் அதே பழைய கதைசொல்லல் மரபு. ஒருவர் சுமார் முப்பது வருஷங்களாக வளராமலே இருக்கிறார் என்பது யாருக்குத்தான் சந்தோஷமாக இருக்கமுடியும்? ஒரு சமூகத்துக்கும் நிலைமை இதுதான். அதன் இலக்கியத்துக்கும் விதி இதுவே. இந் நிதர்சனத்தை இத் தொகுப்பு விளைவிக்கின்றது.

1988லிருந்து 2002 வரையான காலக் கதைகள் இத் தொகுப்பில் உள்ளன. ஆயினும் பிந்தியவைகளில்கூட ஒரு கதை நம் பாணி மீறியவையாய் இல்லை. இலக்கியம் பற்றிய நம் புரிதல், வடிவம்பற்றிய கவனங்கள் எல்லாம் எங்கே போயின? இங்கேதான் ‘தொகுக்கப்படும் கதைகள் புலம்பெயர் வாழ்க்கையை, பிரான்சை களனாகக் கொண்டிருக்கவேண்டுமென்று வரையறை செய்துகொண்டோம். ஆதலால் சிறந்த சிறுகதைகளைத் தொகுப்பது என்னும் நோக்கத்தைத் தவிர்த்தோம்’ என்று வரும் ‘இந்த தொகுப்பின் கதை’ என்ற தொகுப்பாளனுரையில் வரும் கி.பி.அரவிந்தனின் வரிகளில் நம் கவனம் மையம் கொள்கின்றது. பிரான்ஸிலிருந்து வெளியான சிறந்த சிறுகதைகளுக்கு ஒரு பட்டியலே போட்டுவிடலாம். ‘அம்மா’ இதழிலே பல நல்ல சிறுகதைகள் வந்திருக்கின்றன. அவற்றுள் சில கதைகள் வெவ்வேறு இதழ்களில் மறுபிரசுரமேயாகியிருக்கின்றன. ஆயினும் அவை தவிர்க்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் பாரிஸைக் களனாகக் கொண்ட சிறுகதைகளைத் தொகுப்பதே தொகுப்பாளரின் நோக்கத்தின் முதன்மையாக இருந்திருக்கிறது. அதனால் அனுபவப் பகிர்வுகளின் கதைகள் சேகரமாகியிருக்கின்றன.

புலம்பெயர்ந்தோர் எழுத்தரங்கில் நன்கு பரிச்சயமான க.கலாமோகன், கி.பி.அரவிந்தன், க.கலைச்செல்வன், சி.புஸ்பராசா என்று பல பேர் எழுதியிருப்பினும் எதிர்பார்த்த தாக்கத்தையோ, குறைந்தளவுக்கான ஒரு எதிர்பார்ப்பின் நிறைவேற்றத்தையோகூட இவை செய்யவில்லை என்ற கசப்பான உண்மையினை முதலில் இங்கு சொல்லியே ஆகவேண்டும். எனினும் நூலிற்கான விமர்சனமாக மட்டும் இல்லாமல் அதன் வேறுவிதமான மனக் கிளர்வுகளின் பதிவுகளையும் என் பகிர்வு கொண்டிருக்கும்.

கி.பி.அரவிந்தனின் தொகுப்பானபடியால் இந் நூல் ஒருவரில் ஏற்படுத்தியிருக்கக் கூடிய எதிர்பார்ப்புகள் அதிகம். எப்படியோ அது பொய்த்துப்போய் விட்டிருக்கிறது. ஒரு சிறுகதைத் தொகுப்பென்பது பதிவு சார்ந்து உருவாகக்கூடாது. அதற்கான உடனடி உதாரணம் இத் தொகுப்பு. கலை விவகாரங்களே பதிவு என்கிற விவகாரத்தை முதன்மையாகக் கொள்வதில்லை என்பதை இங்கே நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். கலா சிருஷ்டிகள் தங்கள் போக்கிலே பதிவினைச் செய்துபோகின்றன என்பதே சரி. தொகுப்பிற்கான சிறுகதைகளை அளிக்காமல் சிலர் அலட்சியப்படுத்தினர் என்பது தொகுப்பாளன் கூற்று. அந்த அலட்சியத்தில் என்னால் நியாயத்தைக் காணமுடிகிறது. ஆனால் இக் கதைகள் இதுவரை வெளிவராதவையாக இருந்திருப்பின் இந் நூலின் தோற்ற நியாயம் இன்னுமொரு தளத்ததில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கக் கூடும். ஆனால் இரண்டும் கெட்டானாகத் தொகுப்பு நின்றுகொண்டிருப்பதுவே நிகழ நேர்ந்திருக்கிறது. அது துரதிர்ஷ்டவசமானது.

இதிலுள்ள கதைகள் சோடையானவையல்ல. எனது ஆதங்கம் அவை அடையவேண்டிய எல்லைக் கோட்டை அடையாமல் விட்டுவிட்டனவே என்பதுதான். க. கலைச்செல்வனின் ‘பரிசுத்த ஆவி’ ஒரு நல்ல கதை. சொல்லப்பட்ட விதமும் மோசமானதில்லை. இருந்தும் அது ஒரு சிறந்த சிறுகதையாகாமல் குறைபட்டு நிற்கிறது. ஏனெனில் படைப்பாளியின் மனநிலை அங்கே தூக்கலாக நின்றுகொண்டிருப்பதனாலாகும். சமகாலக் கதையொன்றைப் படைப்பாக்கும் விஷயத்தில் கத்திமேல் நடக்கும் அவதானம் படைப்பாளியிடத்தில் வேண்டப்படுகிறது. படைப்பாளியே பாத்திரமாக மாறி தன் அபிப்பிராயங்களைக் கொட்டிவிடக்கூடாதென்பதே படைப்பிலக்கிய விதி.

சு. ஜீவலிங்கம் சிவபாலனின் கதையைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ‘மலர்வு’ என்ற அக்கதை தன் சொற்சிக்கனத்தால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்றால் தப்பில்லை. உணர்ச்சிமயமாக்கல் திட்டமாய் மறுதலிக்கப்பட்டு ஒரு நிகழ்வு அழகிய முறையில் வெளிப்பாடு செய்யப்பட்டிருக்கிறது அதில். க.கலாமோகனின் ‘மூன்று நகரங்களின் கதை’ , கி.பி.அரவிந்தனின் ‘நாடோடிகள்’ இரண்டும்கூட குறிப்பிடுச் சொல்லப்பட வேண்டிய கதைகளே. ‘நாடோடிகள்’ சற்று விரிவாகப் பார்க்கப்படலாம். அ. முத்துலிங்கத்தின் கதைகளில் பாத்திரங்களின் தேசியத்தனம் அறுபட்டு நிகழ்வுகள் உயிர்த்தளமாகிய ஒரு விரிந்த தளத்துக்கு எடுத்துச் செல்லப்படுபவையெனில், ‘நாடோடிகள்’ கதையை பாத்திரங்களின் தேசியத்தனத்தோடு நிகழ்வு ஒரு உன்னதம் நோக்கி எடுத்துச் செல்லப்படுவதாகக் கொள்ளமுடியும். ஊரைநடையில் கவிதைத்தனமான வெளிப்பாடு ஒன்றும் இக் கதையில் சாத்தியமாகியிருக்கிறது. ஆனாலும் சிறுகதைபற்றிய நம் கருதுகோள் மாற்ற முறாதிருக்கிற வரையில் நம் படைப்பிலக்கியத்தின் தரம் சொல்லத் தகுந்ததான வளர்ச்சியை அடையுமென்பதற்கு உத்தரவாதமில்லை. இது படைப்பாளிகள், வாசகர் அனைவரின் தீர்க்கமான கவனத்தை அவசரமாய்க் கோரி நிற்கின்றது.

மொத்தத்தில் உதாசீனப்படுத்தப்பட முடியாத தொகுப்பு இது.

●



படிப்பகம்

www.padippakam.com

# கற்பகம் - யசோதரா


ML Sinibaldi

## நீயும் அவளும்

முகில்களை விலத்தி
அவளை உணர வருகிறாய்

மெல்ல என நினைத்து
விழியில் காமம் வழிந்து விழ
தாபம் நிறைந்த ஒலி
திருப்தியடைய
நம்பிக்கைகளும் பிரம்மைகளும்
பிரேமைகளை எழுத்திவிட
என் உயிரியற் குறைகளை
அறியாக் குழந்தை
காதல் கொள்கிறான்

திரையில்
ஆனந்த நடனம்
தரையில் - துணையின்றி விழுகிறது
காதல் உடைகிறது

காலங்கள் மடிந்தே போயின

நாளை பற்றின
எந்த சம்பிரதாயமுமின்றி
அவள் கட்டிலில் கிடக்கிறாள்

நீ நெருங்குகிறாய்
தாண்டியும் விலத்தியும்
தேவையானால்
சன்னல் கண்ணாடியையும் உடைத்து,
பார்!
உன் சின்னப் பெண்
உறங்கிக் கொண்டிருக்கிறாள்

## தெருவிளக்கு எரிகிறது

பயணமும் பிரித்த ஓர் நாள்:
கடும் வர்ண
சாளரச் சீலை அசைய
தணலாய் ஒளி ஒழுக்கும்
தெரு விளக்கு
எரிகிறது

உயிர் உருக
அமுங்க ஒரு உடலும்
உதடும்
தேவைப்படும் அசைப் பொழுதில்
இறக்கைகளாலான மெதும்
-உன் உடம்பு
மூட வேண்டிய- என் உடம்பை
சுரணையற்றுப் போர்வை மூடும்

திரைப் பெண் எழுந்து
இடுப்பசைத்து ஆட(க்)
காத்திருந்து
மழை கரைந்த இராப் போது.
உடம்பூறும் உன் நினைவு
மெல்லக் கசிய
கால்கள் உராய
இட மார்பைக் கரம் பற்றும்
பதில் பற்றிற்று
வெளியில் தெரு விளக்கு
எரிகிறது
(...) (...)



படிப்பகம்

www.padippakam.com


# N.K.S



**N.K.S** Drapery & Blinds Fabric LTD
210 Silver Star Blvd, Unit #825
Scarbrough, Ontario
**Tel/Fax: 416 - 321 6420**

TeL 2 : 905 - 944 0218 e-mail: nadarajaj1@look.com web: www.nksdarapery.com


படிப்பகம்

www.padippakam.com




The MORTAGE Centre
We bring Canada's leading lenders to you

என் பணி அடமானக் கடன் செய்து கொடுப்பதே

N.Murugadas (Das)
Mortgage Specialist
416.543.6614
905.608.1218


படிப்பகம்